வல்லிக்கண்ணன்



இந்திரா பதிப்பகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

நாட்டிலே இருள் பரப்பிய ஆட்சியினரை வென்று ஒழித்து மீண்டும் நல்லாட்சி நிறுவியவன் பாண்டியன் கடுங்கோன் அம் மன்னனின் லட்சிய தாகமும், முயற்சிகளும், அவனது வீரமும், போராட்டமும் வெற்றியும் புகழுதற்குரியன. காலத் திரையின் பின்னே மூடுண்டு கிடக்கும் அவற்றை ஒருவாறு அறிமுகப்படுத்துவதற்காகவே உதயமாகிறது இந்த 'விடிவெள்ளி'

# விடிவெள்ளி

(சரித்திர நாவல்)

வல்லிக்கண்ணன்

இந்திரா பதிப்பகம்

C2/198 டவுன்ஷிப். திருச்சி-620 014

## புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

- **இமயப் பதிப்பகம்**
  8, நீலா தெற்குவீதி நாகப்பட்டினம்
- **முரசு புத்தக நிலையம்**
  தஞ்சாவூர், கும்பகோணம்
  புதுக்கோட்டை
- **பழனியப்பா பிரதர்ஸ்**
  தெப்பகுளம்—திருச்சி
- **விஜயா பதிப்பகம்**
  20, ராஜவீதி, கோயமுத்தூர்
- **வள்ளலார் புத்தக நிலையம்**
  266-A செர்ரி ரோடு, சேலம்
- **சர்வோதய இலக்கிய பண்ணை**
  32/1 மேலவெளி வீதி, மதுரை

**விலை ரூ. 32-00**


- முதற்பதிப்பு : டிசம்பர் 1994


- உரிமை : பதிப்பாளருக்கு


- அச்சிட்டோர் : ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
  12, கஜபதி தெரு, சென்னை—5

# புதிய பதிப்புரை

1962-ல் வெளியிட்ட புத்தகத்தை என் மகளுக்காக இந்திரா பதிப்பகத்தில் முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து வெளியிடுகிறேன். இந்த நல்ல நாவலை வெளியிட காரணம் எனது இனிய நண்பர் திரு. வல்லிக்கண்ணன் அவர்களே. அவர் காலத்தில்-ஏன் என் காலத்திலேயே இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடுவதில் எனக்கு அளவிலா ஆனந்தம். வாசகர்களின் அன்பான ஆதரவுக்கு நன்றி. அடுத்து அன்னக்கிளி என்ற சரித்திர நவீனம் வெளிவர இருக்கிறது. தமிழர்கள் படித்துக் களித்து இன்புறுக.

உங்கள்

—புத்தகப்பித்தன்

இந்திரா பதிப்பக ஆலோசகர்.

# முதற்பதிப்பின் முன்னுரை

'விடிவெள்ளி' சுத்த சுயம்புவான சரித்திர நவீனம் என்று பெருமை பேச நான் தயாராக இல்லை. உண்மையைச் சொல்லப் போனால், சரித்திர நாவல்' என்கிற படைப்புகளில் எதுவுமே பரிபூரணவரலாற்று நவீனம் ஆகிவிட முடியாது; ஆவதுமில்லை அதிலும், சரியான வரலாறு என்று திட்டவட்டமான சான்று கள் முற்றிலும் பெற்றிராத தமிழகத்தின் சரித்திரச் சான்றுகளை ஆராய்ந்து, சரித்திர உண்மைகளி லிருந்து இம்மியும் பிசகாமல் நாவல் எழுதுகிறோம்— எழுதியிருக்கிறோம் — எழுத முடியும் எம்மால் என்று பெருமை பேசுகிறவர்கள் கூற்றும் கற்பனை என்றே கொள்ளப்பட வேண்டும்.

டால்ஸ்டாய் எழுதியுள்ள மகத்தான இலக்கியமான 'சமரும் சமாதானமும்' (வார் அன்ட் பீஸ்) நமது சரித்திர நாவலாசிரியர்களால் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், தமிழில் எழுதுகிறவர்கள் யாரும் டால்ஸ்டாயைப் பின்பற்றுவதில்லை வரலாற்றின் பகைப்புலத்திலே கற்பனையைத் தாராளமாக உலவ விடும் அலெக்ஸாண்டர் டூமாஸ், விக்டர் ஹ்யூகோ, வால்டர் ஸ்காட் போன்றவர்களின் வழியைத்தான் பின்பற்றுகிறார்கள். கதைச் சுவைதான் முக்கியம் என்ற நோக்குடனேயே சரித்திர நாவல்களும், தொடர்கதைகளும் இங்கு படைக்கப்படுகின்றன.

'விடிவெள்ளி' எனும் வரலாறு தழுவிய கற்பனை 'புதுமை' இதழில் வெளிவந்தது. அதை வெளியிட்டு என்னை கௌரவித்த 'புதுமை' ஆசிரியருக்கு எனது நன்றி உரியது.

'விடிவெள்ளி'யை புத்தகமாக வெளியிட்ட எனது அருமை நண்பர் தோ. ந. வீரராகவன் அவர்களுக்கு என் இதயபூர்வமான வந்தனம் என்றும் உண்டு.

சென்னை,
21—3—1962

**வல்லிக்கண்ணன்.**

# விடிவெள்ளி

—வல்லிக்கண்ணன்

## முதல் பாகம்-காரிருள்

'ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம் என்பர். வல்லரசுகளின் வாழ்வும் அத்தன்மையது தான். இதற்கு உலக வரலாறு எவ்வளவோ சான்று பகரும்.

கால வேகத்திலே தோன்றி வளர்ந்த சாம்ராஜ்யங்கள் மக்களின் வாழ்விலும் நாட்டின் பண்பாட்டிலும் தங்கள் முத்திரைகளைப் பதிக்கின்றன. கால வெள்ளத்தின் சுழிப்பிலே அடிபட்டு அவை இருந்த இடம் தெரியாமலும் போய்விடுகின்றன. அவற்றின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிப் பேசும் சாட்சியங்களாக விளங்குகின்றன சரித்திரங்கள்!

தமிழகத்தில் முப்பெரும் வல்லரசுகள் வாழ்ந்து. ஆட்சி புரிந்து, நாட்டை வளம்படுத்தின. உலகத்தின் இதர பல நாடுகளிலும் தங்கள் புகழ் ஒளி பரப்பின. பின் காலச் சூறையிலே சிக்கிச் சிதைந்தும் போயின. எனினும் அவற்றின் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் பற்றித் திட்டவட்டமாகக் கூறும் வரலாறுகள் இல்லைதான்.

தமிழகத்தை ஆண்டுவந்த மூவேந்தரில் பாண்டியர்கள் சிறப்புடன் வாழ்ந்த காலமும் இருந்தது செயல் திறம்

இழந்து ஒடுங்கிக் கிடந்த காலமும் உண்டு. மீண்டும் எழுச்சி பெற்றுப் புகழ் ஓங்க அவர்கள் திகழ்ந்த காலமும், பின் தேய்ந்து மறைந்த காலமும் தொடர்ந்தது. அவை பற்றி அறுதியிட்டுச் சொல்லக்கூடிய நிச்சயமான ஆதாரங்கள் கால வெள்ளத்திலே அடிபட்டுப் போயின. ஆயினும், ஆராய்ச்சியும் அறிவும் உண்மையின் சில சில துணுக்குகளைக் கண்டு தொகுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்-பாராட்டத் தகுந்ததும் கூட.

அவ்வாறு கிடைத்துள்ள வரலாற்றின்படி, பாண்டி நாட்டில் கி. பி 3-ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் கி. பி 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை 'களப்பிரர்' என்போரின் ஆதிக்கம் நிலவி நின்றது. களப்பிரரின் படையெடுப்பும் ஆளுகையும் பாண்டி நாட்டில் பலப்பல மாறுதல்களையும் புரட்சியையும் உண்டுபண்ணின. இவர்களுடைய ஆட்சிக் காலம் வரலாற்றினரால் 'இருண்ட காலம்' எனக் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலே இருள் பரப்பிய ஆட்சியினரை வென்று ஒழித்து மீண்டும் நல்லாட்சி நிறுவியவன் பாண்டியன் கடுங்கோன் (கி பி 575-600). அம்மன்னனின் லட்சிய தாகமும், முயற்சிகளும், அவனது வீரமும், போராட்டமும், வெற்றியும் புகழுதற்குரியன காலத்திரையின் பின்னே மூடுண்டு கிடக்கும் அவற்றை ஒருவாறு அறிமுகப்படுத்துவதற்காகவே உதயமாகிறது இந்த '**விடிவெள்ளி**.'

## 1. இருளோடு வந்தவன்

மதுரை மாநகரம் இருளில் மூழ்கிக் கிடந்தது...

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த திருநகரம்-வீரமறவரின் புகழ் வளரத் துணைபுரிந்த பெருநகரம்-பாண்டி

மன்னரின் தலைநகராய் விளங்கிய அழகு நகரம் காரிருளில் ஆழ்ந்து பொலிவிழந்து நின்றது.

இயற்கை இருள் மட்டுமல்ல; இதர இருள் பண்புகள் பலவும் கரும் போர்வையாய் மூடி மறைத்துவிட்டன அந் நகரின் உயர்வை. 'நீரிலே தவழ்ந்து, நெருப்பிலே நின்று' மன்னர் மடியிலே வளர்ந்து, அறிஞர் நெஞ்சிலே வீற்றுச் சிறப்புற்று உயர்ந்த தமிழ், தனது தாயகத்திலேயே, வீட்டுக்கு வேண்டாத மருமகள்போல ஒதுங்கி ஒடுங்கிக் கிடக்க வேண்டிய நிலை பெற்றிருந்தது.

சைவம் மணம் பரப்பிய மதுராபுரியிலே சமணம் தலை தூக்கி ஆடியது தமிழ்க் கலையும், தமிழர் நாகரிகமும், சிறந்த மனிதப் பண்புகள் பலவும் சிதைத்து சீர்கெட்டுக் கிடநதன. அறச்செயல்கள் அழிந்துவிட்டன. அறஞ் செய்ய ஆசை கொண்டோர்கூட அஞ்சி நடுங்கிப் பதுங்கி வாழ நேர்ந்த காலம் அது.

சில நூறு வருடங்களிலேயே களப்பிரர்கள் தமிழின் மேன்மையைச் சிதைத்து, தமிழரின் வீரத்தையும் பெருமையையும் ஒடுக்கி, நாட்டின் மாண்பைச் சீரழித்து விட்டார்கள். சோழ நாட்டைப் பிடித்த வியாதி பாண்டி நாட்டையும் தொற்றியது. களப்பிராகள் சோமநாட்டில் தங்கள் தலைநகரை அமைத்திருந்தபோதிலும், கொடியவர்களான அவர்களது சக்திகள் மதுரையிலும்பேயாட்டம் போடாமலில்லை. பாண்டி நாட்டின் இதர பகுதிகளிலும் அந்த ஆட்சியின் விஷக்கரங்கள் மீண்டும் திடீர் திடீரென்று தொல்லை தருவதும் இயல்பாக இருந்தது......

பகலிலேயே பாழடைந்த நகரம்போல் தோன்றிய மதுரை இரவு நேரங்களில் அச்சம் தரக்கூடியதாய் விளங்கியது. வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன.

இப்பொழுதுகூட ஒரு சில வீடுகளில்தான் விளக்குகள் 'மினுக்கு மினுக்கென்று' ஒளி சிமிட்டிக் கொண்டிருந்தன. மழைக்காலம் ஆகையால், மழை வந்துவிடும் என்று மிரட்டிய சூழ்நிலையும் குளிர் காற்றும் சேர்ந்துகொண்டு, மக்களை வெகு சீக்கிரமே அவரவர் உறைவிடங்களில் பதுங்கிவிடச் செய்தன.

ஆனாலும் ஒரு மனிதன் மழைக்கால மையிருட்டையோ, ஊளைவாடையையோ, அமானுஷ்யமான அமைதியையோ பொருட்படுத்தாமல் நடந்து கொண்டிருந்தான். எங்கு செல்கிறோம் என்ற குறிப்பு எதுவும் இல்லாதவன்போல அவன் சிறு, சிறு தெருக்கள் வழியாகத் திரிந்தான். பெரிய வீதிகளில் நடந்தான். அவ்வப்போது சற்று நின்றும், அங்குமிங்கும் பராக்கப் பார்த்தும், அவசரம் இல்லாதவனாக நடந்தான் அவன்.

ஒரு வீதி முனை திரும்பியதும் அவன் வேறொரு உலகத்துக்கு வந்துவிட்டவன்போல் திடுக்கிட்டுத்திகைத்அ நின்றான். காரணம், அவ்வீதியில் உள்ள பெரிய பெரிய வீடுகளில் எல்லாம் மிகுதியான விளக்கொளியும் கல கலப்பும் நிலவியதுதான்.

நகரின் இதர பகுதிகளுக்கும் அந்தப் பகுதிக்குமிடையே நீடித்த முரண்பாடுகள்தான் மிகத்தெளிவாகப் புலனாகிக் கொண்டிருந்தன. ஆளும் வர்த்தகத்தைச்சேர்ந்தவர்கள் அங்கு வசித்து வந்தார்கள் **அச்சுதன்கந்தன்** எனும் மன்னன் சோழ நாட்டில், அவன் அமைத்துக் கொண்ட தலைநகரில் தங்கியிருந்தான். அவனுக்குப் பிரதிநிதியாய், அவனது உறவினனான **கூற்றன் நாயனார்** மதுரையில் கோலாகலமாக வாழ்ந்து வந்தான். அவனுக்கேற்ற தோழர்களாகத் திகழ்ந்த உறவுமுறையினரும் பிறரும் அவ்வீதியில் உல்லாச வாழ்வு வாழ முடிந்தது.

நாட்டின் சீர்கேடோ, நாட்டு மக்களின் துயர நிலையோ அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு எப் போதும் குடி, விருந்து; எந்நேரமும் கூத்தாட்டம்; விரும்பியபோதெல்லாம் மங்கையர் தரும் இன்பம்தான். பொருள் தேவைப்படும்போது நாட்டினரிடம் கேட்டுப் பெறுவதில்லை அவர்கள். ஆட்களையனுப்பிக் கொள்ளை யடித்துத் தங்கள் நிதி நிலைமையை உயர்த்திக் கொள்வ தில் தான் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

அன்று கூற்றன் நாயனார் மாளிகையில் ஏதோ விசேஷ தினம். செல்வமும், செல்வாக்கும் இருக்கும்போது விருந் தும், விசேஷமும் கொண்டாடத் தனியான காரணமும் வேண்டுமோ? வேண்டியவர்கள் பலரும் ஒன்று கூடி உல்லாசமாகக் குடித்து ஆனந்தமாகப் பொழுதுபோக்கும் எண்ணம் ஏற்பட்டாலே போதுமே! இருப்பினும் அன்று அவர்கள் ஒன்று கூடுவதற்கு முக்கியமான காரணமும் உண்டு.

தலைநகரிலிருந்து வீரன் உக்கிரநாதன் வந்திருந்தான். அவனே களப்பிரர் படையின் சேனாபதி அல்லவாயினும், படையினரிடையே அவனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. தளபதி ஜெயகீர்த்திக்கு அடுத்த ஸ்தானததிலிருந்த அவன் எந்நேரத்திலும் படைத் தலைமையைக் கைப்பற்றிக் கொள்ளக் கூடும் என்று கூற்றன் நாயனார் கருதினான். அவனுக்கு உதவி செய்வதன் மூலம் தனது நலன்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற கள்ளக் கருத்து கூற்றன் உள்ளத்தின் ஒரு மூலையில் பம்மியிருந்தது.

உக்கிரநாதனோடு அவன் நண்பன் மார்பியஸ் என்கிற யவனனும் வந்திருந்தான். தனது சோம்பலுக்கும் உல்லாச மனோபாவத்துக்கும் ஏற்ற சில தத்துவங்களை வகைப் படுத்திக் கொண்டு 'ஞானி' என்ற பெயரை எளிதில்

பெற்றுவிட்டவன் அவன். ''வாழ்க்கை என்பது இன்பங்களை அனுபவிப்பதற்குத்தான். சென்றது நமக்குத் தெரியாது; இனி வரப்போவதையும் நாமறியோம். இப்பிறவி ஒன்றுதான் நிச்சயமானது. அதை அனுபவித்து வாழாமல் மறுமைக்காக ஏங்கி. நாட்களை வீணாக்குவது பேதமை. அழகிகளும், மதுவும், நாமும் கூடுகிற இடத்திலே சொர்க்கம் ஏற்படுகிறது''— இவ்வாறு பல, பல பேசும் சொல் வல்லவன் அவன்.

இருவரையும் கௌரவிப்பதற்காக அன்றைய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது என்றுகொண்டால் அது தவறாகாது. முக்கிய பிரமுகர்கள் பலர் விருந்தில் கலந்துகொண்டார்கள். பல் சுவை உணவும் மதுவும் தாராளமாகப் பரிமாறப்பட்டன. இசை விருந்தும், நாட்டியமும் நிகழ்ந்தன. பேச்சுக்கும் சிரிப்புக்கும் குறைவே இல்லை.

பூசுந்தரி எனும் ஆடலழகி ஒய்யாரமாக நடனமாடிக் கொண்டிருந்தாள். அவள் அழகையும். அசைவுகள் தோறும் மலர்ந்த புதுப் புதுக் கவர்ச்சிகளையும் விருந்தினர் பார்வையால் விழுங்கி வியந்தபடி இருந்தனர்.

மார்பியஸ் அளந்து கொண்டிருந்தான்.

'கடவுளரை மனிதராக மாற்றவும் வேண்டாம். மனிதர்களைக் கடவுளராக மாற்ற ஆசைப்படுவதும் சரியல்ல. ஆனால் கடவுளர்கள் மனித உருவில் வந்து அற்புதங்கள் செய்ததாகப் பேசுவதில் பெருமையடைகிறார்கள் ஜனங்கள். அதேபோல ஒரு சில மனிதர் கடவுள்தன் வேலைகள் செய்தனர் என்று சொல்வதிலும் அவர்களுக்கு உற்சாகம் அதிகம்தான். இந்தப் பாண்டி நாட்டுத் தமிழர்களையே பாருங்களேன். **வடிம்பலம்ப நின்ற பாண்டியன்** என்று ஒருவன் இருந்தானாமே......''

'ஆமாம். ஒரு சமயம் கடல் பொங்கி எழுந்தபோது அவன் வேல் எறிந்து அதை அடக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள்' என்று **விஷ்ணுசிம்மன்** கூறினான். இவன் மதுரையில் குடியேறி, செல்வம் திரட்டி, அந்நகரத்துப் பெண்ணை மணந்துகொண்டு சுகமாக வாழ்பவன்

மார்பியஸ் பிரமாதமாகச் சிரித்தான்.

அந்தச்சிரிப்பு வீதியிலே வந்து ஒரு ஓரத்தில் சுவரோடு சுவராக இருளில் கலந்து நின்றவனின் காதுகளை அறுப்பதுபோல் ஒலித்தது. மேலும் காது அடைபட்டுப்போகும்படி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்ததுபோல் எழுந்தது யவன ஞானியின் பேச்சு.

'அதைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். பொங்கி எழுந்தது பிரளயம். உலகமே அழிந்துபட்டது. ஆனால் எங்கள் பாண்டியன் அருகே வந்ததும் அது அவன் பாதங்களைத் தொட்டு அலம்பி வணங்கி வடிந்துவிட்டது என்று சொல்கிறார்களே! எவ்வளவு அபத்தமான பேச்சு!' என்றான் அவன்.

'தலைக்கனம்மான தற்புகழ்ச்சி!' என்று உறுமினான் உக்கிரநாதன்.

'அளவில்லாமல் தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்வதில் இந்தத் தமிழர்களுக்கு இணையாக வேறு எவருமே இருக்க முடியாது' என்று கூற்றுவன் நாயனார் கூறினான்.

'வீண் பெருமைதான்! உண்மையில் அவர்கள் பொட்டுப் பூச்சிகளாகவும் புழுதியோடு புழுதியாகி மறைந்து கிடக்கும் தேரைகளாகவும்தான் எனக்குத் தோன்றுகிறார்கள்......'

மார்பியஸ் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவ்வேளையில்தான், அங்கிருந்தவர்களில் யாருமே எதிர்பாராத - எதிர்பார்க்க முடியாத - அந்தச் சம்பவம் வெடித்தது. அனைவருக்கும் அதிர்ச்சி அளித்தது.

திறந்திருந்த சாரளம் ஒன்றின் வழியாக 'விஷ்' என ஓசை எழுப்பி வேகமாக வந்த ஒருபொருள் சரவிளக்கின் பித்தளைச் சங்கிலிமீது 'நங்கென்று' மோதியது. தரையில் விழுந்தது. அது எழுப்பிய ஓசையோடு கலந்தது நாட்டிய மாடி நின்று பூசுந்தரியின் பயம் தொனிக்கும் கூச்சல். எல்லோர் பார்வையும் கீழே விழுந்த பொருள்மீது பதிந்தன

சிறு கை ஈட்டி அது. அதன் முனையில் ஓலை ஒன்று சொருகப்பட்டிருந்தது.

கூற்றின்நாயனார் உத்திரவிடவும், பணியாள் ஒருவன் அதை எடுத்து அவனிடம் தந்தான்.

முதலில் வியப்பினால் அகன்ற கூற்றனின் கண்கள் ஓலையைப் படித்ததும் கனல் எழ உருட்டி விழித்தன. 'ஏய் ஆட்களை ஏவு! எங்கும் தேடச் சொல். இதை எறிந்தவன் உடனே பிடிபட வேண்டும். சீக்கிரம்!' என்று கொக்கரித்தான் அவன்.

அவன் கட்டளையை நிறைவேற்ற ஓடினர் சிலர்.

'சிங்கத்தின் குகையிலே வாலாட்டத் துணிந்திருக்கிறது ஏதோ ஒரு நரி! எச்சரிக்கையாம்! ஹஹ் என்று உறுமல் பிறந்தது அவனிடமிருந்து.

'என்ன ஓலை அது?' என்று கேட்டான் உக்கிரநாதன்.

'நமக்குச் சாவோலையாம்! 'நாட்டைச் சீர்கெடுத்துத் தாம் வாழ முயல்கின்ற நாசகாரர்களே! உங்களுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. அகங்காரம்வேண்டாம்!'' இவ்வளவே இதில் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு கொடியும்

பூ மாலையும் கீழே பொறிக்கப்பட்டுள்ளன' என்றான் கூற்றன்.

விஷ்ணுசிம்மன் அந்த ஓலையை வாங்கிக் கூர்ந்து நோக்கினான். 'கொடியில் ஒரு மீன் இருக்கிறது. மாலை வேப்பம் பூ மாலையாக இருக்கலாம்' என்றான்.

'ஏனோ?' உக்கிர நாதனின் கேள்வி இது.

'இவை பாண்டியரின் சின்னங்கள்!'

'பாண்டியர்களே ஒழிந்துவிட்ட பிறகு அவர்களின் சின்னங்களுக்கு இந்த ஓலையில் என்ன வேலை?' என்று முணுமுணுத்தான் படைத்தலைவன்.

வேலையற்றவன் எவனோ விட்டெறிந்தவைதானே இந்த ஓலையும் ஈட்டியும்?' என்றான் விஷ்ணுசிம்மன்.

'இதை நாம் அலட்சியப்படுத்துவதற்கில்லை. சிறிது காலமாகவே நாட்டில் குழப்பங்களும், பகைமையும் நம் மீது வெறுப்பும் உள்ளூற வளர்ந்து வருவதாக எனக்குச் சந்தேகம் உண்டு...இன்று இரவுதான் சிறு ஆதாரம் கிடைத்திருக்கிறது' என்று கூற்றன நாயனார் அறிவித்தான்.

யோகிகளும் போகிகளும் நள்ளிரவில் கண்விழித் திருப்பார்கள். கொள்ளைக்காரர்களும் சூழ்ச்சி செய்வோரும்கூட இரவில் வெகுநேரம் வரை விழித்திருப்பார்கள்' என்று சொல்லி, தான் இருப்பதைக் காட்டிக்கொண்டான் மார்பியஸ்.

கூற்றன் பேச்சைக்கேட்டு முகம் சுளித்தான் உக்கிர நாதன் 'சந்தேகம் எழுந்தபிறகும் தூங்கிக்கொண்டிருப்பது சரியல்ல, நண்பரே. உம்மிடம் அதிகாரம் இருக்கிறது ஆள் பலமும் இருக்கிறது. வேறென்ன வேண்டும்? உள்ளூர அரிக்க ஆரம்பித்துள்ள கறையான்களை புற்

றோடு சேர்த்து அழித்திருக்க வேண்டாமா?' என்று குறை கூறினான் அவன்.

கூற்றனின் புருவங்கள் மேலேறி நெளிந்து இறங்கிச் சமநிலை பெற்றன வெகுண்டெழுந்த சீற்றத்தின் குறி அது ஆயினும் அவன் தன்னை அடக்கிக்கொண்டான்.

இதற்குள் வெளியே ஓடிச் சென்ற ஆட்கள் திரும்பி வந்தார்கள். 'எங்கும் எவரையும் காணவில்லை' என்று பணிவுடன் தெரிவித்தார்கள்.

'மடையர்கள்' என்று கர்ஜித்தான் கூற்றன். 'எவனும் வீசி எறியாமல், மாயத்தினாலா இது வந்து விழுந்தது?' தீப்பந்தங்களோடு தேடச் சொல்லு, தெருத் தெருவாகத் தேடட்டும். எவனும் அகப்படாவிட்டாலும் ஊரார் பயந்து நடுங்கட்டும்!' என்று கட்டளையிட்டான் அவன்

## 2. சிறிது வெளிச்சம்

இருளோடு வந்து. ராஜ வீதியின் வெளிச்சத்தைக் கண்டு ஒரு மாளிகையின் சுவர் மறைவில் பம்மி நின்றவன் அங்கு மாடிக்குள் எழுந்த அட்டகாசச் சிரிப்பைக் கேட்டுப் புகைந்து நின்றான். மேலும் மேலும் எவ்விய அகம்பாவ ஒலிப்பரப்பைக் கேட்டுப் பொங்கினான்.

'நமது நாட்டில் வாழவந்தவர்கள்-நம்மை மிதித்து மேலே ஏறி உயர்ந்தவர்கள்—நம்மையும் நமது முன்னோரையும் கேவலமாக கருதி எள்ளி நகையாடும் காலமும் வந்ததே' எனக் குமைந்தது அவன் உள்ளம். உணர்ச்சி வசப்பட்டான் அவன்.

எவ்விதமேனும் உரியவர்களிடம் சேர்ப்பித்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு அவன் தயாரித்து வைத்

திருந்த ஓலையை எடுத்தான். அதை ஈட்டியில் குத்தி, குறி பார்த்து விட்டெறிந்தான்.

அதனால் பரபரப்பு விளையும் என்பது கூடவா தெரியாது அவனுக்கு? விரைவில் அங்கிருந்து தப்பி நகர்ந்து விடும்படி தூண்டியது உள்ளுணர்வு. அவன் பெருஞ்சுவர்களின் நிழலோடு நிழலாகப் பம்மி, ஓசையின்றி வேகமாக நடந்தான். மாளிகையின் பின்புறமாகச் சென்றபோது, இரு பெரும் பள்ளங்களிடையே சிறு சந்து ஒன்று தென்பட்டது இருள் மண்டிய அக்குறுகல் வழியினூடு புகுந்த அவன் ஒரு இடத்தில் சுவரோடு ஒண்டி நின்றான். திடுக்கிட்டான்.

அந்தச் சுவர் நகர்ந்து விலகுவது போன்ற உணர்வு ஏற்பட்டதுதான் அதற்குக் காரணமாகும். அது ஒரு கதவு என்பதும், உள்ளே தாழிடப்பெறாமலே அது சும்மா அடைத்து வைக்கப்பட்டிருந்தது என்பதும் உடனடியாகவே அவனுக்குப் புரிந்துவிட்டது அதனால் தைரியம் அதிகமாயிற்று. அது முகத்திலே முறுவல் பூக்கச் செய்தது.

'யார் வீடாக இருந்தால் நமக்கென்ன? நாம் இங்கு குடியிருக்கவா போகிறோம்? கொஞ்ச நேரம் பதுங்கியிருப்போம். வீதியில் சந்தடியும் ஆர்ப்பாட்டமும் ஓடுங்கிய உடனே வெளியேறி விடலாம்' என்று பேசியது அவன் மனம்.

அவன் அக்கதவைத் திறந்து மெதுவாக உள்ளே புகுந்தான். அது தோட்டத்திற்குள் வழிவிட்டது. அவன் நன்றாகத் தாழிட்டுவிட்டு சுவரோடு ஒட்டி நின்று உற்றுக் கேட்டான்

வெளியே இரண்டு மூன்று பேர் நடந்து வருவது போன்ற ஓசை எழுந்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் கனத்தது. பின் தேய்ந்து மறைந்தது.

'ஆட்கள் தேடித் திரிகிறார்கள். நல்ல சமயத்துக்குக் கதவு தமக்கு உதவியது' என்று எண்ணி மகிழ்ந்தான் அவன்,

நேரம் மெதுவாக ஊர்ந்தது. வேறு குழப்பமோ ஒலிகளோ எழவில்லை என்றே அவனுக்குத் தோன்றியது. ஆகவே கதவைத் திறந்துகொண்டு வெளியேறலாம் என்று துணிந்தான் அவன். மேலும் ஒருசில கணம் தயங்கி நின்றான், தாழ்ப்பாளை அகற்றினான். அது 'டடக்' எனச் சிற்றொலி எழுப்பவும் அவன் நெஞ்சு 'திக்திக்'கென அடிக்கத் தொடங்கியது

'அவசியமற்ற பயம்' என முழங்கியது உள்ளம். அவன் கை கதவைத் மெதுவாத் திறக்க நீண்டது. அதே சமயம் அவன் தோளைப் பற்றி யாரோ அவனை வேகமாகப் பின்னுக்கு இழுக்கவும் அவன் திடுக்கிட்டான். அவ்வேளைக்கு பயம் அவனை ஆட்கொண்டது. அவன் உடலில் சிறுநடுக்கம் பரவியது.

'பயம் வேண்டாம். இப்ப வெளியேறினால் நிச்சயம் ஆபத்து எதிர்ப்படும்' என்று எச்சரித்தது ஒரு பெண்குரல். அது பெண குரல் என அவன் உணர்வு சொன்னது.

'யாரையோ தேடிப்பிடிக்க குதிரை வீரர்கள் தீப்பந்தமும் கையுமாகக் கிளம்பியிருக்கிறார்கள். நீ யாராக இருந்தாலும் சரி. இவ்வேளையில் அவர்கள் முன்னே போய் விழுவது உனக்கு நன்மை பயக்காது என்றாள் அவள்.

'என்னை காக்க வந்த அன்னை வாழி!' என்றான் அவன்.

'நீ பாண்டி நாட்டவனோ?' என்று அவள் வினவினாள்.

'ஆம்' என்று அவன் மெதுவாகச் சொன்னான்.

'நல்ல இடம் பார்த்தாயே ஒளிந்து கிடப்பதற்கு இது விஷ்ணுசிம்மனின் இல்லம் ஆயிற்றே!' என்று அவள் கூறினாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவளும் மௌனமாக நின்றாள் பிறகு சொன்னாள்.

'ஆட்கள் சந்தேகமடைந்து ஒவ்வொரு மாளிகையின் பின்புறமெல்லாம் தேட வந்தாலும் வரலாம். எதற்கும் முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லது தானே? நீ இங்கேயே நிற்கவேண்டாம் பாதுகாப்பான இடம் ஒன்று காட்டுகிறேன், வா!

அவள் முன்னால் நடந்தாள். அவனும் அவள் பின்னா லேயே சென்றான். அவள் செய்கையில் தீய நினைவு கலந் திருக்குமோ என்ற ஐயம் அவன் மனதிலே பிறந்தது. 'சீ என்ன நினைப்பு!' என்று கடிந்தது மனசின் ஒரு பகுதி.

ஒரு இடத்தில் சென்ற போது மாடம் ஒன்றிலிருந்து வெளிப்பட்ட ஒளிக்கற்றை அவள் முகத்தில் வருடியது. அப்பொழுது அவன் அம்முகத்தை ஒருவாறு அறிய முடிந் தது அருள் பூத்த முகம் அது. அன்பு தவழும் விழிகளும் மனநிறைவும் அம்முகத்துக்குத் தனி ரக எழில் சேர்ந்தன. அவள் முதியவள் அல்லள். எனினும், இளையவளும் அல்ல.

தோட்டத்தின் ஒரு புறத்தில் சிறு வீடு போன்ற அமைப்பு தென்பட்டது அதன் கதவைத் திறந்து அவனை உள்ளே அனுப்பி வைத்தாள் அவள். 'நான் வந்து அழைக் கும் வரை இங்கேயே இரு. உனக்கு எவ்வித ஆபத்தும் வராது' என்று அவள் உறுதி கூறினாள்.

'நான் உன்னை உள்ளே விட்டு, வெளியே கதவைப் பூட்டி விடுவேன். ஒரு வேளை காவலர்கள் வந்தாலும்.

பூட்டைப் பார்த்துவிட்டுத் திரும்பி விடுவார்கள். இல்லை யெனில், கதவைத் திறந்து உள்ளே பார்க்க ஆசைப்படு வார்கள். அவர்களுக்கு நாம் ஏன் அந்த ஆசையையும் வீண் வேலையும் கொடுக்க வேண்டும்? என்று சொல்லி அவள் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள். அவனிட மிருந்து மறுமொழி எதையும் எதிர்பாராமலே அவள் கதவை அடைத்து வெளியே பூட்டிக் கொண்டாள்.

அவள் வந்த ஓசை அவன் காதில் விழாதது போலவே, அவள் அங்கிருந்து எப்படி நகர்ந்தாள்—எந்தப் பக்கம் போனாள்—என்று புலப்படுத்தும் சத்தமும் கேட்கவில்லை. அவளை நம்பலாம் என்று தோன்றியது ஒரு சமயம். அவளை நம்பலாமா' என்ற சந்தேகமும் எழுந்தது அவ னுக்கு. தன்னை அறைக்குள் போட்டுப் பூட்டி விட்டுச் சென்றவள் காவல்காரர்களை அழைத்து வந்து காட்டிக் கொடுத்து விட்டாலோ? அவன் மனம் அரித்தது

'சரி, சரி வருவது வரட்டும். என்ன வந்தாலும் ஏற்றுக்கொண்டு எதிர்த்து நிற்க வேண்டியதுதான்' என்று தீர்மானித்தான் அவன்.

வீதியில் 'சடபட'வென ஒலித்தது குதிரைகளின் குளம்பொலி. தான் பத்திரமாக இருப்பதை எண்ணி மகிழ்வுற்றான் அவன். என்னைக் காட்டிக் கொடுக்க விரும்பியிருந்தால் அவள் இந்த இடத்துக்கு அழைத்து வந்திருக்க வேண்டாமே? அங்கேயே நிற்க வைத்திருந் தாலே போதும்' என்று நினைத்தான். 'இவள் தமிழ் மகளாகத் தான் தோன்றுகிறது. விஷ்ணு சிம்மனின் மாளிகையைச் சேர்ந்தவளாகவே இருக்கலாம். இருந் தாலும் இருட்டிலே அவள் என்னை எப்படிக் கண்டு பிடிக்க முடிந்ததோ தெரியவில்லை' என்று குழம்பியது அவன் உள்ளம்.

அங்கங்கே திடீர் திடீரென்று ஆளரவமும், கூவலும் அழைப்பும் எழுந்தன. ஒடுங்கின. சுவர்கள்மீது ஏறிக் குதிக்கிற மாதிரியும், உதிர்ந்த சருகுகள் மேல் நடப்பது போலவும் ஓசைகள் வந்தன. தேய்ந்தன. ஒரு சமயம் அந்தச் சிறு குடிலின் அருகிலேயே பேச்சொலி கேட்டது. சிலர் நடந்து வருவது போலவும் இருந்தது. 'திமுதிமு' வென எரியும் திப்பந்தங்களின் சுவாலை பரப்பிய ஒளி வீச்சு சிறுசிறு இடைவெளிகளின் வழியாக அவ்வீட்டினுள்ளும் எட்டிப் பார்த்தது.

அவன் நெஞ்சு பதை பதைத்தது. அவள் ஆட்களை அழைத்து வந்து விட்டாள் என்று கொதித்தது மனம். ஆயினும் விபரீதமாக எதுவும் நிகழவில்லை. ஒளி குன்றியது. ஆட்கள் போய் விட்டார்கள் என்றும் புரிந்தது. அவள் பேரில் சந்தேகம் கொண்டதற்காக அவன் வருந்தினான். இதயத்தின் ஆழத்திலிருந்து எழுந்த வருத்தம் அது. தன்னை இன்னான் என அறியாதபோதும் பாண்டித் தமிழன் என்பதற்காகத் தனக்கு அன்பாலும் அனுதாபத்தாலும் உதவி செய்யத்துணிந்தவளைப்பற்றித் தான் தவறுதலான எண்ணம் வளர்ந்துவிட்டதற்காக நாணுற்றான் அவன்.

இருளில் தன்னந்தனியனாய், ஆபத்தான சூழ்நிலையில் தங்கியிருந்த அவனுக்கு நேரம் மெதுவாக - மிக மிக மெதுவாக - ஊர்வதுபோல பட்டது. அவனால் உறங்கவும் முடியாது. அந்த இடத்தில் அவனுக்கு அப்பொழுது எப்படி உறக்கம் வரும்? ஆகவே, என்னென்னவோ எண்ணியவாறு உட்கார்ந்திருந்தான் அவன்.

வெளியே 'க்ளிக்' எனும் ஒலி எழுந்தது. பூட்டு திறக்கப்படும் ஓசையும் நாதாங்கி அகற்றப்படும் ஒலியும் வந்தது. அவன் எச்சரிக்கையோடு நிமிர்ந்து உட்கார்ந்தான் 'நான்தான்' என்று மெதுவாகக் குரல் கொடுத்தபடி

அவள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். மீண்டும் அதை அடைத்துத் தாழிட்டுவிட்டு அங்கு ஒரு இடத்திலிருந்த சிறுவிளக்கை ஏற்றினாள். அவனைக் கவனித்தாள்

அவனும் அவளை ஆராய்ந்தான். அவளுக்கு சுமார் முப்பது வயது இருக்கும் என மதித்தான் அவன். எளிமையும் சுத்தமும் கலந்த ஆடை அவளுடைய அழகுக்கு இனிமை சேர்த்தன.

'அம்மா, எனக்கு நீங்கள் செய்த உதவி மிகப் பெரியது. எனது நன்றியை......'

'பேச வேண்டாம்!' என்று விரல்களால் வாயைப் பொத்தி சாடை காட்டினாள் அவள். 'எங்கும் அமைதி ஏற்பட்டுவிட்டது இப்பொழுது நீ வெளியேறலாம்' என்றாள்.

'தெய்வம் போல் வந்து உதவிய தாங்கள் யார் என்று...

அவள் மென்முறுவல் பூத்து, குறுக்கே பேசினாள்: 'நான் தெய்வம் ஒன்றுமில்லை. சாதாரணப் பெண்தான். தமிழ் புலவர் ஒருவரை நான் எதிர்பார்த்து நின்றேன். திடீரென்று வெளியே ஏதோ பரபரப்பு ஏற்பட்டதுபோல் தெரிந்து. பின்புறக் கதவைத் தாழிடலாம் என்று வந்தேன். நான் கைவைத்த சமயம் கதவு திறந்துகொள்ளவும் விலகி நின்று கவனித்தேன். பிறகுதான் உனக்கே தெரியுமே!'

அவள் அவனைக் கனிவுடன் நோக்கினாள். 'நீ சிறு பிள்ளைதான் இன்னும்!' என்றாள். குறுநகை புரிந்தாள்.

என்ன கருத்தில் அவள் அப்படிச் சொன்னாள் என்பதை அவனால் புரிந்துகொள்ள இயலவில்லை 'நீங்கள் யார் என்று......' ஆரம்பித்தான்.

'அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன?' என்று கேட்ட அவள் அவளுக்கு இயல்பான மென் சிரிப்பைக் காட்டினாள். 'நான் மங்கையர்க்கரசி இவ்வளவு போதும் இப்பொழுது. உன் பெயர் என்ன?'' என்றாள்.

இளம்வழுதி, நான்...'

'மற்றக் கதை எல்லாம் வேறொரு சமயம் கேட்டுக் கொள்கிறேன். இப்ப நீ இங்கிருந்து செல்வதே நல்லது' என்று கூறி, விளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்தாள் அவள்.

அவனும் அங்கிருந்து நகர்ந்தான். அவள் வழிகாட்ட, தோட்டத்தின் வாசலை அடைந்தான். அவளுக்கு வணக்கம் அறிவித்துவிட்டு இருள்மண்டிய வீதியில் அடி பதித்தான். அவனுக்குப் பின்னால் கதவு தாழிடப்படும் ஓசை எழுந்து விடை கொடுத்தது.

அப்பொழுது சிறு தூறல் பன்னீர் தெளித்துக்கொண்டிருந்தது. இரை தேடித் திரியும் பாம்புபோல் வாடைக் காற்று 'உஸ்-ஊஸ்' என்று மூச்சுவிட்டபடி நெளிந்தது. தோட்டங்களில் புஷ்பித்த இரவு நேர மலர்களின் நறுமணம் 'கம்'மென்று பரவி நாசியைத் தாக்கியது. எங்கும் நிசப்தம்.

இளம் வழுதி வேகமாக நடந்தான். பெரிய வீதிகளின் வழியாகச் செல்லாமல், கிளைப் பாதைகளினூடும் புகுந்து சென்றான் அவன்.

ஒரு திருப்பத்தைக் கடந்து சற்றே பெரிய தெரு ஒன்றில் திரும்பியபோது அவன் காலில் ஏதோ தடுக்கியது. அவன் குனிந்து நோக்கவும், அது ஒரு மனிதன் என்று தெரிந்தது. செத்தவன் உடலாக இருக்குமோ என அறிய முயன்றான் அவன்.

கீழே விழுந்து கிடந்த ஆளுக்கு நன்றாக மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. இளம் வழுதி அந்த நபரைத் தொட்டுத் தடவி உலுக்கத் தொடங்கவும் அசைவு பிறந்தது. 'ஐயா.' யாரய்யா இது? மயக்கமா? அல்லது குடிபோதையா?, என்று கேட்டான் அவன்.

'இரண்டுமல்ல நீ யார்? என்று கேட்டபடி அந்தப் பெரியவர் எழுந்து உட்காருவார் என அவன் எதிர்பார்க்கவேயில்லை ஆதலால் திடுக்கிட்டுப் போனான் பிறகு சமாளித்துக்கொண்டு 'வழிப் போக்கன்' என்றான்.

'நெடும் போக்காக, திரும்பாத வழியில் செல்லத் துணிந்து மதுரை வீதியில் திரிகிறாயா? இன்று இம் மூதூர் நகரத்தின் தலைவாசலாக மாறியிருக்கிறதே!'' என்று மு ங்கினார் அவர்.

'குதிரை வீரர்கள் உங்களைத் தாக்கினார்களோ!' பலத்த காயமோ? எனக் கேட்டான் இளம் வழுதி

'இங்கேயிருந்து உரையாடுதல் கூடாது. என்னைத் சற்றே தூக்கு' என்றார் அவர்.

'உங்களால் நடக்க முடியுமா?' என்று வழுதி ஐயத் தோடு வினவினான்.

'முடியும் உன் தோளைப் பற்றிக் கொண்டு நடக்கத் துணை புரிந்தால் போதும். நான் செல்ல வேண்டிய இடம் அதிகத் தொலைவிலும் இல்லை. இரவின் மீதப்பொழுதை நீ என் வீட்டிலேயே போக்கலாம்' என்றார்.

இருவரும் மெதுவாக நடந்தார்கள்.

'உனக்கு இந்த நகரமில்லை என்று நினைக்கிறேன். எங்கிருந்து வருகிறாய்?' எனப் பெரியவர் விசாரித்தார்

'செவ்விருக்கை நாடு' என்ற பதில் கிடைக்கவும் அவர் நின்று அவன் முகத்தை உன்னிப்பாகக் கவனித்தார்.

**செவ்விருக்கைநாடு-இளம்வழுதி!** ...நீ பாண்டியன் மரபினன் தானே?' என்று கேட்டார் அவர். அவன் 'ஆம்' எனத் தலையசைக்கவும் அவர் கடுகடுப்பாகச் சொன்னார்:

'அந்தப் பேரைச் சொல்லாதே. உன் ஊரையும் பேரையும் இங்கு உரக்கக் கூறாதே! இனி வாய் திறவாமல் என்னோடு நட!'

அதன் பிறகு அவரும் பேசாமலே நடந்தார்.

## 3. ஒரு பொறி

எளிமையும், தூய்மையும் கொலுவிருக்கும் சிறு குடில் அது. சுற்றிலும் நன்கு வளர்ந்திருந்த செடி கொடிகளின் நடுவே ஒரு ஆசிரமம் போல் அது விளங்கியது. தெருவின் கடைசியில் இருந்த அக்குடிலுக்கும் இதர வீடுகளுக்கும் இடை வெளி நிறையவே காணப்பட்டதால், அது தனிமைச் சூழ்நிலையும் பெற்றிருந்தது.

நகரம் முழுவதும் கண்ணுறங்கும் இருள் நேரத்திலே, இளம்வழுதியை வீதியில் தென்பட்ட பெரியவர் அந்த வீட்டுக்குத்தான் அழைத்து வந்தார். அவர் முதலில் உள்ளே சென்று, விளக்கேற்றிவிட்டு அவனை அழைத்தார். புறத்தைப் போலவே உள்ளும் அழகுடன் அமைதியும் பெற்றுத் திகழ்ந்தது. ஒரு பக்கத்தில் ஏடுகள் பல அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எழுத்தாணியும், எழுதுவதற்கு உரிய ஓலைகளும் அங்கே காணப்பட்டன.

இளம்வழுதி அவற்றையே கவனிப்பதைக் கண்ட பெரியவர் முறுவல் பூத்தார். 'நான் யார் என்று அறிய வேண்டும் என்ற அவா உனக்கு ஏற்படுகிறது அல்லவா? என்னை **மாழுலன்** என்பர்...'

அவர் பேச்சு அவனுக்குத் திகைப்பு அளித்தது. அவன் கைகள் தாமாகவே குவிந்தன. தலை தணிந்து வணக்கம் காட்டியது 'புகழ்பெற்ற மாமூலனார் தாங்கள் தானா? தங்களை இவ்வாறு சந்திக்க நேரிடும் என்று நான் எண்ணியதே யில்லை எனினும், எதிர்பாராது சந்திக்க முடிந்ததில் எவ்வளவோ மகிழ்ச்சி' எனக் கூறினான் அவன்.

அவர் புன்னகை புரிந்தார். அவனை உட்காரும்படி அறிவித்துவிட்டு கதவை அடைத்தார்.

'இன்று இரவு வெறியர்களுக்கு ஏனோ பேய் பிடித்து விட்டது! கொடியவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இத்தகைய நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாகிவிட்டன என்றாலும் இன்று முக்கியமாக ஏதோ நடந்திருக்க வேண்டும்' என்று அவர் மென்குரலில் பேசினார்.

'அதற்கு நான்தான் காரணம்' என இளம்வழுதி அறிவித்தான். அவன் ஓலை குத்திய ஈட்டியை மாளிகையினுள் விட்டெறிந்தது பற்றிச் சொன்னான்.

மாமூலனார் அவனை உற்று நோக்கினார். 'ஏன் அவ்வாறு செய்தாய்?' என்று கேட்டார்.

'அவர்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக' என்றான் அவன்.

அவர் ஏளனம் செய்வதுபோல் சிரித்தார். 'இளம் வழுதி, நீ இன்னும் சிறு பிள்ளைதான்!' என்றார்.

அவன் திடுக்கிட்டான். ஓரே இரவில் இரண்டுபேர் தன்னைப்பற்றி ஒரேவிதமான கருத்தை எடுத்துச் சொன்னதைக் கேட்டதால் எழுந்த அதிர்ச்சி அது.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த பெரியவர், 'ஏன் இந்த உணர்ச்சிக் குழப்பம்?' என்று வினவினார்.

'இதேபோல் இன்னும் ஒருவரும் என்னிடம் சொன்னார். உங்களைச் சந்திப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன் தான் சொன்னார்.'

'வியப்புக்குரியதுதான் அப்படிச் சொன்னது யார்?

'அவர் யார் என்று எனக்குத் தெரியாது. தமது பெயர் மங்கையர்க்கரசி என்றார்......'

'மங்கையர்க்கரசியா?' புலவரின் குரலில் வியப்பு ஒலித்தது.

'ஆமாம். விஷ்ணுசிம்மன் வீட்டில்......'

அவர் பரபரப்படைந்தார் 'அவளை நீ எங்கே கண்டாய்? என்ன நடந்தது? ஒன்று விடாது கூறு' என்றார்.

இளம்வழுதி தனக்கு எதிர்ப்பட்ட அனுபவத்தைச் சொன்னான். மங்கையர்க்கரசி செய்த உதவிபற்றிக் கூறிவிட்டு, அவளது நற்பண்பைப் பாராட்டிப் பேசினான்.

'மங்கையர்க்கரசியை எனக்குத் தெரியும். அவள் எதிர்பார்த்திருந்த புலவன் நான்தான் அவளுக்குத் தமிழ் மீது அளவில்லாத அன்பும், பக்தியும் உண்டு தனது தமிழ் அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அவள் என்னிடம் பயிற்சி பெற்று வருகிறாள்......'

'மன்னிக்க வேண்டும்' என்று குறுக்கிட்டான் இளம்வழுதி.

விஷயம் புரியாதவராய் அவர் அவனைப் பார்த்தார்.

'என்னாலேதானே இன்றிரவு நீங்கள் அந்த அன்னையாருக்குத் தமிழ் கற்பிக்க முடியாமல் போய்விட்டது. அதற்காக வருந்துகிறேன். இதனாலேயே மன்னிப்புக் கோரினேன்'

'அது கிடக்கட்டும். உனது செயல் சிறுபிள்ளைத்தனமானது என்று சொன்னேனே ஏன் தெரியுமா? நீ

விளைவைப் பற்றி எண்ணாமல், உணர்ச்சித் துடிப்போடு, விளையாட்டாகச் செயல் புரிந்துவிட்டாய். நீ பிடிபட்டிருந்தால் உன் நிலைமை என்னாகியிருக்கும்? உனது ஆசைகளும் திட்டங்களும் ஏதேனும் இருந்தால் என்ன ஆகும்? நல்லவேளையாக நீ தப்ப முடிந்தது. திருவருள் உனக்குத் துணை நின்றது. வழுதி! வெறும் உணர்ச்சித் துடிப்பு இருப்பது மட்டும் போதாது. ஆழ்ந்த அறிவும், அடக்கமும், சிந்திக்கும் பயிற்சியும் வேண்டும். உன்னிடம் அளவில்லாத தன்னம்பிக்கை இருக்கலாம். உடல் வலிமையும் இருக்கலாம். ஆயினும், மாற்றான் வலிமை, தைரியம், சூழ்நிலையையும் சமய சந்தர்ப்பங்களையும் கருத்தில் கொண்டே செயலாற்றத் துணிய வேண்டும்.

உபதேசிப்பதுபோல் அவர் பேசியதற்காக இளம் வழுதி வருத்தம் கொள்ளவில்லை. பணிவன்புடன் அவர் வார்த்தைகளைச் செவி மடுத்தான்.

'அது என் தவறு என்றே தோன்றுகிறது. எனது தாயகத்தையும், என் தாய் மொழியையும், என் முன்னோரையும் யாராவது பழித்துரைத்தால் எனது உள்ளம் கொதிக்கிறது. அப்படிப் பேசுவோர் நாவைத் துண்டிக்க வேண்டுமென்று......'

'அமைதி தம்பி! மீண்டும் உன் உணர்ச்சிக்கு இடமளித்துவிட்டாயே!' என்று இளம்வழுதியின் வேகத்துக்குத் தடை விதித்தார் மாமூலனார்.

'வடிம்பலம்ப நின்ற பாண்டியனைப் பற்றி ஒருவன் இழிவாகப் பேசியதைக் கேட்டதும் நான் ஆத்திரம் கொண்டேன்......'

'நாய்கள் குரைப்பதனால் யானைகளின் பெருமை குறைந்து விடுமா? நரிகள் ஊளையிடுவதனால் திங்களின்

சிறப்பு குன்றிவிடும் என்று எண்ணுகிறாயா?' என்று புலவர் கேட்டார்.

அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை

மாமூலனாரின் அறிவொளி மிளிரும் கண்கள் சிறு விளக்கின் சுடரையே உறுத்து நோக்கின. அதனுள் ஒடுங்கி விட்ட ஏதோ பெரும் ரகசியத்தைக் கூர்ந்து கவனிப்பதுபோல் பதிந்து நின்றன

சில கணங்கள் சென்றதும், அவர் தெளிவோடும் பெருமிதத்தோடும் பேசலானார்:

'நிலந்தரு திருவிற் பாண்டியன் என்றும், பாண்டியன் மாகீர்த்தி எனவும், நெடியோன் என்றும் அழைக்கப் பெற்ற வடிம்பலம்ப நின்ற பாண்டியனின் பெருமை உயர்ந்தது. இவன் பேரவையில்தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது குமரிமுனைக்குத் தெற்கேகுமரிநாடு என்ற நிலப்பரப்புமுன்பு இருந்தது. கடல் பிரளயத்தால் அது அழிவுற்றது. அவ்வாறு அந்நிலம் அழிவதற்கு முன்னால், அங்கு பஃறுளி எனும் ஆற்றை வெட்டுவித்தான் நெடியோன். கடல் தெய்வத்திற்கு விழா எடுந்துச் சிறப்பும் பெற்றான். இவன் ஆணைக்குக் கடல் பணிந்தது என்பது அன்பினால் மக்கள் புனைந்த கதையேயாகும். ஆனால் உண்மை மிகுந்த மாண்பு பெற்றது. கடலில் நெடுந்தூரம் சென்று யவனத் தீவதத்தில் அடிபதித்து வெற்றிகண்ட மன்னன் இவன் அங்கு மீன் இலச்சினையோடு கல்பதித்து, தன் அடிகளை ஆண்டுள்ள கடல் அலம்பும்படி அவன் நின்றான். வடியபலம்ப நின்ற பாண்டியன் என்ற பெயரும் பெற்றான்......'

'ஆகா' என்று ஆனந்தத்தால் கூறினான் இளம்வழுதி.

'பாண்டியர் பெருமை இன்று பழித்துரைக்கும் நிலை எய்திவிட்டது. எனினும், காலப்பரப்பிலே அழியாத—

அழிக்க முடியாத-கீர்த்திச் சுவடுகளைப் பதித்துள்ளவர்கள் அவர்கள் நெடியோன் வழியில் தோன்றியபல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிதான் என்ன? யானைப்படைகளை வென்று மாற்று மன்னர் பலரை ஒழித்தவர் அல்லவா அவன்!'

மாமூலனார் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தார். இப்பொழுது அவர் விழிகள் இருளினூடே எதையோ துளாவுவனபோல்தோன்றின. பிறகு நெடுமூச்செறிந்து பேசினார்.

'பாண்டியர்கள் வெகுகாலம்வரை புறப் பகைவர்களின் பயமின்றி வாழ்ந்தனர். ஆயினும் இயற்கைபெரும் பகையாக எழுந்து அவர்களோடு மோதியது உண்டு. குமரி நாட்டைக் கடல் விழுங்கிவிட்டது. அதன் பின்னர், குமரியாற்றுக்கும் தாம்பிரவருணி ஆற்றுக்கும் இடையேயுள்ள நிலப்பரப்பில் ஆட்சிபுரிந்தனர் பாண்டியர். அக்காலத்திலேதான் கபாடபுரம் அவர்களது தலைநகரமாயிற்று. பாண்டியன் முடத்திருமாறன் காலத்தில் மீண்டும் கடல் பொங்கி எழுந்தது. கபாடபுரத்தையும், பாண்டிய நாட்டின் பெரும் பகுதியையும் எண்ணற்ற தமிழ்நூல்களையும் விழுங்கி விட்டது......'

'கொடுமை இது கொடுமை' என்று முழங்கினான் இளம் வளம்வழுதி.

'இயற்கையை வெல்லும் திறன் மனிதருக்கு ஏது? என்றார் புலவர் உயிர் தப்பிய முடமாறனும் செந்தமிழ்ப் புலவர்களும் சிறிது வடக்கே வந்து, மணலூர் என்ற இடத்தில் வந்து தங்கினார்கள். பிறகு, மதுரை சேர்ந்தனர். முடத்திருமாறன் இந்நகரை வளப்படுத்தினான். இதையே தலைநகர் ஆக்கி, கடைச்சங்கம் நிறுவினான். தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த ஒண்டிறற் குரிசில் எனச் சிறப்புப் பெற்றான்.

'வாழ்க அவன் புகழ்!' என்றான் இளம்வழுதி.

'நீதிக்குக் களங்கம் ஏற்படுத்தாதிருக்கத் தன் கையைத் தானே வெட்டிக் கொண்ட பொற்கைப் பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, பாண்டியன் அறிவுடைநம்பி, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் போன்றவர்களின் புகழ், கால வெள்ளத்தாலும் அசைக்க முடியாத கருங்கல் பாறை போன்றது அல்லவா? நெடுஞ் செழியன் காலத்தில்தான் கண்ணகி வெஞ்சினம் கொண்டு இம் மதுரை மூதூரை எரியினுக்கு இரையாக்கினாள். நீதி தவறினோம் என உணர்ந்த செங்கோல் மன்னன் சிம்மாசனத்திலிருந்து விழுந்து மாண்டான். அவன் கோப்பெருந் தேவியும் உயிர் துறந்தாள். அதன் பிறகு பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் ஆட்சி புரியலானான். இவன் காலத்தில் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. கண்ணகியின் சினம் தணிய இவன் பெரு விழா நடத்தினான். இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சோழனையும், சேரனையும் வேறு சில சிற்றரசர்களையும் போரில் எதிர்த்துப் பெரு வெற்றி கண்டான். கடைச் சங்கத்தைப் புரந்த பாண்டியரில் இறுதி மன்னனான கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும், கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த கருங்கை ஒள்வாட் பெரும் பெயர்வழுதி, பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி, நல்வழுதி, கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, இலவந் திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன், குறுவழுதி போன்றவர்களும் பாண்டிய குலத்துக்கும், தமிழ் நாட்டுக் கும் சிறப்பு தந்தவர்கள்தான். ஆனால் இளம்வழுதி...'

மாமூலனாரின் தொண்டை கம்மியது. உணர்வுக் குழப்பம் அவரையும் ஒரு கணம் வாய்மூடச் செய்தது. இளம்வழுதியும் பேசாமலே அமர்ந்திருந்தான்.

பெருமூச்சுடன் பேச்சைத் தொடர்ந்தார் புலவர். வட திசையிலிருந்து வந்து களப்பிரர்கள் பாண்டியரை ஒடுக்கி, நாட்டை அடிமைப்படுத்தி விட்டார்கள் கடல் கடந்த நாடுகளுக்குத் தூது அனுப்பி, தலைநிமிர்ந்து ஆட்சிபுரிந்த பாண்டி நாடு விழுந்து விட்டது ரோமபுரியில் அகஸ்டஸ் மன்னன் ஆண்ட காலத்தில் பாண்டி மன்னனின் தூதன் சிறப்புடன் வரவேற்கப்பட்டான் என்பது வரலாறு ஆனால் இன்று? எங்கிருந்தோ வந்து வீண் பொழுது போக்குகின்றவன் கூட மனம் போனபடியெல்லாம் பரிகசிக்கக்கூடிய இழிநிலை ஏற்பட்டுள்ளது. நல்முத்துக்களைப் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பி, வாணிபம் செய்து வளர்ந்த நாடு சுரண்டும் இனத்தவரால் மசுக்குண்டு சீர் குலைந்து செத்துக்கொண்டிருக்கிறது....

'இது பொறுக்க முடியாது. பாண்டி நாடு மறுபடி உயர்நிலை அடைந்தேயாக வேண்டும்' என்று உறுதியான குரலில் சொன்னான் இளம்வழுதி.

'என் ஆசையும் அதுவே. அந்நிலை வந்தேதீரும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. எதற்கும் உரிய வேளை என்று ஒன்று உண்டு. அது வந்தாக வேண்டும். என்று இழுத்தார் மாழவலனார்,

'வேளை வந்துவிட்டது... வராவிட்டாலும் கவலையில்லை. நமக்கு உரிய வேளையை நாமே உருவாக்கிவிடலாம்.' வழுதியின் படபடத்த குரலில் உணர்ச்சி சூடு பெற்று நின்றது.

'நீ நெருப்பின் சிறு பொறி. உன்னால் என்ன ஆகும்?' என்றார் பெரியவர்.

'சிறு பொறி பெரு நெருப்புக்கு வித்து' என்றான் இளம்வழுதி.

வெளியே காலடி ஓசை கேட்டது. கதவை யாரோ 'தட தட'வென்று தட்டினார்கள்.

இளம்வழுதியின் நெஞ்சு திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. கொடிய வீரர்களில் எவரோ வந்து நிற்ப தாகத்தான் அவன் எண்ணினான். வெகு நேரமாகவே வெளியே நின்று அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு விட்டுத்தான் கதவைத் தட்டுகிறார்கள் போலும் என ஐயுற்றான் அவன்.

மாமூலனார் இள நகை புரிந்தார். 'அஞ்ச வேண் டாம்' என்று சொல்லியவாறே, கதவைத் திறந்தார். 'உள்ளே வரலாமே' என்றார்.

காவி வேட்டியும் மொட்டைத் தலையுமாக நீறு படிந்த வெண் நெற்றியும் சிரிப்பு தவழும் செவ்விதழ்களு மாக, இளந்துறவி ஒருவர் உள்ளே புகுந்தார். 'வியாழன் உறங்கி, வெள்ளி எழுந்துவிட்டது. நீங்கள் அதற்கு முன் னரே விழித்து விட்டீர்களா?' என்று கேட்டார்.

'நாங்கள் விழிக்கவேயில்லை!' என்று குறுநகையுடன் தெரிவித்தார் புலவர்.

'என்ன?' என்று கேட்பதுபோல் துறவியின் விழிகள் அவர் முகத்தில் தேங்கின.

'தூங்கினால்தானே விழித்தெழ முடியும்? நாங்கள் தான் தூங்கவே இல்லையே!' என்றார் மாமூலனார்.

அவர் பேச்சின் நயத்தை ரசித்துச் சிரித்தார் துறவி. இளம்வழுதியும் புன்னகை பூத்தான்.

'இவர் யாரோ' என்று கேட்டார் துறவி.

'வழிப்போக்கனாம். வெளியூரிலிருந்து வந்ததால் இரவுக்குத் தங்க இடம் கொடுத்தேன். பழங்கதைகள்

பேசிக் கொண்டிருந்ததால், தூங்குவதற்கு மறந்து போனோம்' என்று சொன்ன புலவர் சிரித்தார்.

மற்ற இருவரும் அவருடன் சேர்ந்து சிரித்தார்கள்.

## 4. மின்வெட்டு

விடிவின் வெள்ளொளி எங்கும் பரவவில்லை இன்னும். இருள் கவிந்து கிடந்த வெளியிலே குளிர்காற்று குடிவெறியனைப்போல் தள்ளாடி நகர்ந்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் விழித்திருந்தவர்களின் கண்களை போல ஒளி குன்றி வெளிறிக் கிடந்தன நட்சத்திரங்கள். வானத்தின் ஒரு பக்கத்திலே தேய்பிறை அழகாகத் தொங்கி நின்றது, கால தேவனின் எழில்மிகு சிரிப்பு போல.

இளம்வழுதி மீண்டும் வீதியில் நடந்து கொண்டிருந்தான். இப்போது அவன் உள்ளத்தில் மாமூலனாரே நிறைந்து நின்றார். அவரிடம் அவனுக்கு மதிப்பு முன்பே இருந்தது. அவரைக் கண்ட பிறகு, அவர் பேச்சைக் கேட்ட பிறகு, அம்மதிப்பு மரியாதை கலந்த அன்பாக மாறிவிட்டது. ஆயினும் அவரை அவன் நன்கு புரிந்து கொள்ள இயலவில்லை என்றே எண்ணினான்.

வைகறையில் வீடு தேடி வந்த இளம் துறவி யாரோ? அவரிடம் புலவர் தன்னை ஏன் அறிமுகப்படுத்த விரும்பவில்லை?... அவர் அவனைப்பற்றி எடுத்துச் சொல்ல விரும்பவில்லை என்று நிச்சயமாகத் தோன்றியது அவனுக்கு. இல்லையெனில் திடீரென்று அவர் ஏன் அவ்வாறு விடைகொடுக்க வேண்டும்? 'விடியும் தருணமாகி விட்டது. நீ போகலாம். நாங்களும் வெளியே போகிறோம்' என்று அவர் அவனை அனுப்பிவிட முன் வருவானேன்?

"மீண்டும் தங்களை எப்பொழுது காணலாம்? 'என்று அவர் கேட்ட போதுதான் அவர் சரியாகவா பதில் சொன்னார்? நம்மைக் கூட்டுவித்த திருவருள் மீண்டும் கூட்டும் என்று சொன்னாரே...

இளம்வழுதியின் சிந்தனை வேகமாக ஓட ஓட, அவன் கால்களும் வேகமாக நடந்தன. மாமூலனார் பாண்டியர்களைப் பற்றி உணர்ச்சியோடு பேசியவற்றை எல்லாம் அவன் மறக்கவே முடியாது. அவன் அன்னை அன்னம் கூட அடிக்கடி சொல்லியிருக்கிறாள். பாண்டியரின் பெருமை பற்றிப் பேசுவதற்கு அலுப்படையாதவள் அவள்.

குலப்பெருமை, குடிப்பெருமை தரக்கூடிய பூரிப்போடு அவள் பேசுவாள். '...பாண்டியரின் சிறப்பு பலவகையிலும் தனித்தன்மை பெற்றது. ஆதியில் பெண்ணரசு இந்நாட்டில் மட்டுமே இருந்தது என்று சொல்லலாம். பண்டோ என்ற இனத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் தனது ஒரே மகளுக்கு அரசுரிமை அளித்தான். அவன் அன்புடன் அளித்த பெரிய நாட்டில் 365 ஊர்கள் இருந்தன. ஒவ்வோர் ஊரினரும் ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குத் திறை கொண்டுவந்து தந்தனர். அவள் வழிவந்தவர்களே பாண்டியர். அவர்கள் பெருஞ் சேனைகளோடு, சீருஞ் சிறப்புமாக ஆட்சி புரிந்தவர்கள். ஆனால் காலம் சதி செய்துவிட்டது. களப்பிரர் எனும் கடுவிஷம் நாட்டிலே புகுந்து அனைத்தையும் கெடுத்துவிட்டது...'

இதை அடிக்கடி கூறுவாள் அன்னம். ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் தான் அறிந்ததை தன் மகனுக்குச் சொல்லுவாள். 'பாண்டிய மரபில் வந்தவர்கள் காலப் போக்கில் மதுக்குடியிலும், சுகவாழ்விலும் உள்ளம் பறிகொடுத்து, அறம் மறந்து, உளம் குறுகி, சிதைந்த வாழ்வு வாழ்ந்துவிட்டார்கள். சீரழிந்து போனார்கள்.

அறிவுத் திறனையும், உடல் வலிமையையும் இழந்து, பண்பையும் கடமையையும் மறந்து, தங்களுக்குள் சண்டையிட்டு வாழ்ந்தார்கள்...வழுதி! தலைநிமிர்ந்து வாழ்ந்த நாடு இன்று தலைகுனிந்து நிற்கிறது. அதன் தலை ஓங்க வேண்டும் அதன்மீது மணிமுடி ஒளிவீச வேண்டும். இது என் ஆசை,* ஏக்கம், துடிப்பு இதை நீதானடா நிறைவேற்ற வேண்டும்...'

இவ்வாறு உணர்ச்சி ஊட்டி அவனுக்கு ஊக்கம் அளித்தாள் அவள் தேவையான பயிற்சிகள் பலவும் அவன் பெற வழிசெய்து கொடுத்தாள் அவள் இதய ஒலியை-அவளுடைய உணர்ச்சித் துடிப்பின் எடுக்க முடியாத நாதத்தை-புலவர் மாறூலனாரின் பேச்சிலும் இளம் வழுதி கேட்க முடிந்தது.

'நாம் அவசரப்பட்டு எவ்வகை முடிவுக்கும் வந்து விடக்கூடாது' என்று அவன் எண்ணினான். மாறூலனாரைப் பற்றிய நினைவை ஒருவாறு வரம்புக்கு உட்படுத்த முயன்றபோது, மங்கையர்க்கரசி மன அரங்கிலே தோன்றினாள் . சிரித்தாள், 'நீ சிறு பிள்ளைதான் இன்னும்! என்றாள்.

நடந்து கொண்டிருந்த வழுதியின் காதுகளிலே அந்தச் சிரிப்பு இனிய மணி ஓசைபோல் கலகலத்தது ஒற்றை நாதமாகப் பிறந்த அது பல பல கிண்கிணி ஒலிகளாக வளர்ந்து ஆர்த்தது.

'இதென்ன பிரமையா? நிஜமா?' என்று திடுக்கிட்டான் அவன். அப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தான். எதிரே—அவனுக்கு முன்னால்-வெகு சமீபத்திலேயே இளம்பெண்கள் ஒரு கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். தன நினைப்பில் தானேயாகி, தன் உணர்வில் தானாக இயங்கி, கால் போனபடி போய்க் கொண்டிருந்த இளம்வழுதி எதிரே வந்தவர்களைக் கவனிக்கவே

யில்லை. 'அடடா, இவர்கள் வருவதை நான் பார்க்கவே யில்லையே!' என்று அதிர்ந்தது அவன் உள்ளம்

'சிலபேர் தூக்கத்திலேயே நடப்பார்களாமே? அந்த ரகமோ என்னவோ!' என்று இழுத்தது ஒரு தேன்குரல்.

'அப்படி இராதடி! கவியாக இருக்கலாம். கற்பனை உலகிலேயே சஞ்சரிக்கும் குணம் கவிஞருக்கு உண்டு அல்லவா?' என்று குமுறியது ஒரு குயில் குரல்.

'இனிய கனவு கண்டு, அந்தக் கனவைத் தேடி அலையும் பித்தனாக இருக்கும்' எனக் கூறியது ஒரு கிளி மொழி.

'இல்லை இல்லை. பெரிய குறிக்கோள் வீரர் திட்டமிட்டபடி கோட்டையைப் பிடிக்கச் செல்லும் சூரர் நடையைப் பார்த்தாலே தெரியவில்லை?' என்று வீணைத்தனம் செய்தது ஒரு வீணைக்குரல்.

'வேதாந்தியாக இருக்கும் மண், பெண், பொன், இருள், ஒளி எல்லாம் ஒன்றே என்று எண்ணுவதால் எதிரே வருவோர் மீது மோதும் நினைப்பும் இருக்கும்' என்று அகவியது மயில் குரல் ஒன்று.

'ஐயோ பாவம்!' என முனங்கியது பேதைக்குரல்

'ஓகோ! காதலோ? அதுதான் இரக்கம் பிறந்து விட்டது!' என்றாள் மயில் குரல்

அங்கே வெடித்தது 'களீன்' சிரிப்பொலி.

இளம்வழுதியின் காதுகளில் எல்லாம நன்கு விழுந்தன தன்னைப் பற்றிய வம்புகள்தான் அவை என்பது அவனுக்கு நன்றாகப் புரிந்தது

வைகறை புலர்ந்து விட்டது. கீழ்வானம் ஒளிக்கண் திறந்தது. பறவைகள் சிரித்தன. புஷ்பங்கள் மலர்ந்தன. உலகெலாம், உலகின் பொருள் எல்லாம், தத்தம் உண்மை

நிலையைக் காட்டத் தொடங்கிவிடும். இன்னும் சிறிது நேரத்தில், அம்மனோகரமான இனிய வேளையில், இயற்கை புத்திளமையோடும் புதிய சக்தியோடும் திகழும் குளுமையான நேரத்தில், குளிரையும் பெரிது படுத்தாது ஆறு நோக்கி நீராடச் சென்று கொண்டிருந்த கன்னியரின் உள்ளம் குதூகலத்தால் நிரம்பி கும்மாளியிட்டது. அவர்கள் பலர் அந்தத் தெம்பும் இயற்கையான குறும்பும் சேர்ந்து அவர்கள் வாய்க்குச் சுதந்திரம் அளித்தன. அவன் ஒருவன். அப்பாவி! அப்புறமென்ன!

அவர்களிடம் சண்டை பிடிக்க முடியுமா? சீறி விழலாமா? சிரிக்கவாவது செய்யலாமா?- எதைச் செய்தாலும் வினை விடியும் என்றது இளம்வழுதியின் அறிவு. ஆகவே அவன் கேளாச் செவியனாய், பேசாத வாயனாய் அசையாது நின்றுவிட்டான் ஆனால் அவன் கண்கள் ஒடுங்கி விடவில்லை. ஒவ்வொருத்தியையும் தனித்தனியாகவும், அம்மங்கையர் சுழாத்தை மொத்தமாகவும் ஆராய்ந்தது.

அவன் அருகில் வந்ததும் பெண்கள் நாணியும் கோணியும், ஒயில் நடை பயின்றும் அசையலாயினர். அவனைப் பார்த்ததும் பாராதவர் போல் நடக்க முயன்றனர். பார்ப்பது தெரியாதவாறு பார்க்கமுயன்றன சில விழிகள். அஞ்சனம் தோய்ந்த அழகு விழிகள் இரண்டு அவன் கண்களைப் பார்வையால் தொட்டதும் 'சடக்' கெனத் தணிந்து வீழ்ந்தன, நீருள் பாயும் மீன்கள் போல. 'மாவடு வகிர் அன்ன கண்கள்' இரண்டு அவனைத் தடவின; பின் இமைத் திரையை இழுத்து மூடிக் கொண்டன. 'கடலிலும் பெரிய கண்கள்' இரண்டு விழிக் கடையில் எவ்வளவு தூரம் ஒதுங்க முடியுமோ அவ்வளவுக்கு ஒதுங்கின... ஒரு கணத்தில் அங்கு எவ்வளவோ அற்புதங்கள் நடந்து முடிந்தன.

சட்டென்று அவன் கண்களைத் தாக்கின இரண்டு விழிகள்... பார்வையா அது? மின்னல் வீச்சுபோல் அல்லவா ஒளிர்ந்தது?... அந்த ஒளியை ஏவி, பின் மீட்டுக் கொண்ட அவை கண்கள்தானா? புதிய வாள் போலும். கூரிய வேல் போலும் அல்லவா தோன்றுகின்றன!...

கெண்டை விழிக்காரி அவளது முகத்தை அவன் நன்றாகப் பார்த்தான். அவனுக்கு அதன் பிறகு இதர பெண்கள் அங்கு இல்லாதவர்களே ஆயினர்!

'இவள் அல்லவா பெண்! இதல்லவா அழகு! இவள் பார்த்தது அன்றோ அமுதப் பார்வை!' என்று இரங்கியது அவன் உள்ளம்,

அந்த அழகு மந்தை மெல்ல நகர்ந்தது, அவனைக் கடந்து, ஒருசிலர் அவனைத் திரும்பி நோக்கினர். அவள் பார்க்கிறாளா என்று பார்ப்பதற்காக அவன் பார்த்தான், அதே நோக்கத்துடன்தான் அவளும் பார்த்திருக்க வேண்டும். அதனாலேயே இரண்டு பார்வைகளும் மோதிக் கொள்ள நேர்ந்தது.

அதைச் சில பெண்கள் கண்டு கொண்டார்கள். ஒருத்தி குறும்புத்தனமாய் ஏதோ முணுமுணுத்திருக்க வேண்டும். அங்கே சிரிப்பு கலகலத்தது. பார்த்த பார்வையின் முகம் கீழ்வானச் செம்மையைப் பிரதிபலித்தது...

இளம்வழுதியும் புன்முறுவல் பூத்தவாறு தன் வழியே நடந்தான். அதன்பிறகு அவர்கள் பக்கம் திரும்பி நோக்கினானில்லை. ஆயினும் அவன் மனக்கண்கள் அவளையே கண்டு வியந்தன. 'மின்னல்' என்றது மனம். 'இல்லை இல்லை பூங்கொடிதான்' என்றது அது. 'மயில்' என்று திருத்தம் செய்தது. 'மான்' என்று திரித்துக் கூறியது. 'எல்லாம் தப்பு, அற்புத அழகி - இதுதான் சரி' என்றது ரசனை.

அவன் நினைத்துச் செய்த செயலாக இருக்கலாம்; எண்ணாமலே செயல்பட்டுவிட்ட நிகழ்ச்சியாகவும் இருக்க லாம்! எங்கெங்கோ திரிந்த இளம்வழுதி, பொழுது புலர்ந்ததும் புலராத பொன்மய வேலையில் ஆற்றோ ரத்தை அடைந்தான்.

வைகை நதியில் அப்போது தண்ணீர் ஓடிக்கொண் டிருந்தது. மழைக்காலம் வந்து போயிருந்ததால்- இன்னும் திடீர் திடீரென்று மழை பெய்யும் காலமாகவும் இருந்த தால்-தண்ணீர் நிறையவே ஓடியது. அதிகாலையிலேயே நீராடும் வழக்கம் உடையவர்கள் அதிகமாகவே காணப் பட்டார்கள். ஆற்றோரம் கலகலப்பாகவே விளங்கியது.

ஒரு இடத்தில் உயிர்ப்பு குதியாட்டம் போட்டது. அங்குதான் குமரிப்பெண்கள் நீராடிக் கொண்டிருந் தார்கள். தேன் குரலும், கிளி மொழியும், வீணையின் நாதமும், வேய்ங்குழல் ஓசையும்,குயில் ஒலியும், மயிலின் குரலும் கலந்தும், பிரிந்தும், இணைந்தும் பேசிமகிழ்ந்தன. சிரிப்புக்குப் பஞ்சமே இல்லை அங்கு.

திடீரென்று, 'அமுதம்,அமுதம் உன் குடம்ஆற்றோடு போகிறதே!' என்று அலறியது குயில் குரல்.

'ஆடி அசைந்து போ அம்மா! இன்னும் தள்ளிப் போ அம்மா!' என்று ராகம் இழுத்தது மயில் குரல். அதன் சொந்தக்காரியின் வளைக்கரங்கள் நீரை அள்ளி எறிந்தன. அலையெழ எற்றின.

குடம் நகர்ந்து, நகர்ந்து போய்க்கொண்டே இருந்தது. நீரோட்டம் அதை வரவேற்று இழுத்துச் சென்றது.

'ஐயோ! என் குடம்!' என்று பரிதாபமாக ஒலி செய் தது குழலோசை.

'ஏண்டி சந்தனம், குடத்தைத் தண்ணீரிலே தள்ளி விட்டாய்?' என்று சீறியது வீணைக்குரல்.

'குறும்பைப்பாரேன். இப்போ அதை எப்படி எடுக்கிறதாம்?' என்றது கிளிமொழி.

'இதெல்லாம் என்னம்மா விளையாட்டு?' என்று அலுத்துக்கொண்டது தேன் குரல்.

'அவள் பிடித்துக்கொள்வாள் என்று நினைத்தேன். இப்படி ஆகுமின்னு கண்டேனா?' என்றது மயில் குரல்,

'விளையாட்டைப் பாரு உன் குடத்தைப் பிடுங்கி நடு ஆற்றிலே வீசி எறிந்தால் உனக்கு எப்படியிருக்கும்? என்று வெடுவெடுத்தது வீணைக்குரல்.

'ஐய்யய்யோ...குடம் ஓடுதே. நான் என்ன செய்வேன்' என்று அங்கலாய்த்தாள் அமுதவல்லி— வேய்ங்குழலோசையின் சொந்தக்காரி.

அந்தக் குரல், கரையோடு நடந்த இளம்வழுதியை உலுக்கியது. அதில் தொனித்த வேதனை அவன் இதயத்தைத் தாக்கியது. செயல்திறம் இழந்து நின்ற அழகியின் தோற்றம் அவன் பார்வையில் பட்டு உள்ளத்தை என்னவோ செய்தது. மேலும் எவ்வுணர்வுக்கும் அவன் வேலை கொடுக்கக் காத்திருக்கவில்லை. திடுமென நீரில் குதித்தான் அவன்.

அவன் கைகள் மின்னல் வேகம் பெற்றன. அவன் உடல் வேகசக்தி பெற்றிருந்தது. ஆற்றுநீர் விளையாட்டுக் களமாயிற்று. அவன் பிடிக்குள் சிக்காமல் ஓட முயலும் குழந்தைபோல்வேகமாக நழுவப்பார்த்ததுகுடம், மேலும் ஒரு கை வீச்சு. உடலின் முற்பாய்ச்சல். குடம் சிக்கிக் கொண்டது

'பிடித்து விட்டாரடீ!'—பல குரல்கள் எக்களிப்போடு இசைத்தன. பல கரங்கள் வளைகள் குலுங்கக் கொட்டின. வெற்றி வீரனை ஆர்வத்தோடு நோக்கும் அன்புப் பார்வையோடு விழிகள் துடித்தன.

இளம்வழுதி தரையில் நடப்பதுபோன்ற இயல்பான தன்மையோடு ஆற்றின் ஓட்டத்தை எதிர்த்து நீந்தி வந்தான் கரையருகே வந்து 'இதோ குடம்!' என்று உயர்த்தினான்.

எழிற்கரங்கள் பல வேகமாக நீண்டன. ஒன்று உரிமையோடு பற்றிக்கொண்டது

நகை பூத்த மலர்முகங்கள் பல இனிமையான அவன் முகத்தை நோக்கின. ஒரே ஒரு முகம் செந்தாமரையாக மாறி அதிக அழகு பெற்றது.

விழிகள் பல அவன் விழிகளில் சேரத் துடித்தன. ஒரு ஜோடி விழிகள் மட்டும் அவன் விழிகளை ஆசை நோக்கால் தொட்டன; தாழ்ந்தன.

'ஆகா! அமுதமா இவள் பெயர்? அற்புத அழகிக்கு ஏற்ற அருமையான பெயர்!' என்று புளகித்தது அவன் உள்ளம்.

இளம்வழுதி கரையேறினான்.

முன்பு வம்பு பேசிய மங்கையர் அவனை இன்னுமா இனம் கண்டு கொள்ளவில்லை? எனினும், அவர்களது குமுத வாய்கள் சொற்கள் உதிர்க்க மறுத்தன. பொழுது வேறு ஒளிச்சாட்டை கொண்டு துரத்திவந்தது. அவர்கள் 'நல்ல பிள்ளை'களாக நடந்தார்கள். அமுதவல்லி மட்டும் தன் நன்றியை உணர்ச்சிப்பார்வையில் சேர்த்துத் தந்தாள்; இதழ்களின் சிறுமுறுவலில் தீட்டிக்காட்டினாள். தோழியரோடு நடந்தாள்; போனாள்.

அவர்கள் போகும் திக்கில் அவள் போவதையே பார்த்தபடி நின்றான் இளம்வழுதி

'மனிதன் விந்தையான படைப்பு மனித உணர்ச்சிகள் விசித்திரமானவை. அவற்றை எப்பொழுதும் அடக்கி வெற்றி பெறுவது என்பது சாத்தியமல்ல' என்ற பேச்சொலி மிதந்துவந்தது.

'ஒரேயடியாக அவற்றுக்கு அடிமையாகி விடுவது நல்லதல்ல' என்ற பதில் அவன் செவிகளுக்குப் பழக்கமான குரலில் ஒலித்தது.

அவன் திரும்பிப் பார்த்தான்.

இளம் துறவியும் மாமூலனாரும்தான் பேசிக்கொண்டு வந்தார்கள் ஆற்றில் நீராடிவிட்டுத் திரும்புகிறார்கள் என்பதை அவர்களுடைய ஈர ஆடைகள் புலப்படுத்தின.

'மனதை அடக்க அறியாதவனும், உணர்ச்சிகளை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளாதவனும் விரும்பத்தகாத விளைவுகளை அனுபவிக்க நேரிடும்...'

மாமூலனார் எதற்காக-யாரைக் கருத்தில் கொண்டு—இவ்வாறு பேசுகிறார்? தன்னைக் குத்திக் காட்டத்தானோ இந்த ஐயம் இளம்வழுதியின் உள்ளத்தில் நெளிந்தது, புன்னகையுடன் முகம் அவரையே நோக்கியது.

ஆனால் புலவர், அவன் அங்கே நின்றதையே உணராதவர் போல், துறவியோடு போய்க் கொண்டிருந்தார்.

## 5. சுடும் நெருப்பு

மீனாட்சி ஆச்சிக்கு எவ்வளவு வயசு ஆகியிருந்தது என்பது யாருக்கும் தெரியாது. அவள் பிட்டு வாணிபத்தில் ஈடுபட்டு எவ்வளவு காலம் ஆயிற்று என்பதும் எவருக்கும் தெரியாது. ஒரு வீதியின் ஓரத்தில் ஓங்கி வளர்ந்து நின்ற மருத மரத்தினடியில்தான் அவள் கடை இருந்தது.

காலையில் ஆச்சி அடுப்புப் பற்றவைக்க வேண்டியதுதான் வாடிக்கைக்காரர்களான சிறுமிகளும், பெரிய அம்மான்களும் வந்து குழுமி விடுவார்கள். சுடச்சுட ஆப்பமும், பிட்டும் செலவாகிக் கொண்டேயிருக்கும். வழிப்

போக்கர்களும், ஆற்றுக்குச் சென்று வருகிற சிலரும் காத்து நின்றாலும் பரவாயில்லை; ஆச்சி மலர்ந்த முகத்தோடு தருகின்ற பிட்டை வாங்கிச் சாப்பிடாமல் அங்கிருந்து செல்வதில்லை என்று உறுதி பூண்டவர்களாய் காட்சி தருவதும் அன்றாட நிகழ்ச்சிதான்

பிழைப்புத் தேடி மதுரைக்கு வந்து சேர்ந்த மீனாட்சி ஆச்சி அவளது சொந்த ஊரான பூங்குடியை மறந்தாலும் மறந்திருக்கலாம். ஆனாலும் எல்லோரும் அவளைப் 'பூங்குடி ஆச்சி' என்றே அழைத்து வந்தனர். அனைவருக்கும் அவளிடம் அன்புதான். அவளும் எல்லோருடனும் சிரித்துச் சிரித்துப் பேசுவதும், பரிவுடன் உபசரிப்பதும், பெண்களின் குறைகூறல்களைப் பொறுமையோடு கேட்பதும், பலருக்கும் ஆலோசனைகள் கூறுவதுமாகக் காலம் கழித்து வந்தாள். அவ்வைக் கிழவி மாதிரி வசித்த அவளுக்கு ஊர் முழுவதும் உறவுதான். அதனால் அவள் வியாபாரமும் நன்கு நடைபெற்றது. அவள் உள்ளத்தில் மகிழ்வு பொங்கி வழியவும் வசதி ஏற்பட்டது. 'ஆச்சி' ஆச்சி' என்றும் 'அம்மா, அம்மா' என்றும் அவளை ஆசையோடு அழைக்கும் 'அன்புக் குழந்தைகள்' முகத்தைப் பார்ப்பதிலும், பேச்சைக் கேட்பதிலும் அவள் வாழ்வின் பயனை அனுபவிப்பதாகத் தோன்றியது.

வைகைக் கரையிலிருந்து திரும்பிய இளம்வழுதி, ஆச்சி வியாபாரம் செய்வதையே கவனித்துக் கொண்டிருந்தான். மருத மரத்தின் அருகிலேயே மீனாட்சி ஆட்சியின் குடிசை இருந்தது. ஊருக்குப் புதிதாக வந்து, தங்கியிருக்க இடமின்றித் தவிப்பவர்களுக்கு அவ்வப்போது அவள் இடம் அளித்து உதவுவது வழக்கம். இளம்வழுதியும் அங்குதான் தங்கியிருந்தான். அவன் பூங்குடி ஆச்சிக்கு முன்னரே அறிமுகமானவன் என்பது அவள் அவனிடம் இயல்பாகப் பேசிப் பழகிய முறையிலிருந்தே விளங்கியது.

'என்ன பேரப்பிள்ளே, உமக்கு இன்னும் வயிறு பசிக்கலியா? சும்மா உட்கார்ந்துட்டீரே?' என்று ஆச்சி கேட்டாள்.

'என் சாப்பாட்டுக்கு என்ன அவசரம்? நீ உன் வியாபாரத்தைக் கவனி ஆச்சு' என்று அவன் கூறினான்.

'இன்னிக்கு என்ன அதிசயமோ! பேரப்பிள்ளை அதிகாலையிலேயே குளிச்சி முழுகி வந்திருக்காரு' என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

'ஆற்றங்கரைப் பக்கமாப் போனேன். தண்ணீர் அருமையாக ஓடுகிறது. ஆசையாக இருந்தது குளித்தேன். இதிலென்ன அதிசயம் இருக்குது ஆச்சி?' என்றான் இளம் வழுதி.

'ஊம்' என்று இழுத்தாள் ஆச்சி. 'இந்தாரும், ஆப்பமும் பிட்டும் சாப்பிடும். நீரு குளிச்சிட்டு வந்திருக்கிறதுக்கும், குளிருக்கும், பசிக்கும் இது இதமாக இருக்கும்' என்று சொல்லி அவனுக்கு உணவளித்தாள் அவள்.

அவள் அன்புடன் அளித்ததை அவன் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, வீதி மூலையில் மேகம் போல் புழுதி கிளம்பியது. வேகமாக வரும் குதிரை வண்டிதான் அப்படித் தூசி எழுப்பியது என்பதை அவன் புரிந்துகொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை.

மிடுக்காக நடைபோடும் இரண்டு குதிரைகள் பூட்டிய அழகான வண்டி அது அதனுள் யார் இருக்கிறார்கள் என்று தெரியாத வண்ணம் மூடியிருந்த மெல்லிய துணித் திரைகள் வண்டிக்கு அதிகமான கவர்ச்சி தந்தன. அவ் வண்டியும் குதிரைகளும் பூங்குடி ஆச்சியைச் சுற்றி நின்ற சிறுவர் சிறுமிகளின் கவனத்தை மட்டுமல்லாமல், இளம் வழுதியின் கண்களையும் தம்பால் ஈர்த்தன. அந்த வண்டி ஆச்சியின் கடைக்கு முன்னால் வந்துநிற்கவும் அனைவரது வியப்பும் அதிகமாயிற்று.

வண்டியின் ஒருபுறத்துத் திரை சற்றே விலகியது. பூந்திரையின் பின்னே பௌர்ணமி நிலவு போல். அழகு முகமும் அருள் தவழும் விழிகளும் தோன்றின. அம் முகத்தைக் கண்டதும் இளம்வழுதி திடுக்கிட்டான். அமைதி தேங்கி நின்ற அவ்விழிகள் ஒரு கணம் அவன் முகத்தைத் தொட்டன; அவன் கண்களின் பார்வையை ஏற்றன. எனினும், அக்கரிய விழிகளில் எவ்விதமான நிழலும் படியவில்லை. அவனை அதற்குமுன் கண்டிருந்த தாகவோ, இப்போது அவனை இந்த இடத்தில் கண்ட தால் திகைப்படைந்ததாகவோ காட்டும் சலனம் எதுவும் அக் கண்களில் நிழலாடவில்லை.

அது அவனுக்கு ஏமாற்றம் அளித்தது. வேதனையைத் தூண்டியது. 'இந்த அம்மையார் என்னை எப்படி மறந்து விட முடியும்? என்னைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ள இவர்களுக்கு விருப்பமில்லை போலும்! இவர்களை இவ் வேளையில் இந்த இடத்தில் நான் காண முடிந்ததை இவர்கள் விரும்பவில்லை போலும்!' என்று அவன் உள்ளம் முனங்கியது.

'இங்கு மனிதர்களின் போக்கே மர்மம் நிறைந்ததாகத் தோன்றுகிறது. இரவு முழுவதும் உணர்ச்சித் துடிப் போடு உரையாடிக் கொண்டிருந்த மாமூலனார் விடியற் காலையில் இனம் தெரியாதவர் போல் போகிறார். இர விலே என்னைப் பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைத்து உதவி புரிந்த இந்த அம்மையார் இப்போது என்னைத் தெரியாதவர் போல் நடிக்கிறார்களே, வியப்பு தான்' என்று எண்ணினான் அவன்.

மங்கையர்க்கரசிதான் அவ்வண்டியில் வந்திருந்தாள். அவள் வழுதியைக் கவனிக்காமலில்லை. எனினும் அவனை அறியாதவள் போலவே அவள் நடந்து கொண்டாள்.

அவள் முகம் தெரிந்த உடனேயே, மீனாட்சி ஆச்சி பரபரப்புடன் எழுந்து வண்டி அருகில் சென்றாள். வண்டியில் இருந்தவள் கேட்டவற்றுக்கு ஏதோ பதில் சொன்னாள். திரும்பி வந்து தனது அலுவலில் ஈடுபட்டாள்.

வண்டியும் அங்கிருந்து நகர்ந்தது. நேரே ஓடியது. அதன் திரைகள் அப்புறம் விலகவும் இல்லை; அழகு முகம் வெளியே எட்டிப் பார்க்கவுமில்லை.

அவளைப்பற்றி ஆச்சியிடம் விசாரிக்க வேண்டும் என்ற துடிப்பு இளம்வழுதிக்கு உண்டாயிற்று. ஆச்சி உரிய முறையில் பதிலளிப்பாளோ அல்லது மறுத்து விடுவாளோ என்ற தயக்கமும் உடன் எழுந்தது. முடிவில் இயல்பான ஆர்வமே வெற்றி பெற்றது.

'இப்போ வண்டியிலே வந்தது யாரு ஆச்சி? என்று கேட்டான் அவன்.

'யாரோ பெரிய இடத்து அம்மாள் அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பூங்குடியிலிருந்து ஒரு ஆளு வருவதாகச் சொல்லியிருந்துதாம் இங்கே வந்து தங்கியிருக்குதா என்று கேட்பதற்காக வண்டியை நிறுத்தினாங்க' என்று ஆச்சி தெரிவித்தாள்.

அவள் தனக்குத் தெரிந்த உண்மை முழுமையும் கூறி விட்டாளா; இன்னும் அதிகமான விவரங்கள் அவளுக்குத் தெரியுமா தெரியாதா என்று நிச்சயிக்க முடியவில்லை அவனால்.

அதைப் பற்றி இளம்வழுதி அதிகமாக மனசைக் குழப்பிக் கொள்ளவுமில்லை. அவனுக்கு வேறு வேலைகள் இருந்தன. முக்கியமாக வரகுணத்தேவரை அவன் சந்தித்தாக வேண்டும் அவரைக் கண்டு பேசிய பிறகுதான் இதர திட்டங்களைப்பற்றி அவன் யோசிக்க முடியும்.

எனவே அவன் வீண் பொழுது போக்காமல் புறப்பட்டான்.

இளம்வழுதி வரகுணத் தேவரை இதற்கு முன்னர் சந்தித்தது கிடையாது. ஆயினும் அவரைப் பற்றி அவன் அதிகமாகவே கேள்விப்பட்டிருந்தான்

'உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்று; மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தவர்களில் தேவரும் ஒருவர். 'பாம்புக்குக் தலையும், மீனும் வாலும் காட்டி.' இரண்டு கட்சியிடமும் நல்ல பெயரெடுத்துத் தனது வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் கண்ணும் கருத்தும் உடைய பெரியவர் அவர் தமிழரின் நலனில் அக்கறை மிக்க கொண்டவர் அவர் என்று தமிழர் நம்பினர் தனக்கு மிகவும் வேண்டியவர் என்று கூற்றன் நாயனார். கருதினான் அவனது மதிப்பையும் அன்பையும் அவர் பெற்றிருந்ததால், தேவர் தங்கள் நண்பர் எனக் களப்பிரர்கள் கருதினர். வெற்றிகரமாக வாழமுடிந்த அவருடைய குள்ள நரித்தனம் அம்பலத்துக்கு வராமலே இருந்தது.

பாண்டியர் பெருமையை மீண்டும் நிலைநாட்ட விரும்பும் எண்ணமுடையவர் வரகுணத் தேவர் என்றுதான் இளம்வழுதியும் நினைத்தான்.

தேவரின் வீடே சிறு கோட்டை மாதிரித் தோன்றியது எவரும் நினைத்தபோது உட்புகுந்து இஷ்டம்போல் வெளிவருவதற்கு உதவும் 'அடையா நெடுங்கதவு' பெற்றிருக்கவில்லை அது. எனினும் இளம்வழுதி, செவ்விருக்கை நாட்டிலிருந்து வந்தவன், என்று செய்தி அனுப்பியதுமே, தேவர் அவனைத் தன் திருமுன் சேர்க்கும்படி பணித்தார்

வரகுணத் தேவர் தோற்றத்தால் ஒரு குறுநிலமன்னன் போலவேவிளங்கினார் களையற்று வளர்ந்திருந்த அவரது உயரமும்பருமனும், எடுப்பான, மீசையும்மற்றவர்களுக்கு

அச்சம் எழுப்பக்கூடியவை, அவரைக் காண நேரிடுகின்ற எவரும் அவரிடம் பயமும் மதிப்பும் கொள்வது இயல்பு. அவரது மிடுக்கான குரலும், அவ்வப்போது அவர் சிதறுகிற அட்டகாசச் சிரிப்பும் அவருடைய உடலுறுதியையும் உள்ளத்து வலிமையையும் விளம்பரப்படுத்தும்.

தேவர் இளம்வழுதியை உவகை பூத்த முகத்தோடு தான் வரவேற்றார். அவர் உள்ளத்தில் கரந்துறையும் இருள் நினைப்பை அவன் எவ்வாறு உணரமுடியும்?

இளம்வழுதியைப் பற்றியும், அவன் அன்னையைப் பற்றியும் செவ்விருக்கை நாட்டினரைப்பற்றியும் அவர் பரிவுடன் விசாரித்தார். 'களக்குடி நாடு, தென் கல்லக நாடு, செவ்விருக்கை நாடு, களாந்திருக்கை நாடு, அள நாடு முதலிய இடங்களில் மக்கள் விழிப்புற்று, உணர்ச்சி பெற்றுத் துடிக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்...' என்றார் தேவர்.

'ஆமாம். பஞ்சமும் பகைவர் பயமும், ஆள்வோரின் கொடுமையும் மக்களை மிகுந்த தொல்லைக்குள்ளாக்கி விட்டன நாட்டினர் எவ்வளவு காலம்தான் ஒடுங்கிக் கிடப்பர்? களப்பிரர்கள் கன்னெஞ்சக் கயவர்களாய்......

இளம்வழுதி உணர்வுச் சூட்டோடு பேசத் தலைப்பட்டான் தேவர் அவன் பேச்சுக்குத் தடை விதித்தார்

'நீ சொல்வது உண்மைதான். இருந்தாலும் என்ன செய்ய முடியும்? கால நிலைமை அப்படி இருக்கிறது.........

'நாட்டு மக்கள் வீறுகொண்டு எழத்துடிக்கிறார்கள் அவர்களை ஒன்றுகூட்டி......'

வரகுணர் மீண்டும் குறுக்கிட்டார். 'நாட்டு மக்கள் எப்பவும் ஆட்டுமந்தைக் கூட்டம்தான். வல்லான் வகுத்த வழியிலே கண்மூடித்தனமாகச் செல்லும் அறிவும் ஆற்ற லும்தான் அவர்களுக்கு உண்டு......

'அத்தகைய ஆற்றலைப் பயன்படுத்தி நாட்டின் நிலையை ஏன் உயர்த்தக் கூடாது? அவர்களுடைய வாழ்விலே வளம் பிறக்க ஏன் வகை செய்யக் கூடாது?' என்று பதற்றத்தோடு கேட்டான் இளம்வழுதி.

'காட்டுத் தீயோடு விளையாட ஆசைப்படுவது அழகல்ல தம்பி. அதில் நன்மை விளையுமென்று உறுதி கூற முடியாது. ஆனால் கேடு சூழும் என்பது திண்ணம்' என்று அறிவுறுத்தினார் தேவர்

'கொடுங் கோலர்கள் வாழும் நாட்டை விடக் கடும் புலி வாழும் காடு நல்லது' என்று கூறியவர்கள் நம் முன்னோரல்லவா? நீடித்த அவல நிலையவிட, ஒளிமிகுந்த நல்வாழ்வு சிறந்தது அதற்கு வழி வகுத்துக் கொடுக்க வேண்டியது நம் பொறுப்பு......'

தேவர் கண்களைக் குறுகலாக்கி அவனை நோக்கி ஒரு பார்வை எறிந்தார் 'நம் என்றால்?' என இழுத்தார்.

'வசதி படைத்தவர்கள். அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள், மனித உள்ளம் பெற்றவர்கள்......

இளம்வழுதி இன்னும் என்னென்ன பேச ஆசைப் பட்டானோ? ஆனால், சந்தர்ப்பம் குறுக்கிட்டது.

வளைகள் குலுங்கும் ஓசை அந்த அறையின் வாயிலில் எழுந்தது. 'என்னம்மா திலகம்?'' என்று கேட்டபடி திரும்பினார் தேவர். அவருடைய அருமை மகள் அங்கே நின்றாள்.

முக்கியமான விஷயங்களைப்பற்றி எவருடனாவது பேசும்போதெல்லாம், வரகுணர் தனித்த அறையில் அமர்ந்து பேசுவதுதான் வழக்கம். அவ்வாறு அவர் பேசிக் கொண்டிருக்கையில் அந்தப்பக்கம் வேறு யாரும் வருவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவசியம் ஏற்பட்டால் திலகவதிதான் அங்கு தலை காட்டுவாள்.

வரகுணத் தேவரின் திருமகள் திலகவதி அழகியல்ல; தந்தையைப் போல் வஞ்சனையில்லாமல் வளரக்கூடிய உடலியல்பு பெற்றவள்; பருவ மினுமினுப்பு அவள் முகத்துக்கும் மேனிக்கும் ஒரு கவர்ச்சி தந்தது. கறுப்பு நிறம் பெற்றிருந்த அவள் நல்ல கருங்கல் சிலை மாதிரித் தென்பட்டாள். அவளுக்கு இருபது வயசுக்குள்தான் இருக்கும்—இளம் வழுதியின் பார்வை அறிந்துகொண்ட உண்மைகள் இவை.

'அரண்மனையிலிருந்து வண்டி வந்திருக்கிறது. உடனே நீங்கள் வரவேண்டும் என்று ஆளும் வந்திருக்கிறது' என்றாள் அவள். அவளது விழிகள் வழுதியைப் பார்ப்பதில் இன்பம் அடைந்தன.

'இவர் நம் விருந்தாளி, நான் சென்று திரும்புகிறவரை இவர் இங்கேயே இருக்கட்டும் நன்கு கவனித்துக்கொள், திலகம்' என்று தேவர் சொன்னார். 'நான் விரைவில் வந்து விடுவேன் வந்ததும் பேசி முடிவு செய்து விடுவோம் என்று இளம்வழுதியிடம் தெரிவித்தார். போனார்.

வரகுணத் தேவர் சென்ற சிறிது நேரம் கழிந்ததும், திலகவதி வந்தாள். இளம்வழுதிக்குப் பழங்களும் பாலும் கொண்டு வந்தாள்.

'இவை எல்லாம் எனக்கு எதற்கு? என்று முனகினான் அவன்.

'உண்டு மகிழ்ந்தான். வேறு எதற்காக?' என்று கூறி மென் சிரிப்பு உகுத்தாள் அவள். அவன் உண்பதைக் களிப்புடன் கவனித்தவாறே அவள் பேசினாள்.

'என் தந்தைக்குப் பிடிக்காத விதத்தில் நான் செயல் புரிய வேண்டியிருக்கிறது என்ன செய்வது? அவர் இங்கிருந்து போகும் பொழுது, என்னிடம் உத்திரவிட்டுச்

சென்றிருக்கிறார். நீங்கள் வெளியே போய் விடாதபடி கண்காணித்துக்கொள்ள வேண்டுமாம். அவர் உங்களுக்கு நல்லது விரும்பவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. உங்களை நம் வீட்டின் விருந்தாளி என்று வெளிப்படையாகக் கூறிவிட்டு, மறைமுகமாக உங்களுக்கு கேடு செய்யும் எண்ணம் அவருக்கு இருப்பது தெரிகிறது. நீங்கள் உடனடியாக இங்கிருந்து கிளம்ப வேண்டும். அவர் திரும்பி வருகிறவரை இங்கேயே இருக்கக்கூடாது...

அவன் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த இளம்வழுதி முறுவலித்தான். அப்படி என்னதான் வந்துவிடும் என்று இருந்து பார்த்துவிட்டுப் போகிறேனே!' என்றான்.

அவள் பதறினாள். ஐயய்யோ, அது கூடாது, என் தந்தையை நன்கறிவேன். அந்த அளவுக்கு வேறு எவரும் அவரை உணர்ந்திருக்க முடியாது. உங்கள் நன்மையைக் கருதியே சொல்கிறேன். நீங்கள் இருவரும் பேசியபேச்சை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் பேச்சும் எண்ணமும் அவருக்குப் பிடித்தமானவையாக இரா. அவர் அரண்மனைக்குப் போயிருக்கிறார். திரும்பி வரும் போது, உங்களுககுரிய ஆபத்தும் அவரோடு கூடவேவரும் என்று என் மனம் உறுதி கூறுகிறது...'

திலகவதியின் கூற்றில் உண்மை உண்டு என்பதை அவன் உணர்ந்தான். அவளுக்கு நன்றி கூறிவிட்டுக் கிளம்பினான்.

'நீங்கள் முன்வாசல் வழியாக வெளியே போகக் கூடாது. நீங்கள் இங்கிருந்து செல்வது வேறு யாருக்கும் தெரியக்கூடாது. அதற்குத் துணைபுரியக் கூடிய வழியை நான் காட்டுகிறேன்' என்று கூறி அவள் அவனை ரகசிய வழியின் பக்கமாக அழைத்துச் சென்றாள். தோட்டத்தி

யிருந்த திட்டி வாசலைத் திறந்து அவனை வழியனுப்பி வைத்தாள்.

'என் தந்தையின் பார்வையில் படவேண்டாம். அவர் உதவியை நாடி இனி இங்கு வரவும் வேண்டாம்' என்று எச்சரிக்கவும் அவள் மறந்துவிடவில்லை.

## 6. தீயுடன் விளையாட்டு!

இளம்வழுதியின் உள்ளத்தில் மூண்டிருந்த கொதிப்பு அதிகமாகிக் கொண்டே போயிற்று. களப்பிரர்கள் பேரில்மட்டும் ஆத்திரம் கொள்வதில் பயனில்லை என்று நினைத்தான் அவன். அவர்களுக்கு அஞ்சி நடுங்கியும், அவர்களிடம் பெறக்கூடிய நலன்களைக் கருதியும், அவர்களது அடிவருடிகளாக மாறி வாழ்ந்தவர்கள் மீதும் அவனுக்குகோபம்ஏற்பட்டது நயவஞ்சகர்களிடம் வெறுப்பும் சினமும் கொண்டான் அவன்.

வரகுணத் தேவரும் இந்த இனத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்று எண்ணவே முடியவில்லை அவனால். அவர்மீது அவன் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். ஆனால் அவருடைய மகளே அவருக்கு எதிராகச் சான்று கூறும்பொழுது அவன் என்ன செய்ய முடியும்?

'தேவர் திரும்பி வரட்டும் என்று காத்திருந்தால் ஒரு வேளை ஆபத்து சூழினும் சூழ்ந்து விடலாம்; அதன் பிறகு தப்புவது என்பது இயலாத காரியம் ஆகிவிடும் வருமுன் காத்துக் கொண்டது நல்லதுதான்' என்றே அவன் உள்ளம் பேசியது.

'கூற்றன் நாயனார் தேவரை அழைத்து ஆலோசனைக் கேட்கும்நிலைமை இருக்கிறது என்றாள். இவர் களப்பிரர்

களுக்கு நல்லபிள்ளையாக நடந்துவருகிறார் என்றுதானே அர்த்தம்? இவர் என் பேச்சை மறுத்துரைப்பதில் ஆர்வம் காட்டியது ஏன் என்று எனக்கு இப்பொழுதுதான்விளங்கு கிறது. வரகுணவர் நாட்டு மக்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்க ஆசைப்படுவாரே தவிர, அவர்கள் வெற்றி பெறு வதற்கு வழிவகுத்துத் தரமாட்டார்' என்று அவனுக்கு திச்சயமாகத் தோன்றிவிட்டது.

கூற்றன் நாயனார் இவரிடம்நேற்று இரவில்நிகழ்ந்த வற்றைக் கூறி, இனி என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை நடத்துவதற்காகவே தேவரை அழைத்திருப் பான். இவரும் தருணத்தைத் தனக்கு லாபமாகப் பயன் படுத்துவதிலேயே கண்ணாக இருப்பார். என்னிடம் அறிந்துகொண்ட செய்திகளை வைத்துக் கொண்டு, அவருடைய அறிவு ஏதேனும் திட்டம் வகுக்காமலா இருக் கும்? தனது ஆசைகளுக்கு நான் குறுக்கே நிற்கக்கூடியவன் என்று தோன்றினால் அவர் என்னை அகற்றிவிடத் துணி வார் என்பதில் ஐயமில்லை' என்றும் அவன் மனம் முடிவு காட்டியது.

இனி என்ன செய்ய வேண்டுமென்று தீர்மானிக்க முடியாது குழம்பியது இளம்வழுதியின் உள்ளம். அவன் கால்கள் அவனை எங்கெங்கோ நடத்திச்சென்று, இறுதி யில் பூங்குடி ஆச்சியின் குடிசையிலேயே கொண்டு சேர்த்தது

மீனாட்சி ஆச்சி அவன் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக காத்திருந்தவள்போல் முகம் மலர்ந்து வரவேற் றாள்; 'இதோ வந்து விட்டார். இவரைப் பற்றித்தான் சொன்னேன்' என்று குடிசைக்குள்ளிருந்த யாரிடமோ அறிவித்தாள்.

'யார் அது?' என்று கேட்டான் இளம்வழுதி.

'பூங்குடியார் ஒருவர். இங்கே தங்க இடம் கிடைக்குமா? வேறு யார் யார் தங்கியிருக்கிறார்கள் என்றெல்லாம் விசாரித்தார். நானே உம்மைப் பற்றிச் சொன்னேன்...இப்பதான் அவர் சாப்பிடுகிறார். பேரப்பிள்ளை சாப்பிட வேண்டாமா?' என்றாள் ஆச்சி

'எனக்கு இப்போ பசி இல்லை' என்று மறுத்தான் அவன். எனினும் ஆச்சியின் பிடிவாதத்தின் முன்னால் அவனுடைய மறுப்புரைகள் வெற்றி பெறவில்லை.

'பூங்குடியார்' என்று ஆச்சி அறிமுகப்படுத்திய ஆளை இளம்வழுதி கூர்ந்து கவனித்தான் அவனும் இவனை ஆராய்வதுபோல் பார்த்தான். அவனாகவே புன்னகை புரிந்து பேசத் தொடங்கினான்.

'நீங்கள் செவ்விருக்கை நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்களாக்கும்? நான் பூங்குடி சாத்தன் கணபதி' என்றான் அவன்

'அப்படியா? மகிழ்ச்சி' என்று பதிலளித்த இளம்வழுதி, என் பெயரையும் ஆச்சி உங்களுக்குச் சொல்லியிருப்பாள் என்று நினைக்கிறேன்' என்றான்.

மற்றவன் தலை அசைத்தான். 'நீங்கள் சீக்கிரம் திரும்பி வந்து விடுவீர்கள் என்று ஆச்சி சொன்னாள். ஆனால் நீங்கள் வருவது சந்தேகம் என்றே நான் நினைத்தேன்' என்றான்.

'ஏனோ?'

'நீங்கள் வரகுணத் தேவரைக் கண்டு பேசுவதற்காக அவனுடைய வீட்டுக்குப் போயிருந்தீர்கள் இல்லையா? அது அபாயகரமான பொறி. உங்களை அது வெளியே விடாது என்று நான் அஞ்சினேன்' என்றான் புதியவன்.

இளம்வழுதி திடுக்கிட நேர்ந்தது. அவன் போகும் இடத்தைப் பற்றியோ, அலுவலைப் பற்றியோ ஆச்சியிடம் சொல்லவில்லை யாரிடமும் வாய் திறந்ததில்லை. அப்படியிருக்கையில புதிதாக வந்திருப்பவனுக்கு அது எப்படி தெரிந்தது என்ற திகைப்பு அவனுக்கு உண்டாயிற்று.

'இது உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று கேளாதிருக்க இயலவில்லை அவனால்.

சாத்தன் கணபதி பொருள் பொதிந்த சிரிப்பு உகுத்தான். 'எப்படியோ தெரிந்தது'! என்றான்.

இளம்வழுதி அவனைப் பார்வையால் எடைபோட முயன்றான். சாத்தன் கணபதி கம்பீரத் தோற்றமுடைய இளைஞன். வலிமை மிகுந்தவன் என்பதை எவரும் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து கொள்ள முடியும். அவன் முகத்தில் விசேஷமான சக்தி நிலவுவதாகத் தோன்றும். ஒளி நிறைந்த கண்களும், மோகன முறுவலும் தான் அதற்குக் காரணம்.

அவனிடம் இளம்வழுதிக்குக் காரணமற்ற வாஞ்சை பிறந்தது. 'இவனை நம்பலாம்' என்று அவன் உள்மனம் உறுதியாய் தெரிவித்தது.

பூங்குடி ஆச்சி தனது வேலையைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தாள். அவர்கள் பேசுவது அவள் காதில்விழாது. ஆயினும், சாத்தன் முன்னெச்சரிக்கையோடு சுற்று முற்றும் பார்த்தான். தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு பேசினான்.

'உங்கள் நலனில் கருத்துடைய ஒரு பிராட்டியார் எனக்கு அறிவித்தார்கள்...'

இளம்வழுதி மீண்டும் வியப்படைந்தான். 'அவர் யாரோ?' என்றான்.

'அது உங்களுக்கே புரிந்துவிடும்...சிறு பிள்ளைத் தனம் நிறைந்த பாண்டிய மரபினன் பூங்குடி ஆச்சி வீட்டில் தங்கியிருக்கிறான். அவன் திரும்பவும் அங்கு வந்து சேர்ந்தால் அவனைக் கவனித்து உதவிசெய். இது உன் பொறுப்பு' என்று பிராட்டியார் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்...'

'ஆ! மங்கையர்...' என்று வாய் திறந்த இளம்வழுதியின் உதடுகளுக்குப் பூட்டுப் போட்டான் சாத்தன், விரல்களால் சாடை காட்டி. 'தெரிந்தவை தெரிந்தவரோடு இருப்பதே நல்லது. அனைத்தையும் வெளிப்படையாகக் கூறவேண்டிய தேவை தான் என்ன?' என்றான்.

'நான் தேவரைக் காணச் சென்றது அவர்களுக்குத் தெரியாதே?'

'உங்கள் எண்ணம் அது. அவர்கள் எவ்வளவோ விஷயம் அறிந்து வைத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இரவில் யார் மீதோ ஈட்டி எறிந்த கயவனை தன்னால் பிடித்துத் தரமுடியும் என்று வரகுணத் தேவர் பெரிய இடத்தில் பெருமை பேசியதையும், காவல் வீரர்கள் இரண்டு பேரை அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்குத் திரும்பியதையும் அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு கிட்டியது. அப்பொழுது நான் பிராட்டியாருடன் பேசிக் கொண்டிருந்தேன். 'நீ பூங்குடி ஆச்சி வீட்டுக்கு வந்துவிட்டுத்தானே என்னைக் காண வந்திருக்கிறாய், அங்கு இருந்த யாரையாவது கண்டாயா? என்று என்னிடம் கேட்டார்கள் நான் காணவில்லை என்றேன். உடனே தான் அவர்கள் என்னிடம் விளக்கமாகக் கூறினார்கள்' என்று சாத்தன் கணபதி சொன்னான்

இளம்வழுதியின் உள்ளம் மங்கையர்க்கரசிக்கு நன்றி கூறிக் கொண்டிருந்தது. அந்த அம்மையார் தன்னை மறக்கவோ, புறக்கணிக்கவோ விரும்பவில்லை; அதற்கு

மாறாகத் தனக்கு மேலும் உதவி புரிவதில் கருத்து உடையவராக இருக்கிறார் என்பதை அறியவும் அவனுக்கு மிகுந்த மகிழ்வு உண்டாயிற்று.

தான் வரகுணத்தேவரைக் கண்டு உரையாடியதையும் அவர் அவசரமாகப் பிரிந்து சென்றதையும், தேவரின் மகள் தனக்கு உதவி புரிந்ததையும் அவன் சாத்தனிடம் கூறினான். 'திலகவதி அழகற்றவளாக இருக்கலாம். ஆனால் அவள் உள்ளம் மிகவும் தூய்மையானது; தனிரக எழில் பெற்றது' என்று அவன் உள்ளம் முனங்கியது.

மாலை வேளை நெருங்கியதும், இரண்டு பேரும் ஊரைச் சுற்றி வரலாமே என்று புறப்பட்டார்கள். பல விஷயங்களிலும் அவர்கள் ஒத்த கருத்து உடையவர்கள் என்பதைப் பேசிப் புரிந்துகொண்டார்கள். பாண்டிய நாட்டிற்குக் காலம் இழைத்து விட்ட கொடுமை பற்றியும் அவல நிலையை ஒழித்து மீண்டும் மேனிலை எய்துவதற்கு நாட்டு மக்கள் பாடுபடாமல் இருப்பது குறித்தும் இளவழுதி மனம் குமைந்து பேசினான். 'அதற்கும் காலம் வர வேண்டும். உரிய வேளை வந்தால் எல்லாம் ஒன்று கூடிவிடும்' என்று சொன்னான் சாத்தன்...

நாடுகளின் வீழ்ச்சி எழுச்சிகளைப் பற்றியோ, மனிதரின் உணர்ச்சிக் குழப்பங்கள்—வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்கள் பற்றியோ ஓர் சிறிதும் அக்கறை காட்டாது. கர்மயோகி மாதிரி, தனது கடமையை மட்டுமே ஒழுங்காகச் செய்துவரும் சூரியன் தனது அன்றைப் பொறுப்புக்கு முடிவு கட்டுவதற்காக மேல் திசையை அணுகிக் கொண்டிருந்தான். மாலை வெயிலின் பொன்னொளி விண்ணையும் மண்ணையும் அழகுபடுத்த முயன்றது.

மதுரை மாநகரின் வீதிகள் கலகலப்போடு திகழ்ந்தன. கோயிலுக்குச் செல்லும் பெண்களும் சிறுமிகளும்

சிங்கார்க் காட்சிகளாக விளங்கி தெருக்களுக்குத் தனி அழகும் உயிர்ப்பும் அளித்தனர்

ஞானி மார்பியஸ், களப்பிரன் ஒருவனோடு உலா வந்து கொண்டிருந்தான். அழகைத் தேடும் அவன் கண்களுக்கு நல்ல விருந்து கிட்டியது

'ஆண்டவன் மகத்தான தன்னலக்காரனாகத்தான் இருக்க வேண்டும். உலகில் அழகைப் படைத்தான் அவன். அழகெல்லாம் தனக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்றும் அவன் ஆசைப்படுகிறான். மனிதர் தன்னை பூஜிக்க வேணும் என்று அவாவுகிற ஆண்டவன், தனக்கு அலுப்பு ஏற்படாமலிப்பதற்காகத்தான் பக்தர்களிடையே அழகிகளை மிகுதியாகப் படைத்திருக்கிறான். அழகானவர்கள் அழகு நிறைந்த மலர்களோடு வந்து தன்னை வணங்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிற ஆண்டவன் சுயநலமி அல்லாமல் வேறு என்னவோ?

இத்தன்மையில் அவன் தனது அறிவின் ஒளியையும் ரசனைச் சிறப்பையும் தெளிவுபடுத்தியவாறு நடந்தான். அவன் நண்பன் 'ஆம் ஆம்' என்று கூறியும், வெறும் சிரிப்புடன் தலை அசைத்தும் அவனுக்கு ஊக்கம் ஊட்டி வந்தான்.

'பயன்படாத அழகாக இருந்தாலும் சரி, பயன்படக் கூடிய அழகாயினும் சரியே. அழகு அழகுதான். யோசித்துப் பார்த்தால், பயன்படாத அழகு என்று எதுவுமே இருக்க முடியாது. எப்போதாவது, எவராவது, எங்கிருந்தாவது அதை ஒரு தடவையாவது கண்டு களிக்கலாம். மேல் வானத்தில் இயற்கை தினந்தோறும் கவிதை செய்கிறது. அதை அழித்துத் திருத்தி அற்புதங்கள் படைக்கிறது. மீண்டும் அழித்துவிடுகிறது இந்த அழகெல்லாம் வீண், பயனற்றவை என்று சொல்லுகிறவர்களும் இருக்

கிறார்கள். அது தவறு என்றே சொல்வேன். பார்க்கும் கண்களும், உணர்ந்து மகிழும் உள்ளமும் பெற்ற ஒரு சிலருக்காவது அவை மகிழ்வைத் தருகின்றனவே? அந்த அளவுக்கு அவை பயனுள்ளவைதானே?...

ஞானியின் தொணதொணப்பைக் கேட்டுச் சகித்துக் கொள்ள வேண்டிய தலைவிதி தனக்கு வாய்த்ததே என்று வருந்தியவனாய் தலை அசைத்தான் அவன் தோழன்.

சுற்றிச் சுழன்ற யவன ஞானியின் விழி வண்டுகள் ஒரே இடத்தில் நிலைத்து நின்றுவிட்டதை அவன் துணைவன் கவனித்தான். அவன் பார்வையும் அதே திக்கில் சென்றது.

அங்கே இரண்டு யுவதிகள் எழிலுற அசைந்து வந்தார்கள். மாலைப் பொன் வெயிலில் குளித்தவாறு நடந்த அவர்கள் மிகுந்த வசீகரமாக ஒளிர்ந்தார்கள்.

அவர்களைக் கண்ட யவனனின் முகம் மலர்ந்தது. கண்கள் விரிந்தன இதழ்கள் சற்றே பிரிந்தன அவர்களைப் பார்வையால் விழுங்குவது போல் நோக்கிய அவன், 'அஹ் என்ன அழகு! எவ்வளவு அற்புதம்!' என்று முணங்கினான்

தங்கள் களிப்பிலே ஆழ்ந்து உவகையோடு பேசி வந்த பெண்கள் இருவரும் அவனுடைய வெறித்த நோக்கைக் கவனிக்கவில்லை. அகம் நிறைந்த குதூகலத்தால் முகத்தில் மலர்ந்து குலுங்கிய மகிழ்ச்சி அவர்களின் அழகுக்கு அதிக அழகு சேர்த்தது.

'அழகைக் காணும்போது அதைத் தொட வேண்டும் என்ற உணர்வு ஏற்படுவது இயல்பு. அழகான மலரைப் பறிக்கவும், அழகான குழந்தையை ஆசையோடு எடுக்கவும் தாமாகவே நீளும் கைகளை யாராவது தடுக்கிறார்களா என்ன?' என்றான் அழகின் பக்தன்.

அவ் அழகிகளில் ஒருத்தியைத் தொட்டு பார்த்தால் என்ன? என்ற தூண்டுதல் அவர்களுக்கு எதிரே கொண்டு போய் நிறுத்தியது.

திடீரென்று அந்நியன் ஒருவன் தங்கள் முன்னே வந்து நின்று, வெறிப் பார்வை பார்ப்பதைக் கண்ட யுவதிகள் திடுக்கிட்டார்கள் அச்சம் கொண்டார்கள். அலறினார்கள்.

'அழகைக் குலைக்கிறது இச்செயல்' என்று முணு முணுத்தான் அவன்.

'ஏய், விலகி நில். வழியோடு போகிற பெண்களிடம் வம்பு செய்வதுதான் அழகோ?'— ஆத்திரத்துடன் தெரித்து விழுந்த அதட்டல் மார்பியஸைக் குலுக்கியது.

'அழகை வியந்து மகிழ அறியாமல், அழகு பற்றிக் கேள்வி கேட்க வந்த நீ யார்?' என்றான் யவனன், அருகே வந்து நின்ற இளம்வழுதியிடம்.

'நான் யாராகவும் இருக்கிறேன். அதைப் பற்றி உனக்கென்ன? ஒழுங்காக நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகாமல்...'

'என் வேலையைத்தான் நான் செய்கிறேன்' என்றான் யவனன்.

'எது உன் வேலை?'

'அழகு எங்கிருந்தாலும், அதைக் கண்டு, உணர்ந்து வியந்து, ரசித்து...'

'நிறுத்து! அதற்காக' தெருவோடு போகும் பெண்களிடம் தகாத முறையில் நடப்பதா?' என்றான் இளம் வழுதி.

'நான்எப்படியும் நடப்பேன். என்னை அடக்கி ஒடுக்க நீ யார்?' என்று கேட்டுவிட்டு அலட்சியமாகச் சிரித்தான் ஞானி.

கோபத்தால் கொதித்து நின்ற இளம் வழுதியின் கை தான் சூடாகப் பதில் சொல்லியது அவனுக்கு. வேகமாக விழுந்த அறையினால் நிலைகுலைந்தான் யவனன். அவன் தலை சுற்றியது தள்ளாடிய அவனை அவன் தோழன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

அங்கு பலர் குழுமினார்கள். யவனன் மீது வெறுப்பும் பகைமை உணர்வும் மிகுதியாக ஏற்பட்டிருப்பதைப் புரிந்த களப்பிரன் பேசாமல் அவனை அழைத்துக் கொண்டு நடந்தான்.

'நீங்கள் விரைவாக வீடு செல்லுங்களம்மா!' என்று பெண்களிடம் கூறிய இளம்வழுதி அவர்கள் முகத்தை நேருக்கு நேர் கண்டதும் வியப்புற்றான். அன்று காலையில் எதிர்ப்பட்ட பெண்களில் இருவரே அவர்கள் என்றும். வைகை நீரில் மிதந்து சென்ற குடத்தின் சொந்தக்காரியான அமுதவல்லி தான் அவர்களில் ஒருத்தி எனவும் அவன் அறிய முடிந்தது.

அவ்விருவரும் அவனைத் தெரிந்து கொண்டார்கள். அமுதவல்லியின் முகத்திலே செம்மை படர்ந்தது; கண்கள் மகிழ்வால் மலர்ந்தன; நாணத்தால் தாழ்ந்தன. நன்றிப் பெருக்குடன் அவனைப் பார்த்து விட்டு அவர்கள் வேகமாக நடக்கலானார்கள்.

அமுதவல்லியையே கவனித்து நின்ற வழுதியின் தோள் மீது கைவைத்தான் சாத்தன் கணபதி 'நீரும் தவறே செய்கிறீர்!' என்று குறும்புச் சிரிப்புடன் கூறினான்.

'உலகம் மிகக் குறுகியது போலும்! காலையில் நான் கண்ட பெண்களை மீண்டும் காண நேர்ந்தது மட்டுமல்ல; மறுபடியும் அவர்களுக்கு உதவி செய்யவும் நேரிட்டதே!' என்றான் இளம்வழுதி.

'இங்கேயே நின்றால் உமது ஆயுளும்குறுகியது என்று உணரும் பேறு உமக்குக் கிட்டும். நண்பரே! இப்படி வேகமாக வருக!' என்று அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடுவதுபோல் நடந்தான் சாத்தன்.

'நீங்கள் அதிகமாகப் பயப்படுகிறீர்களே!' என்று வழுதி முனகவும் சாத்தன் சொன்னான்:

'அஞ்ச வேண்டியதைக் கண்டு அஞ்சுக. அதை எண்ணியும் அஞ்சுக. அதுதான் அறிவுடைமை!'

## 7. அறிமுகம்

உணர்ச்சித் துடிப்போடு யவன ஞானியைத் தாக்கி விட்ட இளம்வழுதியை சாத்தன் கணபதி வேகமாக இழுத்துக்கொண்டு, அருகிலிருந்த சிறுசிறு தெருக்களின் வழியே சென்றது நல்லதாயிற்று.

சூழ்நிலை தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதை உணர்ந்து, களப்பிரன் மார்பியசுடன் வேகமாக நடந்தான். பெரிய வீதியைத் திரும்பி, வேறொரு தெருவில் செல்லும் போது, சற்றுத் தொலைவில் வீரர்கள் சிலர் நிற்பது அவன் பார்வையில் பட்டது ஞானியும் அவனும் அவ்வீரர்களை நோக்கிச் சென்றனர்,

இரவு நேரத்தை உல்லாசமாகக் கழிக்கும் எண்ணத் தோடு கிளம்பிய களப்பிர வீரர்கள்தான் அவர்கள் என் பதை ஞானியின் நண்பன் புரிந்துகொண்டான். ஆகவே, இருவரும் அவர்களை அணுகி, முரடர்கள் சிலர் கலகம் விளைவிக்கிறார்கள் என்று சொன்னார்கள். உடனே அவ் வீரர்கள், வேட்டை வெறி பற்றிய நாய்கள் போல் பாய்ந் தார்கள், வழியில் எதிர்ப்பட்டவர்களை எல்லாம் வம்புக்கு இழுத்தும், உதைத்தும், கூச்சலிட்டும் முன்னேறினார்கள்.

'குடித்துவிட்டுக் கலகம் செய்கிற களப்பிரர்கள் வருகிறார்கள்' என்ற செய்தி வேகமாகப் பரவியது. வீதிகளில் நடந்து கொண்டிருந்தவர்களும், கோயிலுக்குச் செல்வோரும், அவரவர் கருமமே கண்ணாக நின்றோம். பரபரப்புற்று ஓடி ஒளியலாயினர். அருகிலிருந்த வீடுகளுக்குள்ளும் புகுந்து பதுங்கி விட்டார்கள். அமுதவல்லியும் அவள் தோழியும் எப்படி எங்கு போய் மறைந்தார்கள் என்று யாருமே கவனிக்கவில்லை.

சற்று நேரத்திற்கு முன்பு உயிர்ப்பும் எழிலும் நிறைந்து விளங்கிய வீதி இப்போது வெறிச்சிட்டுக் கிடந்தது. வெறி உருவினரான வீரர்கள் மட்டுமே காட்சி தந்தார்கள். 'யவன ஞானியை எதிர்க்கத் துணிந்த வீணன் எங்கே?' என்று கத்தியவாறு அலைந்தார்கள். பெரிய தெருவோடு நின்றுவிடாது. பக்கத்துத் தெருக்களிலும் புகுந்து அமைதியைக் குலைத்தார்கள். 'குற்றவாளி அகப்படவில்லையே?' என்ற கவலை அவர்களுக்கு எழவில்லை. 'வெறிக்கூத்து பயிலுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததே' என்ற மகிழ்ச்சியோடும் உற்சாக உணர்வோடும் செயல் புரிந்தார்கள் அவர்கள். தங்களுக்கே ஒரு திருப்தி ஏற்பட்டவுடன், ஏதோ மகத்தான கடமையைச் செய்து முடித்த மனநிறைவுடன் வேறு திக்கிலே சென்றார்கள்.

களப்பிரர்களின் இத்தகைய வெறிக் கூத்துகள் மதுரை மாநகரினருக்குப் புதிய நிகழ்ச்சிகள் அல்ல. பெருமழையையும், சூறாவளியையும், கொடிய தொத்து நோயையும் மனிதர்கள் சகிக்கக் கற்றுக் கொள்வது போலவே, வெறியர்களின் பேயாட்டங்களையும் பொறுமையோடு ஏற்றுத் தாக்குப் பிடிக்கவும் பழகி விடுகிறார்கள்.

அனைவருக்கும் துணைபுரிய விரும்பியதுபோல் இருள் எங்கும் பரவியது. இருட்டின் பாதுகாப்போடு சாத்தன்

கணபதி இளம்வழுதியை எங்கெங்கோ அழைத்துச் சென்றான். 'எங்கு, ஏன்?' என்று கேள்வி எதுவும் எறியாமலே வழுதியும் அவனோடு போனான்.

வெகுதூரம் நடந்தபிறகு சாத்தன் கணபதி ஒரு இடத்தில் நின்றான். அது எந்த இடம்? என்பது வழுதிக்குப் புரியவில்லை. நகருக்கு வெளியே ஒதுக்குப் புறமான பகுதியில் அது இருந்ததாக அவனுக்குத்தோன்றியது இருளில் குறிப்பாக எதையும் கண்டு தெளிய முடியவில்லை அவனால்.

சாத்தன் கணபதி ஒரு கதவில் விரலால் 'டொக் டொக்' என்று தட்டினான் அவன் மறுபடியும் தட்டவும் கதவின் மறுபுறமிருந்து அதேபோன்ற ஒலி எழுந்தது. சாத்தன் மீண்டும் அவ்வோசையை எழுப்பவும், கதவு திறக்கப்பட்டது 'இது ஏதோ தனிப்பட்ட சைகை போலிருக்கிறது' என்று இளம்வழுதி நினைத்துக்கொண்டான்.

அவன் கையைப் பற்றி அழைத்தபடி, சாத்தன் உள்ளே புகுந்தான். கதவு மறுபடியும் தாளிடப்பட்டது. பெரிய சுவர்களும் நெடுங் கதவும் இருக்க வேண்டும் என்றே தோன்றியது வழுதிக்கு. ஆயினும் அவன் வாய் திறந்து பேசவோ, கேள்விகளை கேட்கவோ ஆசைப்படவில்லை. 'என்ன தான் நடக்கிறது. பார்க்கலாமே' என்ற நினைப்பு அவனுக்கிருந்தது.

இரவின் குளிர்காற்று நீர்வாடையைச் சுமந்து நெளிந்தது. பச்சிலைகளின் மணமும், பலவகை மலர்களின் வாசனையும் இனிமையாக நிறைந்துநின்றன நெடுகிலும். அவ்விருவரும் சென்ற தடம் செடிகளினூடே நீண்டு கிடந்தது. 'இது பெரிய நந்தவனமாக இருக்கலாம்'; என்று வழுதி எண்ணினான்.

'சாத்தன், முன்பு பல தடவைகள் அங்கே வந்து பழக்கப்பட்டவனாக இருத்தல் வேண்டும்' என்ற உறுதி வழுதிக்கு ஏற்பட்டது. அந்த இரவு நேரத்தில் கூட சாத்தன் தயக்கம் எதுவுமில்லாமல் நண்பனுக்கு வழி காட்டியபடி முன்னே நடந்தான். இருவரும் மடம் போன்ற ஒரு கட்டடத்தைச் சேர்ந்தனர்.

அங்கு சிறுவிளக்கு ஒன்று வெளிச்சம் தருவதாகப் பெயர் பண்ணி அழுது வழிந்து கொண்டிருந்தது. திருநீற்றைப் பட்டை பட்டையாக மேனி முழுவதும் பூசியிருந்த அடியார் ஒருவர் ஒரு தூண் அருகே சாய்ந்திருந்தார். அவர் வாய் முணுமுணுத்தபடி காணப்பட்டது. சிவன் திருப்பெயரை ஓய்வின்றி உச்சரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம் அது. ஆயினும் அவர் விழிகள் தூங்கவில்லை, மோனத் தவ நிலையில் அரைகுறையாக மூடியிருக்கவுமில்லை. சஞ்சல சித்தத்தோடு சுழலும் கருவண்டுகள் போல் மினுமினுத்த அவரது கண்கள் புதிதாக வந்தவர்கள் மீது மோதின;

சாத்தனை இனம் கண்டு கொண்டதும் அவற்றில் தனி ஒளி சேர்ந்ததுபோல் தோன்றியது. ஒரு கணத்திற்குத்தான். பிறகு அவை தன்னிலை பெற்று உருண்டு புரண்டன.

'எல்லோரும் வந்து விட்டார்களா?' என்று கேட்டான் கணபதி.

அடியார் வாய்திறந்து பதில் உரைக்காது. ''உள்ளே போகலாம்'' என்பது போல் தலையை அசைத்துக் காட்டினார்.

சாத்தன் வழுதியோடு உள்ளே சென்றான். விசாலமான முன்னறையைக் கடந்து. மற்றொரு அறைக்குள் நுழைந்தார்கள் அவர்கள்.

ஓங்கி உயர்ந்து நின்ற பெரிய கற்தூண்களும், அகண்ட மண்டபமும் போன்ற முகப்புப் பகுதியும், அகலமான உள் அறைகளும், 'அடியார்கள் பலர் வசித்து, பூஜை செய்து, பக்தியோடு வாழ்வதற்காக அமைக்கப் பெற்ற மடாலயம் இது என்ற எண்ணத்தையே தந்தன. அவ்வறைகள் எல்லாம் ஒளி மயமாகத் திகழவுமில்லை; இருள் மூடிக் கிடக்கவுமில்லை, சுவர்களின் ஓரங்களில் சில குத்து விளக்குகள் எரிந்துகொண்டு தானிருந்தன. உயரே இருந்து சங்கிலிகளில் தொங்கும் விளக்குகளும் சுடருடன்தான் விளங்கின. எனினும் அவை எல்லாம் வேண்டுமென்றே மங்கலாக எரியவிடப்பட்டவை போலவே தோன்றின

இருளும் ஒளியும் கலந்து திகழ்ந்த அந்த இடத்தில் 'மனித உருவங்களும் அவர்களின் நிழல்களும் வேறு உலகத்துச் சாயைகளோ' எனும் பிரமையை எழுப்பும் விதத்தில் காட்சி அளித்ததை இளம்வழுதி கண்டான். எல்லோர் கண்களும் அவர்கள் பக்கம் திரும்பின; பின் உருண்டன. இருப்பினும் எவரும் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசாதது அவனுக்கு வியப்பாகவே இருந்தது

மேலோட்டமாக நோக்கும்பொழுது அவர்கள் அனைவரும் மௌனமாக பிரார்த்தனை புரிவதற்காகவே அங்கு கூடியிருப்பதாகத் தோன்றும், ஆனால் அவர்களுடைய நோக்கம் அதுவாக இருக்க முடியாது என்ற ஐயம் இளம் வழுதியின் உள்ளத்தில் திடமாகப் படிந்தது. 'தனது நண்பன் தன்னை ஏன் இங்கு அழைத்து வந்திருக்கிறான்?' என்பது அவனுக்குத் தெளிவாகவேயில்லை.

அவன் அங்கு தென்பட்ட முகங்களைக் கவனித்தான். அன்று காலையில் மாமூலனாரைத் தேடி வந்த இளம்துறவி முன் வரிசையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அப்படி

யானால் அவரும் இங்கு வந்தாலும் வரக்கூடும்' என்ற எண்ணம் அவனுக்கு மகிழ்வு உண்டாக்கியது.

அவன் எண்ணம் உடனடியாகச் செயலுருப் பெற்றது போல், மாமூலனார் திடீரென்று காட்சி அளித்தார் 'முன்பே வந்து அவர் அதுவரை வேறு எங்கோ ஏதோ அலுவலில் ஈடுபட்டிருந்திருப்பார்' என்று வழுதி நினைத்துக் கொண்டான்

மாமூலனாரின் பருந்துப் பார்வை அனைவரையும் தடவியது. இளம்வழுதியின் மீதும் படிந்தது. 'ஓ! நீயும் வந்திருக்கிறாயா? என்றார் அவர்.

'திருவருள் மீண்டும் நம்மைக் கூட்டுவித்திருக்கிறது என்று கூறிய வழுதி புன்னகை புரிந்தான். 'காலையில் அவர் அவனிடம் சொன்ன வார்த்தைகளை அவருக்கு நினைவுறுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததே!' என்ற மகிழ்வு அவனுக்கு.

புலவர் 'சரிதான்' என்று தலையாட்டினார். தமது இடத்தில் அமர்ந்தார், அவரையும் இளம்வழுதியையும் கவனித்துக் கொண்டிருந்த துறவி அடியார்க்கு நல்லான் குறுக்கிட்டான்

'நாம் நமது செயல்களை கவனிப்பதற்கு முன்பு, இங்குள்ள அனைவரும் நம்மவர்கள் தானா. நம்பத் தகுந்தவர்கள் தானா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். புதியவர்களை நம்மிடையே புகவிடுவது நல்லதா என்பது பற்றியும் யோசிக்க வேண்டும்' என்று அவன் சொன்னான்

'நல்லான் யாரைக் குறித்து இவ்வாறு சொல்கிறார் என்பதை நான் அறிவேன் இங்குள்ள அடியார்கள் அனைவரும் அவருக்கு நன்கு பழக்கமானவர்களே. சாத்தன் கணபதியும் புதியமரல்லர். இளம்வழுதி ஒருவர் தான் இன்று புதிதாக வந்திருக்கிறார்' என்றார் மாமூலனார்.

'எத்தனை பேர் வந்திருந்தால் என்ன! வந்திருப்பவர்களை நாம் நம்பலாமா என்பதுதானே. முக்கிய விஷயம்' என்று முணுமுணுத்தான் துறவி.

'சிலரை நம்புவதா கூடாதா என்பதற்கும் புறச்சான்றுகள் தேடவேண்டியது அவசியமில்லை. அவர்களைப் பார்த்ததுமே, இவர் நம்பிக்கைக்கு உரியவர்—இவரை நம்பலாம் என்ற நல்லெண்ணம் நம் உள்ளத்தில் இயல்பாகவே எழுகிறது இளம்வழுதியிடம் நாம் நம்பிக்கை கொள்வதனால் நமக்குத் தீங்கு ஏதுவும் ஏற்படாது என்றே கருதுகிறேன்'

இந்த பதில் 'கணீ'ரென்று ஒலித்தது. ஆனால் இதை மாமூலனார் அறிவிக்கவில்லை. முன்னறையில் வந்தபோது துறவியின் பேச்சு காதில் விழுவதைக் கேட்டு நின்று, பின் அமைதியாக உள்ளே அடி எடுத்து வைத்த மங்கையர்க்கரசிதான் இவ்வாறு பேசினாள். விளக்கொளி தன்மீது நன்கு படும்படி கூட்டத்தின் முன்னே வந்து நின்றாள் அவள்.

அவள் வந்து மறைந்து நின்றதைக் கவனியாமலே பேசிவிட்ட அடியார்க்கு நல்லான் தனது தவறுதலுக்காக மனதினுள் தன்னைத்தானே குறை கூறிக் கொண்டான். 'பிராட்டியின் கருத்து அதுவாயின் நான் மறுத்துரைப்பதற்கு இல்லை' என்று தெரிவித்தான் அவன்.

மாமூலனார் அவளுக்கு உரிய பீடத்தைச் சுட்டிக் காட்டினார். எல்லோரும் அவளுக்கு வணக்கம் கூறினர்.

'எனக்கு நீங்கள் மிகுந்த உதவி புரிந்திருக்கிறீர்கள். தொடர்ந்து உதவி செய்கிறீர்கள் உங்களுக்கு எவ்வாறு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என்றே எனக்குப் புரியவில்லை' என்று இளம்வழுதி சொன்னான்.

மங்கையர்க்கரசி முறுவல் பூத்தாள். நாங்கள் உன்னிடம் கொள்ளும் நம்பிக்கைக்கு ஊறு செய்யாமல், உனது ஆற்றலை நிரூபித்துக் காட்டினால் போதும். தமிழுக்கும், பாண்டி நாட்டுக்கும் மறுபடியும் உயர்நிலை வந்து சேருவதற்கு உரிய முறையில் உனது உழைப்பையும் திறமையையும் ஈடுபடுத்தினால் போதும்' என்றாள். புலவரையும், துறவியையும் மற்றுமுள்ள அடியார்களையும் நோக்கினாள்.

யாரும் எதுவும் சொல்லாததால் அவளே தொடர்ந்து பேசினாள். 'நேற்று சந்தர்ப்பங்கள் சரியாக அமைந்திராத போது நீ உன்னைப் பற்றி விரிவாகப் பேச விரும்பினாய். 'அதை எல்லாம் நான் வேறொரு சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்' என்று சொன்னேன் அல்லவா? இப்பொழுது நல்ல தருணம். நான் மட்டுமல்ல; புலவர் மாமூலனாரும் துறவியாரும் உன்னைப்பற்றி நன்கு அறிந்துகொள்வதற்கு உன் வரலாறு துணை புரியும், நீ அதைச் சொல்லலாமே என்றாள்.

இளம்வழுதி சொன்னான்: 'பாண்டியர் நன்னிலையில் இருந்த காலத்தில் இப்பெரு நிலப்பரப்பு பல வள நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது உங்களுக்குத் தெரியும். நாடுகள் என்றும் கூற்றங்கள் என்றும் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்று, அவற்றில் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு பகுக்கப் பெற்றதே வள நாடு...''

'அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். நீர் 'வளவள' வென்று பேசாமல் முக்கிய விஷயத்துக்கு வாரும்' என்று முனங்கினான் நல்லான்.

இளம்வழுதி கோபம் கொள்ளவில்லை. என்னைப் பற்றிச் சொல்வதற்கு இந்த முன்னுரை தேவை என்று தோன்றியது. அதனாலேயே குறிப்பிட்டேன்...ஒவ்வொரு

வளநாடும் பாண்டிய மரபினரின் மேற்பார்வையில் இருந்து வந்தது. திருவழுதி வளநாட்டை சேர்ந்த செவ்விருக்கை நாட்டில் வாழ்ந்த பெருவழுதியின் வழி வந்தவன், நான். நம் நாடு களப்பிரர்களின் தாக்குதலுக்குக் கீழ்ப்படிந்து விட்ட போதிலும், பலர் உள்ளத்தில உறையும் வீரம் செத்துவிடவில்லை. எனது தந்தை நல்வழுதி எவ்வளவோ கனவுகள் கண்டார். ஆயினும் அவை வெறும் கனவுகளாகவே நின்றுவிட்டன. அவர் ஏற்றி வைத்த உணர்ச்சிப் பொறியை அவியாதவாறு காத்து வந்த என் தாய் எனக்கு உணர்வும் வீரமும் உயர்ந்த எண்ணமும் ஊட்டி வந்தாள். நல்ல பயிற்சிகள் பலம் அளித்து வந்தாள்.

'செவ்விருக்கை நாட்டில் அரண்மனையை அடுத்த கோயில் நந்தவனத்தின் ஒரு புறத்தில் பெரிய பாராங்கல் ஒன்று உண்டு. குறிப்பிட்ட ஒருநாளில என் அன்னை அங்கு அழைத்துச் சென்று அந்தக் கல்லை உருட்டிப் புரட்டும்படி கட்டளையிடுவாள். 'இளைஞனான எனக்கு அதற்குத் தேவையான வலு வரவில்லை' என உணர்ந்ததும் அவள பெருமூச்செறிவாள். கண்களில் நீர் தேங்க 'இன்னும் வேளை வரவில்லை' என்று சொல்லி, என்னை அழைத்துக்கொண்டு வீடு திரும்புவாள். எனது தாயின் செய்கைக்குரிய பொருள் எனக்குப் புரிவதற்கு வெகு காலம் பிடித்தது......முதலில் 'இதுவும் ஒரு விளையாட்டு என்றும் பிறகு இது ஒரு பயிற்சி' என்றும் எண்ணியிருந்தேன் நான். பிறகு ஒரு தடவை, ஏனம்மா இப்படி அடிக்கடி செய்யச் சொல்கிறாய்?' எதற்கு வேளை வரவில்லை என்கிறாய் என்று கேட்டேன். 'அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளினால் எல்லாம் உனக்கு விளங்கிவிடும்' என்று சொல்லி என் தாய் நெடு மூச்செறிந்தாள். 'அவளுக்கு மகிழ்ச்சி அளிப்பதற்காக அக்கல்லை உருட்டிவிட வேண்டும்' என்று ஆசை வளர்ந்து வந்த எனக்கு, 'அதன்கீழ் என்ன மறைந்து கிடக்கிறது' என்று

அறிய வேண்டும் என்ற துடிப்பும் பிறந்தது. எனவே நான் எனது உடல் வலிமை அதிகம் சேர்க்க அரும்பாடு பட்டு வந்தேன். ஆயினும் அந்தக்கல் என்னிலும் வலு மிகப் பெற்றதாக இருந்தது.

நான் வெற்றி பெற முடியாமல் போகிற ஒவ்வொரு முறையும் என் தாயின் முகம் வேதனையின் ஓவியமாக மாறிவிடும். துயர மூச்செறிந்து 'இன்னும் வேளை வர வில்லை' என்று அவள் முனங்குவாள். இந்தத் தடவை எப்படியும் வெற்றி பெற்றே தீருவது என நான் உறுதி பூண்டேன். முயன்றேன். வெற்றி கண்டேன்......'

'அந்தப் பெருங்கல்லின் கீழே என்ன காணப்பட்டது?' என்று ஆவலோடு கேட்டான் அடியார்க்கு நல்லான். அவனுடைய அவசரத்தைக் கண்டு குறுநகை புரிந்தார் புலவர்'

'அந்தப் பாறாங்கல்லின் கீழே ஒரு பள்ளத்தில் பெட்டி ஒன்று பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதை வெளியே தூக்கு' என்றாள் அம்மா. எடுத்துத் திறந்தேன். அதனுள் ஒரு வாள் இருந்தது.

'வாளா?' என்று வியப்புடன் ஒலித்தன பல குரல்கள்.

'ஆமாம். என் தாய் என்னை அன்போடு தழுவிக் கொண்டு வாழ்த்துக் கூறினாள். அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். 'வேளை வந்துவிட்டது; மகனே விடிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூவினாள். 'பாண்டியரின் வீரவாள் இது. உன் தந்தை இதை உயிரெனப் போற்றி வந்தார். போதிய வீரமும் தகுதியும் பெற்றதும் உனக்கு இந்த வாள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் அதை இங்கே பதுக்கி வைத்தார். நீ அதை எடுத்துவிட்டாய் இனிமேல்

உன் தந்தையின் இதர ஆசைகளையும் நீ நிறைவேற்ற வேண்டும்; அதற்குக்காலம் உனக்குத் துணை புரியட்டும்' என வாழ்த்தினாள். நம் நாட்டின் வீர வரலாற்றை என் தாய்தான் எனக்குப் புகட்டி வந்தாள். மேற்கொண்டு செயல்புரியும் வழிகள் பற்றி ஆராய்வதற்காகவே நான் இங்கு வந்தேன். வந்த இடத்தில் இந்தப்பிராட்டியாரையும், புலவர் பெருமானையும், சாத்தன் கணபதியையும் கண்டு அவர்கள் அன்பைப் பெறும் பேறு எய்தியதற்காக மகிழ்கிறேன். உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியதையும் என் பாக்கியம் என்றே கருதுகிறேன்...'

'அதெல்லாம் சரிதான். நீ இங்கு வந்தபிறகு எதிர்ப்பட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி இவர்களுக்குச் சொல்லு. வரகுணத்தேவரைப் பற்றி விரிவாகப் பேசுவதற்கு மறந்து விடாதே!' என்று மங்கையர்க்கரசி கூறினாள்.

## 8. ஆலோசனை

மதுரை மாநகரின் ஒரு மூலையில் தனியானதொரு இடத்தில் சிலர் கூடி வரகுணத் தேவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த இரவிலே தேவர் கோபத்தால் கொதிப்புற்றிருந்தார் அதற்குக் காரணம் இல்லாமலில்லை...

பகலில் அவர் இளம்வழுதியோடு உரையாடிக்கொண்டிருந்தபோது அவருக்கு அரண்மனையிலிருந்து அழைப்பு வரவும், தேவர் அவனை அங்கேயே காத்திருக்கும்படி சொல்லி விட்டுச் சென்றார் அல்லவா? கூற்றன் நாயனார் மாளிகையில் பேச்சு நிகழும் போதெல்லாம் அவர் மனம் பெருவகை அடைந்தது. 'இன்று நமக்கு நல்ல வெற்றி கிட்டப்போகிறது. குற்றவாளி தானாகவே வந்துநம்மிடம்

சிக்கிவிட்டான். அவனைப் பிடித்துக் கொடுத்து இவர்களிடம் நாம் நல்ல பெயர் பெறலாம்' என்று அவர் உள்ளம் இனிய கனவு கண்டு களித்தது.

கூற்றன் நாயனாரும் விஷ்ணுசிம்மனும் முந்திய தினத்தின் நிகழ்ச்சி பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அவ்விருந்தில் வரகுணத்தேவரும் பங்கு பெற்றிருந்ததால் அவருக்கு அது புதிய விஷயமில்லைதான். வீரன் உக்கிர நாதன் முகம் சுளித்துச் சற்று கடுகடுப்பாகப் பேசிய சொற்கள் நாயனாரின் இதயத்தைச் சுட்டன. அந்த வடு எளிதில் ஆறிவிடுமா என்ன? தான் தூங்கவில்லை என்று காட்டுவதற்கும் தனது அதிகாரத்தையும், ஆள் பலத்தையும் கொண்டு நாட்டை 'உள்ளூற அரிக்க ஆரம்பித்துள்ள களையான்களை அழிப்பதற்குத் திட்டம் தீட்டவும் விரும்பினான் அவன். அதற்காகவே அவன் தேவரை அழைத்து வரக்கட்டளையிட்டான்.

வரகுணத்தேவர் இளம்வழுதிமூலம் அறிந்த உண்மைகளை எடுத்த எடுப்பிலேயே மற்றவர்களிடம் அறிவித்து விடவில்லை. நாயனார் தனது சந்தேகங்களைச் சொல்லச் சொல்ல, அவ்வப்போது 'சில சிறு செய்திகள் தன் காதுகளையும் எட்டின' என்று கூறி உரையாடலுக்கு உயிரும் உணர்வும் ஊட்டிவந்தார்.

'என்ன நடவடிக்கை எடுப்பது, யாரை எதிர்ப்பது, வீரர்களை நாடெங்கும் ஏவிவிடுவதா, உளவாளிகளை அனுப்புவதா?' என்பதெதுவும் புரியாமல் கூற்றன் நாயனார் குழம்பிய வேளையில், தேவர் திருவாய் மலர்ந்தார்:

'நேற்று முன்னிரவில் மாளிகையினுள் ஈட்டி எறியத் துணிந்தவன் பித்தனாகவோ, வெறும் வெறியனாகவோ இருக்க மாட்டான் என்றே நான் நினைக்கிறேன். நாட்டு நிலைமையையும் பலரது வெறுப்பு உணர்வையும் பயன்

படுத்திக் கொண்டு உயர்ந்துவிடத் திட்டமிடுகிற தன்ன லக்காரனாக இருந்தாலும இருக்கலாம்...''

'உங்களுக்கு ஏன் இந்த ஐயம்?' என்று விஷ்ணுசிம்மன் கேட்டான்.

'இன்று ஒருவன் என்னைக் கண்டு பேச வந்தான். அவன் பேச்சிலிருந்து என் சந்தேகம் வளர்ந்தது அதனால் அவனை எனது இல்லத்திலேயே விட்டுவிட்டுப் போதிய கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக் கிறேன். நீங்கள் இரண்டு வீரர்களை அனுப்பினால், அவனை இங்கேயே அழைத்து வந்து விசாரணை நடத்த லாம். நமக்குப் பல செய்திகள் கிடைக்கும்' என்று தேவர் தானாகவே வழிவகுத்துக் காட்டினார். 'அதற்குமேல் நாம் செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கலாம்' என்றார்.

உடனடியாக நாயனார் அனுப்பி வைத்த ஆட்களுடன் கிளம்பிய தேவர் வழி நெடுகிலும் தனது எதிர் காலத்தில் ஏற்படப் போகிற நல் ஒளியைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார். 'இளம்வழுதி தனக்காகக் காத்திருப் பான்' என்ற நிச்சய நம்பிக்கையோடு வீட்டினுள் பிரவே சித்த தேவருக்குப் பெருத்த ஏமாற்றமே கிட்டியது.

'திலகம், அவன் எங்கே?' என்று அதட்டிக்கேட்டார் அவர்.

'எனக்குத் தெரியாது. இங்குதான் இருந்தார். நான் ஏதோ அலுவலாக உள்ளே போயிருந்தேன் சிறிது நேரம் சென்று திரும்பி வந்து பார்த்தால் அவரைக் காணோம்' என்று அமைதியாகப் பதில் சொன்னாள் அவர் அருமை மகள்.

தேவரின் கூரிய பார்வை அவள் முகத்தைக் குத்தியது. ஒரு கணம் அங்கு புதிய செய்தி எதையும் உணர்ந்து

கொள்ள முடியவில்லை அவரால். 'மெய்யாகவா?' என்று வரண்ட குரலில் கேட்டார்.

திலகவதி மௌனமாகத் தலை அசைத்தாள்.

'விழிப்புடன் கவனித்துக் கொள்ளும்படி சொன்னேனா இல்லையா, திலகம், நீ இப்படிக் கோட்டைவிட்டு விட்டாயே?' என்று வருத்தத்துடன் பேசினார் தேவர். 'இங்கு வந்தவன் எங்கோ வெளியே போயிருக்கிறான். அவன் திரும்பி வருவான். வந்ததும் நானே அழைத்து வருகிறேன்' என்று சொல்லி களப்பிர ஆட்களை அனுப்பி விட்டார். அவர் உள்ளத்தில் குழப்பம் குடிகொண்டது.

மாலை நெருங்க, நெருங்க அவர் மனக்குழப்பம் அதிகரித்து வந்தது. கூற்றன் நாயனார் இல்லத்தில் அன்றும் விசேஷ விருந்து உண்டு. 'நாயனாரை எப்படிச்சந்திப்பது அவரிடம் என்ன கூறுவது?' என்று தவித்துக் கொண்டிருந்த தேவர் மெதுவாகத்தான் அரண்மனை சேர்ந்தார்.

தேவர் அங்கு போய்சேர்ந்த வேளையில் பரபரப்பான சூழ்நிலை அவரை எதிரேற்றது. ஞானி மார்பியஸ் அடிபட்டதும், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த குழப்பமும் சூடான பேச்சில் எதிரொலி செய்தன.

வீரன் உக்கிரநாதன் குமுறிக்கொதித்துக் கொண்டிருந்தான். 'எனது நண்பனை இழிவு படுத்தக்கூடிய அளவு துணிவு ஏற்பட்டு விட்டதா இங்குள்ளவர்களுக்கு? அப்புறம் நமது ஆட்சிக்கு என்னதான் மதிப்பு?' என்று கோபமாய்ப் பேசினான் அவன்.

'வீடு தேடி வந்து தங்கியிருக்கும் விருந்தாளிக்கு அளிக்க வேண்டிய கௌரவத்தை அளிக்கத் தவறி விட்டவன் போல் வருந்தினான் கூற்றன் நாயனார்.

நடந்தது பற்றிக் கேள்வியுற்றதும், 'இன்று நம்மைத் தேடி வந்தவன்தான் இதைச் செய்திருக்கிறான். அவனை

அப்பொழுதே அடக்கி வைக்க இயலாமல் போய்விட்டது' அவனை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டுப் போடாமல் நான் புறப்பட்டு வந்தது என் தப்புதான்' என்று வரகுணத்தேவர் நினைத்தார்.

'இனியும் நாம் வாளாயிருத்தல் தகாது. கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்' என்று தீர்மானித்தான் கூற்றன். 'நாட்டின் ஒவ்வொரு பகுதியின் நிலைமையையும் ஆராய்ந்து வருவதற்காக, நம்பகமான களப்பிரர்களை அனுப்பி வைக்க வேண்டும்' என்று முடிவுசெய்தான் அவன். 'யார் யாரை அனுப்புவது' என்பதும் திட்டமிடப்பட்டது.

அந்த ஆலோசனைக் கூட்டம்முடிவு பெற்றதும்தேவர் தனது இல்லத்துக்குப் புறப்பட்டார். உயர்ந்த ஜாதிக் குதிரைகள் பூட்டிய அவருடைய ஆடம்பரமான வண்டி இரவு நேர அமைதியைச் சாக அடித்தபடி வீதிகளில் விரைந்தோடியது. ஆள் நடமாட்டமோ இதர போக்கு வரத்தோ இல்லாததால் வண்டியோட்டி குதிரைகளை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

வேகம் குறையாமலே வேறொரு வீதியில் திரும்பியது வண்டி. அத்தெருவின் நடுவில் மூன்றுபேர் நடந்து சென்றனர். 'தடதட'வென்று வண்டி திரும்பிவரவும் அவர்கள் வெருண்டு, திணறி ஓரங்களுக்கு ஓடினார்கள். பிறகு நின்று முறைத்தார்கள்.

'மடையன்! இப்படியா வண்டி ஓட்டுவது!' என்று கூவினான் அவர்களில் ஒருவன்.

'அந்தக் குதிரைகளுக்கு இருக்கிற அறிவுகூட அவனுக்கு இராது. அதனால்தான் அவற்றைப்போய் விரட்டுகிறான் என்றான் மற்றொருவன்.

'ஏய், நிறுத்து!' என்று உறுமினார் வண்டிக்குள்ளிருந்த தேவர். வண்டியோட்டிக்கு இட்ட கட்டளைதான் அது

உடனே வண்டி நிறுத்தப்பட்டது.

தேவர், வெளியே எட்டிப் பார்த்தார் வண்டியின் விளக்குகள் சிறிதே ஒளி வீசின. என்னும் இருளைக் கிழித்து, 'யார் எங்கு நிற்கிறார்கள்?' என்று தெரிந்து கொள்வதற்குத் துணை செய்யவில்லை, அது.

'யாரது? தெருவோடு போகிறவர்கள் நடு வீதியில் நடந்தால் வண்டி வந்து மோதாமல் என்ன செய்யுமாம்?' என்று கத்தினார் தேவர்.

'எதுக்காக இபபடி விரட்டணும்? நடந்து போகிறவர்கள் விலகுவதற்குக் கூட நேரம் அளிக்காமல்...' என்று பேசத் தொடங்கினான்.

'வெறித்தனமாக வாழ்கிறவர்களோடு நமக்கு என்ன பேச்சு?'' என அவன் நண்பன் சொன்னான்.

'எவன் அது மரியாதை இல்லாமல் பேசுவது?' என்று தேவர் உறுமினார்.

'உமக்கு மரியாதை இருக்கிறதல்லவா? அது போதும்!' என்று குத்தலாகச் சொன்னான் ஒருவன்.

'வரவர இவ்வூர்வாசிகள் மரியாதை குணத்தை இழந்து வருவதாகத் தெரிகிறது' என்று முணுமுணுத்தார் தேவர்.

இதற்குள் இன்னும் இரண்டுபேர் அந்த இடத்தை அடைந்தார்கள். வண்டி நின்று, பேச்சு தடித்து வளர்வதை உணர்ந்து நின்றார்கள்.

'நீங்கள் எல்லாம் யார்? இந்த இரவு வேளையில் வீதிகளில் உங்களுக்கு என்ன வேலை?' என்று வெடுவெடுத்தார் வரகுணர்.

'நாங்கள் வெறும் நாடோடிகள்— ஆண்டிகள் ஊர் ஊராகச் சுற்றுவதுதான் எங்கள் வேலை. இந்த ஊருக்கு வந்து விட்டு...'

விளக்கமாக பதில் சொல்ல முன்வந்தான் ஒருவன், அவன பேச்சுக்கு ஊடாகத் 'நடிவெட்டிப் போட்டான்' பின்னர் வந்த இருவரில் ஒருவன்.

'இவர் யார் தெருவில போகிறவர்களை எல்லாம் அதட்டி ஆக்கினை செய்வதற்கு? வீதிகளில் அவர் வண்டி மட்டும்தான் போகலாம் என்ற விதி எதுவும் கிடையாதே என்றான் அவன்.

அதைக் கேட்டதும் 'எப்பொழுதோ காதில் விழுந்து பழகியகுரலாக இருக்கிறதே?' என்ற நினைப்புடன், தேவர் தலையை மேலும் வெளியே நீட்டினார். விளக்கொளி அவர் முகத்தில் படிந்து அதைத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

'ஓகோ, வரகுணத் தேவரா! அவர் இது மட்டும் தானா கேட்பார்! இன்னும் எப்படி வேண்டுமானாலும் தடை விதிப்பாரே? களப்பிரர்களின் துணை இருக்கிற போது அவர் இந்தத் தெருவில் என்ன, இந்த நகரிலேயே கொடி கட்டிப் பறக்கவிடத் துணிந்தால் நாம் அதிசயிப்பதற்கில்லை என்று கூறி அவன் 'கடகட'வெனச் சிரித்தான்.

'ஏய், வீணாக உளறிக் கொட்டும் நீ யார்? இப்படி வெளிச்சத்தில் வந்து நில்' என்று மிடுக்காகச் சொன்னார் தேவர்!

'இளம்வழுதியை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்களே! என்ற எக்காளப் பேச்சுடன் முன்வந்து நின்றான் அவன்.

தேவர் திடுக்கிட்டார். அவனை அவர் அவ்வேளையில் அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை. அப்பொழுது அங்கே அவன் அருகில் சிலர் நின்றார்கள் என்று அவரால் உணர

முடிந்ததே தவிர. 'அவர்கள் எத்தனை பேர் குழுமியிருந் தனர்' என்று தெரிந்துகொள்ள இயலவில்லை. அவர்கள் மிகப் பலராக இருந்தாலும் இருக்கலாம், ஆயுதம் வைத் திருப்பவர்களாகவும் இருக்கலாம் என்ற உதைப்பு எழுந் தது அவர் உள்ளத்தில். 'அவன் பேச்சுக்கு ஏதேனும் பதில் சொல்லியாக வேண்டும்; இல்லையெனில் அவனும் மற்றவர்களும் தன்னைப் பற்றிக் குறைவாக மதிப்பிட்டு விடுவார்கள்' என்றும் அவர் எண்ணினார், கனைத்தார், தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டார்.

'என்ன இளம்வழுதி! இன்று பிற்பகலில் நீ சொல்லிக் கொள்ளாமலே எங்கள் வீட்டிலிருந்து வெளியேறிவிட் டாயே. உன்னைக் கண்டு பேசி அளவளாவலாம் என்ற துடிப்போடு நான் வந்து பார்த்தால், உன்னைக் காண வில்லை. நீ வருவாய், வருவாய் என்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தேன். அப்புறம் நீ வரவேயில்லையே? என்றார் தேவர்.

அலட்சியமாக ஒற்றைச் சிரிப்பு உதிர்த்தான் வழுதி 'உங்களுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்திருக்கும்' இல்லையா? நீங்கள் அழைத்து வந்த காவல் வீரர்களுக்கு என்ன சொல்லியனுப்புவது என்று தவித்திருப்பீர்களே? நாயனாரிடம் எப்படி முகத்தைக் காட்டுவது என்று கூடக் குழப்பம் ஏற்பட்டிருக்கும்!' என்று சென்னையாக மொழிந்தான்.

நீ என்னவோ உளறுகிறாய். எனக்கு விளங்கவில்லை, என்றார் தேவர்.

'பென்னம் பெரியவரான தங்களுக்கு இச்சின்ன விஷ யங்கள் விளங்காதுதான்!' என்று சொல்லிச் சிரித்தான் வழுதி

'வண்டியை விரட்டு!' என உத்திரவிட்டார் வரகுணர். வண்டி நகரத் தொடங்கியது. வேகம் பெற முனைந்தது. திடீரென்று ஒரு பெரும் உலுக்கலுடன் நின்றது.

வண்டியோட்டி குதிரைகளைக் கசையினால் சுண்டினான் அவை முரண்டி முன்னேறப் போராடின. எனினும் முன்செல்ல முடியாது திணறின.

'என்ன, என்ன விஷயம்?' என்று பதறினார் தேவர்

இளம்வழுதி அட்டகாசமாகச் சிரித்தான்.

'தேவரே! விளையாட்டாக என் பலத்தைச் சோதித்துப் பார்த்தேன். சக்கரத்தைப் பிடித்து இழுத்தேன். வண்டி நின்றுவிட்டது. என் நண்பன் சாத்தன் இன்னொரு சக்கரத்தில் கைவைத்தான். குதிரைகள் வலுவிழந்து திண்டாடுகின்றன' என்று சொன்னான் அவன்.

'ஏய், இது என்ன விளையாட்டு? வண்டியைப் போக விடு!' என்றார் தேவர். அவரது உள்ளத்தின் பயம் குரலின் நடுக்கமாக ஒலித்தது.

'நாட்டினரைக் காட்டிக் கொடுக்கும் வேலையில் ஈடுபடாதீர். உமது தலையில் வினையாக விடியும் அது. இதை நினைவில் நிறுத்தும்! இதைச் சொல்வதற்காகவே வண்டியை நிறுத்தினோம். இனி நீர் போகலாம்' என்று கூறி, பிடியை விட்டுவிட்டான் அவன்

வண்டி நகர்ந்தது. 'தப்பித்தோம் பிழைத்தோம் என்று குதிரைகளை வேகமாக விரட்டத் தொடங்கினான் வண்டியோட்டி. தேவரின் இதயம் அதைவிட வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. குதிரைகளின் ஓட்டத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கும்படி கூறும் எண்ணம் அவருக்கு எழவேயில்லை.

வீடு சேர்ந்ததும் தான் வரகுணத் தேவருக்கு துணிச்சல் உண்டாயிற்று. ஆயினும் அவர் உள்ளத்தில்

கோபமும் ஆத்திரமும் கொதித்தன. இளம்வழுதி தன் வீட்டிலிருந்து நழுவி விட்டதைப் பெருஞ் செயலாக—தனக்கு மிகுந்த அவமானம் விளைவிப்பதாக-அமைந்தது பலர் நடுவில் தன்னை எடுத்தெறிந்து பேசியதும், வண்டியை மடக்கிச் சூளுரை கூறியதும் தான் என்பதை எண்ணி எண்ணிப் புகைந்தது அவர் மனம்.

'எங்கிருந்தோ வந்தான். கணத்துக் கணம் மிகுதியான வலிமை பெற்று வளர்கிறான்' என்றே தோன்றுகிறது. அவனை இன்னும் வளர விடுவது ஆபத்தையே விளைவிக்கும். விரைவில் ஒழித்துக்கட்ட ஆவன செய்ய வேண்டும்' என்று நினைத்தார் தேவர். 'கொல் உலை மூக்கின் அனல் மூச்சு உயிர்த்தார்.

## 9. சந்திப்பு

கண்கள் எத்தனை எத்தனையோ உருவங்களால் வசீகரிக்கப்படுகின்றன. ஆயினும் ஒருமுறை கண்ட ஒரு உருவை மீண்டும், மீண்டும் காணத் துள்ளுகின்றன அவை! கவர்ச்சிக்கும் சக்தி பெற்ற அந்த எழில் உருவம் எதிரே இல்லாதபோது, 'அது எங்காவது தென்படுமா?' என்று விழிகள் சுழல்கின்றன. அந்த உருவைக் கண்டு விட்டதும் தனி ஒளி பிறக்கிறது சுழலும் கண்களிலே!

மனம் எவ்வளவோ விஷயங்களைப்பற்றி எண்ணாமலில்லை. எனினும் எப்பொழுதோ கண் வழியே உள்ளத்தில் புகுந்துவிட்ட ஒரு உருவத்தைப்பற்றி எண்ணிக் கொண்டே இருப்பதில் அது தனி இன்பம் பெறுகிறது. மற்றவர்களிடம் காண முடியாத அழகை, இனிமையை, தனித்தன்மையை அந்த உருவத்திடம் காண்பதாக நினைவு வர்ணம் பூசுகிறது. அந்த நினைப்பே மிக்க சுவை உடையதாகி விடுகிறது!

ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது தான் இது. எந்தக் காலத்துக்கும்—எந்த இடத்தில் உள்ளவருக்கும்—பொது நியதிதான் இது.

இளம்வழுதியின் உள்ளமும் இதே நிலையில் தான் இருந்தது. 'கூரிய வாளினும்—ஒளி பொருந்திய பார்வையைத் தன்மீது வீசித் தனக்குத் தீராத நோயை உண்டாக்கி விட்ட அந்த அழகுக் கொடியை மறுபடியும் சந்திக்க வேண்டுமே?' என்று தவித்தது அது.

'காலையில் அரும்பிய' நோய் தான் அது 'பகல் எல்லாம் போதாகி' வளர்ந்த அது—அவன் உள்ளத்தின் வேறு உணர்ச்சித் தீயினால் கருகி மடிந்தாலும் மடிந்து போயிருக்கலாம். ஆனால் காலத்தென்றால் துணை புரிந்து மறுநாள் 'மாலையில் மலரும்'படி செய்து விட்டதே! ஆற்றங்கரையில் சந்தித்த சிற்றிடைச் சிங்காரியை மறுபடியும் கோயிலுக்குச் செல்லும் வழியில் கொண்டு வந்து நிறுத்திவிட்டதே!

நோய் புகுத்திவிட்ட மின்னல் பார்வை தானே' நோய் தீர்க்கும் மருந்து' ஆகவும் திகழ முடியும்? அவன் மனக் கொதிப்பை ஆற்றவல்ல அமுதமாக விளங்கக்கூடிய அவள் பெயரும் அமுதம் என்று தானே இனித்தது?

அவன் மனம் அவளை நாடியது அவன் விழிகள் அவளைத் தேடின. அவள் யார்? எங்கே இருப்பவள்? அவளை மறுபடியும் காண்பது எப்படியோ?'—உணர்வின் அலைகள் ஒன்றின்பின் ஒன்றாக எழுந்து மோதின அவன் உள்ளப்பரப்பிலே. அதன் பயனாகப் பெருமூச்சுதான் விம்மி, விம்மி வடிந்தது.

யவனனிடமிருந்து அந்த அழகுப் பூங்கொடியைப் பாதுகாத்ததன் பிறகுதொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களின் புதுமையினாலும், அவை எழுப்பிய உணர்வுத் துடிப்புகள்

காரணமாகவும் இளம்வழுதியின் உள்ளத்தில் அவள் நிழ லாடாமலிருந்தாள். பின்னர் அமைதி ஏற்பட்டதும், கலங்கிக் குழம்பிய நீர்ப்பரப்பில் தெரியாமல் பதுங்கிய சந்திர பிம்பம், குழப்பம் ஒடுங்கியதும் மிகத் தெளிவாகத் தென்படுவது போலவே, அவளுடைய உருவம் 'பளிச்'சென ஒளிர்ந்தது குறுகுறுக்கும் கருவிழிகளும், புன்னகை மலரும் செவ்விய உதடுகளும், குமிழ்நாசியும். குழிவுபடி யும் வழுவழுப்பான கன்னங்களும், காவிய ஏடு போன்ற நெற்றியும், மேகக் கற்றைகள் போன்ற கூந்தல் சுருள் களும் எதிர் நின்று வதை செய்வனபோல் அவன் நினை வில் பசுமையாய் எழுந்தன.

மாமூலனாரைப் பற்றியும் மங்கையர்க்கரசி பற்றியும், சாத்தன் கணபதி செய்த உதவி பற்றியும் அவன் எவ் வளவோ சிந்திக்க வேண்டியிருந்தது. ஆலோசனைக் கூட் டத்தில் பேசப்பட்ட எண்ணங்களை அவன் தனித்திருந்து அலசி ஆராய வேண்டியிருந்தது அக்கூட்டம் தந்த புத்துணர்வோடு, பெரு மிடுக்கோடு வெளியேறிய அவன் பாதையில் வலிய வந்து குறுக்கிட்ட வரகுணத் தேவரைப் பற்றியும், அவருடன் வம்பு செய்ததால் இனிமேல் விளை யக் கூடிய ஆபத்துகள் பற்றியும் அவன் நிதானமாக எண் ணிப் பார்க்கத்தான் வேண்டும். எண்ணிப் பிரித்துத் திட்டமிடுவதற்கா விஷயங்கள் இல்லாமல் போயின இளம் வழுதியின் மனக்குகையிலே?

ஆனால், அவனது அறிவுத் துடிப்புக்குத் திரையிட்டு விட்டது உணர்ச்சிகளில் எல்லாம் மிகுந்த வலிமைபெற்ற உணர்வு. இரவும், தனிமையும் அவ் உணர்வுத் தீயைத் தூண்டி விட்டன. ஆகவே அவன் எண்ணத்தில் அவளே நின்றாள். அவன் கனவில் அவளே சிரித்தாள். அவ னுடைய ஏக்கமேயானாள் அழகி அமுதவல்லி!

அவள் எங்கிருப்பாள் என்பது மட்டும் தெரியுமானால், அவன் நள்ளிரவு என்று கருதமாட்டான்; எதிர்ப்படக் கூடிய தடைகள், இன்னல்கள் எதையுமே பொருட்படுத்த மாட்டான்! காதல் எனும் வில் உந்திவிட்ட அம்பாக மாறி அவன் நேரே விரைந்தோடித் தனது ஆசையின் எல்லையாக விளங்கிய அழகியைத் தொட்டு விடுவானே? அவள் இருப்பிடம் தெரியாததுதானே பெரிய தடையாகி விட்டது இப்போது?

நினைவின் நிழலாகப் பூத்துக்குலுங்கிய அமுதம் அவன் கனவின் உயிராகி, உணர்வில் விளையாடி, அதிகாலையிலேயே அவனுக்கு விழிப்பு புகுத்திவிட்டாள்!

முந்திய தினம் போலவே அன்றும் வைகறை வேளையில் ஆற்றை நோக்கிச்சென்றால், அவளைக் காணமுடியும் என்று அவன் மனம் ஆசை காட்டியது. அவன் 'போகலாமா வேண்டாமா?' என்று ஒரு கணம் தயங்கினான். ஆசை அவனை இழுத்துச் சென்றது. அவ்வாறு செல்லும் போது அவனுக்கு ஒரு வருத்தம் ஏற்படத்தான் செய்தது. 'அமுதவல்லி அங்கு தனியாக வரமாட்டாளே; அவளுடன் மற்றும் பல பெண்களும் வருவார்கள் அல்லவா?' என்ற நினைப்புதான் அதற்குக் காரணம்.

ஆனால் அன்று அவனுக்கு நல்ல வாய்ப்பாகவே அமைந்தது. அமுதவல்லி தோழிகள் சூழ வரவில்லை. ஒருத்தி துணை வர அழகு மயிலென அசைந்து வந்தாள் அவள். தூரத்தில் கண்டபொழுதே அவன் உள்ளம் உவகையால் நிரம்பியது. அவள் முகம் இனிய தாமரைபோல் மகிழ்வால் மலர்ந்தது. அவளும் அவனைப்பற்றி எண்ணிக் கொண்டேதான் இரவுப்பொழுதை ஓட்டி அடைத்திருக்கிறாள் என்பதை அவள் முகமலர்ச்சியும், விழிகளின் தாவுதலும் காட்டிக் கொடுத்தன!

அவனுடன் வந்த துணைகூட முதல் நாள் மாலை நேரத்தில் அவளோடு கோயிலுக்குச் சென்றவள்தான் என அறிந்தான் அவன். அவள் வேண்டுமென்றே பலருடன் நீராடக் கிளம்பாமல், அத் தோழியுடன் புறப்பட்டு வந்திருப்பாளோ என்று ஐயுற்றான் வழுதி

அமுதவல்லியின் செவ்விதழ்களுடே- மூன்றாம் பிறை போல் இளநிலவுப் புன்னகை தெரிந்தும், தெரியாதவாறும் இலங்கியது. அவளாகப் பேச்சு உதிர்க்க முன்வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. மேலும் இன்று அவ னுக்குப் பேசுவதற்கு உரிமையும் அவசியமும் இருநத தாகவே அவன் கருதினான்.

'நேற்று நீங்கள் இரண்டு பேரும் விபத்து எதுவும் இல்லாமலே வீடு சேர்ந்திருப்பீர்கள் என்று நினைக் கிறேன்' என்றான் இளம்வழுதி.

மகிழ்வும் நாணமும் கொண்ட அமுதம் வெறுமனே தலையசைத்தாள். அவள் தோழி 'ஆமாம்' என்றாள. 'நீங்கள் குறுக்கிட்டிராவிட்டால் எங்களுக்கு என்ன நேர்ந் திருக்குமோ! நல்ல வேளை நீங்கள் காப்பாற்றினீர்கள்' என்றும் சொன்னாள்.

'வீடு போய் சேருகிறவரை எங்களுக்கு ஒரே பயம் தான்! என்று மென் குரலில் பேசினாள் அமுதம். 'இன்பத் தேன்? நனைத்தது இளம் வழுதியின் செவிகளை!

'அதற்குப் பிறகும்கூட அமுதத்துக்கு பயமாவது பயம்!' என்று குறும்பாகப் பேச்செடுத்தாள் தோழி.

'பேசாமலிரு!'' என்று விரலால் வாய்ப் புதைத்துச் சைகை செய்தாள் அமுதவல்லி.

'பயம் ஏன்?' என்று கேட்டான் அவன்.

'நமக்கு உதவிபுரிய வந்தவர் என்ன ஆபத்தில் சிக்கிக் கொண்டாரோ! களப்பிரர்கள் பொல்லாதவர்கள் ஆயிற்றே! தனியே அகப்பட்டுக் கொண்டு அவர் என்ன பாடு படுகிறாரோ என்றுதான். வேறு எதற்காக பயப் படப் போகிறாள் அவள்? அல்லது, யாருக்காகக் கவலை கொள்ளப் போகிறாள்?' என்று கூறிச் சிரித்தாள் தோழி

'பேசாமல் இரடி!...ஐயோ, பேசாமலிரேன்!' என்று அமுதம் தொடர்ந்து தொல்லைப்படுத்தியதையும் தோழி பொருட்படுத்தவில்லை. சிரித்துக்கொண்டே சொன்னாள்

'இரவு முழுவதும் இவளுக்குத் தூக்கமே கிடையாது. களப்பிரர்கள் வெறித்தனமாக ஆடி ஓடி அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தார்களா? ஐயோ பாவம், அவர் எப்படித்தான் தப்புவாரோ—எங்கே போய் மறைந்திருப் பாரோ என்று வருத்தப்பட்டு வாடித் தவித்தாள். தூங்க லாம் என்று கண்ணை மூடினால், மனம் தூங்கவா செய் கிறது? காப்பாற்ற வந்தவரை அனேக களப்பிரர்கள் துரத்துவது போலவும், குதிரை வீரர்கள் வந்து விரட்டு வது போலவும், சண்டை போடுவது போலவும் கனவுகள்.. ஆனால் ஒன்று... எந்த நிலைமையிலும், நெருக்கடியிலும் வெற்றி அந்த வீர இளைஞருக்குத்தான் இல்லையா?' என்று கேட்டபடி தோழி அமுதத்தைப் பார்த்தாள்.

வெட்கமும் மகிழ்ச்சியும் பொங்கிப் பரவ, முகம் தாழ்த்தி நின்ற தலைவி 'போடி!' என ஒற்றைச் சொல் சிந்தினாள்.

அவள் நின்ற தோற்றமும், தலையை ஆட்டிச் சொல் உதிர்த்த விதமும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் காந்தக் காட்சிகளாகவே விளங்கின அவனுக்கு. அவன் ரசித்துச் சிரித்தான்! 'பின்னே அமுதவல்லி இப்போ பேசாமலே நிற்கிறாளே?' என்றான்.

'உன் பெயர் கூட அவருக்குத் தெரிந்திருக்கிறதடீ! அப்புறமென்ன?' என்று கெண்டை பண்ணினாள் தோழி.

அமுதவல்லியின் அகன்ற கண்களின் சுடர்மணிகள் விழிக்கடையில் ஒதுங்கின அவனைக் கண்டு மகிழ்வதற்காகத்தான். உள்ளத்தில் விம்மிய மகிழ்வுப் பேரலையின் சிறு நுரைபோல் இளநகை ஒதுங்கியது அவள் இதழ்க் கடையில். எனினும் அவள் முணமுணத்தாள்.

'நேரமாகிறது...எல்லோரும் வந்து விடுவார்கள், வா'

அவள் நகர்ந்தாள். தோழியும் நடந்தாள்.

'உன் பெயர் எனக்குத் தெரியாதே? அதைச் சொல்ல வேண்டாமா?' என்றுவிளையாட்டாகக்கேட்டான் வழுதி

'தெரிய வேண்டிய பெயர் தெரிந்து விட்டதல்லவா? அது போதும்' என்று சொன்னாள் தோழி

திரும்பிப்பாராமலே நடந்தாள் அவள். அமுதவல்லி திரும்ப நோக்கியவாறே போனாள். 'யாராவது வந்து விடப் போகிறார்கள்!' என்று அவளுடைய தோழி அவளுக்கு எச்சரிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது இப்பொழுது.

அவ்விதம் எச்சரிப்பதற்கு அருகில் எவரும் இல்லாததனால் இளம்வழுதி அமுதவல்லி மீது வைத்த விழிகளை வேறுபக்கம் திருப்பாமலே நின்றான். அவள் பின் சென்ற மனதைச் சுண்டி இழுக்கும் நினைப்பற்றவனாகவே நின்றான். அவள் காட்சிஎல்லையிலிருந்து மறைந்துவிட்ட பிறகும் கூட அத்திசையிலேயே பார்வை பதித்து நின்ற அவனை விழிப்புறச் செய்வதற்கென்றே வருவது போல் பேரோசை ஒன்று எழுந்தது. நெருங்கி வருவது போல் ஒலித்தது.

முதலில் தெளிவற்றுக் குழம்பிய ஒலி அலைகளாக மிதந்து வந்த ஓசை சிறிது சிறிதாகப் புலனாகியது பலப் பல குதிரைகள் வேகமாக அடிபெயர்ந்து முன்னேறுவதாக உணர்ந்தான் அவன். அவனுடைய அறிவின் குரலுக்குக் கீழ்படிந்து, இளம்வழுதி பாதையைவிட்டு விலகி மரங்கள் நின்ற ஒரு பகுதியில் புகுந்து மறைவாக நின்றான்.

தரையிலிருந்து பொங்கியெழும் புழுதி மேகப்படலம் போல் கவிய, அதை ஊடுருவியவாறு குதிரைகள் பாய்ந்தன. தேர்ந்தெடுத்த மிடுக்கான குதிரைகள் மீது எடுப்பாக வீற்றிருந்த வீரர்கள் களப்பிரர்கள்தான் என்பதை எவரும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இளம்வழுதிக்கு முதலிலேயே அது விளங்கிவிட்டது. ஆனால் 'இவ்வளவு அதிகாலையில் அவர்கள் எங்கே கிளம்பிவிட்டார்கள்?' என்பதை விளக்குவதற்கு யாருமில்லையே என வருந்தினான் அவன்

சாத்தன் கணபதியைக் கண்டு பேசி, ஏதாவது ஆலோசனை செய்யலாம் எனும் எண்ணத்தோடு அவன் வேகமாக நடந்தான் பூங்குடி ஆச்சியின் இருப்பிடம் சேர்ந்தபோது அவனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. அங்கு அவனது நண்பன் இல்லை. 'அவன் எங்கே போயிருக்கிறான், எப்பொழுது திரும்பி வருவான் என்று தன்னிடம் சொல்லவில்லை—தனக்குத் தெரியவும் தெரியாது' என்று மீனாட்சி ஆச்சி அறிவித்தாள்

அடுத்து அவனுக்கு மாமூலனாரின் நினைவுதான் வந்தது. அவரைக் காண்பதற்காக இளம்வழுதி சென்றான். வழி நெடுகிலும் பரபரப்பு மிகுந்திருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. இரண்டு மூன்று பேராக நின்று ஜனங்கள் கூடிப்பேசுவதும், சந்தேகம் எழுப்பக் கூடியவர்களைக் காணும்போது தத்தம் அலுவல்மீது

செல்வோர் போல் பிரிந்து போவதும் அவன் கவனத்தில் பதிந்தன. குறிப்பிடத் தகுந்த ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்கிறது—அல்லது, முக்கிய நிகழ்ச்சிகள் எழுவதற்குரிய அறிகுறிகள் தோன்றியிருக்கலாம்—என்று எண்ணினான் அவன்.

யாரிடமாவது பேச்சுக் கொடுத்து என்ன விஷயம் என்று அறிய வேண்டும் எனும் ஆசை அவனுக்கு எழுந்தது இருப்பினும் அதைச் செயல்படுத்த முனையவில்லை அவன் மற்றவர்கள் அவனைச் சந்தேகிப்பதாகத் தோன்றியது அவனுக்கு. எனவே அவன் எவரிடமும் பேசுவதற்காக நிற்காமல் மாமூலனார் வீடு தேடி நடந்தான்.

அவர் வீடு பூட்டியே கிடந்தது அங்கும் ஏமாற்றமே எதிர்ப்படவும் அவன் உள்ளத்தில் சிறிது வருத்தம் எழுந்தது பிறகு குறிப்பற்று, திட்டம் எதுவுமற்று, கால் இழுத்துச் சென்ற வழியிலே நடந்தான் இளம்வழுதி.

அத்திருநகரிலே அவன் தனியன். அவ்வேளையில் அவனுக்குத் துணை நிற்பவர்கள் யாருமில்லை என்றே தோன்றியது தனது இதயத்துடிப்பை எதிர்காலத்தின் ஒளி நிரம்பிய செயலாக மாற்றுவதற்கு அவன் எவரெவர் துணையை நாடலாம் என்று எண்ணினானோ, அவர்கள் எல்லோரும் இறுதிவரையில் அவனோடு நிற்பார்களா; அவர்களை நம்பலாமா?' என்று அவனால் தீர்மானிக்க இயலவில்லை. அதற்காக அவன் மனம் தளர்ந்து விடவுமில்லை

அவனைத் தனி வழியிலே அனுப்பத் துணிந்த அவனுடைய அன்னை—நிகழ்காலத்தின் இருளை அகற்றி எதிர்காலத்திலே நாடு முழுவதும் பேரொளி பரப்புவதற்குத் தகுந்தவனாகத் தன் மகன் வளரவேண்டும் என்ற ஆசையோடு அவனுக்குப் பயிற்சிகள் பலவும் அளித்த நற்றாய்-அவனுக்கு அடிக்கடி போதித்திருந்தாள்:

வழுதி, உனது வீரம்தான் உனக்கு உறுதியான துணையாகும். உடல் வலிமையும், அறிவின் பலமும், உள்ளத்தின் உறுதியும்தான் உனக்கு இறுதிவரை துணை நிற்கக் கூடிய சக்திகளாகும். அவற்றை நம்பிச் செயல்புரிவாயாக!'

தன் தாயின் வார்த்தைகளை இளம்வழுதி மறந்தவனல்லன். மேலும், வீரத்துக்கு எத்தகைய மதிப்பு இருந்தது என்பதை அவனாகவும் அறிந்து கொண்டிருந்தான். ஆகையால் அவன் உள்ளம் எளிதில் சோர்வு அடைந்துவிடாதுதான்.

இருமுறைகள் ஏமாற்றம் அடைந்த இளம்வழுதிக்கு அளவிலா ஆனந்தம் அளிக்க விரும்பியதுபோல் சந்தர்ப்பம் செயலாற்றியது.

அவன் எங்கெங்கோ அலைந்து திரிந்தபோது ஒரு வீதியில் ஒரு வீட்டின் சாளரம் ஒன்றிலே அவன் மனதுக்கினிய காட்சி பூத்தது. வியப்புடன் அவனையே கவனித்தபடி தோன்றிய அழகுமுகம் அமுதவல்லியினுடையது என்பதைக் கண்டு கொண்டதும் அவன் களிப்படைந்தான். உவகையுடன் அவ்வீட்டை அணுகும் வேளையில், சாளரத்துச் சுந்தர உதயம் திடீரென்று மறைந்துவிட்டது.

வாடிய அவன் முகம், மீண்டும் மகிழ்வால் மூழுதலரும்படி ஒரு வாசலில் தோன்றினாள் அமுதம் அவனை அழைத்தாள். அவனும் அவளோடு வீட்டின் பின்புறத் தோட்டத்தில் அடி எடுத்து வைத்தான்.

'உன்னை இவ்வேளையில் இப்படிச் சந்திக்க முடியும் என்று நான் எண்ணவேயில்லை' என்று அவன் சொன்னான்.

அவள் மகிழ்வு குலுங்கத் தலையசைத்தாள். 'நானும் நினைக்கவில்லை. நீங்கள் தனியாக இந்நகர வீதிகளில் திரிவது ஆபத்து இல்லையா?' என்றாள்.

'எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளும் பண்பு என்னுடையது. அஞ்சியிருந்தால் பொட்டுப் பூச்சி போல் இருளில் ஒண்டிக்கிடக்க வேண்டியதுதான்' என்று அவன் கம்பீரமாக மொழிந்தான்.

பெருமையும், வியப்பும் கலந்த பார்வையைப் பரிசளித்தாள் அவள். அவனிடம் எவ்வளவோ பேசவேண்டும் என்று தவித்தது அவள் மனம். ஆனால், நாணம் அவள் உதடுகளுக்குப் பூட்டு போட்டுவிட்டது! அவளது எழில் விழிகள் அவன் முகத்துக்குச் சென்றன அங்கேயே தங்கி, ஒளி தெறிக்கும் அவனுடைய கண்களைப் பார்வையால் தொட்டு இன்புற வேண்டும் என்று துடிப்பது போல் இமைகள் படபடத்தன. ஆயினும், அத்துணிவு இல்லாதவை போல் அவை வேகமாய்த் தரை நோக்கிப் பாய்ந்தன!

'சட்'டென எண்ணிக் கொண்டவள் போல் அவள் பேசினாள்: 'உங்களைக் காண என் தாய் மிகுந்த மகிழ்ச்சி அடைவாள். அவளை அழைத்து வருகிறேன்...''

அவன் வியப்புடன் கேட்டான்! 'நீ என்னைப் பற்றி உன் பெற்றோரிடமும் சொல்லி விட்டாயா?' என்று.

'ஊங்' என ஒயிலாகத் தலையசைத்தாள் அவள். நீரூற்றுப் போல் குமிழியிட்டுப் பொங்கிவந்த சிரிப்பை அடக்க முடியாதவளாய் முறுவலித்தாள். 'உதவி புரிந்தவர்களை மறந்துவிட முடியுமா? எனக்குக் காலம் அறிந்து உதவி செய்தவர்களைப் பற்றி நான் பேசாமல் இருக்க முடியுமா?'' என்றாள். மோகனமாய்ச் சிரித்தபடி, அவன் இதயத்தில் தைக்கும் பார்வை ஒன்றை வீசிவிட்டு, உள்ளே ஓடிப்போனாள் அமுதவல்லி!

# 10. எதிர்பாராதது !

''களப்பிரர்கள் வீழ்ச்சியுறுவதற்குரிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!'

வருவது கண்டு கூறும் கூர்த்த மதியினர் போல் திடமான குரலில் அழுத்தமாக அறிவித்தார், புலவர் மாமூலனார்.

'அதற்குரிய நிமித்தங்கள் ஏதாவது தோன்றி உள்ளனவோ?' என்று பணிவுடன் கேட்டாள் மங்கையர்க்கரசி.

சிந்தனையில் ஆழ்ந்துவிட்டவர்போல் சிறிதேமோனத்திலிருந்த புலவர் அவள் பக்கம் திரும்பி 'ஊம்?' என்றார்.

'ஆள்வோர் அழியும் காலம் வருகிறது என அறிவிக்கப் பல குறிகள் தோன்றும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வால் வெள்ளியின் தொடர்ச்சியான தோற்றம், அச்சுறுத்தும் நில நடுக்கம்...'

மங்கையர்க்கரசியின் பேச்சைக் கேட்டுச் சற்றே நகை புரிந்தார் அவர். 'களப்பிரரின் வீழ்ச்சியை அறிவிப்பதற்கு அத்தகைய புறச்சான்றுகளும் தேவையோ? ஆள வந்தவர்கள் அகந்தை மிகக்கொண்டு வெறித்தனமாகச் செயலாற்றத் துணிந்தாலே, அவர்களுடைய வீழ்ச்சிக்கு அடிகோலியாயிற்று என்று தானே பொருள்? மக்கள் நலனைக் கருத்திலே கொள்ளாது, தமது நன்மைகளைப் பெருக்கும் செயல்களில் ஈடுபட்டு, மதிகெட்டு, மண்ணகத்தோருக்குத் தீமை புரிவதிலே இன்பம் காணத் தொடங்கி விட்டால், அம்மமதையாளர்கள் மண்ணைக் கவ்வும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றுதானே நாம் கொள்ள வேண்டும்?"

மங்கையர்க்கரசி மறுத்துரைக்கவில்லை. ஆயினும் தனது ஐயத்தைப் போக்கிக்கொள்ள விரும்பியவளாய்

அவள் வினவினாள் : 'களப்பிரரைப் பற்றி நீங்கள் திடீரென்று இவ்விதம் பேசுவதற்கு முக்கிய காரணம் ஏதேனும் இருக்குமல்லவா?' என்று.

'அவர்கள் அழிவடையவர் என்று கூறும் ஆயிரம் குறிகளை அவர் தம் செயல்களிலும் பண்புகளிலுமே காண முடிகிறதே? சயமைக் குணங்கள் எல்லாம் அவர்களிடம் குடிகொண்டு விடவில்லையா என்ன? ஆட்சிவெறி தலைக்கேறியவர்களாய் மித மிஞ்சிக் குடிப்பதும், கூத்திடுவதும், மக்களை வேட்டையாடுவதும், நாட்டுக்கு நல்லது கருதாமல் நாட்டினரை வறியராக்குவதற்குரிய செயல்களையே புரிவதும், சிறுமைக் குணம் உடையவர்களை வெறியாட்டம் போட அனுமதிப்பதும், வலுவற்ற ஆட்சி முறைமையும், கொதிப்புறும் நாட்டு நிலைமையும் அவர்களுடைய சிதைவைப் பற்றி எடுத்துச் சொல்லும் பறையொலிகள் அல்லவா?

மங்கையர்க்கரசி வாய்திறவாது தலையாட்டினாள். அவ்விருவர் கவனத்தையும் ஈர்க்கும் நோக்குடன் வெளியே யாரோ ஓசை எழுப்பியது அவள் செவிகளில் விழவும், 'வரலாமே!' என்று குரல் கொடுத்தான் அவன். 'வரப் போவது யாரார்? என முன்பே அறிந்து வைத்திருந்தவள் போல, முகமலர்ச்சியோடு 'அவர்களும் வந்துவிட்டார்கள் என்று கூறினாள்.

அவள் பேசி முடிக்கவும், சாத்தன் கணபதி இளம் வழுதியை அழைத்துக்கொண்டு உள்ளே வரவும் சரியாக அமைந்தது. 'ஏன் இவ்வளவு நேரம்?' என்று அவள் சாத்தனை விசாரித்தாள்.

'வழுதி பூங்குடி ஆச்சி வீட்டில் காணப்படவில்லை. அங்கு அவர் வந்து சேருவதற்குள் மாலை ஆகிவிட்டது வழுதி எங்காவது வலையில் சிக்கியிருப்பாரோ, அல்லது

வெறியர்கள் எவரோடாவது வம்பு இழுத்து விபத்துக்கு உள்ளாகியிருப்பாரோ என்ற கவலையோடு காத்திருந்தேன்...' என அவன் கூறினான்.

மங்கையர்க்கரசியின் அருள் நிறைந்த விழிகள் இளம் வழுதியைக் கனிவுடன் நோக்கின. அன்பு ஒளி வீசும் அவள் முகத்தில் தாயின் பெருமித நிறைவும் மகிழ்வும் தவழ்ந்தன. 'வலியச் சென்று வம்பை இழுத்துப் போட்டுக் கொள்ளாமலே இருக்க முடியாதோ உன்னால்?'' என்று கேட்டாள். அவள் குரலில் கண்டிப்போ, குறை கூறலோ, கோபமோ தொனிக்கவில்லை, பரிவு கலந்த ஒரு குழைவே ஒலி செய்தது.

இளம்வழுதி சிரித்தபடி முகம் தாழ்த்தினான் 'இன்று நான் அப்படி எதுவும் செய்யவில்லை சாத்தனை சந்திக்க முடியவில்லை. புலவர் அவர்களையும் வீட்டில் காண இயலவில்லை. அதனால் வீதிகளில் சுற்றி வந்தேன். அறிமுகமான ஒருவர் வீட்டில் விருந்துண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது' என்றான்.

'அது யாரோ?'

அவள் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று குழம்பினான் அவன். வெட்கமும், மகிழ்வும் அவனைப் பற்றிக் கொண்டன.

அவன் குழப்பத்தைக் கவனித்த மங்கையர்க்கரசி குறுநகை பூத்தாள். 'வேண்டாம்; சொல்ல விருப்பமில்லாததை நீ எங்களுக்கு அறிவிக்க வேண்டாம்' என்றாள்.

'விழிப்புடன் நடந்து கொண்டால் சரி... நாம் ஆலோசிக்க வேண்டியது பற்றிச் சிந்திப்போம்' என்று குறுக்கிட்டார் மாமூலனார்.

'சாத்தன் கணபதி தன்னைக் கொண்டு வந்து சேர்த்த இடம் மாமூலனாரின் வீடல்ல; முந்திய இரவில் ஆலோசனை செய்வதற்காகப் பலரும் குழுமியிருந்த

மடாலயமும் அல்ல; முதல் தினம் தான் மறைந்திருப்ப தற்கு வசதியளித்த மங்கையர்க்கரசியின் தனியிடமும் அல்ல' என்பதை இளம்வழுதி உணர்ந்து விட்டான். அழகும் குளுமையும் நிறைந்த சூழலில் தனித்திருந்த அந்த வீடு சகல வசதிகளையும் பெற்ற இடமாகவே தோன்றியது. அதுவும் மங்கையர்க்கரசிக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என அவன் எண்ணினான்.

அந்த அம்மையாரைப் பற்றித் தெளிவாகவும் விவரமாகவும் அவன் எதுவும் அறிந்துகொள்ள இயலவில்லை. இன்னும் அவளைக் குறித்துக் கேள்விகள் எடுக்க அவன் வாய் திறக்க வேண்டியதுதான்; உடனே சாத்தன் ஊமையாகி விடுவான். நண்பனின் இந்தப் போக்கு விந்தையானதாகப்பட்டது அவனுக்கு. மீனாட்சி ஆச்சியோ, 'அப்பிராட்டியாரைப் பற்றிதனக்கு எதுவுமே தெரியாது' என்று முதலிலேயே அழுத்தமாக அறிவித்து விட்டாள். அப்புறம் அவன் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது?

'சரி தெளிவாகிறபோது தானாகவே தெளிவாகட்டும். அவ் அம்மையார் மதிப்புக்குரியவர்; மிகுந்த செல்வாக்கு உடையவர் என்று புரிகிறது. இவ்வளவு போதும்' என அவன் தன்னையே தேற்றிக் கொண்டான்.

பலரது போற்றுதலுக்கும் உரியவளான அவள் மாமூலனாரிடம் பக்தி செலுத்தி வந்தாள் என்பதும் அவனுக்குப் புரிந்திருந்தது. அவர் பெரியவர்; அறிவில் உயர்ந்தவர்; கல்வியில் சிறந்தவர்; நற்குணங்களின் உறைவிடம்; தமிழ்ப் பற்றும், தமிழகத்தின்மீது அன்பும், தாய் நாட்டின் விடுதலையில் அடக்க முடியாத ஆர்வமும் கொண்டவர்—இவற்றால் எல்லாம் அப்பிராட்டியாருக்கு அந்தப் புலவரிடம் மதிப்பு ஏற்பட்டிருக்கும் என்று அவன்

கருதினான். இக்காரணங்களினால் தானே அவர்பால் அவனுக்கும் பக்தியும் பாசமும் ஏற்பட்டிருந்தன?

மாமூலனார் சொன்னார்: 'களப்பிரர்கள் அச்சம் கொண்டுவிட்டார்கள். அது தெளிவு. இப்பொழுது அவர்களுக்குப் போதாத காலம். மதுரையில் மட்டுமல்ல. பொதுவாகவே அவர்கள் பலவாறு சோதிக்கப்பட்டு வருகின்றனர். முந்நூறு-முந்நூற்றைம்பது ஆண்டுகளாகத் தட்டிக் கேட்க எவருமற்ற சூரர்களாக வாழ்ந்து பழகிவிட்டார்கள் அவர்கள். அதனால் சோம்பலும், மிதமிஞ்சிய சுகபோக ஆசையும் அவர்களிடம் உறைந்துள்ளன. கயமையும் கோழைத்தனமும் குடிகொண்டுள்ளன. பல்லவர்கள் அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். இது தகுந்த தருணமாகும். பேராற்றல் படைத்த பெருவீரர்களைத் திரட்டிக் கொண்டு வீரத்தோடு அவர்களை எதிர்த்தால் அவர்கள் வீழ்வது திண்ணம். இளம்வழுதி! இதை நீ நினைவில் நிறுத்திக்கொள்வது நல்லது. தனியனாய் இம் மதுரை மூதூரில் முயற்சி செய்வதனாலோ உன் குறிக்கோள் நிறைவேறி விடாது. நாட்டினருக்கு ஆட்சியினர் மீது வெறுப்பு பிறந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு வீரர்களைக் கூட்டு. உனது வேலை இப்போது இங்கு இல்லை!'

இளம்வழுதி வாய் திறவாது நின்றான். வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் பெரியவரான மாமூலனாரின் கூற்று ஆணித்தரமான உண்மை-நல்ல வழி காட்டக் கூடியது—என்றே அவன் உள்ளம் அறிவுறுத்தியது.

'சாத்தன் இன்று இரவில் இங்கிருந்து புறப்படுகிறான். நீயும் அவனோடு போ. நான் திருமுகம் ஒன்று தீட்டித் தருகிறேன். அதை யாரிடம் சேர்ப்பிக்க வேண்டுமோ அவரிடமே அவன் உன்னை இட்டுச் செல்வான். அவர் உனக்குத் துணை புரிவார். அதன் பிறகு செய்ய வேண்டு

வனை குறித்தும் அவரே வழி காட்டுவார்' என்று மங்கை யர்க்கரசி அறிவித்தாள்.

'நீங்கள் செய்யும் உதவியை நான் மறக்கமாட்டேன்' என்றான் வழுதி.

'பயணத்துக்குத் தயாராகலாம். உனக்குத் தேவை யான குதிரையைச் சாத்தன் பிறகு கொண்டு வருவான்' என்றும் அவள் தெரிவித்தாள்.

இளம்வழுதி விடை பெற்றுக் கொண்டு வெளியேறி னான். அவர்களுடைய செயல்கள் பலவும் மர்மங்கள் நிறைந்ததாகவே தோன்றின அவனுக்கு. அந்த அம்மை யார் காட்டும் வழியைப் பின்பற்றுவதா கூடாதா என்ற தயக்கமும் உண்டாயிற்று.

முடிவில், 'வருவது வரட்டும். எவ்வழியைப் பின் பற்றினாலும் நமக்குப் பெரும் நஷ்டம் வந்துவிடப் போவ தில்லையே? உயிருக்காகப் போராட வேண்டிய நெருக்கடி யான கட்டங்கள் எதிர்ப்படலாமோ? வைர நெஞ்சும் எஃகு போல் உறுதி பெற்ற கரங்களும் இல்லாமலா போயின நம்மிடம்!' எனத் தேர்ந்தான் அவன். கவலை யற்றுச் சென்றான்.

திடீரென்று அவன் கால்கள் தயங்கின. அவனுக்கு முன்னால் சிறிது தொலைவில் வேகமாகச் சென்றுகொண் டிருந்த ஆள்தான் அவன் நடைக்குக் கட்டுப்பாடு விதித் தது. அவனுக்குத் தெரிந்த—ஆரம்பம் முதலே அவனைச் சந்தேகிக்கத் துணிந்த—துறவி அடியார்க்கு நல்லான்தான் போய்க் கொண்டிருந்தான்.

அவன் தன்னைப் பார்க்கவில்லை என உணர்ந்து கொண்ட இளம்வழுதி அவனைப் பின் தொடர்ந்து செல்ல

லாமே என்று எண்ணினான். துறவியை முன்னே செல்ல விட்டுப் பின்னே மெதுவாக நடந்தான்.

துறவி வீதித்திருப்பம் ஒன்றில் திரும்புவது தெரிந்தது இளம்வழுதியும் வேகமாக நடந்து, அங்கு திரும்பினான். ஆனால் முன்சென்ற துறவி மாயமாக மறைந்து விட்டது போல் தோன்றியது!

'அவன் அப்படி எங்கு மறைந்திருப்பான்' என்ற சந்தேகம் வழுதிக்கு எழுந்தது. ஒன்றும் தெளிவாக வழியில்லை. இனி எத்திசை செல்வது என்று தீர்மானிக்க இயலாதவனாய் அவன் அவ்விடத்திலேயே நின்றான்.

நேரேமுன்சென்றால் வரகுணத்தேவரின் மாளிகையை அடையலாம்.. அங்கே செல்வது ஆபத்து என்று அவன் மனம் எச்சரித்தது அந்த இடத்திலேயே நிற்பதுகூட ஆபத்துதான் என்று அவனுடைய உள்ளுணர்வு கூறியது. வந்த வழியே திரும்பிநடந்து, பூங்குடி ஆச்சி வீடு சேர்ந்து, சாத்தனின் வருகைக்காகக் காத்திருப்பதே அறிவுடைமை யாகும் எனத் தீர்மானித்தான் அவன்.

ஆனால், அவன் நினைத்தது நடைபெற வழியில்லாமல் போயிற்று.

அந்தி உலா கிளம்பியிருந்த குடிகாரக் களப்பிரர்கள் சிலர் அவ்வழியே வந்தார்கள். அவன் விலகி வழிவிடாமல் நடுப்பாதையில் நிற்பதைக் கண்டு வெகுண்டார்கள். ஒருவன் அவனை அதட்டி வசை பாடவும் இளம்வழுதி கோபம் கொண்டு அவன் முகத்தில் ஓங்கி அறைந்தான். மற்றவர்கள் வழுதியைச் சூழ்ந்துகொண்டார்கள்.

இளம்வழுதி தீரமாகப் போராடினான். ஆயினும், அவர்கள் பலர். அவர்களிடையே அவன் தாக்குதலும்

தற்காப்பும் வலுவற்றுப் போயின. அவர்கள் அடித்த அடியால் நிலைகுலைந்து தள்ளாடிக் கீழே சாய்ந்தான் அவன்.

அவன் இறந்துவிட்டான் என்றே கருதினர் குடி வெறியர்கள். அந்நேரத்தில் மாளிகைப் பக்கமிருந்து வர குணத்தேவரின் குதிரை வண்டி வருவது அவர்கள் பார்வையில் பட்டது.

'இவன் தேவரின் ஆளாக இருந்தாலும் இருக்குமோ?' என்ற ஐயம் அவர்களுக்கு எழுந்தது. 'அப்படியிருந்தால் தேவரின் பார்வையில் படாமல் தப்புவதே நல்லது' என்று தீர்மானித்து அவனை அப்படியே நடுத்தெருவில் விட்டு விட்டு வீரர்கள் ஓடி மறைந்தார்கள்.

அவசரமற்ற கதியிலே வந்தது வரகுணத்தேவரின் வண்டி. இளம்வழுதி விழுந்து கிடந்தஇடத்தை நோக்கியே வந்து கொண்டிருந்தது அது!

# 11. மற்றுமொரு அன்னை

களப்பிரர்களால் தாக்கப்பட்டு மயங்கி விழுந்த இளம்வழுதியை நோக்கி வந்த வண்டியில் வரகுணத்தேவர் தான் இருக்கிறார் என்று குடிகாரர்கள் நம்பினார்கள். அதனாலேயே, அடிபட்டு விழுந்தவனை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் அவர்கள்.

மிடுக்கு நிறைந்த குதிரைகள் ஒயிலாக இழுத்து வந்த அந்த அலங்கார வண்டி மெதுவாக முன்னேறியது. பாதை நடுவில் ஒருவன் கிடப்பதைக் கவனித்த வண்டிக்காரன் 'ஐய்யய்யோ!' என்று பதறி, வண்டியை நிறுத்தினான்.

உள்ளேயிருந்து 'என்ன?' என்ற கேள்வி பிறந்தது.

'யாரோ நடுத்தெருவிலே விழுந்து கிடக்கிறார்கள்!' என்றான் அவன்.

'குடித்து விட்டு மயங்கிக் கிடப்பான்' என்ற பதில் எழுந்தது, பெண்ணின் மென்குரல் அது.

'இல்லை அம்மா, வண்டி அங்கே வரும்போது, இந்த இடத்தில் ஏதோ குழப்பமாகத் தெரிந்தது. பலபேர் ஒருவனைத் தாக்குவது போல்...' என்று மெதுவாகப் பேசலானான் அவன்,

'களப்பிரர்களா?' என்று கேட்ட குரலில் பதட்டமிருந்தது. ஒரு கரம் வண்டியின் பூந்திரையை விலக்க, வெளியே ஒரு முகம் எட்டிப் பார்த்தது. அவ்வாறு நோக்கியவள் வரகுணைத்தேவர் மகள் திலகவதியேயாவள்.

அவள் பார்வை தெருவில் கிடந்தவன் மீது படிந்தது. நெற்றியில் ரத்தம் வடிய, அவன் முகம் பளிச்செனத் தெரிவதை அவள் கவனித்தாள். 'ஆ, அவரா?' என்று பதறியது அவள் உள்ளம் 'அவரே தான்! இளம்வழுதி. தான் அவள் நினைவு அவளை ஏமாற்றுவது கிடையாது.

'விழுந்து கிடப்பது களப்பிரன் இல்லையே!' என்றாள் அவள்.

'இல்லை அம்மா, நம்மவர் தான்' என்று முனங்கினான் வண்டிக்காரன்.

'பாவம்! கடுமையாக அடிபட்டிருக்கும் போல் தோன்றுகிறது. உயிர் இருக்கிறதோ இல்லையோ!' என்று தவித்தாள் அவள். 'கீழே இறங்கிப் பக்கத்திலே போய்ப் பாரேன்' என்று பணித்தாள்.

அவன் இளம்வழுதியின் அருகில் சென்று ஆராய்ந்தான். 'உயிர் இருக்கிறது அம்மா' என்றான்.

'அப்படியானால் அவரை மெதுவாகத் தூக்கி வண்டிக்குள்ளே படுக்கவை' என்று உத்திரவிட்டாள் திலகவதி.

வண்டிக்காரன் வியப்புற்றான், நிமிர்ந்து நின்று அவளை ஆச்சர்யமாகப் பார்த்தான். 'நம்ம வண்டியிலா அம்மா?' என்றான்.

'ஆமாம். பின்னே வேறே வண்டி எங்கே இருக்கிறது?' என்று தேவரின் திருமகள் கேட்டாள்.

'இது யாரோ...'

'அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நம்மைப் போன்ற ஒரு உயிர். ஆபத்தில் சிக்கி உணர்வற்றுக் கிடக்கிறவர்களுக்கு உதவி புரிய வேண்டியது நமது கடமை. வீணா யோசித்துக் கொண்டு நில்லாதே. அவரை எடுத்து வா'

திலகவதியின் மென்மையான பேச்சு திடமான கட்டளையாகவே தொனித்தது. அதற்குக் கீழ்ப்படிய வேண்டியது தானே அவன் கடமை?

வண்டிக்காரன் மறுபேச்சுப் பேசாமல், இளம்வழுதியைச் சுமந்து வந்து, வண்டியினுள் கிடத்தினான். தனது இடத்தில் அமர்ந்து மீண்டும் வண்டியைச் செலுத்தலானான்

திலகம் வண்டிக் கதவைச் சாத்தி அடைத்துக் கொண்டாள். வசதியான மூடு வண்டி அது. உள்ளே இருப்பவர்களை வெளியேயிருந்து எவரும் கண்டுகொள்ள முடியாது.

'ஐயாவுக்குத் தெரிந்தால் மிகவும் கோபிப்பார்கள்' என்று வண்டிக்காரன் முணுமுணுத்தான்,

'தெரிந்தால் தானே!... அவர்களுக்கு ஏன் தெரிய வேண்டும்?' என்று கேட்டாள் அவள். 'நீ வாயைத் திறவாமலிரு அது போதும். நான் சொல்ல மாட்டேன். இவரை இப்படியே நடுத்தெருவில் போட்டுவிட்டுச் சென்றால் என்ன ஆவது? திரும்பவும் வெறியர்கள் வருவார்கள். முன்பு தாக்கியவர்களோ, அல்லது வேறு குடியர்களோ வரலாம் வந்துஇவரைக் கொன்றுவிடுவார்கள். அதுதான் நடக்க வேண்டும். அதுவே நல்ல ஏற்பாடு என்பதுதான் உன் எண்ணமா?'

'இல்லை அம்மா உங்கள் விருப்பம் போலவே செய்யுங்கள்!' என்றான் அவன்.

வண்டி அவசரமற்ற கதியிலே சென்று கொண்டு தானிருந்தது. இப்பொழுது வண்டி ஓட்டி வந்தவன் வழக்கமாகத் தேவரோடு செல்கிறவன் அல்ல...வீரபுத்திரன் என்ற அந்த வேலையாளாக இருந்திருந்தால், இளம் வழுதியை உடனே இனம் கண்டு கொண்டு, வண்டியை விலக்கிச் சென்றிருப்பான் முந்திய நாள் இரவில் வண்டியை மறித்து வம்பு செய்தவனை-தேவரிடம் எதிர்த்து பேசியவனை-விளக்கொளியில் அவன் நன்றாகக் கவனித்திருந்தான்... இவனோ தேவரிடம் பயம் கொண்டிருந்த போதிலும், தேவர் மகளிடம் ஒருவித பக்தியே செலுத்தினான் என்று சொல்லலாம் எனவே இவன் திலகவதியின் சொல்லைத் தட்டி நடக்கவே மாட்டான்!

'அம்மா, வண்டியை எங்கே கொண்டு போக?' என்று விசாரித்தான் வண்டிக்காரன்.

விஷ்ணுசிம்மன் மனைவி பூங்குழலியைப் பார்ப்பதற்காகத்தான் திலகவதி கிளம்பியிருந்தாள். களப்பிரனான விஷ்ணுசிம்மன் மதுரை மாநகரில் சிறப்புடன் வாழ்க்கை நடத்திய வணிகன் ஒருவனின் மகளை மணம் புரிந்திருந்

தான். களப்பிரர்களுடன் நல்லுறவோடு வாழ ஆசை கொண்ட வரகுணத் தேவர் அவனுடைய நட்பைப் பெரிதும் மதித்து வந்தார். அதனால், தன் மகள் அடிக்கடி விஷ்ணு சிம்மனின் குடும்பத்தோடு பழகி நல்லெண்ணத்தைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். பூங்குழலி நல்லவள். அவளுக்குப் பலருடன் பேசிப் பழகிப் பொழுது போக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் அவளது மணவாழ்வு அவள் இஷ்டம்போல வாழ வழி செய்யவில்லை. ஆகவே திலகவதியின் உறவு தேவருக்கு மிகுந்த மகிழ்ச்சியே தந்தது. தந்தையின் வற்புறுத்தலுக்காக உறவு கொண்டாட இணங்கிய திலகம் காலப்போக்கில் பூங்குழலின் நற்பண்புகளை உணர்ந்து அவளது நட்பை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டாள்.

வழியில் எதிர்பாராத நிகழ்ச்சி குறுக்கிட்டுவிட்டதால் அவள் விஷ்ணுசிம்மன் இல்லம் செல்ல விரும்பமாட்டாள் என்று வண்டிக்காரன் எண்ணினான். அவன் யூகம் சரியானதுதான்.

'பூங்குழலிப் பிராட்டியார் வீட்டுக்கு இப்போது போக வேண்டியதில்லை. வண்டியை நமது மாஞ்சோலை இல்லத்துக்கு ஓட்டு' என அறிவித்தாள் திலகவதி.

அந்தி கருகி இருள் பரவிக் கொண்டிருந்தது. மங்கிய வெளிச்சத்தில் அவள் இளம்வழுதியின் முகத்தை நோக்கினாள். அவன் வேதனையால் முகம் சுளிப்பது போல் தோன்றவே கூர்ந்து கவனித்தாள் அவனுக்குக் குடிப்பதற்கு ஏதாவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எழுந்தது ஓடும் வண்டியிலிருந்து கொண்டு என்ன கொடுக்க முடியும்?

விஷ்ணுசிம்மனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பூங்குழலியிடம் அளிப்பதற்கு, அவள் தந்தை

விசேஷ சிரத்தையோடு தயாரித்திருந்த மதுரபானம் அவளிடமிருந்தது. திலகவதி சிறிதும் தயங்காமல் அதை எடுத்து; ஒரு தாயின் பரிவோடு, அவன் வாயில் மெதுவாக ஊற்றினாள். அவன் முகத்தில் தெளிவு பிறப்பதைக் கண்டதும் அவள் உள்ளம் ஆனந்தம் கொண்டது.

வண்டி 'மாஞ்சோலை இல்லம்' சேர்வதற்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. வரகுணத்தேவருக்கு வசதியான வீடுகள் பல இருந்தன. அவற்றில் 'மாஞ்சோலை இல்லம்' தனித்தன்மை உடையது. ஊரை விட்டு ஒதுங்கி, ஆற்றங் கரை அருகில், நன்கு வளர்ந்து நின்ற மாமரங்களின் நடுவில் அமைந்திருந்தது அது. கோடை காலத்தில் பகல் பொழுது களைப் போக்குவதற்காகத்தேவர் அங்கு வருவது உண்டு. இதர காலங்களில் எல்லாம் அநேகமாக அந்த இல்லம் அடைபட்டே கிடக்கும். ஆயினும் அதைப்பாதுகாக்கவும் வசதிகள் குறையாதபடி கவனித்துக் கொள்ளவும் தேவையான பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இளம்வழுதி ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடம் அதுவே என்று திலகவதி அதனால்தான் தீர்மானம் செய்தாள்

நன்றாக இருட்டிய வேளையில் தான் வண்டி அந்த இடத்தை அடைந்தது. 'இதுவும் நல்லதுக்குத் தான். யாரும் சந்தேகம் கொள்ள இடமிராது' என்று திலகம் கருதினாள்.

இளம்வழுதியை மெதுவாக எடுத்து வரச்செய்து, சௌகரியமான படுக்கை மீது படுக்கவைத்து. விளக்கு வெளிச்சத்தில் அவனை நன்றாக ஆராய்ந்தாள் அவள். அவனுக்கு பலத்த காயம் எதுவுமில்லை அங்குமிங்கும் கத்திகள் சிறிது கீறியிருந்தன. ஆழமான வெட்டு ஒன்று மில்லை. நெற்றியில்தான் அடி சிறிதே அழுத்தமாகப்பட் டிருக்கவேண்டும். அஞ்சுவதற்கேதுமில்லை என்ற உணர்வு அவள் மகிழ்ச்சியை அதிகப்படுத்தியது

அந்த இல்லத்திலிருந்த தைல வகைகளில் ஒன்றை எடுத்து அவள் வழுதியின் காயங்கள்மீது பூசினாள். ஒரு மருந்தை நெற்றியில் வைத்துக் கட்டினாள்.

இளம்வழுதி சிறிது புரண்டான். அவன் கண்கள் மலர்ந்தன. தூங்கி விழுந்தவன் போல் உடலை நெளித்து உருண்டான். முழுதும் உணர்வு வரப்பெற்றவனாய் திடுக்கிட்டான் எழுந்து உட்கார முயன்றான்.

'பதறவேண்டாம். அமைதியாகப் படுத்திருங்கள்! என்று கூறி, அவனைத்தன் கைகளால் தடுத்தாள் திலகம்.

அவளுடைய தீண்டுதலினாலும் குரலினாலும் மெய் சிலிர்த்த இளம்வழுதி நிமிர்ந்து நோக்கினான். வியப்பினால் விழிகள் அகல, அவள் முகத்தை நன்கு கவனித்தான் "நீங்களா?'' என்று அவன் உதடுகள் உச்சரித்தன. 'நான் எங்கே இருக்கிறேன்?' என்றபடி அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

என்னைத் தெரிகிறதா?' என்று புன்னகையோடு கேட்டாள் அவள்.

'தனக்கு உதவி செய்தவர்களை இளம்வழுதி எளிதில் மறப்பதில்லை என்றான் அவன். எழுந்துஉட்கார்ந்தான்.

'நீங்கள் படுத்திருப்பதே நல்லது' என்றாள் அவள்.

இப்போது எனக்கு ஒன்றுமில்லை. நெற்றியில் மட்டும் சிறிது வலிக்கிறது...இது வரகுணத்தேவர் வீடு தானே?' என்று கேட்டான் அவன்.

'ஆமாம். ஆனால்.

அவன் அவசரமாக எழுந்தான். அந்த வேகத்தால் சிறிது தள்ளாடிய போதிலும், கீழே விழுந்து விடாமல் தற்காத்துக் கொள்ளும் சக்தி அவன் உடலில் இருந்தது.

'முன்பு உங்களுக்கு அறிமுகமான நிலையம் அல்ல இது மாஞ்சோலை இல்லம் என்கிற ஆற்றங்கரை வீடு இது. இங்கே என் தந்தைவரமாட்டார். நீங்கள் அலட்டிக் கொள்ளாமல் ஓய்வு பெறுவதே நலம் தரும்' என்று திலகவதி அன்புடன் மொழிந்தாள்.

அவள் கூற்றில் நம்பிக்கை கொண்ட வழுதி அமைதியாக அமர்ந்தான். 'நான் இங்கே எப்படி வந்தேன்?' என்றான்.

அவள் நடந்ததைச் சொன்னாள்

'நீங்கள் தெய்வம் உங்கள் தந்தையின் எதிரி என அறிந்தும் கூட நீங்கள் என்னை இரண்டு தடவைகள் காப்பாற்றி விட்டீர்கள்...

நன்றிப் பெருக்குடன், உணர்ச்சித் துடிப்போடு, பேசலானான் அவன்

அவள் தனது உணர்வுக் குழப்பத்தை அடக்கிக் கொண்டு அமைதியாக உரைத்தாள்: 'நான் சாதாரணமான பெண் தான். மனித் இதயம் பெற்ற யாரும் செய்யக் கூடியதைத் தானே நானும் செய்தேன்?'

'இருந்தாலும், உங்கள் கருணை உள்ளம் மிகவும் புனிதமானது, உயர்ந்தது என்றே நான் மதிக்கிறேன். உங்களுக்கு என் நன்றியை...'

அவள் வேகமாய் குறுக்கிட்டாள்: 'நீங்கள் பேசாமலிருங்கள். அமைதியாக இருப்பதே நல்லது '

'எனக்கு இப்போது ஒன்றுமில்லை' என்று அவன் மீண்டும் சொன்னான். 'நான் எதிர்பாராத வேளையில் வெறியர்கள் பலர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் வெறுங்கையனாக நின்றேன். இல்லையெனில், அவர்களில் ஓரிருவரையாவது வீழ்த்தியிருப்பேன்...'

அவன் வீண் பெருமை பேசவில்லை என்பதை அவனது தடந்தோள்களும் வீங்கிய புயங்களும் அகன்ற மார்பும் அவளுக்கு எடுத்துக்காட்டின. அவள் கயல் விழிகள் வீரம் நிறைந்த அவன் மேனியை அளவிட்டன. அவன் சொற்கள் ஜீவனுக்கு உவகையூட்டின.

'இருந்தாலும் நீங்கள் தனியே இந்நகரில் திரிவது தகாது. அன்றே நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? என் தந்தையைக் காண வரவேண்டாம்; அந்தப் பக்கம் திரும்பவும் வேண்டாம் என்று எச்சரித்தேனே...'

'நான் தேவரைக் கண்டு பேச வரவில்லை...'

'ஆனால், நீங்கள் இருந்தநிலையில் அவர் உங்களைக் காண நேரிட்டால் உங்கள் கதி என்ன ஆகியிருக்கும்? குடியர்கள் மீண்டும் வந்திருந்தால் உங்களைச் சும்மாவா விட்டிருப்பார்கள்?'

அவள் பேச்சில் உண்மை ஒலி செய்ததால் அவன் மறுத்துரைக்க முடியாமல் இருந்தான்.

'இன்று இந்நகரில் ஏற்பட்டுவிட்ட புதிய மாற்றங்களை நீங்கள் அறியவில்லை போலும்! இந்நகர மாந்தர்களிடமுள்ள கத்தி, வாள், ஈட்டி போன்ற கருவிகளை எல்லாம் பிடுங்கும்படி கூற்றன் நாயனார் கட்டளை பிறப்பித்து விட்டார். வீடுவீடாக வீரர்கள் சோதனை செய்யத் தொடங்கியுள்ளனர்...'

'ஓகோ!' என்றான் இளம்வழுதி. 'அதனால் தான் நகர மக்கள் பரபரப்புற்றுக் காணப்பட்டார்களோ? இன்று பகலில் தெருக்களில் மக்கள் கூடிக் கூடிப்பேசி நின்றார்கள். அவர்கள் முகத்தில் அச்சமும் ஐயமும் குழம்பிப் படர்ந்ததையும் கவனித்தேன். அது ஏன் என்று இப்பொழுது 'தான் புரிந்தது' என்றான் இளம்வழுதி.

'தலைநகரில் மட்டும் அச்சத்தை விதைப்பது போதாது என்று கூற்றன் நாயனார் கருதிவிட்டதாகத் தெரிகிறது. உள்நாடுகளிலும் கூற்றங்களிலும் களப்பிரரின் உண்மை ஆற்றலை மீண்டும் எடுத்துக்காட்டி, தங்கள் ஆட்சி நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வீரர்கள் குதிரைகளின் மீதேறிச் சென்றிருக்கிறார்கள்...'

'ஓ!' என்றான் வழுதி, மறுபடியும். இன்றுஅதிகாலையில் குதிரை வீரர்கள் செல்வதையும் நான் கண்டேன். இதற்காகத்தானா?''

அவன் உள்ளம் கொதிப்படைந்தது. 'நாட்டுமக்களை பிள்ளைப்பூச்சிகளாக மாற்றிவிட்டார்கள் இவ்வெறியர்கள். தலை தூக்கவும் அஞ்சுகிற பொட்டுப் பூச்சிகளாக மாற்றிவிட்டது போதாதென்றோ, அவர்களை மண்ணோடு மண்ணாகத் தேய்ந்துவிடத் திட்டமிடுகிறார்கள் இவ்வீணர்கள்?...'

அவசரமாகக் குறுக்கிட்டாள் திலகவதி 'பொறுமையோடு இருங்கள்! ஆத்திரம் அடைவது உங்களுக்கே தீமை உண்டாக்கும்...''

'உண்மை. அன்னை மங்கையர்க்கரசி எனக்கு அறிவுறுத்தியதை நான் அடிக்கடி மறந்துவிடுகிறேன்' என்று முணங்கினான் அவன்.

'மங்கையர்க்கரசியா!' என வியப்புற்றாள் திலகம்.

'ஆமாம், தமிழகத்து ஆண்கள் வீரமிழந்து உணர்வற்றவர்களாய் மாறிவிட்டார்கள். ஆயினும் தமிழ்ப் பெண்கள் அன்பையும், அருள்நோக்கையும் மனத்திண்மையையும் இழந்து விட வில்லை என்பதை எனக்குஉணர்த்திய என் தாய்க்கு அடுத்த அன்னை மங்கையர்க்கரசிப் பிராட்டி' என்று நன்றி பெருகும் குரலில் உணர்வு துடிக்கப் பேசினான் வழுதி.

'இந்நகரத்தின் பிராட்டியாரையா குறிப்பிடுகிறீர்கள்? அவர்களை உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று வினவினான் அவள்.

அவன் சொன்னான் தொடர்ந்து, 'அதே உண்மையை எனக்கு மீண்டும் வலியுறுத்தி விளக்கும் தெய்வம் நீங்கள்...'

'என்னைத் தெய்வம் என்று சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளவில்லையா?' வேதனை ஒலித்தது அவள் குரலில்,

'அப்படியானால் அன்னையாகவே உங்களையும் மதிக்கிறேன். எனக்கு உதவிய அன்னையின் பெயரை நான் அறிய வேண்டாமா?...'

இளம்வழுதி தன்போக்கில் பேசிக் கொண்டிராமல், அவள் முகத்தைக் கவனித்திருந்தால் திலகவதியின் துயரம் அங்கு சூழ்ந்ததைப் புரிந்திருக்கலாம். கருநிறத்தவளான அந்த இளம்பெண்ணின் முகத்திலே கூட இரத்தம் வேகமாகப் பாய்ந்து ஒரு மாறுதலை ஏற்படுத்தியதை அவன் உணர முடிந்திருக்கும். அவன் சொல், அவள் இதயத்தில் தைத்தது என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. உள்ளத்தில் தோன்றிய ஒரு ஏக்கத்தின் நிழல் அவள் விழிகளில் ஆடியது. திலகம் பெருமூச்செறிந்தாள். 'திலகவதி' என்று முனங்கினாள்.

'அம்மா, உங்களை நான் என்றும் மறக்க முடியாது வருகிறேன்,' என்று கூறி, கை கூப்பி வணங்கிவிட்டு அவன் வேகமாக வெளியேறினான்.

'தனது உள்ளத்தை உணர்ந்து கொள்ளவில்லையே அவன்' என்ற ஏக்கத்தோடு, வேதனையோடு, குழப்பத்தோடு நின்ற திலகவதிக்கு அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றே தோன்றவில்லை; முதலில் அவன்

இருளில் மறைந்து சிறிது நேரமான பிறகே தன் தவறை உணர்ந்தாள் அவள்.

'அட அடா! இரவு வேளைகளில் எவரும் வீதிகளில் தலைகாட்டக் கூடாது; ஆணை மீறி நடக்கத் துணிகிற வர்கள் உடனடியாகக் கொல்லப்படுவர் என்றும் கூற்றன் நாயனார் அறிவித்திருக்கிறாரே! அதை நான் இவரிடம் தெரிவிக்க மறந்து போனேனே!' என அங்கலாய்த்தாள் திலகம். தன் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றாள்.

'அம்மா!' என்ற அழைப்பு அவளைத் திடுக்கிடச் செய்தது. இளம்வழுதிதான் திரும்பி வருகிறானோ என்ற ஆவலோடு கவனித்தாள்.

ஆனால், வண்டிக்காரன் தான் எட்டிப் பார்த்தான். 'நேரம் ஆகிவிட்டது சீக்கிரம் வீடுபோய் சேராவிட்டால். ஐயா...'

அவனை மேலே பேசவிடவில்லை அவள். 'ஆமாம்?' என்று கூறி வண்டியில் ஏறிக் கொண்டாள். 'வண்டி வேகமாகவே போகட்டும்' என்று உத்தரவிட்ட பிறகு அவள் வேறு பேசவேயில்லை; தனது எண்ணங்களோடு குழம்பிக் குவிந்தாள்

## 12. இருளோடு இருளாய்!

திலகவதியின் மூலம் அறிந்த செய்திகளால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொதிப்பு குறையாதவனாய் இளம்வழுதி வேகமாக நடந்தான். மாஞ்சோலையை விட்டு வெளியேறி ஆற்றங்கரை ஓரமாகவே சென்றான் அவன்.

அப்பொழுது உலகை இருள் கரிய திரை கொண்டு போர்த்தியிருந்த போதிலும், வானவெளியில், பூத்துக்

கிடந்த எண்ணற்ற வெள்ளிகளின் ஒளி மங்கலாக நிலவியது. அதன் உதவியால் பாதையை உணர்ந்து நடப்பதும், சூழ்நிலையை ஒருவாறு புரிந்து கொள்வதும் சாத்தியமாயிற்று.

'மீனாட்சி ஆச்சி வீட்டுக்கு விரைவில் போய்ச் சேர வேண்டும் சாத்தன் கணபதி இதற்குள் அங்கே வந்தாலும் வந்திருக்கலாம்!' என்ற எண்ணம் எழவும் அவன் கால்கள் மேலும் வேகமாக நடை போட்டன.

திடீரென்று 'சரசர' என்று ஒரு ஓசை கேட்டது தரை மீது கிடக்கும் உதிர் சருகுகள் எழுப்பிய ஓசை அது இளவழுதி சட்டென நின்றான். 'பாம்போ பூச்சியோ நெளியும் சலசலப்பாக இருக்குமோ?'' என்றது அவன் மனம். ஆனால் அந்த ஒலி தொடர்ந்து கேட்டது. யாரோ நடந்து வருவதனால் எழுந்த ஓசை என்பதை அவன் புரிந்து கொள்ள முடிந்தது

எனவே அவன் அருகிலிருந்த பெரிய மாமரம் ஒன்றின் பின்னே ஒதுங்கிப் பதுங்கிக் கொண்டான். தன் கண்களை ஆந்தைக் கண்களாக்கி இருட்டிலே தடயம் காண முயன்றான் இளம்வழுதி

முதலில் அவன் பார்வையில் தனித்தனி மரங்களும், தரையின் கருமையும் இருளிலும் வெண்மையாய் பளிச்சிட்ட ஒற்றையடித் தடமும்தான் புலனாயின. பிறகு ஒரு உருவம் அசைவது தென்பட்டது. பரபரப்பு எதுவுமின்றி, தன்னம்பிக்கையோடு, மெதுவாக நடந்து வருவது போலவும் தோன்றியது.

வழுதி அடிமரத்தோடு பதுங்கித் தன்னை இருளோடு இருளாக்கிக் கொண்டு கூர்ந்து கவனித்தான் அந்த உருவம் நெருங்க நெருங்க, அதன் நடையும் சாயலும் முன்பே தனக்குப் பழக்கமானவைபோல் தோன்றுவதாக அவன் கருதினான்.

அவன் நினைத்தது தவறல்ல என்பது சீக்கிரமே தெளிவாயிற்று. அருகில் வந்தபோது நன்கு நோக்கவும் அடியார்க்கு நல்லான் தான் என்பதை வழுதி தெரிந்துகொண்டான். இத்துறவிக்கு எவ்வளவோ முக்கிய அலுவல்கள் இருக்கும் போலும்! என்றது அவன் உள்ளம்.

துறவி தயங்கவில்லை நிற்கவோ நடையைத் தளர்த்தவோ இல்லை. தனது வழக்கமான நடையில் முன் சென்று கொண்டிருந்தான். அங்கு தன்னைக் கவனித்தபடி மறைவிலே யாராவது நிற்கக்கூடும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்ததாகவே தோன்றவில்லை. அப்படி ஒரு எண்ணம் அவன் மனசில் இருந்தால் தான், அவன் தயங்கித் தயங்கி நடந்திருப்பானே? அடிக்கொரு தரம் அங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடப்பானே!

துறவி தன்னைக் கடந்து சிறிது தூரம் சென்ற பிறகும் இளம்வழுதி மறைவிலேயே நின்றான். 'இவரைப் பின் பற்றிச் செல்வோமா? அல்லது, பூங்குடி ஆச்சி வீட்டுக்கே போகலாமா?" என்று ஊசலிட்டது அவன் மனம்.

'சாத்தன் இதற்குள் அங்குவந்திருந்து என்னைக் காணவில்லை என்று அறிந்து கிளம்பினாலும் கிளம்பிச் சென்றிருக்கலாம் இத்துறவியின் செயல்கள் மிகுந்த ஐயம் எழுப்புவனவாக உள்ளன. இவரைத் தொடர்ந்து சென்றால் உண்மைகள் ஏதேனும் அம்பலமாகலாம் என்று உள் மனம் உரைத்தது. அதன் குரலை ஏற்றுக் கொண்டான் அவன். மரத்தின் பின்னாலிருந்து வெளிப்பட்டு, மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்தான். பின்னே ஆள் வருகிறது என்ற சந்தேகம் துறவிக்கு எழாதிருக்க வேண்டுமே எனும் உணர்வோடு அவன் மரங்களின் பின் மறைந்தும் நிதானமாகவும் தொடர்ந்து சென்றான்.

ஆற்றங்கரையோடு சென்ற அடியார்க்கு நல்லான் ஒரு இடத்தில் திரும்பி, சற்றே நின்றான். வந்த வழியைக்

கவனிப்பது போல் படவும் இளம்வழுதி தயங்கினான். நல்ல வேளையாக அருகிலேயே ஓங்கி வளர்ந்த மருத மரம் ஒன்று நின்றது. அதன்பின் பதுங்கினான். அவன் தான் வருவதைத் துறவி உணர்ந்து கொண்டானோ என்ற பதைப்பு அவனுக்கு உண்டாயிற்று.

அது வீண் திகில்தான். துறவி இயல்பான எச்சரிக்கை நோக்குடன் நின்று நிதானித்துவிட்டு முக்கிய திருப்பத்தில் அடி எடுத்து வைக்கிறான் என்பதை வழுதி உடனடியாக அறிய முடிந்தது. மீண்டும் காலம் கடத்தாமல் தொடர்ந்து நடந்தான் அவன்.

மரங்கள் அதிகமாக இல்லாத பகுதி வழியாகவும், உடை—கருவேல் போன்ற முள் மரங்கள் ஓங்கி வளராமல் புதர் புதராக அங்கொன்றும் இங்கொன்றும் தலை விரித்து நின்ற வெளிகளினூடும் துறவி நடந்தான். அவன் அடிக்கடி போய் வந்து பழக்கப்பட்ட பாதையாகத்தான் இருக்க வேண்டும் அது. ஏனெனில், காலில் முள் தைத்து விடுமே என்ற பயமோ, வேறு எவ்வித ஐயமோ ஓர் சிறிதும் இல்லாதவனாய் நிமிர்ந்த தலையோடு முன்சென்று கொண்டிருந்தான் அவன்

அவனைப் பின்பற்றி நடந்த இளம்வழுதி அதிகமான எச்சரிக்கையோடு போக வேண்டியிருந்தது. சில இடங்களில் கூரிய முட்கள் கிடந்து, அவன் பாதங்களை 'நலம் விசாரித்தன!' குத்திய முட்களை எடுத்தெறிந்து விட்டு வேதனையையும் பொறுத்துக் கொண்டு அவன் தொடர்வதற்குள், துறவி பார்வைப் புலனில் படாது முன்னேறியிருப்பான். ஆகவே வழுதி வேகமாக நடக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அவற்றை எல்லாம் பெரிது படுத்தாமல் அவன் தொடர்ந்தான்.

பாழடைந்த கோவில் ஒன்று தென்பட்டது. துறவி அதனுள் புகுந்து மறைந்தான். இளம்வழுதி கோயில்

அருகே வந்து பார்த்தபோது, பெரிய கதவு வெகு சுலபமாகவே திறக்கப்படாததுபோல்நெடிதுயர்ந்து அசையாது நின்றது. வழுதி கையினால் தடவினான் நெடுங்கதவின் ஓர்புறத்தில் திட்டி வாசல் அமைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தான். அதன் கதவும் இறுகச் சாத்தி உள்ளே தாழிடப்பட்டிருந்தது. 'இதன் வழியே தான் துறவி உள்ளே சென்றிருக்க வேண்டும்' என்று தீர்மானித்தான் அவன்.

தானும் உள்ளே நுழைய வேண்டும் என்று இளம் வழுதி எண்ணினான். இல்லாவிடில் இவ்வளவு தூரம் இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு, துறவியைப் பின் தொடர்ந்து வந்து என்ன பயன்? நேர்வழியில் உள்ளே புகமுடியாது என அறிந்த வழுதி, மதில் சுவர்களைச்சுற்றி வந்தான்.

உயர்ந்து நின்ற சுவர்கள் மீது ஏறுவதற்கு வசதி எதுவும் இருந்ததாகத்தெரியவில்லை. கால் பதிப்பதற்கோ, கையால் பற்றிக் கொள்வதற்கோ சிறு பள்ளமுமில்லை; பிடிப்புமில்லை என்றே அவன் கருதினான் எனினும், கோயிலின் பின்புறத்தில் சில மரங்கள் நின்றன' அவற்றில் சில நன்கு வளர்ந்து, பெரிய கிளைகள் பரப்பி. அடர்த்தியாகக் காட்சி அளித்தன. சில கிளைகள் மதில் சுவர் மீதும் படிந்திருந்தன.

வழுதி ஒரு மரத்தில் ஏறி கிளை வழியே நடந்து, மதிலை அடைந்தான். மெதுவாக மதில்மீது நடந்தான். அவன் கண்கள் வழியையும் கவனித்துக் கொள்ள வேண்டும். கோயிலின் உட்புறத்தில் என்ன தென்படும் என்றும் ஆராய்ந்தாகவேண்டும். ஆகையால் அவன்வெகு எச்சரிக்கையோடுதான் செயல்புரிந்தான்

உள் மண்டபம் ஒன்றிலிருந்து பேச்சுக்குரல்கள் எழுவது அவன் காதுகளில் விழுந்தன. அடியார்க்கு நல்லான்

வருவதற்கு முன்பே அனேகர் இங்கு வந்து கூடியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. பலருக்கும் சொல்லிஏற்பாடு செய்வதற்காகத்தான் துறவி பிற்பகல் முதலேஅலைந்தார் போலிருக்கிறது' என்று வழுதி எண்ணிலான் அவர்கள் ஏதோ திட்டமிடுவதற்காகவே இங்கு இப்பாழிடத்தில் குழுமியிருக்க வேண்டும் என்று நிச்சயமாகப்பட்டது அவனுக்கு என்ன பேசுகிறார்கள் என்று உற்றுக் கேட்பதற்கு வசதியான இடத்தில் மறைந்துகொள்வது நல்லது என்றும் தோன்றியது.

அப்படி ஒரு இடமும் கிடைத்தது. கீழே பலரும் குழுமியிருந்த மண்டபத்துக்கு மேலே மதில் சுவரோடு மரக்கிளை ஒண்டிக்கிடந்தது. மறைந்து நிற்பதற்கு வசதியாக அமைந்திருந்தது அது அந்த இடத்தில் இளம்வழுதி மறைந்து கொண்டான். முதலில் மூண முணப்பாகவே குரல் காதில் விழுந்தது. திடீரென்று ஒன்றிரு குரல்கள் ஓங்கி ஒலிக்கும் அவர்கள் எதைப் பற்றி வார்த்தையாடுகிறார்கள் என்றே இளம்வழுதியினால் புரிந்து கொள்ள இயலவில்லை.

கீழே வாக்குவாதம் முற்றுவதாகத் தோன்றுயது. சில குரல்கள் கத்தின சந்தைஇரைச்சலாக மாறியதுநிலைமை. அதை அடக்குவதுபோல 'அமைதி!' என்ற அதட்டல் எழுந்ததும், அது அப்படியே ஒடுங்கிவிட்டது. தெளிவான பேச்சு ஒலித்தது இப்போது. பேசுவது அடியார்க்கு நல்லான் என உணர்ந்தான் இளம்வழுதி.

'சைவம் இன்று புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது என்பது உண்மை. குடியேறி வந்து கொடுங்கோலர்களாக மாறிவிட்டவர்களின் ஆதரவோடு சமணமும் பிறவும் தலை தூக்கிப் பேயாட்டம் போடுவது நம்மனோர்க்கு மிகுந்த வேதனையே தருகின்றது.' அவர்களுக்கு நாம்

அறிவு கொளுத்த வேண்டியது அவசியம் என்பதை நாம் உணர்ந்தும் வெகு காலமாகிவிட்டது. எவ்வழியில் அதை நிறைவேற்றுவது என்றுதான் இன்னும் நம்மால் முடிவு செய்ய இயலவில்லை...'

'நம் மதம் தழுவாதாரை ஒழித்துக் கட்டுவோம்' 'நெருப்பிலே தள்ளுவோம்' 'கழுவில் ஏற்றுவோம்' 'கொல்லுவோம்!'

வெறிக் கூச்சல்கள் கனமாக மேலெழுந்தன. மீண்டும் அமைதியாயிருங்கள்!' என்ற கட்டளை பிறந்தது.

'நமசிவாய! நமசிவாய!' என்றது ஒரு குரல். அதைப் பல குரல்கள் முனங்கின. 'நாதன் தாள் வாழ்க!' என்ற தலைமைக்குரல். அதை ஓங்கி உச்சரித்தன இணைக் குரல்கள்.

அடியார்க்கு நல்லான் திரும்பவும் பேச்செடுத்தான்:

'நாம் அறுதியிட்டு வகுக்கப் போகின்ற திட்டம், கூற்றன் நாயனார்க்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கூற்றம் ஆகவே அமையும். பிறவா யாக்கைப் பெரியோனாகிய நம் இறைவனைப் பழித்து வந்தவர்களின் நாக்குகளைக் கூர்வாளினால் அறுத்தெரியவும் இசைவேன் யான். ஆயினும், எதற்கும் உரிய வேளை வரவேண்டும்...'

கசடர்களைக் கழுவில் ஏற்றக் காலமும் வேண்டுமோ எனக் கடாவுகின்றேன்' என இடிக்குரல் ஒன்று உறுமியது...

'இவ்வளவு செவிமடுத்ததே போதும் போதும்' என்றாகிவிட்டது இளம்வழுதிக்கு. 'சமயப்பற்று மிகுதியும் பெற்றுவிட்ட அடியார்கள்! இவர்களும் வெறியர்களே!' என முடிவு செய்தான் அவன். இனி அங்கே தனக்கு வேலையில்லை என்று எண்ணி, வந்ததுபோல் திரும்பினான்.

மரத்தின் வழியே கீழிறங்கி, குறுகலான வழியில் நடந்து மறுபடியும் ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தான் இளம்வழுதி.

"சமயம் தேய்ந்துவிட்டது; அதை முன்னைப் புகழ் நிலைக்கு உயர்த்துவதற்காகக் களப்பிரர்கள் வீழ்ச்சி அடைய வேண்டும் என்று அடியார்கள் விரும்புகிறார்கள். சிவன் தந்த தமிழ்மொழி வளம் குன்றிவிட்டது; அதைப் போற்றி வளர்ப்பதற்காகக் களப்பிரர்களை ஒழிக்க வேண்டும் என்று தமிழன்பர்கள் ஆசைப்படுகிறார்கள். இவ்விரு சாராரும் துணிந்து செயலாற்றக்கூடிய வலிமை பெற்றிருக்கவில்லை. நமது பழம்பெரும் குடியினர் ஆட்சிபுரிந்த நாடு அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதைத் தாய்க்குலம் விரும்பவில்லை. விடுதலை பெறுவதற்கு அவர்கள் தங்களால் இயன்ற அளவு துணைபுரிவார்கள் என்றும் தெரிகிறது ஆகவே, வெற்றி பெறுவதற்கு வீரத்தின் அணிவகுப்புதான் தேவை அருளும். அறிவும், அன்பும் வீரத்தின் பக்கபலம் இல்லாது போனால் மிகச்சிறந்த சாதனை எதையும் செயதுவிட முடியாது என்றே நான் உணர்கிறேன்..."

தனது அனுபவங்கள் அறிவுறுத்திய உண்மையைப் பற்றிச் சிந்தித்தபடி நடந்தான் அவன். இனி என்ன செய்வது? இதுதான் இளவழுதியின் முன்நின்ற பிரச்னை. வீரர்களைத் திரட்ட வேண்டும்! அதற்கு எவ்வாறு செயலாற்றுவது?...மங்கையர்க்கரசி எவர் துணையோ நாடும்படி சொல்லவில்லையா?-இந்த நினைப்பு வரவும், சாத்தன் கணபதி என்ன செய்கிறானோ? என்ற துடிப்பு பிறந்தது.

இளம்வழுதி, மாலையிலேயே நேராகப் பூங்குடி ஆச்சி வீட்டுக்குப்போய், சாத்தன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கத் தவறிவிட்டோமேஎன்று வருத்தப்பட்டான். வேகமாக நடந்தான்.

அவனுடைய முயற்சிகளில் அவனுக்கும் மேலான எதுவோ ஒன்று—விளக்க முடியாத ஏதோ ஒரு சக்தி—அவனுக்குத் துணை நின்று அவனை இயக்குவதாகத்தான் அவனுக்கே தோன்றியது இவ்வேளையிலும் அவ்விதமே நடந்தது.

அவன் ஆற்றுப் பாதையிலிருந்து திரும்பி நகருக்குள் செல்லும் பெரிய வழியில் அடி எடுத்து வைத்தபோது, 'அட! இளம்வழுதியா?' என்ற கேள்வி அவனைத் திடுக்கிட வைத்தது. 'நான் வேறு யாரோ? என்று பயந்து விட்டேன்' அதனால்தான் மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன்' என்று கூறியபடி சாத்தன் கணபதி முன் வந்தான்.

'உன்னைப் பற்றி எண்ணியபடிதான் நான் வந்து கொண்டிருக்கிறேன். பூங்குடி ஆட்சி வீட்டில் போய்க் காத்திருப்பாய் என்று எண்ணினேன். திடீரென்று குரல் கேட்கவும் நான் அதிர்ச்சி அடைந்தேன்' என்று சொல்லிச் சிரித்தான் வழுதி.

'நல்ல வேளை! நான் உன்னை இங்கேயே பார்க்க முடிந்தது; நான் இதுவரை மீனாட்சி ஆட்சி வீட்டுக்குப் போகவில்லை. வீதிகளில் இரவில் எவரும் தலைகாட்டக் கூடாது என்று கட்டளை பிறப்பித்திருப்பதால்...'

'அப்படி ஒரு ஆணை பிறந்துவிட்டதா? அது எனக்குத் தெரியாதே!' என அதிசயித்தான் வழுதி.

'ஆமாம் கூற்றன் நாயனார் கட்டளைகள் பிறப்பிப் பதற்கு ஒரு வரைமுறையே கிடையாது' என்றான் சாத்தன். "அதனால் நம் போன்றவர்கள் மிகுந்த விழிப் புடன் நடமாட வேண்டியிருக்கிறது ஆள் நடமாட்டத் துக்கே ஆபத்து என்றால், குதிரைகளோடு நாம் வரமுடி யுமா? ஆகவே, இருட்டுவதற்கு முன்னரே, குதிரைகளை

அக்கரையில் ஓர் இடத்தில் கொண்டு போய், பாதுகாப் போடு நிறுத்திவிட்டு, வேறு சில முக்கிய அலுவல்களையும் கவனித்து விட்டு வருகிறேன். உன்னைச் சந்திக்க வேண்டுமே? என்ற எண்ணத்தோடு தான் கிளம்பினேன்! அதற்குள் நீயே பேய் மாதிரி இங்கு திரிகிறாய்!' என்று கூறிச் சிரித்தான் அவன்.

'பேய்களாக மாறத் துடிக்கிற சில மனிதர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்த நான். இன்னும் பேயாகி விட வில்லை!' என்றான் அவன்.

'அது என்ன சங்கதி?' என்று ஆவலுடன் கேட்டான் சாத்தன்.

'அக்கரை சேர்ந்ததும் மெதுவாகப் பேசிக்கொள் வோம் வா!' என்று நடந்தான், வழுதி. சாத்தனும் தொடர்ந்தான்.

ஆற்றைக் கடந்து, உரிய இடம் சேர்ந்து, குதிரைகள் மீதேறிக் கொண்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அப்பொழுதும் இருள் தான் மூடிக் கிடந்தது அழகிய மதுரை நகரிலே!

முதல் பாகம் முடிந்தது.

## இரண்டாம் பாகம்-ஒளியின் சிரிப்பு

### 1. இருளில் சென்ற இருவர்

எங்கும் இருள்தான் நிலைத்து நின்றது. குளிர்காற்று ஊசலிட்டுக் கொண்டிருந்தது.

இருட்டைக் கண்டு பயந்தும், குளிரினால் பாதிக்கப் பட்டும் நடுங்குவனபோல அநேக வெள்ளிகள் துடித்தன. வானிலே. வானம் முழுவதும் நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன. மதிப்புத் தெரியாமல் எவனோ வாரி இறைத்து விட்ட வைர மணிகள் போல.

சாத்தன் கணபதி முன் சென்றான். இளம்வழுதி அவனுக்குப் பின்னால் நடந்தான். இருவரும் அடி எடுத்து வைத்தார்கள். 'இவன் என்னை எங்கே அழைத்துப் போகிறானோ? மங்கையர்க்கரசி குறிப்பிட்ட மனிதர் எப்படிப் பட்டவரோ? என்ன உதவி செய்வாரோ?' என்று அவன் மனம் அலை மோதியது. அதன் விளைவாக, 'நாம் இப்போது எங்கே போகிறோம்? என்ற கேள்வி அவனிடமிருந்து பிறந்தது.

'நான் தான் அப்போதே சொன்னேனே! நமது குதிரைகளை நிறுத்தி வைத்திருக்கிற இடத்துக்கு நாம் போய்க் கொண்டிருக்கிறோம்' என்றான் சாத்தன்.

'அதைக் கேட்கவில்லை நான்' என்று சற்றே சிடுசிடுப்பாகப் பேசினான் வழுதி. 'யாரையோ பார்த்துப் பேசினால், தேவையான உதவி எல்லாம் கிடைத்துவிடும் என்று பிராட்டியார் சொன்னார்களே? அவர் எங்கே இருக்கிறார்; அவரைக் காண்பதற்காகத்தான் நாம் போகிறோமா என்று கேட்டேன்' என்றான்.

நண்பன் மெதுவாகச் சிரித்தான். வழுதியின் அவசரத்தைக் கண்டு அதன் பேரொலி போல எழுந்து பரவியது. எங்கோ சிரித்த ஒரு ஆந்தையின் அலறல்.

இளம்வழுதிக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது. 'என்னிடம் கூட ஏனோ இந்த மர்மம்? நான் இப்பொழுது என்ன நினைக்கிறேன் தெரியுமா?' என்றான் அவன்.

'எனக்கெப்படி தெரியும்?' என்றான் சாத்தன்.

வழுதி அனல் மூச்செறிந்தான். 'இப்படி அர்த்தமில்லாமல் அலைந்து திரிவதைவிட, தெற்கு நோக்கிப் போயிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. எனது செவ்விருக்கை நாட்டிலும், அதனருகுள்ள இதர நாடுகளிலும் எனக்காக எனது தோழர்கள் காத்திருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து, இனி நடக்க வேண்டியது பற்றித் திட்டமிடுவதே அறிவுடைமையாகும்' என்றான்

'பிராட்டியார் கூற்றில் உனக்கு நம்பிக்கை இல்லையோ?' என்று சாத்தன் கேட்டான்.

'பிராட்டியாரின் எண்ணம் உயர்ந்தது. அதை நான் சந்தேகிக்கவில்லை. ஆயினும் பிறர்மீது எனக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை' என்றான் வழுதி.

சாத்தன்கணபதி சிறிது தூரம்வரை பேசவே இல்லை. இருளின் திருட்டுத்தனமான கண் சிமிட்டுதல்போல மினமினிப்பூச்சிகள் அவ்வப்போது ஒளிவெட்டி மிதந்துகொண்டிருந்தன. பாதையை விட்டு விலகி விலகி நின்று, இலைகள் அடர்ந்த மரம் ஒன்றில் அப்பூச்சிகள் ஒரேயடியாக மொய்த்துக் கிடந்தன. நட்சத்திர மண்டலமே அங்கு நழுவி விழுந்து தொங்கிக் கிடப்பதுபோல் தோன்றியது. அதைக் கவனிப்பவன் போல, அவன் வாய் திறவாது நடந்தான்.

வழுதியும் அந்த அற்புதமான காட்சியைக் கண்டான், எனினும் அதனால் அவன் வசீகரிக்கப்படவில்லை. அவன் உள்ளத்திலே பலகரமான சிந்தனைகள் முட்டி மோதி. அவனை அலைக்கழித்தன.

'பலரிடம் நம்பிக்கை கொண்டு விடுவது மங்கையர்க்கரசிப் பிராட்டியாரின் நல்ல மனப்பான்மை...'

அவன் பேசுவதையும் விரும்பாதவனாய் சாத்தன் 'உஸ்ஸ்!' என்றான் 'எண்ணங்களுக்கு உயிர் கொடுக்காமலிருப்பதே நல்லது. இரவில், இது போன்ற இடத்தில், வாய் திறவாமல் நடப்பதுதான் சிறந்தது. இருட்டுக்கு ஆயிரம் செவிகள் இருக்கக்கூடும்' என்றான். வேகமாக நடக்க முயன்றான். வழுதியும் அவனைப் பின்பற்றி நடந்தான்.

'நாம் இன்னும் வெகு தூரம் போக வேண்டுமோ?' என்று இளம்வழுதி கேட்க எண்ணிய வேளையில், சாத்தனே வாய்திறந்தான். இங்கு தான் குதிரைகள் நிற்க வேண்டும். கிழவன் இங்கேயே காத்திருப்பதாகச் சொன்னானே?' என்று முணுமுணுத்தபடி சுற்றிலும் கூர்ந்து கவனித்தான். 'குடித்து விட்டுக் குடிசையிலேயே விழுந்து கிடக்கிறானோ என்னவோ' என்றான்.

வயது முதிர்ந்து கூனிக் குறுகிய புளியமரம் ஒன்று அங்கு இருந்தது. சில அடிகளுக்கப்பால் குடிசை இருப்பதும் புலனாயிற்று.

சூழ்நிலையை ஆராய்வதில் ஈடுபட்ட வழுதி திடீரென்று தரையைச் சுட்டிக் காட்டினான். 'இங்கே குதிரைகள் சுற்றிச் சுற்றி வந்து, அமைதியிழந்து முரண்டு பிடித்தது போல் தடங்கள் பதிந்து கிடக்கின்றன' என்றான்.

'உம்ம். அங்கே போய்ப் பார்க்கலாம' என்று எச்சரிக்கையோடு அடி எடுத்து வைத்தான் சாத்தன். 'என்னிடம் சிறு குத்து ஈட்டி இருக்கிறது. உன்னிடமும் இருந்தால், எடுத்துக் கையில் பிடித்துக்கொள். எதற்கும் விழிப்புடன் நடப்பது நல்லது' என்றான்.

அவன் தகுந்த முன்யோசனையோடுதான் நடந்து கொண்டான் என்பதை அங்கே எதிர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நிரூபித்துவிட்டன. அவ்விருவரும் குடிசையை நெருங்கும் முன்னரே, சாத்தனின் கால்கள் எதன் மீதோ இடறின. அவன் குனிந்து நோக்கினான். அவனுக்குப் பழக்கமான கிழவன்-குதிரைகளைப் பிடித்துக்கொண்டு மரத்தடியில் காத்திருக்க வேண்டியவன்-தான் உயிரற்றுக் கிடந்தான்.

'இவனை யாரோ கொன்றுவிட்டு, குதிரைகளைத் திருடிச் சென்றிருக்கிறார்கள்' என்று முணுமுணுத்தான் கணபதி: எதற்கும் குடிசையையும் ஆராய்ந்துவிடுவோம்' என்று மெதுவாக முன்னேறினான் அவன். வழுதியும் தொடர்ந்தான்.

பழங்குடிலினுள் சிறு வெளிச்சம் தெரிந்தது. 'கெக் கெக்கே' என்ற விசித்திரமான சிரிப்பொலியும், 'எதிர் பாராத நல்ல வேட்டை' என்ற பேச்சுக் குரலும் உள்ளே மனிதர்கள் இருக்கிறார்கள் என்று அறிவுறுத்தின.

கதவு நன்றாக அடைக்கப்பட்டிருக்கவில்லை. இடை வெளியினூடு வெளியே பாய்ந்த ஒளிக்கோடு இருட்டைக் குத்த முயலும் கூர்மையற்ற ஈட்டிபோல் காணப்பட்டது.

சாத்தன் உற்று நோக்கினான். உள்ளே இரண்டு பேர் நல்ல குடிபோதையில் இருப்பதைக் கண்டான். அவர்கள் மேலும் மேலும் குடித்துக் கொண்டேயிருந்தார்கள்; குள்ள நரிக் குணமுடைய களப்பிரர்கள்தான் இருவரும் என்பதையும் அவன் உணர்ந்தான். வழுதியிடம் மெதுவாக இதைக் கூறிவிட்டு, என்ன செய்ய வேண்டும் என்றும் அறிவித்தான்.

அவனது ஒரு கரம் ஈட்டியை உயர்த்திப் பிடித்திருக்க மறுகரம் கதவை மெதுவாகத் தள்ளித் திறந்தது. போதுமான அளவு திறக்கப்பட்டதும் இருவரும் உள்ளே புகுந்தார்கள்.

'ஏய் குதிரைத் திருடிகளே! குடிகாரக் களப்பிரர்களே! கொலைகாரர்களே! இதோ, உங்களுக்கு உரிய தண்டனை!' என்று கத்திக் கொண்டே சாத்தன் ஒருவன் மீது பாய்ந்தான். வழுதி மற்றவனைத் தாக்கினான்.

தங்களுடைய நல்லதிர்ஷ்டத்தில் சொக்கியிருந்த குடியர்கள் திடுமென வந்த தாக்குதலால் பதறினார்கள். அவர்களும் கைகளையும் கால்களையும் ஆட்டி அசைத்து உதறினார்கள். தெளிவற்ற ஊமை உளறல்களைக் கூவியவாறு சமாளிக்க முயன்றார்கள். ஆனால் முடியவில்லை.

உள்ளே பாய்ந்த இருவரின் வேலையும் எளிதாக விரைவிலேயே முடிந்துவிட்டது. இருவரும் களப்பிரரின் நீண்ட வாள்களை எடுத்துக் கொண்டு, வெறுப்போடு காரி உமிழ்ந்து விட்டு, வெளியே வந்தார்கள். வரும்பொழுது வழுதி விளக்கை அணைக்கத் தவறவில்லை.

வெளியே வந்ததும் சாத்தன் கதவை இழுத்து அடைத்தான். பிறகு ஏதோ எண்ணியவனாய் அதைத் திறந்தான். கீழே கிடந்த கிழவனின் உடலை எடுத்து வந்து அதையும் குடிலுக்குள் போட்டுவிட்டுக் கதவைச் சார்த்தி வெளியே தாளிட்டான்.

'மூவரும் அமைதியாக உறங்கட்டும். நாம் வேகமாய் இங்கிருந்து செல்லவேண்டும்' என்று கூறி, குடிலின் பின்புறம் சென்றான் சாத்தன். அங்கு அமைதியிழந்து, கால்களால் தரையை உதைத்துக் கொண்டு நின்ற குதிரைகள் இரண்டையும் கண்டான்.

அவன் வருகையை உணர்ந்ததும் ஒரு குதிரை உவகையுடன் கனைத்தது அதனருகே சென்று அதை அன்புடன் தடவிக் கொடுத்தான் கணபதி. உடன் வந்த இளம்வழுதியிடம், நீ அதன்மேல் ஏறிக்கொள்' என்று கூறித் தனது குதிரைமீது அமர்ந்தான் அவன். உடனேயே இரு குதிரைகளும் முன்னே பாய்ந்தன.

இருளோடு இருளாய், இருளைக் கிழித்துக்கொண்டு, சூறைக்காற்றுப் போல இரண்டு வீரர்களும் முன்னேறிச் சென்றனர். எங்கும் சூழ்ந்து கிடந்த இருட்டில் குதிரைகளின் காலடி ஓசை மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது அந்த ஒலி தவிர வேறு சத்தம் எதுவும் இல்லை.

● ● ●

ஓடி ஓடித் தேய்ந்து கொண்டிருந்தது இரவு. அதனாலேயே அது வெளிறியது. வான வீதியிலே இரவுப் பெண் சித்தரித்திருந்த வைரப்புள்ளிக் கோலங்களை அலட்சியமாகத் தனது வெள்ளிய மேலாக்கால் அழித்தபடி உதயமகள் வந்தாள். புத்திளமையும்குதூகலிப்பும் அவளுக்குச் செம்மை பூசிவிட்டன. புள்ளினம் சிரித்தன; பூக்குலம்

சிரித்தன. உயிர்கள் உற்சாகம் பெற்றுக் கலகலப்பு அடைந்தன.

நிதான கதியிலே குதிரைமீது சென்ற இளம்வழுதியும் சாத்தன் கணபதியும் கூடச் சிரித்தார்கள். களங்கமற்ற, கவலையற்ற, சிரிப்பு அது.

அவர்கள் குடிசையை விட்டு நீங்கி வெகுதூரம் வந்துவிட்டார்கள். இனி எவரும் பின் தொடர்ந்து வந்து தாக்க முடியாது என்று தோன்றியதுமே அவ்விருவரும் குதிரைகளின் ஓட்ட வேகத்தை மட்டுப்படுத்தினர்.

கிழவன் உடல் வெளியே கிடந்தால் வழியோடு போவோரின் கவனத்தை இழுக்கும். அவர்கள் குடிலுக்குள் எட்டிப் பார்க்க நேரிடும். உள்ளே தென்படுகிற நிலைமை கலவரம் உண்டாக்கும். பலருக்கு வீண்வேலை கொடுக்கும். நமக்கும் இன்னல் விளைந்தாலும் விளையலாம். இதை எல்லாம் தவிர்ப்பதற்காகத்தான் அந்தப் பிணத்தை எடுத்து உள்ளே போட்டுவிட்டு, கதவை இழுத்துச் சாத்தினேன்' என்று சாத்தன் சொன்னான்.

''வருமுன் காக்கும் நின் பண்பு வாழ்க!'' என்றான் வழுதி.

அதிலிருந்து இருவரும் பேச்சிலே இன்பம் காணலாயினர். ''பேய்களாக மாறிய மனிதர்களைப்பற்றிச்சொல்வதாகக் கூறினாயே? மறந்துவிட்டாயா?'' என்று சாத்தன் கேட்டான்.

''மறக்க முடியுமா?'' என்ற வழுதி, துறவியும் அடியார்களும் நிகழ்த்திய கூட்டம் பற்றி விரிவாகவே சொன்னான்.

''அந்த நேரத்தில் நீ ஆற்றோரத்தில் அலைய நேர்ந்ததன் காரணம் என்ன? அது எனக்கு விளங்கவில்லையே!'' என்றான் தோழன்.

எனவே, இளம்வழுதி அந்திவேளை அநுபவம் பற்றியும் அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாயிற்று.

முற்றும் கேட்டு முடித்த பின்னர் சாத்தன் சொன்னான் "தேவரின் திருமகளுக்கு இளம்வழுதிபேரில் ஆசை ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தானே?"

"ஆசையாவது நேசமாவது!" என்று அலட்சியத்தோடு கூறி, இலேசாக நகை உதிர்த்தான் வழுதி.

"இல்லையென்றால் அவள் ஏன் உனக்குஆர்வத்தோடு உதவி புரியவேண்டும்? முதல் தடவை வீட்டிற்கு வந்த அதிதிக்கு எதிர்பாராத விபத்து ஏற்படக்கூடாதே என்ற நல்லெண்ணத்தோடு அவள் உதவினாள் என்று சொல்லலாம். அது கூடத் தவறேயாகும் என்பதுதான் என் கருத்து. அப்பொழுதே இந்த இளம் ஞாயிற்றின் ஒளியால் அவளது உள்ளத்தாமரை மலர்ச்சியுற்றிருக்கும். அங்கே அன்பு சுரந்திருக்கும். அதன் பயனாகத்தான் அவள் மீண்டும் உனக்கு - தனது தந்தையின் விரோதி என்பது அவளுக்குத் தெரியாமலா இருக்கும்? - உதவி செய்யத் துணிந்தாள். நீ அவள் மனதை அறிந்துகொள்ளத் தவறிவிட்டாயே!" என்று பரிகசித்தான் சாத்தன்.

"நீ கவிஞனாக வளரவேண்டியவன். தவறிப்போய்க் குதிரை வீரனாகிவிட்டாய்! உனது கனவுப் பறவை உல்லாசமாகச் சிறகடித்து மிதப்பது இனிமையாகத் தானிருக்கிறது" என்று வழுதி சொன்னான்

"இல்லை வழுதி! நீ இதயமற்ற வறட்டு வீரனாக வாழக்கூடாது. அவள் முகத்தை நன்றாகப் பார்த்திருந்தால், அதில் நிகழும் மாற்றங்கள் உன்னிடம் கதை பேசியிருக்குமே! அவளுடைய கருவிழிகள் இன்பக் கவிதைகள் இசைத்திருக்குமே!"

நண்பன் இப்படிச் சொல்லவும், வழுதி புன்னகையோடு குறும்புத்தனமாகக் கேட்டான் : 'நண்பர் இந்த ரகசியங்களை எல்லாம் கற்றுக் கொள்வதற்குத் துணை புரிந்த குருபீடம் எங்கே இருக்கிறதோ?' என்று

இதைக் கேட்டுத்தான் சாத்தன் கலகலவென நகைத்தான். ''அது எனது சொந்த விஷயம். அதை நான் சொல்லமாட்டேன்'' என்றான்.

''எனது சொந்த விஷயமும் வேறே ஆகும்'' என்று தோழனின் சுவைப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் வழுதி ஆனால் அவன் மனப் பறவை இனிய நினைவுகளிடையே சஞ்சரித்தது கவிதை பேசும் கண்களும் இனிமை துடிக்கும் இதழ்களும், அழகு மலரும் முகமும் தென்பட்டன. அவையோ அமுதவல்லிக்குச் சொந்தமானவை!

அந்த முகத்தை இன்னும் நன்றாகப் பார்த்துமகிழ்ந் தோமில்லையா; அஞ்சனம் தோய்ந்த அழகு விழிகளின் துடிப்பை மீண்டும் காணமாட்டோமா; இளநகை எழிலுருத்தும் பவள உதடுகளை இனி என்று கண்டு, ஒளிச் சிரிப்பால் மனம் மகிழ முடியுமோ?—இவ்வாறு அவன் உள்ளம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

'என்னைக் கோபித்துக் கொண்டாயே! காதலியின் நினைவு உன்னை வதை செய்கிறது என்பது புரிந்து விட்டது வீணாக நீ அதை மறைப்பானேன்?' என்றான் சாத்தன்.

வழுதி பதில் பேசவில்லை. பொருள் பொதிந்த முறுவலே பூத்தான்.

''சரி. இனி நமது கடமைகளைக் கவனிப்போம். **மாறன்காரி** என்பவரிடம் உன்னை அழைத்துச் செல்லும்படி பிராட்டியார் எனக்குக் கட்டளையிட்டார்கள். அவருக்கு நீ தரவேண்டிய திருமுகம் இதோ இருக்கிறது

நான் உன்னை அவருக்கு அறிமுகம் செய்துவிட்டு' இங்கிருந்து நீங்க வேண்டும். எனக்குச் சில முக்கிய அலுவல்கள் இருக்கின்றன. மூன்று நாட்களுக்குப் பிறகு நான் இங்கு வருவேன் அதுவரை நீ இங்கேயே இருந்தால் நாம் சந்திப்போம். மாறன்காரி வேறு வழிவகுத்துக் காட்டினால், நீ எனக்காக காத்திருக்க வேண்டாம், என்றான் சாத்தன் கணபதி

## 2. வேண்டாத விருந்தாளி

விடிந்தும் விடியா வெள்ளிளம் போதிலே ஒருவர் முன் போய் நிற்க வேண்டாமே என்ற நல்லெண்ணத்தோடு, இளம்வழுதியும் சாத்தனும் வசதியான இடமொன்றில் காலை உணவு உட்கொண்டு விட்டுச் சிறிது தங்கியிருந்து களைப்பாறினர்.

அவர்கள் தேடிவந்த சமயத்தில் மாறன்காரி உண்டு மகிழ்ந்து சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார். இருவரும் அவரை வணங்கி நின்றனர். மதுரையிலிருந்து வருகிறோம். இவர் என் நண்பர்—இளம்வழுதி' என்று அறிவித்தான் சாத்தன். அவனை அவர் முன்பே அறிந்திருந்தார்:

புதிதாக வந்தவர்களைக் கண்டதுமே, காரியோடு பேசிக் கொண்டிருந்தவர்கள் விடைபெற்று வெளியேறினார்கள்.

'மதுரையிலிருந்தா? ஹூம்!' என்று இழுத்தார் பெரியவர். இளம்வழுதி அவரை அவருக்குத் தெரியாமலே எடை போட்டுக் கொண்டிருந்தான்.

குறுநில மன்னர்போல் மிடுக்காக வாழ்ந்தவர் மாறன் காரி. கவலையற்று வளர்ந்த உடல். கட்டளையிட்டுக்

கனமேறி விட்ட குரல் முன் வளைந்த, நீண்ட கூர்மை யான மூக்கு கழுகுக் கண்கள். அவர் விரும்பும் போது, காக்கைப் பார்வையும் அங்கே வந்து சேரும் எதையும் எவரையும் நையாண்டி செய்வது போல் சுளிக்கும் உதடுகள். திட்டமிடும் மூளையின் வளத்தைக் காட்டும் அகன்ற நெற்றி. உலகையே அலட்சியமாகக் கருதும் ஒரு தோற்றம்.

இவற்றை ஆராய்ந்த வழுதியின் மனம், 'இவரை நம்பிப் பயனில்லை என்றே தோன்றுகிறது' என்று முணு முணுத்தது.

வெகு நேரம் வரை 'உட்காருங்கள்!' என்று சொல்ல வும் மனமில்லாதவர் போல் அவ்விருவரையும் நோக்கிய காரி, மெதுவாக 'ஏன் நிற்கிறீர்கள்? இருங்கள்' என்றார்

'நான் போக வேண்டும். வழுதி இங்கு இருப்பார். மங்கையர்க்கரசிப் பிராட்டி தங்களுக்குச் செய்தி அனுப்பி யிருக்கிறார்கள்' என்றான் கணபதி.

இளம்வழுதி திருமுகத்தை அவரிடம் தந்தான். அதை வாங்கிக் கண்களை ஓட்டிட்ட காரி, வாசித்து முடிந்ததும், வழுதியை மேலும் கீழும் உற்று நோக்கினார். பார்வை யைச் சாத்தன் மீது உற்றுநோக்கினார் 'உம். நீ போகிறா யாக்கும்?' என்றார்.

'ஆமாம் முக்கிய அலுவல்கள் உள்ளன' என்று கூறினான்.

'உணவு உண்டு செல்லலாமே?' என உபசரித்தார் அவர். அவன் பணிவுடன் மறுத்துவிட்டு, விடைபெற்றுச் சென்றான்.

மாறன்காரி இளம்வழுதியின் மேல் 'காக்கை நோக்கு' ஏவினார். அவர் புன்முறுவல் புரிந்தாரோ, புரிய வில்லையோ என்று ஐயுறும் விதத்தில் அவரது உதடு

களில் சிறு அசைவு கோடிட்டது. 'செவ்விருக்கை நாட்டுப் பெரும் வழுதி வழி வந்தவனா நீ? உம்' என்று மென்குர லில் பேசினார் அவர் 'ஆமாம்' பாண்டியர்கள் வாழ்ந்த வாழ்வு பழங்கதையாகி விட்டது, ஆள வேண்டியவர்கள் அடிமைகள் ஆகிவிட்டார்கள். அச்சம் அவர்களைச் செய லற்றவர்களாக்கிவிட்டது. அரியணை ஏறத் தகாதவர்கள் கோல் பிடித்து விட்டார்கள் நாடு பாழாகிவிட்டது' என்றான். வழுதி எதிர்பாராதபோது, 'அதற்கு நீ என்ன வேண்டுமென்கிறாய்?' என்று உறுமினார் அவர்.

அவன் திடுக்கிட்டான். அவனது திகைப்பைக் கண்டு மகிழ்வுற்றார் அவர்.

இளம்வழுதி வரகுணத்தேவரிடம் ஒரு நாள் உவகைப் பெருக்குடனும் உணர்வுத் துடிப்போடும் பேசத் துணிந் தது போலவே, காரியிடமும் தனது எண்ணங்களைத் தெரி விக்க முன்வந்தான் நாட்டு நிலை பற்றியும், மதுரையில் நிகழ்ந்தன பற்றியும் எடுத்துச் சொன்னான். தன் தாயின் ஆசைகள் பற்றிச் சொன்னான்.

'அன்னையின் ஆசைகள் என்றுமே பெரியன. அவற் றுக்கு அளவு இருக்கவே முடியாது!' என்றார் பெரியவர்.

என்ன கருத்தில் அவர் அவ்வாறு பேசினார் என்று அறிய முயல்பவன் போல் வழுதி, காரியின் முகத்தை நோக்கினான். அது வெண்கலத்தில் வார்த்தெடுத்த சிலை மாதிரி மினுமினுத்தது அதிலிருந்து அவன் எதையும் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

'உம் சொல்லு!' என்றார் காரி. அவர் பேசினாரோ, பேசவில்லையோ என்று ஐயுறச் செய்வதாக அமைந்தது அவ்வொலி.

அவன் தனது எண்ணங்கள், ஏக்கங்கள் பற்றிப் பேசினான்.

'இளைஞனின் கனவுகள் என்றுமே உணர்வு மயமானவை தான்!' என்றார் அவர்.

மீண்டும் அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான் வழுதி. அவனால் புரிந்து கொள்ள முடியாத புதிராகத் தான் இருந்தது அது.

அவன் மாமூலனார் பற்றியும் அவருடைய அறிவுரைகள பற்றியும் சொன்னான்.

'ஆலோசனைகள் கூறவும், பிறரைத் தூண்டிவிடவும் அறிஞர்கள் என்றுமே தயங்கமாட்டார்கள்' என்றார் காரி.

உள்ளத்தின் கருத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் சாளரமாகிற கண்கள் மூலம் ஏதாவது அறிய முடியுமா என ஆவலாக முயன்றான் வழுதி. பாதி மூடியும் மூடாமலும் காட்சி தந்த கண்கள் ஆழம் காண முடியாத கருங் குட்டைகள் போல் சலனமற்றிருந்தன.

மங்கையர்க்கரசி பற்றியும் அவள் அளித்த நம்பிக்கை பற்றியும் சொன்னான் அவன்.

பேச விரும்பாத நிலையாக இருந்தார் மாறன்காரி.

'உங்களால் எனக்கு உதவி எதுவும் செய்ய முடியாது. இல்லையா? என்று பொறுமையிழந்து, கேட்டுவிட்டான் வழுதி

அப்படி நான் சொன்னேனா? என்றார் பெரியவர்.

அதற்கு என்ன பதிலளிப்பது என்று தெரியதவனாய் அமர்ந்திருந்தான் இளம்வழுதி.

'மங்கையர்க்கரசியை உனக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்?' என்று அவர் வினவினார்.

அவர் நையாண்டிபண்ணுவது போல் சிரித்த மாதிரித் தோன்றியது அவனுக்கு. மறுபடியும் கவனமாகப் பார்த்த போது, உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டாத சிலை போல்தான் காட்சி தந்தது அவர் முகம்.

'அச்சுறுத்தும் நாட்கள்தான் அவலமான நிலைமை தான். என்றார் அவர். சிறிது நேரம் மௌனமாக இருந் தார். திடீரென்று, 'நீங்கள் இரண்டு பேரும் வடபறம்பு நாட்டுக்கு எப்போது வந்தீர்கள்? எப்படி வந்து சேர்ந் தீர்கள்?' என்று கேட்டார்.

மாறன்காரியின் இடப் பெயரை அவன் அப்பொழுது தான் அறிந்துகொண்டான் அவர் பெயரைச் சொன்ன சாத்தன்கணபதி அந்த நாட்டின் பெயரைச் சொல்ல மறந்து விட்டான் என்பதைஅவன் அப்பொழுதே உணர்ந் தான் எனினும அதை வெளியிடவில்லை. தங்களுடைய இரவுப் பயணம் பற்றி அவன் விவரித்தான்.

இளம்வழுதி கூறிமுடித்ததும், 'முதலில் உனக்கு ஓய்வும் தூக்கமும் தான் தேவை. நீராடி, உணவு உட் கொண்ட பிறகு, அமைதியான இடத்தில்படுத்து, நன்றாகத் தூங்கு நான் செய்யும் முதல் உதவி இது' என்றார் காரி. குறும்புத்தனமான சிறு முறுவல் அவரது வாயோரத்தில் சுழியிட்டதுபோல் தோன்றியது. நிச்சய மாகத் தீர்மானிக்க இயலவில்லை அவனால்.

மாறன்காரி நம்பத்தகுந்தவராகத் தோன்றவில்லை என்று அவன் மனம் மீண்டும் முனகியது. இங்கே வரு வதற்கு முன்னரே, இப்பிரயாணத்தினால் எவ்வித நன்மை யும் ஏற்படாது என்ற எண்ணம் எழுந்தது, தவறாத குறி யாகவே முடியும் போலும் என்று கருதினான் அவன். 'உதவி கோரி வந்தாயிற்று. முடிவாக அவர் கருத்தை அறியும் வரை இங்கேஇருந்துதானே ஆகவேண்டும்? அவர்

சொல்கிறபடி நடந்துதானே தீர வேண்டும்?' என்றும் அவன் நினைத்தான்.

குளிப்பதற்கு வேண்டிய வசதிகள் அவனுக்குச் செய்து தரப்பட்டன. அறுசுவை உண்டியும் கிடைத்தது. மீண்டும் அவனது ஆசைகள், கனவுகள் பற்றி எல்லாம் பேசுவதற்கும் வாய்ப்பு கிட்டியது. அவன் கூறியதைக் கேட்டிருந்த காரி தமது கருத்து எதையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவேயில்லை.

இளம்வழுதி அமைதியாக உறங்குவதற்கு ஏற்ற தனியிடத்தைக் காட்டும்படி ஒரு ஆளை ஏவினார் அவர். விசாலமான தோட்டத்தின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்ற தனிக் கட்டடத்தில் வசதிகள் நிறைந்த ஓர் அறையைச் சேர்ந்தான் வழுதி. தூக்கம் அவனுக்குத் தேவையாகத் தானிருந்தது. 'உண்ட கிறக்கமும்' தூண்டியது. ஆகவே, படுக்கையில் சாய்ந்ததும் அவன் சுகமான துயிலில் ஆழ்ந்தான்.

இளம்வழுதி கண் விழித்தபோது, தான் வெகு நேரம் தூங்கியிருக்க வேண்டும் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அன்று பொழுது வீணாகிவிட்டது போன்ற வருத்தம் அவன் உள்ளத்தை அழுத்தியது. 'மாறன் காரியை மீண்டும் கண்டு பேசி, அவரிடமிருந்து தெளிவான பதிலை உடனடியாகப் பெற்றாக வேண்டும்; அவரால் எவ்வித உதவியும் கிட்டாது என்று விளங்கிவிடுமானால் மேலும் வீண் பொழுது போக்காமல் அங்கிருந்து கிளம்பிவிட வேண்டியதுதான்; இரவாகிவிடுமே என்று கவலைப் பட்டுப் பயனில்லை' என்று முடிவு செய்தான்.

ஆனால் எதிர்பாராத அதிர்ச்சி அவனுக்காகக் காத்திருந்தது.

அவன் எழுந்து நின்று சோம்பல் முறித்துவிட்டுச் சாளரத்தின் வழியே வெளியே நோக்கியபடி நின்றான் ஒரு தட்டிலிருந்த பழங்களில் ஒன்றை எடுத்துக் கடித்துச் சுவைத்தான். பிறகு உடையைச் சரிப்படுத்திக்கொண்டு கதவைத் திறப்பதற்காகச் சென்றான். அவனது கை எவ்வளவு இழுத்து முயன்ற போதிலும், கதவும் திறந்து கொள்வதாயில்லை

அவன் தட்டினான், இடித்தான், வலுவோடு இழுத்தான் ஈ...கூங்!-அடைபட்ட கதவு அடைத்தபடியே கிடந்தது தவறுதலாக உட்புறத் தாழ்ப்பாள் எதுவும் விழுந்து தடையாக முரண்டிக் கிடக்கும் என்பதற்கில்லை. அவன் கண்கள் பலமுறை இதை உறுதிப்படுத்தி விட்டன. அவன் தன் முழு பலத்தோடு கதவை உலுக்கினான். வலுமிக்க இரட்டைக் கதவு அது, கதவின் இரு பகுதிகளையும் குலுக்கி இழுத்தான்.

உண்மை உறைத்தது. சூடாக இதயத்தைத் தாக்கியது ஆமாம். கதவு வெளியே பலமாகப் பூட்டப்பட்டிருந்தது அப்படியென்றால்? இதன் அர்த்தம்தான் என்ன? நல்லவர்போல் நடித்த மாறன்காரி நயவஞ்சகன் தானா? நம்பிக்கைத் துரோகிதானா? விருந்தாளி என்று உபசரித்துத் தன்னைச் சிறைப்படுத்துவதுதான் அவர் நோக்கமோ?

'அதே தான்! அவரை நம்புவதற்கில்லை என்று உள்ளம் குறுகுறுத்தது உண்மையாகிவிட்டதே!' என்று பதைபதைத்தான வழுதி.

கதவுடன் போராடிப் பயனில்லை; கூச்சலிட்டும் பயனில்லை என்று அறிந்து கொண்டதும், அவன் மனம் வெதும்பியவனாய், உணர்வுக் கொதிப்புற்றவனாய், அப்படியே உட்கார்ந்து விட்டான்.

# 3. பந்துடன் வந்த சுந்தரி

மாலை வேளையின் ஒளி மிகுந்த வெயிலால் விண்ணும் மண்ணும் தனி எழிலோடு மினுமினுத்தன. வானத்து நிலமும், மரங்களின் பசுமையும், மலர்க்கூட்டங்களின் வேறுபட்ட நிறங்களும் பளிச்சென இலங்கி, தனித் தனியாகவும் வர்ணத் தொகுப்புகளாகவும் கண்களைக் கவர்ந்தன. நிறைந்த விருந்தாக விளங்கிய அவை உள்ளத்திற்கும் உவகைதரும் தன்மை பெற்றிருந்தன.

எனினும் கொதிப்புற்ற உணர்வோடும் குமைந்து குமுறும் உள்ளத்தோடும் அறைக்குள் அடைப்பட்டுக் கிடந்த இளம்வழுதிக்கு அந்தக்காட்சிகள் இனிமையாகவு மில்லை. மனசுக்கு மகிழ்வு அளிப்பனவாகவும் இல்லை! நரித்தனம் பெற்றிருந்த மாறன் காரியைப் பழி வாங்க வேண்டும் என்று கொதித்தது அவன் உள்ளம். அதற்கு முந்தி அந்த அறையிலிருந்து வெளியேற வேண்டும்; அது தான் உடனடியாகச்செய்யவேண்டியது என்றஎண்ணமும் தலையெடுத்தே நின்றது. ஆனால் அவனுக்கு வழிதான் புலனாகவில்லை; மனசு ஆராய்ந்தது.

'இந்த மாறன்காரியும் வரகுணத்தேவரின்போன்றவர் தான் உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்றுபேசி, பிறரை ஏய்த்துத் தன்னலத்தோடு செயல்புரியும் வஞ்சகர் திருக் கூட்டம் வாழ்கிறவரை எந்த நாடும் வளம் பெற்று உயர் வடையாது. இந் நாடு வீழ்ச்சியுற்றதில் வியப்பே இல்லை என்று புகைந்தது அவன் சிந்தனை.

அவனது எண்ண ஓட்டத்தைத் தடுத்து, சற்றே திடுக்கிட வைப்பதற்காகவே வந்ததுபோல் 'தொப்'பென்று அறையினுள்ளே விழுந்தது ஒரு பந்து. சாளரத்தின்

வழியாகப் புகுந்து அவனருகே விழுந்து துள்ளிஉருண்டது அது, சுவரோரம் சென்று நின்றது.

'இதை யார் இப்படி எறிந்தது?' என்று கேட்டது வழுதியின் மனம். வெளியே புரண்டது அவன் பார்வை.

உயிர் பெற்ற பூச்செண்டுபோல் ஓடிவந்த ஒரு சிறுமி அவன் பார்வையில்பட்டாள். அவளுக்கு ஐந்துவயதுக்குள் தானிருக்கும். களிதுலங்கத் தத்திவரும் சின்னஞ்சிறு குருவி போல் அவளும் ஆனந்தமயமாகத் தோன்றினாள்.

அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்துக் கொண்ட வந்த சிறுமி, சாளரத்தின் அருகே நின்ற வழுதியைக்கண்டாள் குறுகுறுக்கும் அவள் விழிகள் அந்த அறைக் கதவின் முன்புறம் பூட்டு தொங்குவதையும் கவனித்தன, ஏதோ மகத்தான அற்புதத்தை நோக்குவதுபோல், விழி வியப் புடன், வாயில் விரலை வைத்துக்கொண்டு, அவனையே ஆச்சரியமாகப் பார்த்தாள், அவள். பிறகு அக்கா! அக்கா! இங்கே வாயேன். ஒரு அதிசயம். ஓடி வா. அக்கா!'' என்று கத்தினாள்.

''என்ன அதிசயம் கண்டுவிட்டாய்?'' என்ற கேள்வி எறிந்தபடி ஓடிவந்தாள் அவள் அக்காள்.

அந்தக் குரல் இளம்வழுதியின் உள்ளத்தில் இசை எழுப்பியது. அங்கு வந்து நின்றஉருவம் அவனது உணர்வு அலைகளை மகிழ்வால் துள்ள வைத்தது. தன் கண்கள் தன்னை ஏமாற்றவில்லையே என்ற நினைப்போடு, இமைகளை மூடிமூடித் திறந்தான் அவன். விரல்களால் கண்களைக் கசக்கினான். அது கனவோ, மயக்குத் தோற்றமோ அல்ல! அமுதவல்லிதான் அங்கு நின்றாள்

'இவள் இங்கு எப்படி வந்தாள்? எப்பொழுது வந்தாள்? ஏன் வந்தாள்?— எல்லாக் கேள்விகளையும்

சரமாரியாக கேட்டுத் தீர்த்துவிட வேண்டும்' என்று தவித்தது அவன் உள்ளம். துடித்த உதடுகள் சொற்களை ஒலிபரப்பியிருக்கும். ஆனால், அமுதவல்லி தனதுசெவ்விய உதடுகளில் ஒருவிரல் பதித்து, 'ஒன்றும் பேச வேண்டாம்' என்பதுபோல் எச்சரிக்கை செய்தாள்.

வழுதியின் திகைப்பையோ, அமுதவல்லியின் செய்கையையோ கவனிக்காத—பார்த்தாலும் புரிந்துகொள்ளும் திறன் பெற்றிராத — சிறுமி தனக்கு இயல்பான குதூகலத்தோடு கைகொட்டிச் சிரித்தாள், உற்சாகமாகக் கூறினாள்:

"நாம் பந்தை உள்ளே விட்டெறிந்தோமே, அதற்கு முந்தியே இந்த ஆளை யாரோ உள்ளே எறிந்திருக்கிறார்கள்! கதவு வெளியே பூட்டிக் கிடக்கிறது. இவர் உள்ளே எப்படிப் போனார் என்றே எனக்குத் தெரியவில்லை."

"எனக்கும் தெரியவில்லை, முத்து. இது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது" என்றாள் அமுதவல்லி.

"தாத்தாவிடம் கேட்கலாமென்றால், தாத்தா எங்கேயோ போய்விட்டாரே!" என்று வருத்தப்பட்டாள் முத்து எனும் அந்தச் சிறுமி.

"நாம் இங்கேயே நிற்கக்கூடாது வா!" என்று சிறுமியின் கையைப் பற்றி இழுத்தாள் அக்காள். அவள் முகத்தின் மலர்ச்சி வாடி விட்டதை வழுதி கண்டு கொண்டான்

"என் பந்து..." என்று சிறுமி சிணுங்கத் தொடங்கினாள்.

"அவரிடம் கேளு. அதை வெளியே வீசுவார்" என்று அமுதம் யோசனை சொன்னாள்.

'என் பந்தை வெளியே விட்டெறி. அது எனக்கு வேண்டும்' என்றாள் முத்து.

இளம்வழுதி சிரித்தபடி பந்தை எடுத்து வெளியே எறிந்தான். அதை ஆவலோடு கையில் பற்றிக்கொண்ட சிறுமி "நீ எப்படி வெளியே வருவாய்?" என்று கேட்டாள்.

"நான் வரமுடியாது. இங்கேயே கிடக்க வேண்டியது தான்" என்றான் அவன்.

"இருட்டிய பிறகு கூட வரா?"

"ஊம்' என்று தலையசைத்தான் வழுதி.

"உனக்குப் பயமாக இராது?"

"நான் என்ன செய்வது? வெளியே வர வழி இல்லையே" என்று அவன் சொன்னான்.

முத்து, இன்னும் என்னவோ கேட்பதற்கு வாயெடுத்தாள். ஆனால் அமுதவல்லி, "வா வா, நாம் இங்கே நிற்பது தவறு" என்று கூறி, அவளை இழுத்துக் கொண்டு வேகமாக நடந்து போனாள்.

அவள் போவதையே பார்த்து நின்ற இளம்வழுதி பெருமூச்செறிந்தான். 'அவள் இங்கு வருவானேன்' என்று அதிசயித்தான் அவன். அதனினும் மிகுந்த வியப்பையும் குழப்பத்தையும் உண்டாக்கியது அவள் போக்கு. அவள் ஏன் பேசாமலே திரும்பிச் சென்று விட்டாள்? தன்னையும் வாய் திறக்க வேண்டாம் என்று எச்சரித்ததும் ஏனோ?—எதுவும் விளங்கவில்லை. ஆயினும் ஒன்றுமட்டும் தெளிவாக அவன் நெஞ்சில் உறுத்தியது. மாறன்காரி தன்னை அறையினுள் அடைத்து வைத்திருப்பது நல்லதற்கல்ல; தனது உயிருக்கு உலை வைக்க அவர் திட்டம் தீட்டிக் கொண்டுதான் இருப்பார் என்று நிச்சயமாகப் பட்டது அவனுக்கு.

"இவரும் வரகுணத்தேவரின் ஆளாகவே இருப்பாரோ அவரிடம் கலந்து பேசிச் செயல்புரியத்தான் இவர்

வெளியூர் போயிருக்கிறாரோ என்னவோ! இங்கு வந்த சிறுமியின் தாத்தா மாறன்காரியாகத் தான் இருக்க வேண்டும்.''

அவன் மனம் குழம்பிக்கொண்டு தானிருந்தது அவன் வேதனையைப் பொருட்படுத்தாமலே காலம் ஓடியது. இருள் பரவியது. வழுதியின் உள்ளத்தில் நிறைந்துவிட்ட இருட்டைப்போலவே, அந்த அறையிலும் வெளிஉலகிலும் இருள் கனத்தது.

அவன் உணவைப்பற்றியோ, உறக்கத்தைப் பற்றியோ கவலை கொண்டானில்லை. எப்படியும் இவ்விடத்தை விட்டு வெளியேறியாக வேண்டும், அவனுடைய எண்ணங்களும் கனவுகளும் பொய்த்துப் போகாமல் இருப்பதற்காக தனது அன்னையின் ஆசையையும் ஆக்கினையையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவன் தப்பியாக வேண்டும். அதற்கு வழி என்ன? இதுதான் அவனது பெரிய கவலை

விழித்திருந்து அலுப்புற்ற உலகத்தின் ஒலிகள் இரவின் கரிய ஆழத்திலே ஓய்ந்து அடங்கிக் கொண்டிருந்தன. பகலில் ஒடுங்கிக் கிடந்த குரல்களும் கூவல்களும் இப்போது மேலெழுந்து ஓசையிட்டன. அவைகூடக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து ஒலித்தன. குளிர் காற்று ஊசலிட்டது. தனது எண்ணங்களும் தானுமாய்த் தனியே விழித்திருந்தான், இளம்வழுதி.

அதுவரையில் காதுகளில் விழாத புதிய ஓசை ஒன்றை அவன் உணர்வு இனங்கண்டு கொண்டது. யாரோ நடந்து வரும் காலடி ஓசைதான் அது. விழிப்புடன் துள்ளியெழுந்து நின்றான் வழுதி. தன்னைத் தாக்குவதற்காகத்தான் இருளில் பதுங்கி எவரோ வருகிறார்கள் என்று திண்ணமாகத் தோன்றியது அவனுக்கு

வேகமாக வந்த ஓசை கதவருகில் சிறிது தயங்கியது. பிறகு பூட்டைத் திறக்கும் ஒலி எழுந்தது. கதவு மெல் லெனத் திறந்தது.

இளம் வழுதி மூச்சைக்கூட மெதுவாக்கிக் கொண்டு அசையாது நின்றான் ஒரு சுவர் ஓரத்திலே. 'என்ன தூக்கமா?' என்ற கேள்வி அவனை உலுக்கியது. அக் கேள்வியைவிட, அதை ஒலி செய்த மென்குரல் அவனுக்குச் சிலிர்ப்பு உண்டாக்கியது. 'அமுதவல்லி நீதானா! என்று ஆவலோடு கேட்டபடி முன்னே நகர்ந்தான் அவன்.

''ஆமாம். நான்தான் என்று முணுமுணுத்தாள் அவள்.

''அமுதம்! உன்னைப்பற்றியே நான் எண்ணி வந் தேன். இங்கே பார்க்க முடியும் என்று நான் நினைக்கவே யில்லை...'' என்று ஆரம்பித்தான்.

அவன் பேச்சுக்கு அவள் தடை விதித்தாள். 'இப் போது வீண் பேச்சுப் பேசுவதற்கு நேரமில்லை மாறன் காரி எனக்கு உறவினர்தான், மதுரையில் நிலைமை சீர் கெட்டுப் போனதால், அஞ்சுவதற்குரிய சூழ்நிலை ஏற் பட்டு விட்டதால், இங்கு வந்து சிலகாலம் தங்கியிருக்க லாம் என்று என் அன்னை திட்டமிட்டார்கள். என் தாய்க்கு ஒருவகையில் அண்ணன் இந்தக்காரி, நாங்கள் இன்று காலையில்தான் இங்கு வந்து சேர்ந்தோம்...'' என்றாள்.

''நான்கூட இன்று காலையில்தான் இங்கு வந்தேன்; மாறன்காரியின் துணை கிட்டும்; எனது திட்டம் வெற்றி பெறும் என்று கணபதி என்னை இங்கு அழைத்து வந் தான்'' என்றான் வழுதி.

''காரி நல்லவர்தான். ஆனால் அவருடைய நலனுக்கு உங்கள் திட்டங்கள் குறுக்கே நிற்கின்றன. பாண்டி நாட்டைப் பழைய வளமான நிலைக்கு மாற்றவேண்டு

மென்ற ஆசை அவருக்கும் இருக்கிறது. ஆனா தனது மகன் மன்னனாகவேண்டும். தான் அவனை ஆட்டி வைக்கும் மூலவராக விளங்கவேண்டும் என்று அவர் நெடு நாட்களாகவே கனவு கண்டு வருகிறார் அதைக் கெடுக்கும் முறையில் செயலாற்றத் துணிகிறவர்களுக்கு அவர் துணை நிற்பார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?" என்றாள் அமுதம்.

"ஓகோ!" என்றான் வழுதி உண்மைத் தெளிவு பெற்றவனாய்.

"இந்த உண்மை நான் அறிந்துகொண்டதும், நீங்கள் இங்கேயே இருப்பது பெருங்கேடாக முடியும் என்று உணர்ந்தேன். எனது ஆற்றலுக்கு ஏற்ற முறையில், சில ஏற்பாடுகள் செய்து விட்டு. உங்களை விடுவிக்க இங்கு வந்தேன் மாறன்காரி மதுரைக்கோ, வேறு எங்கோ போயிருக்கிறார்; நாளைக்கு வந்து விடலாம். இந்தஇடை வேளையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவே வேண்டும் இவ்வழியே சென்றால் அதே அங்குள்ள மரத்தடியில் உங்களுக்காக ஒரு குதிரை காத்து நிற்கும். இரவோடு இரவாக நீங்கள் மறைந்து போவதே நல்லது. இன்று தெய்வம் என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. அதற்காக எப்படி நன்றி தெரிவிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை" என்று அமுதவல்லி உணர்ச்சிப் பெருக்கத்தோடு மொழிந்தாள்,

"அமுதம்! நீயே என்னைக் காக்க வந்த தெய்வமாகி விட்டாய். உனக்கு..." என்று வழுதி அவள் கைகளைப் பற்றினான்.

"காலம் வரட்டும். காத்திருப்போம். இப்பொழுது நீங்கள் சீக்கிரம் தப்பிச் செல்வதே அறிவுடையாகும்" என்றாள் அவள்.

அவள் பேச்சை மறுப்பதற்கில்லை என்று உணர்ந்த இளம்வழுதி நன்றியோடு, 'அமுதம், நீ செய்யும் உதவி மிக மிகப் பெரியது. இதை நான் மறக்க முடியாது. என்னால் உனக்குத் தீங்கு எதுவும் விளைந்துவிடக் கூடாதே என்று தான் அஞ்சுகிறேன்'' என்றான்

''அதைப்பற்றி கவலையே வேண்டாம், சென்று வாருங்கள்'' என்று விடை கொடுத்தாள் அவள்.

''நிச்சயமாக வருவேன், அமுதம். வெற்றியோடு மீண்டு வந்து உன்னைக் காண்பேன். திருவருள் நமக்குத் துணை நிற்கும் என்ற உறுதி என் உள்ளத்தில் நன்கு நிலைத்து விட்டது'' என்று கூறிய வழுதி, அவளைப் பிரிந்து செல்ல மனமில்லாதவனாய் நடந்தான்.

அவன் வெளியேறியதும் அமுதவல்லி அறைக்கதவை இழுத்து அடைத்து முன்போலவே பூட்டிவிட்டுச்சென்றாள்.

அவள் காட்டிய வழியில் நடந்த இளம்வழுதி குதிரையைக் கண்டு மகிழ்வுற்றான். ஊர் புறம் கடக்கும்வரை, மெதுவாகவே சென்று, இனி அஞ்சுவதற்கு எதுவுமில்லை என்ற துணிவு வந்ததும், குதிரையை வேகமாகச் செலுத்தினான். இப்போது அவன் உள்ளத்திலே குழப்பமில்லை. அவனுக்கு கவலையுமில்லை, அறிவிலே தெளிவு பிறந்திருந்தது- மனசில் ஊக்கமும் உற்சாகமும் நிறைந்துவிட்டன. அவனுள் மகத்தானதோர் புதுச்சக்தி தோன்றி அவனை இயக்குவது போலிருந்தது, இருளைக் கிழித்துச் செல்லும் சூறாவளிபோல முன்னே, முன்னே ஓடி தூரத்தை விழுங்கிச் சென்றது, அவன் குதிரை.

## 4. அன்னையிட்ட தீ

பழம் பாண்டி நாட்டின் கூற்றங்களும் உள்நாடுகளும் குழப்பத்திலும் பீதியிலும் சிக்கித்திண்டாடின. மதுரை

யிலிருந்து புறப்பட்ட களப்பிர வீரர்கள் பலப்பல பிரிவு களாகி, வெவ்வேறு திசைகளில் சென்று வெறிக்கூத்து ஆடிக்களித்தனர். அவர்கள் அடிப்பதித்த இடங்களில் எல்லாம் கொள்ளையும் கொலையும் தீயும் கொடிய தொத்து நோய் மாதிரிப் பரவின.

சில இடங்களில் ஒரு சிலர் அவர்களை எதிர்த்துப் போராட முன்வந்தனர். என்றாலும் திட்டமிட்டு, அணி வகுத்து உறுதியோடு நின்று தாக்குவதற்கு அவர்களுக்குப் போதிய பயிற்சியுமில்லை. வழி காட்டுதற்குத் தகுந்த தலைவனும் இல்லை. எனவே, எதிர்த்தவர்களில் பலர் கொலையுண்டனர். அஞ்சியவர்கள் சிதறி ஓடினர்.

அவர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்த அண்டை ஊர்க் காரர்கள் எதிர்ப்புக் காட்டாமலே ஓடி ஒளிந்து கொள் வதும் இயல்பாயிற்று; கன்னெஞ்சக் களப்பிரர்கள் பசும் பயிர்களை நாசமாக்கினார்கள். வெள்ளியையும் தங்கத்தை யும் கொள்ளையிட்டுச் சென்றார்கள்.

சிலசில ஊர்களில் முதிய பெண்கள் தந்திரத்தைக் கையாண்டு தப்பிவிட முயன்றார்கள். அடுத்த ஊரில் வெறியர் கூட்டம் பேயாட்டம் போடுகிறது. அது இத் திசையில் திரும்பக்கூடும் என்று தெரிந்ததுமே, ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் வீதியிலே பானைகளைப் போட்டு உடைத்தார்கள். தானியங்களையும் பற்பல பொருள்களை யும் சிதறிவிட்டு, தலைவிரி கோலமாக அமர்ந்து ஓலமிட்டு அழுதுபுலம்பினார்கள்! வெறியர்கள் வந்து கொள்ளை யடித்துச் சென்றுவிட்டதாக வசைபாடிக் கொண்டிருந் தார்கள்.

அவ்வீதிகளின் பக்கம் களப்பிரர்கள் வந்தவுடன் அங்குள்ள நிலைமையைக்கண்டதும், தங்களுக்கு முன்னரே வேறொரு கூட்டம் வந்து விளையாடி விட்டுப்போயிருப்ப

தாக எண்ணிக் கொண்டு திரும்பி வேறு திசையில் சென்று விடுவார்கள் என்பது அவர்கள் எண்ணம்.

அபூர்வமாகச் சில சமயங்களில் இந்த முறை ஊர்க்காரர்களுக்கு வெற்றி அளித்தது. அநேக தடவைகள் 'இன்னும் ஏதாவது மிஞ்சிக்கிடக்கும்' என்று ஆசைப்பட்டு வெறியர்கள் உள்ளே புகுந்து உண்மையைப் புரிந்து கொண்டு அதிகமான ஆத்திரத்தோடு அழிவு வேலை செய்வதும் சகஜமாயிற்று......

செவ்விருக்கை நாட்டில் இப்படி ஒரு சூழ்நிலை உருவாக்குவதற்கு இருந்தது. களப்பிரர்கள் எந்த நேரத்திலும் அங்கு வந்துவிடலாம் என்ற பயம் நிலவியது. பழி வாங்கக் காத்திருந்தார்கள் இளைஞர்கள்.

முதிய பெண்கள் வீட்டு முன்னால் பானைகளைப் போட்டு உடைப்பது பற்றி யோசிக்கலானார்கள்.

''நாம் ஏன் இவ்வாறு செய்யவேண்டும்? வீணாக அவற்றை இப்போது உடைப்பதைவிட, வெறியர்கள் வருகிறவரை காத்திருந்து அவர்கள் தலை மீதே போட்டு உடைக்கலாமே!', என்றாள் அன்னம். அவள்தான் இளம் வழுதியின் தாய் உள்ளத்தில் உறுதிபெற்றிருந்த மறக்குல மங்கை அவள். பணிந்து போவதோ, பயந்து ஒடுங்கிக் கிடப்பதோ அவளுக்கு உகந்ததல்ல

''அஞ்சி அஞ்சிச் சாவானேன்? இப்படிச் செத்த வாழ்வு வாழ்வதைவிட வீரமான முறையில் சாவை ஏற்றுக் கொள்வதே சிறந்தது'' என்று சொன்னாள் அன்னம்.

அவள் பேச்சைச் சிலரே கேட்கத் தயாராக இருந்தார்கள் மற்றவர்கள் முகத்தைச் சுளித்தார்கள்.

''இது பைத்தியக்காரத்தனம். வெறி பிடித்து வருகிற பேய்களை எதிர்த்து நாம் என்ன செய்யமுடியும்?'' என்றாள் ஒருத்தி.

''குதிரையின் காலடியில் விழுந்ததும், கத்தி வீச்சுப் பெற்றும் செத்துப் போகலாம்!'' என்று கேலியாகச் சொன்னாள் வேறொருத்தி.

''வெறியர்களை ஏமாற்றி வெற்றி பெற்று விடலாம் என்று எண்ணுவதும் பேதமைதான். இத்தகைய கூத்துக்கள் எத்தனையோ பழக்கமாகிவிட்டன அவர்களுக்கு. முதலில் ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால் அந்த ஏமாற்றமே அவர்களுடைய வெறியை மேலும் தூண்டி விடும்'' என்று அன்னம்மாள் கூறினாள்

தங்கள் தங்கள் விருப்பம் போல செயல் புரியத் துடித்தவர்கள் அவள் பேச்சைக் கேட்கவில்லை. அதற்காக அவள் வருந்தவுமில்லை

அன்னத்தின் உள்ளம் இளம்வழுதியை நினைத்தது. அவன் எங்கு என்ன செய்து கொண்டிருக்கிறானோ என்ற எண்ணம் எழுந்தது. அவனைப்பற்றி எண்ணும்போதெல்லாம், அவளுள் ஒரு உவகை பிறக்கும். அவளுக்கு மனநிறைவு உண்டாகும். அவனுடைய தந்தை இறந்த பிறகு, அவள்தான் அவனுக்குத் தாயாய், தந்தையாய், ஆசானாய் விளங்கினாள். தனது ஆசைகளையும், கனவுகளையும், ஏக்கங்களையும், உணர்வுத் துடிப்புக்களையும் சிறிது சிறிதாக அவனுக்குப் புகட்டி, அவனை நல்வழியில் உருவாக்கினாள். நாட்டுப்பற்றையும், குடிப்பெருமை சிறு வயது முதலே அவனுக்கு ஊட்டி, அவனை வீரனாக வளர்த்தாள். லட்சியக் கனலை அவனுள் எழுப்பினாள். தனித்தியங்கும் தன்மையும், தற்காத்துக்கொள்ளும் திறனும் பெற்றுவிட்டான் தன் மகன் என்ற உணர்வு

அவளுக்கு ஏற்பட்டதும், அவனைத் தனிவழியே அனுப்பி வைத்தாள் அந் நற்றாய்.

அவளைப் பிரிந்து மகன் சென்ற நாள் முதல், தாய்ப் பாசம் அவன் நினைவை அவள் உள்ளத்தில் பசுமையாய்க் காப்பாற்றியது. அவன் உயர்நிலை அடைவான்-காலமும் தக்கார் துணையும்தான் தேவை—என்று அவள் மனம் அடிக்கடி கூறியது. அவனைக் காணவேண்டும் என்ற ஆசை அவ்வப்போது தலை தூக்கத்தான் செய்தது. ஆயினும், எடுத்த காரியத்தைவெற்றிகரமாக முடிப்பதற்கு ஆவன செய்துகொண்டு அவன் திரும்பிவந்தால் போதும்-அப்படித்தான் அவன் திரும்புவான்—என்றும் அவள் எண்ணினாள்.

சில நாட்களாக அவள் உள்ளத்திலே அர்த்தமற்ற, தெளிவற்ற குழப்பம்வந்து சூழத்தலைப்பட்டது. வானில் ஒரு மூலையில் பிறக்கும் சிறு மேகம் வர வரப் பெரிதாகி, எங்கும் பரந்து, கறுத்து, சோர்வும் கலக்கமும் தரக்கூடிய அழுக்குப்படலம் போன்று கனத்துக் கவிந்து விடுவது போல, அந்த ஒற்றை உணர்வு-உள் மனசின் உந்துதலால் பிறந்த ஏதோ ஒரு உணர்ச்சிக் குழப்பம்—அவளது உள்ளம் முழுவதையும் நிறைத்து, வேற்றியால் கனத்து, அமைதியை அடைந்து வந்தது. தன் மகனைத்தான் இனி மேல் ஒருமுறைக் கூடக் கண்ணால் காண முடியாமலே போகலாம் என்ற உணர்வு ஏனோ அவளுக்கு ஏற்படலாயிற்று.

அன்றும் அவ்வுணர்வே மேலோங்கி நின்றது அவளுக்கு. அன்று ஏதோ விபரீதம் நேரத்தான் போகிறது என்று அன்னத்தின் உள்ளுணர்வு பேசியது. 'இளம் வழுதி இங்கிருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்குமே!' என்ற ஆசை அடிக்கடி அரித்துக்கொண்டிருந்தது. அவன் வரமாட்டானா, திடீரென்று வந்து வெளியே நின்று

'அம்மா!' என்று வாய்நிறைய உச்சரித்து வீட்டினுள் எட்டிப் பார்க்க மாட்டானா என்று தவித்தது அத் தாயுள்ளம்.

நேரம் ஆக ஆக அவள் உள்ளத்திலும் உணர்விலும் தெளிவற்ற பரபரப்பு ஏற்பட்டது ஒவ்வொரு வீட்டிலும் ஊரிலும் கூட ஒருவிதப் பரபரப்பு ஊர்ந்தது. கண்ணுக்குப் புலனாகாத ஒருவிஷ ஜந்துவின்—அல்லது அதீத சக்தியின்—பயங்கரமான மூச்சு, காற்றோடு காற்றாகக் கலந்து வருவதுபோல் தோன்றியது. உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும்—இரத்தத்தை உறையச் செய்யும்-உடலெல்லாம் புல்லரிப்பு ஏற்படுத்தும்—அம்மாயசக்தியின் பனித்தன மென்விரல்கள் நீண்டு, எங்கும் தடவி, எல்லாவற்றையும் அகப்படப்பற்றி—அள்ளிப் பிழித்து திருகி—எடுப்பது போலிருந்தது. அன்னம்கூட அந்த 'ஜுர வேகத்திற்கு' ஆளாகித் திணறினாள்.

அச்சம் தரும் உணர்வுக்கு ஒலி உருவம் கொடுத்தது போல் மிதந்து வந்தது குதிரைகளின் குளம்பு ஓசை. வெறியர்களின் ஆரவாரக் கூச்சல் தொடர்ந்தது. அபலைகளின் அவலக் குரல் ஒரு மூலையில் எழுந்தது. சிறிது நேரத்திலேயே அது பேரொலியாய்—பெருத்த ஓப்பாரியாய் செயல்திறம் இழந்தவரின் வெற்று ஓலமாய்க் கனத்து, எங்கும் பெருகியது. அவ்வூரே கொலைகளின் பண்ணையாக மாறியது; கொள்ளையின் களஞ்சியமாகியது; அநீதியின்-வஞ்சகத்தின்-கொடூரத்தின் பேய்க் களமாகத் திகழ்ந்தது. தப்பி ஓட முயல்வோரும் தடுக்கி விழுவோரும் தொல்லை கொடுப்போரும், கொலை புரிவோரும் முட்டி மோதிக் குழப்பினர்; குழப்பத்தைப் போற்றி வளர்த்தனர்.

அன்னம் தன்நிலை மறந்தாள். உணர்ச்சி வயப்பட்டாள். காளியாக மாறி நின்றாள். நீண்ட வேல் கம்பு ஒன்றை அவள் கரங்கள் அழுத்தமாகப் பற்றியிருந்தன.

கருக்கிருட்டைத் திரட்டி, உருக்கின் வலிமையை அதற்கு ஏற்றி, உயிர்த் துடிப்பையும் புகுத்தி அற்புதமான உருவில் படைத்துவிட்டது போல் திகழ்ந்த அழகிய, எடுப்பும் நிறைந்த, குதிரை ஒன்று வீதியில் பாய்ந்து வந்தது இரக்கம் எனும் ஓர் உணர்வு இருப்பதையே அறிந்திராத அரக்கன் போன்ற களப்பிரன் ஒருவன் அதன் மீதிருந்தான், கருங்கல்லால் செய்த சிலை போன்ற அவன் முகத்தில் தீத் துண்டங்கள் போல் மிளிர்ந்தன பெரிய விழிகள். குடியினாலும் கொடுமையினாலும் சிவந்திருந் தன அவை.

தாயைப் பிரிந்த மகவொன்று அழுதுகொண்டு வீதியில் தள்ளாடி நடந்தது. பாபம் எதையும் அறியா அச் சின்னஞ்சிறு உருவத்தின் மீது மறலியின் திரு உருவம் போன்ற குதிரையைத் திருப்ப எத்தனித்தான் அதன் மேலிருந்த முரடன்.

வழுதியின் தாய் அதை உணர்ந்தாள். அவள் பெண். உயிர்குலத்தின் தாய். அன்பை, பொறுமையை, தியாகத் தைப் போற்றுகின்ற மென்மையின் திருக்கோயில், தன் உயிரையே உலகினுக்கு உவந்தளிக்கும் பண்பு பெற்ற தமிழன்னை.

அவள் உள்ளம் துடித்தது. உணர்வு கொதித்தது. அங்கங்கள் வேக இயக்கம் பெற்றன.

ஒரு கண நிகழ்ச்சி. அவள் கைகள் பிடித்திருந்த வேல் களப்பிரனின் நெஞ்சில் பாய்ந்தது, அவன் என்ன ஆனான் என்று கவனிக்ககூடக் காத்திராமல் அன்னம் குழந்தையைப் பற்றி எடுக்கக் தாவிப் பாய்ந்தாள். அதே வேளையில் கார் மேனிப் பெருங் குதிரையின் கால் ஒன்று அவளை மோதியது. அவள் தரையில் வீழ்ந்தாள் குதிரை யின் இரும்புக் கால்களில் ஒன்று அவள் மார்பில் மிதித்துத்

துவைத்தது. பின் வந்த மறுகால் அவ்வுடலைப் பந்தாடி விட்டு, முன் பாய்ந்தது.

குழந்தை நகர்ந்துவிட்டது. அதன் நலனில் அக்கறை கொண்டு பாய்ந்த அன்னம் தான் மாய்ந்துபட்டாள்!

● ● ●

இளம்வழுதி வந்து சேர்ந்தான், கடுங்காற்றுப்போல.

செவ்விருக்கை நாடு இந்த நிலைக்கு வந்திருக்கும் என்று கனவிலும் கருதியதில்லை அவன். தனது தாய் இப்படி ஒரு முடிவை அடைந்திருப்பாள் என்று அவன் எவ்வாறு எண்ணியிருக்க முடியும்?

அமுதவல்லி அருளைப் பெற்று, வேகமாகக் கிளம்பிய வழுதி அன்னையின் அன்பு முகத்தைக் காண வேண்டும் என்ற துடிப்போடு பிரயாணம் செய்தான். பசி, வருத்தம் பார்த்தானில்லை; சுகமாகப் படுத்துக் கண் துஞ்ச வேண்டும் என்று கருதினானில்லை. வழியில் எதிர்ப்பட்ட இன்னல்களை எல்லாம் பெரிது படுத்தினானில்லை. அவ்வாறு வந்தவனுக்காகக் காத்திருந்த காட்சியோ...?

பேய்கள் விளையாடிய சுடுகாடு மாதிரி இருந்தது செவ்விருக்கை நாடு. தீயின் செந்நாக்குகள் அங்குமிங்கும், கொள்ளிவாய்ப் பிசாசுகள் மாதிரி, குதித்தாடி மின்னின. உயிரிழந்தோரும், குறை உடலினரும் கோரமாகக் கிடந்தனர் எங்கும்.

அவன் வேகமாக சென்றான், தன் தாய் இருக்க வேண்டிய வீடு நோக்கி. அவள் உடல் கிடந்த நிலையைக் கண்டதும் அவன் இதயம் வெடித்து விடாமலிருந்தது அவனுக்கு அதிசயமாகத்தான் பட்டது.

அவன் கண்கள் கலங்கின; உள்ளம் துயரத்தால் கனத்தது. பின் கோபத்தால் உறைந்தது. அவன் கைகள் வாளை இறுகப் பற்றின.

அவன் மனம் கொதித்தது. குருதி கொதித்தது. கொதி நிலைபெற்ற எண்ணங்கள் அவன் மூளையைத் தகித்தன.

அவன் உணர்வு கொதிப்புற்றது. அவன் நெஞ்சு அனல் மூச்சை உயிர்த்தது. அவனே குமைந்து குமுறும் எரிமலையாகி நின்றான்.

அவன் உள்ளம் இசைத்தது:

'வாழ்க எம் அன்னை! வாழ்க நின் புகழ்! உன் திருவருள் என்றும் எனக்குக் கிட்டுக! ஆற்றல் மிக்கோர் வாழ்ந்து, தர்மம் வளர்த்துச்சிறப்புறப் போற்றிய இத்திரு நாட்டில் மாற்றவர் புகுந்தனர்; களங்கம் விதைத்தனர்; தீமையே வளர்த்தனர். இத் தாய்த்திரு நாட்டை, பேய்த்தனம் பெற்றோர்—உயர் பண்பினை அறியார்—இழிதன வெறியர் பிடியிலிருந்து மீட்டே தீர்வேன். இனியும் பொறுத்துக் கொண்டு வாழ்வது ஒரு வாழ்வு ஆகுமா? வெற்றி பெறுவோம், இல்லையேல், சமரினில் வீழ்வோம்...

அன்னையின் பாதங்களைத் தொட்டு வணங்கினான் இளம்வழுதி, அங்கிருந்து அகன்றான்.

## 5. குமுறும் எரிமலை

'அச் சிறுபயல் எங்கிருந்தாலும் சரி; அவனைத் தேடிப்பிடித்துக் கொல்ல வேண்டியது உங்கள் கடமை, அப்படி அவன் எங்கே பறந்து பதுங்கி விடப்போகிறான்? இத்தென்னாட்டின் ஒரு மூலையில் தானே அலைவான்?' என்று உறுமினார் மாறன்காரி.

தனது திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு உரிய காலம் வந்து விட்டது என்ற களிப்புடன் வீடு திரும்பிய காரி

திடுக்கிட நேர்ந்தது, இளம்வழுதி காணாமல் போய் விட்டான் என்பதை அறிந்ததும்.

''எப்படிப் போனான்? யார் அவனை வெளியே திறந்து விட்டது? அவனுக்கு உதவி செய்த துரோகி யார்?''— இவ்வாறெல்லாம் சீறி விழுந்தார் அவர்

'எனக்குத் தெரியாது!'' எங்களுக்குத் தெரியாது' என்று தான் எல்லோரும் பதில் அளித்தார்கள்.

'அவன் என்ன பேயா, பிசாசா? கதவு பூட்டிக்கிடக்கும் போதே வெளியேறி விடுவதற்கு?' எனச் சிடுசிடுத்தார் காரி.

'அதுதான் எங்களுக்கும் வியப்பாகஇருக்கிறது' என்று சிலர் முனங்கினர்.

'அவனுக்கு மந்திரம் மாயம் ஏதாவது தெரிந்திருக்கும்' எப்படியோ புகைமாதிரி வெளியே போய் விட்டான். என்று ஒரு கிழவன் முணுமுணுத்தான்.

'மூடு வாயை, உளறாதே. அவன் சாதாரண ஆள் தான். அவனுக்கு வேண்டிய யாரோ இருக்கிறார்கள். எவரும் அறியாமல் அவனுக்கு உதவி புரிந்திருக்கிறார்கள். அவ்விதம் செய்தது யார் என்று தெரிந்தால்—அது யாராக இருந்தாலும்... சிறிது கூட இரக்கம் காட்டமாட்டேன். மாறு கால் மாறு கை வாங்கி, கழுகுகளும் காக்கைகளும் கொத்திக் குதறும்படி வெட்ட வெளியில் வீசி எறிவேன். சுண்ணாம்புக் காளவாயில் போடும்படி ஏவுவேன்' என்று கொதிப்புடன் கத்தினார்.

அவர் அவ்வாறு செய்யக் கூடியவரே என்பது அவரைச் சேர்ந்தவர்களுக்கு நன்கு தெரியும். அவர் சினம் கணத்துக்குக் கணம் அதிகரித்து வருவதை உணர்ந்த பலரும் நடுங்கினார்கள். ஆயினும் யார் அவ்வளவு துணிவுடன்

செயல் புரிந்திருக்கக் கூடும் என்று ஒருவரும் ஊகிக்க முடியவில்லை

மாறன்காரி அமுதவல்லியைப் பற்றி சந்தேகம் கொள்ளவேயில்லை எப்படி அவர் அவளைச் சந்தேகிக்க முடியும்? 'எவனோ ஒருவன்' தான் உண்ட சோற்றுக்குத் துரோகம் செய்திருக்கிறான் என்றே அவர் நம்பினார். 'எவளோ ஒருத்தி' அவ்விதம் செய்திருக்கலாம் என்று அவர் அறிவு உணர்த்தவுமில்லை.

'இதை பின்னர் கவனித்துக் கொள்ளலாம் முதலில் அவனைப் பிடித்து, ஒழித்துக்கட்ட வேண்டும்' என்று கருதினார் காரி ' கழுகிடமிருந்து அல்பக் கோழிக்குஞ்சு தப்பிவிட முடியுமோ? ஒரு முறை பிடியிலிருந்து நழுவி விட்டதும், பிழைத்தோம் என்று மனப்பால் குடிப்பது இயல்பு. தன் தவறை அவன் விரைவிலேயே உணர்வான்' என்றது அவர் மனம்

இளம்வழுதியை இனம் கண்டு கொள்ள முடியும் என்று உறுதியாகக் கூறியவன் அவருடைய ஆட்களில் ஒரே ஒருவன்தான் இருந்தான் அதற்காக மாறன்காரி வருத்தப்படவில்லை.

'உங்களைவிட நன்றியுள்ள வேடன் இருக்கிறான். அவனிடமிருந்து வழுதி தப்பி ஓடுவது என்பது நடக்க முடியாத செயலேயாகும்' என்று அவர் திடமாக அறிவித்தார். வேடன் எனும் வேட்டை நாயைத்தான் அவர் குறிப்பிட்டார்.

வேடன் குறி தவறாது பாய்ந்து, கவ்விப் பற்றக்கூடிய பேராற்றல் பெற்ற நாய்தான். காற்றோடு போட்டியிட்டுக் கடுவேகத்தில் செல்லும திறன் அதற்கு உண்டு.

வழுதி தங்கியிருந்த அறைக்குள் அந்நாய் அழைத்துச் செல்லப்பட்டது. அவன் படுத்திருந்த இடத்தையும், அவன்

தொட்ட பொருள்களையும் அது மோப்பம் பிடித்தது. பிறகு, வழுதி நடந்துபோன தடத்தைப் பின்பற்றிச் சென்றது. அவனுக்காகக் குதிரை காத்து நின்ற இடத்தைக் கண்டதும், ஒரு குரைப்புக் குரைத்தது ஓடத் தொடங்கியது.

அதைப் பின் தொடர்ந்து குதிரைகள் மீது செல்லும்படி ஐந்து பேரை அனுப்பி வைத்தார் மாறன்காரி. 'வழுதி நிச்சயம் அகப்பட்டு விடுவான்' என்று அவர் உள்ளம் திருப்தி அடைந்தது.

காரி மனநிறைவுடன் வீற்றிருந்த போது வந்து சேர்ந்தான் சாத்தான் கணபதி. 'இளம்வழுதி எங்கே?' என்று கேட்டான்.

'எனக்கென்ன தெரியும்!' என்று அலட்சியமாகப் பதிலளித்தார் அவர்

'நீங்கள் அவனை எங்கேனும் அனுப்பி வைத்தீர்களா?'

'நான் ஏன் அவனை அனுப்பப் போகிறேன்!' என்று அழுத்தலாகப் பேசினார் காரி.

'பின்னே?'

'இரண்டு நாட்களுக்கு முன், அவன் போய்விட்டான். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமலே ஓடி விட்டான்... நன்றி கெட்டவன்!' என்று முனங்கினார் அவர்.

"'நான் வரும்வரை இங்கேயே தங்கியிருக்கும்படி சொன்னேன்...''

'வேற்றூர் சென்றிருந்த நான் திரும்பி வருகிற வரை கூட அவன் காத்திருக்கவில்லையே!' என்று கூறி, வறட்டுச் சிரிப்பு ஒன்றைச் சிதறினார் பெரியவர்.

'நீங்கள் உதவி புரிவது பற்றி ஏதாவது சொன்னீர்களோ அவனிடம்?' என்று விவரம் தெரிந்து கொள்ளும் ஆவலோடு பேசினான் கணபதி.

ஓரக்கண்ணால் அவனை எடை போட்டவாறே அறிவித்தார் காரி: 'முடியும் என்று சொல்லவில்லை. முடியாது என்றும் கூறவில்லை. ஒய்வு பெறு, பின்னர் பேசுவோம் என்று சொல்லியிருந்தேன். அதற்குள் வேறு முக்கிய அலுவலின் பேரில் நான் வெளியூர் சென்றுவிட்டேன். திரும்பி வந்தபோது இவன் இங்கே இல்லை. எங்கு போனானோ, யாருக்கும் தெரியவில்லை!'

இளம்வழுதி ஏன் அப்படிச் செய்தான் என்ற ஐயம் சாத்தனுக்கு ஏற்பட்டது. இவர் பேச்சில் உண்மை எவ்வளவு இருக்குமோ என்றும் அவன் மனம் சந்தேகித்தது.

அவன் விடைபெற்றுக்கொள்ள முயன்றான் ஆனால், மாறன்காரியோ விருந்து உண்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று வற்புறுத்தினார். சென்ற முறை வந்து அவன் உடனடியாகத் திரும்பிச் சென்றுவிட்டதற்காக அவர் பெரிதும் குறைபட்டுக் கொண்டார். ஆகவே அவன் அங்கு தங்க வேண்டியதும் அவசியமாயிற்று.

அவ்வீட்டில், துள்ளலும் துடிப்புமாக ஆடிக்களித்த சிறுமி முத்து, சாத்தன் கணபதியின் கவனத்தைக் கவர்ந்தாள். அவனுக்கு என்றுமே குழந்தைகளிடம் பாசம் அதிகம். விளையாட்டுப் பிள்ளையான முத்துவிடம் அவன் அன்பு காட்டியது அதிசயமல்லதான்.

அந்தச் சிறுபெண்ணை அழைத்துக்கொண்டு அவன் அங்குமிங்கும் அலைந்து வேடிக்கை காட்டி வந்தான், தோட்டத்து வீட்டின் அருகே வந்ததும் அவள் பயந்தவள் போல் முகத்தை வைத்துக்கொண்டு, 'நாம் அங்கே போகக் கூடாது!' என்று சொன்னாள்.

அதை அவள் சொன்ன விதமும், அவளுடைய முக பாவமும் அவனுக்கு வியப்பளித்தன. 'ஏன்? அங்கே பேய் ஏதாவது இருக்கிறதோ?' என்று கேட்டான்.

'ஊகும். ஒரு ஆள் உள்ளே இருந்தது. வெளியே பெரிய பூட்டு போட்டுப் பூட்டியிருந்தார்கள். அந்த ஆள் எப்படியோ உள்ளே போய்விட்டது. பிறகு, கதவைத் திறக்காமல் எப்படியோ வெளியே வந்து காணாமலே போய்விட்டது. அந்த ஆள் எங்கே போயிருக்கும்? அது தாத்தாவுக்கே புரியவில்லை. அவனைப் பிடிக்க எங்கள் வேடன் ஓடிப்போயிருக்கிறது...'

சிறுமியின் பேச்சு சாத்தனின் ஆவலைத் தூண்டியது. 'வேடனா? அது யார்?' என்றான்.

'வேடன் தெரியாது? ஐய! அது பெரிய வேட்டை நாய். அந்த ஆளை அது பிடித்துவிடும். கடித்துக்கொன்று விடும் தெரியுமா?' என்றாள் சிறுமி.

'இந்த வீட்டினுள்ளே இருந்தஆளை நீ பார்த்தாயா?'' என்று கேட்டான் அவன்.

'ஓ!' என்று உற்சாகமாகச் சொல்லி, தனது சந்திப்பைச் சுவையாக வர்ணித்தாள் அவள்.

'அவன் எப்படியிருந்தான்?' அவனைப் பார்ப்ப தற்கே பயமாக இருந்ததோ?' என்று சாதுரியமாக அவன் விசாரித்தான்.

'இல்லே...உன்னைப்போல்தான் இருந்தார். நல்லவர் தான், உள்ளே போன என் பந்தை எடுத்துக் கொடுத் தாரே!' என்று முத்து பெருமையாகப் பேசினாள்.

சாத்தன் கணபதியின் உள்ளத்தில் தலையெடுத்திருந்த சந்தேகம் இப்போது வலுப்பெற்று வளர்ந்தது. அதை எவ்விதம் தெளிவுபடுத்திக்கொள்வது என்று புரியாமல் திகைத்தான் அவன்.

'முத்து, உன்னை, எங்கெல்லாம் தேடுவது?'' என்று கேட்டுக்கொண்டே வந்து சேர்ந்தாள் அமுதவல்லி

முத்து சிரித்தாள். 'இங்கே உள்ளே ஆள் இருந்தது அக்காளுக்கும் தெரியும்' என்று சாத்தனிடம் சொன்னாள்.

அமுதவல்லி அவனைக் கவனித்தாள். நீங்கள் இளம் வழுதியின் நண்பர் என்று நினைக்கிறேன். அவரை இங்கு அழைத்து வந்தது நீங்கள்தானே?'' என்று வினவினாள்.

''ஆமாம். நான்தான் சாத்தன் கணபதி.

'மகிழ்ச்சி' என்றாள் அமுதம். 'நீங்கள் நல்லது எண்ணிச் செய்தீர்கள். ஆனால் அது அவரை இன்னலில் ஆழ்த்திவிட்டது அவர் இங்கு சிறை வைக்கப்பட்டார். தெய்வத் துணையால் இம்முறை தப்பிவிட்டார். இனி என்ன நேருமோ தெரியாது... முத்து ஓடி வா. அம்மா தேடுகிறார்கள்' என்று சொல்லி, சிறுமியை அழைத்துக் கொண்டு சென்றாள்.

மாறன்காரி ஏதோ சதிவேலை செய்கிறார் என்று புரிந்துகொண்டான் அவன் அவருடைய பகைமையை ஏற்றுக்கொள்ள அவன் விரும்பவில்லை. அதனால் ஒன்றும் நிகழாததுபோலவும் நடந்துகொண்டான். விருந்துண்டு, இன்முகத்தோடு விடை பெற்றுச் சென்றான்

மாறன்காரியின் உண்மைத்தன்மையை மங்கையர்க் கரசிப் பிராட்டிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியது அவசியம் என்று சாத்தன் கருதினான். நேரே மதுரை சென்று, தான் தெரிந்து கொண்டவற்றை அவளுக்குக் சொன்னான்.

'வழுதி செவ்விருக்கை நாடு நோக்கிப் போயிருப்பான் என்றே நினைக்கிறேன். அவனைத் தேடிப்பிடித்துக்கொல் லும்படி மாறன்காரி ஆட்களை அனுப்பி இருக்கிறார்.

காரியைக் காணச் செல்வதில் வழுதிக்கு விருப்பம் இருந்ததில்லை. அவரைச் சந்திப்பதால் பயன் விளையாது என்ற ஐயம் அவனுக்கு எழுந்ததை நான் உணர்ந்தேன். நான்தான் வற்புறுத்தி, அவனை அங்கேயே தங்கியிருக்கும்படி சொன்னேன். இப்போது வழுதிக்கு ஆபத்து சூழ்ந்துவிட்டதால், அவனை எச்சரித்து அவனுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பும் என்னையே சேருகிறது. உங்களிடம் இதைக் கூறிவிட்டுப் போகவே இங்கு வந்தேன்!' என்று அறிவித்தான் சாத்தன்

'மாறன்காரி நம்பிக்கைத் துரோகியாக மாறுவார் என்று நான் நினைக்கவேயில்லை. வழுதிக்கு வழிகாட்ட முன்வந்தது நான்தானே? ஆகவே தவறான வழிகாட்டிய பழி என்னையே சேரும். அதற்குத்தகுந்த மாற்று கண்டு வழுதிக்கு உதவி செய்தால்தான் என் உள்ளம் அமைதியுறும்' என்று மங்கையர்க்கரசி சொன்னாள்.

சாத்தன் மேலும் வீண் பொழுது போக்கவில்லை. அவன் குதிரை தெற்கு நோக்கு அம்பெனப் பாய்ந்தது.

## 6. பொங்கும் காட்டாறு

சிறு தீப்பொறி ஒன்று. ஒரே ஒரு பொறிதான். மினுமினுக்கும் அது உலர்ந்த சருகுகளிடையே விழுகிறது. கனிகிறது சிவப்பு பெரிதாகிறது. ஒற்றைப் பொறி ஒளிச் சிரிப்பு சிரிக்கிறது. பெரும் நெருப்பாகப் படர்கிறது காய்ந்த புல். பூண்டு, வைக்கோல், வாடிய செடிகள், பட்ட மரங்கள் எல்லாம் உதவி புரிகின்றன. அது காட்டுத்தீயாகச்சீறுகிறது. வெறிக்கூத்து ஆடுகிறது.

சிறு சிறு துளிகளாக விழுகின்ற மழைநீர், மலையின் பரப்பில் அங்குமிங்குமாக நிற்கிறது. அசைகிறது.

நெளிந்து நகர்கிறது. பல நீர்க்கோடுகள் கூடுகின்றன. ஓடுகின்றன. சிற்றாறு ஆகிச் சலசலத்து முன்னேறுகின்றன. மேலும் மழை பெய்யப் பெய்ய, பல கிளைகள் வந்துகூட, சிற்றாறு பேயாறாக மாறுகிறது, பெருக்கெடுத்து ஓடிவந்து அடித்துப்புரண்டு அருவியாய் வீழ்ந்து வெறி வேகத்தோடு ஓடுகிறது அதன் எதிர்ப்பட்டவை அனைத்தும் அழிந்துபடுகின்றன.

மனித உணர்ச்சியும் நெருப்புப்போல் பரவக்கூடியது தான். எங்கும் பரவி, எல்லோரையும் பற்றிக்கொள்ளக் கூடிய உணர்வுக் கொதிப்பு கூட காட்டாறுபோல் வெறி வேகத்தோடு இயங்க வல்லதேயாகும்.

இளம்வழுதி தனியாகத்தான் கிளம்பினான். ஆயினும் அவனுடைய உணர்ச்சிக் கொதிப்பு மிக்க வலிமையுடையயது. அவனுடைய சொல்லும் செயலும் தகுந்த எதிரொலி எழுப்பக்கூடிய சூழ்நிலை நாட்டிலே ஏற்பட்டிருந்தது. அவனது எண்ணங்களையும், ஆசைத் துடிப்புகளையும் ஏற்று, அவனுக்குத்தேவையான உதவிகளைச்செய்வதற்கு வேண்டிய ஒரு பக்குவம் மக்களிடையே பரிணமித்திருந்தது.

அவரவர் தொழிலைச் செய்துகொண்டு, அமைதியாக வாழ்ந்து வந்த தங்களைக் கொடுமைப்படுத்தி, தொல்லைக்கு ஆளாக்கி, அச்சத்தையும் அவலமான நிலைமையையும் எங்கும் பரப்பி வந்த வீணர்களுக்கு அடங்கி ஒடுங்கிக் கிடப்பதில் பயனில்லை என்ற மனப்பண்பு தலைதூக்கியிருந்தது. பொறுமை மிகுந்த பசுகூட, எல்லை மீறப்பட்டால் சீறி எதிர்க்கத் துணிகிறது. புழுக்களும் தலை தூக்கி எதிர்ப்பைக்காட்ட முரண்டுகின்றன. மனிதர்கள் மட்டும் எவ்வளவு காலம் உணர்வற்று ஒடுங்கிக்கிடக்க முடியும்?

சிலர் சேர்ந்தனர். பலர் ஆகினர். ஒருபடை ஆயிற்று. தடந்தோளினர்; வீரம் செறிந்தவர்: வாளேந்திய கையினர், ஊழையும் வாதுக்கு இழுக்கும் உரமேறிய நெஞ்சினர்.

அழிவை விடுத்துச் சென்ற களப்பிரர்களைத் தேடி, அவர்கள் போன வழியையே தொடர்ந்தார்கள் வீர மறவர்கள். அவர்கள் பார்வையில் பட்ட களப்பிரர்கள் தப்பியதில்லை, கொடியரைக் கொன்றுவிட்டு, குதிரைகளையும் ஆயுதங்களையும் வீரர்கள் தங்களுடையதாக்கி, நாவலிட்டுக் களித்தார்கள். சிலசமயம் இவ் வீரர்களில் சிலர் இறக்கவும் நேர்ந்தது.

ஊர் ஊராகச் சென்று வீட்டுக்கு ஒரு வீரன் தரும்படி வேண்டினான் வழுதி. அவன் முயற்சியும் ஊக்கமும் பலனளியாது போகவில்லை.

அவனைப் பற்றிய செய்திகள் சிறிது சிறிதாகப் பரவி வந்தன. அவனை மடக்கிக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு களப்பிரர்கள் திரிந்தனர்.

இளம்வழுதி எதிர்பாராதபோது சாத்தன் கணபதி வந்து சேர்ந்தான். நண்பனை எப்படியும் கண்டே தீர்வது என்ற உறுதியோடு கிளம்பிய அவன் சுற்றாத இடங்கள் இல்லை; அனுபவியாத தொல்லைகள் கிடையா. எனினும், மன உறுதியோடு முயன்றான் அவன். வழுதியைக் கண்டு அகமகிழ்ந்தான். மாறன்காரியின் ஆட்கள் தனக்கு முன்னதாகவே அவனைக் கண்டு கொன்றிருப்பார்களோ என்ற பயம் அவனுக்கு இருந்தது. அதனால் நண்பனை உயிரோடு சந்தித்ததும் அவன் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. குதிரை மீதிருந்து குதித்து இறங்கி வழுதியை அன்போடு தழுவிக் கொண்டான் அவன்.

இருவரும் ஓரிடத்தில் அமர்ந்து, மாறன்காரியின் வஞ்சகப் போக்கு பற்றிப் பேசினர். பொழுது இருண்டு கொண்டிருந்தது.

வழுதியைத் தேடிவந்த வீரன் ஒருவன், சற்றுத் தொலைவில் உள்ள ஒரு இடத்தில் களப்பிரர்கள் தங்கியிருக்கிறார்கள் என்று அறிவித்தான். இளம்வழுதி அந்தத் திக்கில் தான் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தான். இப்போது அது முடியாது தனது ஆட்களைத் திரட்டிக் கொண்டு நள்ளிரவில் தான் அவர்களைத் தாக்க வேண்டும்; அவ்வேளையில் களப்பிரர்கள் குடிமயக்கத்தோடு ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள் என்று அவன் கருதினான்.

ஆட்களைத் தயாராக இருக்கும்படிச் சொல்லி வீரனை அனுப்பிவிட்டு, வழுதியும் சாத்தனும் எதிர் திசையில் சென்றனர். சட்டென்று சாத்தன் குதிரையை நிறுத்தினான். அவன் செவி கூர்மையாய் எதையோ கிரகிப்பதற்காக ஒரு திசை நோக்கித் திரும்பி நிலைத்தது.

'வழுதி, உற்றுக் கேள். நமக்கு எதிர்ப் புறமிருந்தும் குதிரைகள் வருகின்றன. அவற்றின் குளம்பொலி மெதுவாகக் காதில் படுகிறது' என்றான் அவன்.

'களப்பிரர்களில் வேறு பிரிவினர் வருகிறார்களோ என்னவோ!' என்று வழுதி சொன்னான்.

'இல்லை. மாறன்காரியின் ஆட்கள்தான் வருகிறார்கள் நாயின் குரைப்பும் இடைக்கிடை எழுகிறது' என்று கூறினான் சாத்தன். 'காற்று அத்திக்கு நோக்கியே வீசுகிறது. வேட்டை நாய் எளிதில் மோப்பம் பிடித்திருக்கும். ஆகவே அவர்கள் இங்குதான் வருகிறார்கள் என்று நிச்சயமாகப் புரிகிறது' என்றான் பரபரப்பாக.

'ஒன்றும் கெட்டுவிடவில்லை. நாம் தப்பிவிடலாம்' என்று சொல்லிய வழுதி குறுக்கே பாய்ந்தான். சாத்தன் குதிரையும் பின் தொடர்ந்தது.

இருவரும் குதிரைகளை மேடு பள்ளங்களில் எல்லாம் செலுத்தினார்கள். சிறிது தொலைவிலேயே ஆறு குறுக்

கிட்டது ஆற்றங்கரை ஓரமாகவே குதிரையை நடத்திச் சென்ற இளம்வழுதி, அதைத் திருப்பி பழைய வழியாகவே மீண்டும் ஓட்டினான். ஒரு இடத்தில் சுற்றிச் சுற்றி வந்தான். பிறகு, ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தான். சாத்தனும் அவன் செயல்களையே செய்து தீர்த்தான்.

தரைமீது நாசி பதித்து மோப்பம் பிடித்து வருகிற நாய்க்கும், அதைத் தொடர்ந்து வருகிறவர்களுக்கும் குழப்பமும் மலைப்பும் ஏற்படுத்துவதற்காகவே நான் இவ்வாறு செய்தேன்' என்று விளக்கினான் இளம்வழுதி.

இரவு வேகமாக வந்திறங்கியது எங்கும் இருட்டைப் பூசியபடி. அமைதி கவிந்து கிடந்த வெம்பரப்பிலே, குதிரைகளின் குளம்புகள் எழுப்பிய கனத்த ஓசை 'சடசட' என்று தொடர்ந்து ஒலி செய்தது நாயின் ஓயாத குரைப்பு கோரமாய்க் கேட்டது.

'இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் ஆற்றோரம் வந்துவிடுவார்கள். நாய் அங்குமிங்கும் ஓடிஓடிக் குரைக்கும். எந்த இடத்தில் இறங்குவது, எப்படி இக்கரைக்கு வந்து தேடுவது என்று தீர்மானிக்க முடியாமல் அவர்கள் திணறித் தவிப்பார்கள். அதற்குள் நாம் வெகுதூரம் போய்விடலாம்' என்று இளம்வழுதி உற்சாகமாகப் பேசினான்.

சாத்தன் கணபதியும் அவனும் இருளோடு கலந்து முன்னேறினார்கள். இருவருக்கும் நல்ல பசி சிறிதுநேரம் எங்காவது தங்கியிருந்து களைப்பாறிக்கொள்ளவேண்டும் என்ற உணர்வும் இருந்தது

அவர்கள் பார்வையில் ஒரு புள்ளி மாதிரி சிறு ஒளி ஒன்று மினுமினுத்தது. எங்கோ உள்ள ஒரு வீட்டிலிருந்துதான் அது வருகிறது என்று வழுதி யூகித்தான்.

இருவரும் அந்த இடத்தை அடைவதில் தாமதம் எதுவும் செய்யவில்லை. வழுதியின் யூகம் தவறவுமில்லை.

அது ஒரு குடில்தான். அதனுள் எரிந்துகொண்டிருந்த சிறு விளக்கின் வெளிச்சம்தான் அவர்களை வசீகரித்தது.

வழுதி கதவைத் தட்டினான். மூதாட்டி ஒருத்தி, 'வந்துவிட்டாயா' என்று ஆவலுடன் கேட்டுக்கொண்டே கதவைத் திறந்து, வாசலில் வந்து நின்றாள்.

'நீங்கள் யார் வரவையோ எதிர்நோக்கிக் காத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நாங்கள் வேறு வழிப்போக்கர்கள். அலைந்து திரிந்ததால் மிக்க பசியோடிருக்கிறோம். உணவு அளித்தால் நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்' என்று வழுதி தெரிவித்தான்.

அந்த அம்மையார் இருவரையும் அன்போடு வீட்டினுள் அழைத்துச் சென்றாள். கனிவுடன் உபசரித்தாள். 'நான் என் மகனை எதிர்பார்த்திருந்தேன். நீங்கள் வந்திருக்கிறீர்கள். சிறிது பழைய அமுதுதான் இருக்கிறது. என்னால் தர முடிந்ததை உங்களுக்கு இடுகிறேன்' என்று கூறி அமுது படைத்தாள்.

வழுதியும் சாத்தனும் தங்கள் அருகிலேயே வாட்களை வைத்துக்கொண்டு சாப்பிடுவதைக் கண்டதும் அவள் அதிசயித்தாள். 'உங்களுக்கு ஏன் இந்தப்பயம்?' என்று கேட்டாள்

'எந்நேரத்திலும் களப்பிரர்கள் வந்துவிடலாம் என்ற பயம்தான். அவர்கள் எங்கள் எதிரிகள். அவர்களைத் தொலைத்துக் கட்டுவதுதான் எங்கள் நோக்கம்' என்று வழுதி உணர்ச்சியோடு சொன்னான்.

'அப்படியானால் நீங்கள் ஏன் வழுதியோடு சேர்நது கொள்ளவில்லை இன்னும்?' என்று அந்தக் கிழவி கேட்டாள்.

வழுதிக்கே திகைப்பூட்டும் கேள்வியாகத் தொனித்தது அது.

'வழுதியைப் பற்றி நீங்கள் அறிவீர்களா?' என்று வினவினான் அவன்.

கிழவி, 'நான் என்ன கண்டேன்? என் மகன்தான் நாள்தோறும் சொல்லிக் கொண்டிருக்கிறான். களப்பிரர் கள் ஒழிந்து போவார்கள்; ஒழிக்கப்பட்டு விடுவார்கள். இது உறுதி. இளம்வழுதியின் போர்படை தயாராகிறது. நானும் அதில் சேர்ந்து சமர் புரிவேன் என்றெல்லாம் வீரமாகப் பேசுவான்' என்றாள்.

வழுதியும் சாத்தனும் உணவு உண்பதிலேயே கருத் தாக இருந்தனர்.

கிழவி புலம்பினாள். 'காலம் வரவர மிகவும் மோச மாகிக் கொண்டிருக்கிறது. உழைத்தோம்; கிடைத்ததை வைத்து உண்டோம்; அமைதியாக வாழ்ந்தோம் என்பதற் கில்லையே...'

வெளியே 'சரக்—சரக்' என்ற ஓசை கேட்டது.

நாய் தான் வந்துவிட்டதோ என்று திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தான் சாத்தன்.

பகைவன் எவனோ வந்துவிட்டான் என்று வாள்மீது கை வைத்தான் வழுதி.

வீட்டினுள் வந்தவன் வியப்போடு விழித்தபடி நின்று விட்டான்.

'இவன்தான் என் மகன்—வீரன்' என்று உவகை யோடு அறிவித்தாள் கிழத்தாய் 'இவர்கள் களப்பிரரின் எதிரிகள்' என மகனிடம் கூறினாள்.

'அப்படியென்றால்; எனது நண்பர்கள்தான்' என்று உற்சாகமாகக் கூவினான் அவன். தொடர்ந்து சொன்னான்: 'இன்று நான் நல்ல செயல் ஒன்று புரிந்தேன். வேட்டை நாய் ஒன்றை ஏவிவிட்டு சிலர் யாரையோ தேடிக் கொண்டிருந்தார்கள். தற்செயலாக அங்கு வந்த ஒருவனிடம் 'இளம்வழுதி இங்கே எங்கு இருக்கிறான் சொல்லு' என்று மிரட்டினார்கள். அவன் வாய் திறக்க மறுக்கவும் அவ்வெறியர்கள் அவனைக் கொன்று போட்டார்கள். ஆற்றோரத்தில் இது நடந்தது. இருளில் மறைந்து வந்த நான் ஒலியைக் குறியாக வைத்து அம்பு எய்து முதலில் நாயைக் கொன்றேன். பிறகு அங்கு நின்ற வீரர்களையும் கொன்று விட்டேன்...'

பெருமிதம் ஒலி செய்தது அவன் பேச்சில்.

'ஆகா, உண்மையிலேயே நல்ல காரியம்' எனக் கூவினான் சாத்தன் கணபதி.

'என்னை அறிந்து கொள்வதற்கு முன்பே என் உயிர் காக்க முன்வந்த நீயே எனது உண்மைத் தோழன். இனி நீ என் தம்பி' என்று கூறி எழுந்த இளம்வழுதி, உணர்வு மிகுதியோடு அவனை ஆரத்தழுவி நன்றி செலுத்தினான்.

'இன்றைக்கு எல்லாமே அதிசயமாக இருக்கிறதே!' என்று வாய் பிளந்து நின்றாள் வீரனின் கிழத்தாய்.

## 7 புதுச்சக்தி

ஆழ்ந்து உறங்கிய இருள் அசைந்து கொடுத்தது போல் அமைந்தது அச் சிறு படையின் முன்னேற்றம். அவர்கள் நடையிலே வேகம் இருந்தது; ஆனால் அது ஓசை எதுவும் எழுப்பவில்லை. அவர்கள் உள்ளத்தில்

உணர்வு துடித்தது. ஆயினும் பேச்சு எதுவும் எழவில்லை, அவர்கள் வாயிலிருந்து

அவர்கள் எத்தனை பேர் என்பதைப் பிறர் உணர்ந்து கொள்ள முடியாது. எனினும் எதிரிகள் கண்டு கொள்வார்களோ என்று ஐயம் தூண்டிய விழிப்பு உணர்வோடு அவர்கள் சென்றார்கள். ஒவ்வொருவர் கையிலும் உருவிய வாள் இருந்தது. அதன் உறுதி இருந்தது அவர்களது உள்ளத்தில். அதன்மீது ஒளிபட்டால் தெரிக்கக்கூடிய மினுமினுப்பு அவர்களின் விழிகளில் சுடரிட்டது.

அவர்கள் வந்து தாக்குவார்கள் என்று சற்றேனும் எண்ணியிராத பகைவர்களை, அவர்கள் சிறிதும் எதிர் பாராத வேவளயில் தாக்கி ஒழித்துக் கட்டும் நோக்கத் தோடுதான் முன்னேறிச் சென்றது அந்தப் படை. திருட்டுத்தனமாகக் கொன்று கொலை செய்ய முற்படுவதாக அவர்கள் கருதவில்லை. நாட்டைக் கெடுத்து வாழும் நச்சுப் பிராணிகளை அழிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அவர்களுக்கு.

இளம்வழுதி ஏறுபோல் நடந்து முன்சென்றான். அவனுக்குப் பாதுகாவலர்போல, சாத்தனும் வீரனும் அவனைத் தொடர்ந்தனர். அவர்களோடு சென்றது சிறு படைதான். ஆனால் ஒவ்வொருவரும் வைர நெஞ்சினர்; திண்ணிய புயத்தினர்; வலிய உடலினர்; வீர மறக்குலத் தினர்.

மறலியின் விருந்தாக மாறப்போவதை உணராத களப்பிரர்கள், வெறித்தனமாக ஆடி அயர்ந்துவிட்டு, 'அடித்துப் போட்டவர்கள் போல்—கால்மாடு தலை மாடாகக்' கிடந்தார்கள்.. மிதமிஞ்சிய மதுக்குடியும் தன் சக்தியைக் காட்டியிருந்தது. அவர்கள் ஆடிய கூத்தின் சின்னங்களாக மதுச்சாடிகளும் மொந்தைகளும் மாமிசத் துண்டங்களும் கண்டபடி சிதறிக்கிடந்தன. அவர்கள்

மூட்டியிருந்த தீ, ஓங்கி எரிந்து ஒடுங்கி, ஆங்காங்கே குவியல் குவியலாகச் சாம்பலிட்டுக் கனன்று மினுங்கியது.

ஒன்றிரு குவியல்களில் சிறுசிறு தீ நாக்குகள் தலை தூக்கும். செம்மையும் நீலமும் கலந்த ஒளி காட்டிவிட்டு அடங்கும் சிறு குவியல்களில் வெம்மையால் கருகும் சுள்ளிகள் வெடித்து ஒலி எழுப்பும். களப்பிரர் சிலரின் குறட்டை ஒலியும் அவ்வப்போது மேலோங்கி நிலவும்

'தூங்குகிறவர்களைக் கொல்வது சரியா!' என்ற தயக்கம் இளம்வழுதியின் உள்ளத்தில் எழாமலில்லை. எனினும், போர் என்று வந்துவிட்டால் இத்தகைய மனிதத் தன்மைகளுக்கு - தயவு தாட்சணியத்துக்கு - இடமே கிடையாது; இந்த நிலைமை மாறி இருந்தால் - தூங்குகிறவர்கள் தானும் தன்னைச் சேர்ந்தவர்களுமாக இருந்து பதுங்கி, வந்து கவனித்து நிற்பவர்கள் களப்பிரர்களாகவும் இருப்பின் - எதிரிகள் யோசிப்பார்களா என்ன? இரக்கத்தோடு விட்டு வைப்பார்களா? இப்படியும் எண்ணம் ஓடியது அவனுக்கு.

'தயங்கி நிற்பானேன்? அவர்கள் விழித்துக் கொண்டால் நமக்கு வீண் சேதம் ஏற்படும்' என்றான் சாத்தன்.

'தாக்க வேண்டியதுதானே? வீண்பொழுது போக்குவானேன்?' என்று வீரன் தூண்டினான்.

சீழ்க்கை ஒலிகள் எழுந்தன வழுதியும் அவன் துணை வரும் கூச்சலிட்டுப் பாய்ந்தனர். களப்பிரர்களில் சிலர் திடுக்கிட்டு விழித்தார்கள். எழுந்து உட்கார முயன்றார்கள். ஏதோ குழப்பம் நிகழ்கிறது என்று புரிந்து கொண்ட சிலர் தங்கள் வாட்களைத் தேடினார்கள், அவர்கள் செயல் புரிவதற்கு முன்னரே பகைவரின் வாட்களுக்கு இரையானார்கள்.

வீர மறவரின் வெற்றிக் கூவல் அந்த இடத்தை அதிர வைத்தது; இரவின் அமைதியை நடுங்கச் செய்தது.

திடீரென்று இளம்வழுதி "வீரன் எங்கே?" என்று வினவினான். அவன் உள்ளத்தில் இனம் புரிந்துகொள்ள முடியாத ஒரு கலவரம் ஊர்ந்தது; வேதனையாய் அரித்தது.

"வீரனா? இங்கே தானே நின்றான்?" என்று முனங்கினான் சாத்தன்.

வீரனைத் தேடின பல குரல்கள். அவற்றுக்குப் பதில் தரும் எதிரொலி எழவேயில்லை.

அங்குமிங்கும் தேடினர் பலர். சருகுகளைத் திரட்டி, தீக்கங்குகள் மீது குவித்து, நெருப்பு உண்டாக்கினார்கள் சில பேர்.

அங்கே வெளிச்சம் குதித்தது. உண்மையும் கோரமாய் குத்தியது அனைவர் பார்வையிலும்.

வீரனின் வலிமை மிக்க உடல் உயிரற்றுக் கிடந்தது. ரத்தம் அவன் விலாவிலிருந்து பெருகி மண்ணை நனைத்து ஓடியிருந்தது. அவனால் வெட்டி வீழ்த்தப்பட்ட உடலங்கள் சரிந்து கிடந்தன அருகிலே. அவன் அறியா வண்ணம் பாய்ந்து அவனை விலாவில் குத்தியிருக்கக் கூடிய களப்பிரனும் வெட்டுண்டு விழுந்து கிடந்தான்.

அக்காட்சியைக் கண்ணுற்ற வழுதியின் உள்ளம் பதைபதைத்தது. அவன் முகம் குவிந்தது கண்களிலிருந்து நீர் கொட்டியது முந்திய தினம் வரை—ஏன், அன்று பகலில் கூட...'யாரோ, எவனோ' என்றிருந்த ஒருவன் திடுமென அவன் வாழ்வில் குறுக்கிட்டான். அவனுக்குத் தீங்கிழைக்கத் திட்டமிட்டுத் திரிந்தவர்களை ஒழித்துக் கட்டினான். முடிவில், அவனுக்காகவே தன் உயிரையும் கொடுத்துவிட்டான். அந்த அந்நியனைப்

பொறுத்தவரையில் வாழ்க்கை எவ்வளவு வேகமாக ஓடி ஒடுங்கிவிட்டது! அதை எண்ண எண்ண வழுதியின் நெஞ்சு வெடித்துவிடும் போல் தோன்றியது.

வீரனின் தாயை அவன் மறக்க முடியுமா? இருட்டிய தும் வீடு வரக் காணோமே என்று கவலையோடு வழி பார்த்துக் காத்திருந்த அக்கிழ அன்னை தன் மகனின் மரணத்தை எவ்வாறு ஏற்றுக் கொள்வாள்? முதிய பருவத்தில் அவளுக்கு இந்த அதிர்ச்சி ஏன் தான் ஏற்பட வேண்டுமோ? தனது தனி மகனின் சாவுக்கு வழுதியே காரணம் என்று அவள் எண்ணவும் கூடுமே! மகனைப் பறிகொடுத்த துக்கத்தால், வேதனைத் தீயில் வதங்கக் கூடிய அந்தத் தாயுள்ளம் அவனைச் சபிக்காமலா இருக்கும்?...

வழுதி சிலையாகிவிட்டது போல் நின்றான் அவன் தோழர்களும் வாய்திறவாமல் நின்றார்கள்.

இரவு கனத்துக் கவிந்து கிடந்தது. தன்னலம் கருதாது வாழ்ந்து பிறருக்காக உயிர் நீத்த வீரனுக்காக இயற்கையே கண்ணீர் சிந்தியது போல, வானவெளியில் இற்று வீழ்ந்த ஒரு நட்சத்திரம் ஒளிக்கோடு கீச்சி நழுவியது; இருளின் ஆழத்தில் மங்கி மறைந்தது. காலம் மெதுவாய் சோகமாய் தளர்நடை நடந்துகொண்டிருந்தது.

'வழுதி!'

சாத்தன் கணபதி நண்பனின் தோள் மீது கைவைத்து மெதுவாக அழைத்தான். வழுதி அசையாமலே நின்றான்.

'வழுதி, இவனை நாம் இழந்து விட்டது ஆற்ற முடியாத துயரம் தருகிறது. ஆனாலும் அதற்காக மனம் ஒடிந்து செயல் திறம் இழந்து நிற்கலாமா? நமது கடமைகளைச் செய்வோம் வா' என்று அறிவித்தான் சாத்தன்.

'வீரனின் தாய்க்கு இது எதிர்பாராத இடியாகத் தானிருக்கும்' என்று வழுதி முனங்கினான். பெருமூச்சுயிர்த்தான்.

அவ்விதம்தான் அது அமைந்தது.

வழுதியும் அவன் துணைவர்களும் வெற்றி மிடுக்கோடு வீடு திரும்புவர் என்று எண்ணியிருந்த கிழவியின் காதுகள், சோகச் சுமையால் அழுத்தப் பெற்று தள்ளாடி நடந்தவர்களின் துடிப்பற்ற காலடி ஓசையைத்தான் கிரகித்தன. அவற்றிடையே, அவள் செவிப்புலனுக்கு நன்கு பழகியிருந்த அடி ஓசை எழவில்லை என்பதையும் அவள் உணர்ந்தாள். அவர்கள் வாய் திறப்பதற்கு முன்னதாகவே அவள் கேட்டுவிட்டாள்.

'வீரன் உங்களோடு திரும்பி வரவில்லையா?'

சுவர் ஓரத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கொளி நடுங்கியது. அவள் முகத்தை. அங்கு நெளிந்த உணர்ச்சி அலைகளை, எடுத்துக்காட்டுவதற்குப்போதுமான வெளிச்சம் அதில் இல்லை.

அவர்களையும் ஒரே கும்பலாய் அது காட்டியதே தவிர, தனித்தனி நபர்களாய் அவள் கண்டு கொள்வதற்கும் சுடரொளி துணை செய்யவில்லை. ஒவ்வொருவரும், அவள் முகத்தைப் பார்க்க விரும்பாதவராய்—பார்க்கும் துணிவு இல்லாதவர்களாய்—தமது முகத்தைத் தாழ்த்திக் கொண்டனர்.

அங்கு நீடித்த அமைதி பயங்கரமாக இருந்தது. சுடுகாட்டு வெறுமை'யாய் அழுத்தியது.

'என்ன? என் மகன் வீரனுக்கு என்ன?' என்று நடுங்கும் குரலில் பதைபதைத்தாள் அம்முதியவள்.

'என் தம்பி வீரன் திரும்பவில்லை. அவன்...'

விம்மலோடு உண்மையை வெளியிடத்துணிந்த இளம் வழுதியின் பேச்சுக்குத் தடை விதிப்பதுபோல் வெடித்தது நற்றாயின் ஊக்க உரை.

'நல்லதாயிற்று. வீரனுக்கு ஏற்ற முடிவாகத்தான் இருக்கும் அது' என்றாள் அவள். பிறகு அவள் கண்கள்—அசைவற்றுக் கலங்கித் தேங்கிக்கிடக்கும் நீர்க்குட்டைகள் போல் இடுங்கிய குழிகளினுள் ஒளிகுன்றி ஒடுங்கிவிட்ட விழிகள்—அங்குமிங்கும் அலைபாய்ந்தன நெஞ்சில் வலி உதைப்பதுபோல் தோன்றியது அவளுக்கு. கூடுபாய்ந்து எலும்பும் தோலுமான மார்பிலே கை வைத்தாள். 'என்னை இந்த வயசு காலத்திலே இப்படித்தனியே விட்டு விட்டுப் போகலாமா வீரா?' என்று முணுமுணுத்தாள். கீழே சாய்ந்தாள். அதன் பிறகு அவள் அசையவே யில்லை.

கிழவியின் முடிவு நெஞ்சுரம் பெற்ற வீர இளைஞர் களையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அவர்கள் அவளுக்கு இறுதி வணக்கம் தெரிவித்தனர்.

'இவ்வாறு உயிர்விட நேர்ந்த அன்னையாரின் நினைவு மீது ஆணை. இனி நாம் வாளாவிருக்க மாட்டோம் வெற்றி, அல்லது சாவு—இரண்டில் ஒன்றைக் கண்டே தீருவோம்' என்று வழுதி சூளுரை கூறினான் அதை ஏற்று துணைவர்களும் உறுதி பூண்டார்கள்.

அவர்கள் அவ்விடம்விட்டு அகன்றபோது, இருளின் வலிமை குறையத் தொடங்கியது. அவர்களுக்கு வழி காட்டுவதற்காக ஒளி பெற்ற வானத்து விளக்குப்போல் விடிவெள்ளி முளைத்து தனத்து கூரிய கதிர்களைப் பரப்பிக் கொண்டிருந்தது. புலர்ந்தும் புலராப் புத்தினம்பொழுதில் புதியதோர் சக்தி பெற்றுவிட்டவர்கள்போல் அவர்கள் முன்னே, முன்னே நடந்துசென்றார்கள்.

# 8. சில அதிர்ச்சிகள்

மாறன்காரி வெறி கொண்ட வேங்கை போல் கொதித்துக் குமுறிக் கொண்டிருந்தார்.

வெகு காலமாக அவர் தம் உள்ளத்தில் வளர்ந்துவந்த ஆசைகள் பெரியன. அவற்றை மனக்குகையிலேயே மக்கி விடும்படி எவராவது சதி செய்யமுடியும்-செய்யக்கூடும்-என்று அவர் கனவிலும் கருதியவர் அல்லர். ஒளி மயமான எதிர்காலம் பற்றியே அவர் கனவுகள் கண்டு வாழ்ந்தார்.

அவற்றின் அடிப்படையைத் தகர்க்க முனைகிறவன் போல இளம்வழுதி முளைக்கவும் மாறன்காரி ஆத்திரமே கொண்டார். வலிமையற்ற மகனை மன்னன் ஆக்கி விட்டு, அவன் பெயரால் நாட்டை ஆட்டிப்படைக்கலாம் என்று மனக்கோட்டை கட்டிவந்தார் அவர். அக்கோட்டையைச் சிதைக்கும் பெருச்சாளி மாதிரித் தோன்றிய இளைஞனை அவர் மன்னிக்க முடியுமா? மறந்து மன்னிக்கும் பெருந்தன்மை மாறன்காரியிடம் இல்லாத குணங்களில் ஒன்றாகும்.

இளம்வழுதி உதவிகோரி, நம்மைத் தேடி வந்ததுகூட தெய்வத்தின் திருவருளால் நிகழ்ந்தது என்றே அவர் கருதினார். அன்று அவர் பறம்பு நாட்டிலேயே இருந்திருந்தால் இரவோடு இரவாக வழுதியை ஒழித்துக்கட்ட வழிவகைகள் வகுத்துக் கொடுத்திருப்பார். வழுதியின் 'நல்லகாலம்' மாறன்காரியை அகற்றிவிட்டது!

அவருடைய திட்டங்கள் பற்றிக் கலந்து ஆலோசிப்பதற்காக அவர் சிலரைக் காணவேண்டியது அவசியமாயிற்று. பொறியில் வலியவந்து சிக்கிய எலி தப்பி விடுமா என்ன என்ற தைரியத்தில் அவர் பலத்த காவல்

எதற்கும் ஏற்பாடு செய்யாமலே சென்றுவிட்டார். அவர் எங்கெங்கோ சென்று, யார் யாரையோ சந்தித்துப் பேசி முடித்து விட்டு காரி ஊர் திரும்புவதற்குள் மூன்று நாட்கள் ஓடித்தேய்ந்தன. உள நிறைவோடு திரும்பிய அவருக்காகக் காத்திருந்த செய்தி அவரைத் திடுக்கிட வைத்தது. இருப்பினும் தப்பி ஓடிய இளம்வழுதியை எப்படியும் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. நாட்கள் ஓடஓட அவர் மன உறுதியில் கலக்கம் புகுந்தது.

அவர் அனுப்பிவைத்த வேட்டை நாயும், வீரர்களும் வழுதியைக் கண்டு பிடிக்காமல் வழிதவறிக் கெட்டலைகிறார்களோ என்ற ஐயம் காரிக்கு எழுந்தது. வளர்ந்தது அவ்விதம்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் என்ற நினைப்பு அடிக்கடி தலை தூக்கியது. வழுதியை அவர்கள் கண்டு, கொன்றிருந்தால் இதற்குள் அவருக்குச் செய்தி வராமல் போகுமா? பல தினங்களாகியும் அவருடைய ஆட்களில் ஒருவன்கூட வரவில்லையே?

திடீரென்று தமது திட்டங்களுக்கு இவ்விதம் இடையூறு ஏற்படக் காரணம் என்ன என்று எண்ணி எண்ணி மனசைக் குழப்பிக்கொண்டார் மாறன்காரி. இந்தச் சிறுபயலுக்கு ஏன் இந்தப் பெரிய ஆசை?" என்று குமைந்தார் அவர். பெரிய ஆசைகளை எல்லாம் வளர்த்து, வெற்றியுடன் உருவாக்கி அனுபவிப்பதற்குத் தமக்கு மட்டுமே உரிமை உண்டு என்று அவர் கருதியதாகவே தோன்றியது.

தமது திட்டங்கள் இவ்விதம் தேக்க நிலை எய்த நேர்ந்ததை எண்ணி காரி வெறியோடு இருந்த ஒரு சமயத்தில்தான் அவர் கவனம் கவரப்பட்டது. குதிரைகள் பூட்டிய அழகிய வண்டி ஒன்று வெளியே வந்து நின்றதைக் கவனித்தார் அவர்.

'ஒருவேளை வரகுணத்தேவர்தான் வந்துவிட்டாரோ?' என்று எண்ணம் நெளிந்தது அவர் உள்ளத்தில்.

மாறன்காரி சந்தித்துவிட்டு வந்தவர்களில் தேவரும் ஒருவர்தான். அவரிடம் இளம்வழுதியைப்பற்றியும் காரி குறிப்பிட்டிருந்தார். 'அவன் வெறும் வீணன் செயல் திறமற்ற சிறுவன். அவனை நாம் பெரிதாக மதிக்க வேண்டியதில்லை' என்று அலட்சியமாக வரகுணர் பேசி விட்டார். சில முக்கிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு காரியைச் சந்திக்க வருவதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

'இப்பொழுது அவர்தான் வருகிறார் போலும்' என்று ஆர்வத்தோடு எட்டிப் பார்த்த காரி ஆச்சர்யமே கொள்ள நேர்ந்தது. வண்டியிலிருந்து இறங்கி வந்தது வரகுணத் தேவர் அல்ல; மங்கையர்க்கரசிப் பிராட்டியார்தான். அவள் தம்மைத் தேடி அங்கு வருவாள் என்று அவர் எண்ணியதே யில்லை.

எளிமையும் தூய்மையும் உருவாகி வந்ததுபோல் தோன்றிய மங்கையர்க்கரசியைக் கண்டதும் வியப்பு மேலிட்டாலும், பணிவுடன் எழுந்து சென்று வரவேற்று உபசரித்தார் மாறன்காரி.

அவள் அவருடைய நலன்களைப்பற்றி விசாரித்த பிறகு. 'உங்கள் உதவியை வேண்டி இளம்வழுதியை இங்கு அனுப்பினேனே? அவன் எங்கே?' என்று கேட்டாள்.

இதுவும் காரி எதிர்பாராததுதான். இளம்வழுதியைத் தேடி இவள் வருவாள் என்று அவர் எண்ணியதில்லை. 'இவள் ஏன் வரவேண்டும்?' என்று அவர் உள்ளம் முணு முணுத்தது.

இளம்வழுதிக்கு மாறன்காரி அளித்த வரவேற்பு முறைபற்றி மங்கையர்க்கரசி எதுவும் அறியாதவள்

போலவே நடந்து கொண்டாள். இங்கே நடந்தது அவ ளுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்றுதான் காரியும் கருதினார். எனவே நெஞ்சாரப் பொய் சொல்லத் துணிந்தார்.

'இளம்வழுதியா?...ஓ! ஆமாம்...ஒருவன் வந்தான். நீங்கள் அனுப்பியதாகத்தான் சொன்னான்...'

'அவனோடு சாத்தன் கணபதியும் வந்தானே? அவனை உங்களுக்கு நன்றாகத் தெரியுமல்லவா? நான் திருமுகமும் வரைந்து கொடுத்திருந்தேன்' 'என்று பிராட்டி இயல்பாகக் குறிப்பிடுவதுபோல் நினைவுபடுத்தினாள்.

மாறன்காரி விசாலமான நெற்றியை விரல்களால் தடவிக்கொண்டார். தலை அசைத்தார். 'ஆமாம்... நினை விருக்கிறது... அன்று நான் முக்கிய அலுவல்கள்மீது வெளியே கிளம்பிக் கொண்டிருந்தேன் திரும்பி வருகிற வரை இங்கேயே இரு 'என்று சொல்லிவிட்டுச் சென்றிருந் தேன். நான் வந்து பார்த்தபோது அவன் இங்கில்லை. அதற்கு நான் என்ன செய்வது?' என்றார்.

'வழுதி மீண்டும் மதுரைக்கு வரவில்லை. உங்களிட மிருந்தும் தகவல் இல்லை. அவனுக்கு உதவிபுரிய நீங்கள் முன் வந்திருக்கலாம் என்று நான் எண்ணினேன். என்ன நடக்கிறது என்று அறிந்துபோகவே வந்தேன்' எனக் கூறினாள் அவள்.

காரி அவளைச் சிறிது கூர்ந்து நோக்கினார். 'அவன் பேரில் உங்களுக்கு ஏன் இவ்வளவு பரிவு என்றே எனக்கு விளங்கவில்லை அவன் நமது உதவியைப் பெற அருகதை யற்றவன். நன்றி இல்லாதவன்' என்று சொன்னார்.

'ஏன் இவ்விதம் சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள் அவள்.

'அவன் வந்தான்: எவன் என்று தெரியாதபோதே நான் அவனை உபசரித்து, உணவு கொடுத்து, தங்கி இருக்க இடமும் அளித்தேன். அதற்கு உரிய நன்றிகூட அவனிடம் இல்லையே! சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய் விட்டானே? அவன் ஒரு கள்வனாகவே இருக்க லாம்...'

மங்கையர்க்கரசி பொருள் பொதிந்த சிரிப்பு ஒன்று உகுத்தாள். இருக்கலாம் இருக்கலாம்...இந்த உலகத்தில் யாரைத்தான் நம்பமுடிகிறது!'' என்று சொன்னாள். அந்தப் பேச்சிலும், அதை அவள் சொன்ன விதத்திலும் ஒரு குத்தல் மறைந்திருந்தது.

அதை அவரும் உணர்ந்தார். அவர் பார்வை அவள் முகத்தில் பதிந்தது. அவள் கருத்தைத் துருவி ஆராயத் துடிப்பது போல. 'என்ன?' என்று கேட்டது. அவர் தலையின் அசைவு

'நமக்குள்ளே மறைவாகப் பேசியது போதும். உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் ஏன் வழுதியை தனி அறையில் அடைந்து வைத்தீர்கள்? உதவி என்று வந்த வனை ஏமாற்றி அவனைக் கொன்றுவிட நீங்கள் திட்ட மிட்டது ஏன்? வீரம் குன்றிவிட்ட நாட்டிலே தப்பித் தவறி தலையெடுத்த புது சக்தியை நசுக்கிவிட நீங்கள் ஆசைப்பட்டது ஏன்? நாட்டு மக்களின் அவல நிலையை நீக்கும் எண்ணம் உங்களுக்கு இருந்தால், அவனுக்கு நீங்கள் உதவிசெய்ய இசைந்திருப்பீர்கள். உங்களுக்கு ஈரநெஞ்சம் இல்லை...'

மங்கையர்க்கரசி உணர்ச்சி துடிப்போடு பேசினாள். சூடாக உதிர்ந்தன சொற்கள்.

'இதுபோன்ற விவகாரங்களில் நீங்கள் ஏன் தலையிட வேண்டும் என்று எனக்கு விளங்கவேயில்லை!' என்று மாறன்காரி முணுமுணுத்தார்.

'பிறந்த நாட்டின்மீது பற்றுதல் உங்களைப்போன்ற பெரியவர்களுக்கு மட்டும்தான் இருக்கவேண்டும் என்கிற விதி எதுவும் இல்லையே?' என்று நையாண்டியாகக் கேட்டாள் அவள்.

அனல் மின்னும் பார்வையோடு அவளைக் கடுகடுப்பாக நோக்கினார் அவர். 'நீங்கள் செய்து வருகிற குள்ள நரி வேலைகள் எல்லாம் அம்பலத்துக்கு வந்தால் விஷ்ணு சிம்மனின் கதி என்ன ஆகும் தெரியுமா? உங்கள் தங்கையின் வாழ்வு எப்படிமுடியும் என்பதுபற்றி நீங்கள் என்றாவது எண்ணியது உண்டோ?' என்று கேட்டார்

'நேர்மையற்ற உங்களின் சூழ்ச்சிகள் வெளிப்படுகிற போது நாட்டு மக்கள் உங்களுக்கு உரிய நீதியை வழங்குவதற்குத் தயங்க மாட்டார்கள். வடிகட்டிய தன்னலத்தோடு செயல்புரிந்து வருகிறீர்கள் நீங்களும், உங்களைச் சேர்ந்தவர்களும், உயர்வடைந்தால்போதும் என்ற ஆசையோடு நாட்டைக் காட்டிக் கொடுத்து வந்ததோடு, நாட்டினரின் வாழ்வைக் கெடுக்கும் நஞ்சாகவும் விளங்குகிறீர்கள். நீங்களும் உங்களைப் போன்றவர்களும் நல்ல மரத்தில் பாயும் புல்லுருவிகளேதான்!' மங்கையர்க்கரசி தன் ஆத்திரத்தை எல்லாம் கொட்டித் தீர்த்தாள்.

மாறன்காரி சிரித்தார். அமைதியை இழந்துவிடாமலே சிரித்தார் 'இவ்வளவு தானா? இன்னும் ஏதேனும் சொல்ல வேண்டுமா?' என்று கேட்டார்.

'உங்கள் உதவியைப் பெற்றுவிடலாம். என்று எண்ணி வந்தேனே? என்ன பேதமை!' என முனங்கினாள் அவள்.

'உங்கள் அணிகலன் அது' என்று கெண்டை பண்ணினார் பெரியவர்.

மங்கையர்க்கரசி கோபமாக வெளியேறினாள். மறு கணமே அவளுடைய குதிரைவண்டி 'தடதட' ஓசையுடன் ஓடுவது கேட்டது; மாறன்காரி மிடுக்காகச் சிரித்தார்.

'நமது வீட்டுக்குள்ளேயே நமக்கு எதிரி யாரோ இருக்கிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் இளம்வழுதி எப்படி அறையினுள்ளிருந்து வெளிப்பட்டுத் தப்பி ஓடியிருக்க முடியும்? அவனைப்பற்றிய செய்தி மதுரையில் உள்ளவனுக்கு எப்படி எட்டியிருக்க முடியும்?......'

அவருடைய மூளை வேலை செய்தது.

'அது இருக்கட்டும். முதலில் புறப் பகையை ஒழித்துக் கட்டுவோம். அதுவே அறிவுடைமை ஆகும்' என்றது அவர் சிந்தனை.

அதன் பிறகு அவர் வீண் பொழுது போக்கவில்லை. தமது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆள் ஒருவனை அழைத்து ரகசியமாக யோசனைகள் கூறி, வேகமாக அனுப்பி வைத்தார்.

மாறன்காரியைப்பற்றிய கசப்பான எண்ணங்களோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தாள் மங்கையர்க்கரசி. அவள் காரியை மிகுதியும் நம்பியிருந்தாள். அவர் அவசியம் உதவி செய்வார் எனும் உறுதியோடு தான் முன்பு வழுதியை அவரிடம் அனுப்பினாள். அவர் வஞ்சித்துவிட்டார் என்று சாத்தன் கணபதி மூலம் அவள் தெரிந்து கொண்ட போதிலும், முற்றிலும் அவரை ஒதுக்கிவிட மனம் வரவில்லை அவளுக்கு. தானே காரியைக் கண்டு பேசி உண்மையை அறிய வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

அப்படி அவரைச் சந்திப்பதற்காகத் தனியே செல்வது நல்லது தானா? என்று அவள் யோசிக்காமலில்லை. மாமூலனாரை அனுப்பலாமா என்றுகூட எண்ணினாள் முடிவில்

துணிந்துதான் கிளம்பி வந்தாள். பலன் ஏற்படவில்லை. அவரைக் கண்டு பேச வந்திருக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் அவளுக்கு இப்போது—வண்டியில் திரும்பிச் செல்கையில்—ஏற்பட்டது.

வேக ஓட்டத்தில் சென்ற குதிரை வண்டி 'சடக்'கென நிறுத்தப்பட்டது உள்ளே இருந்த மங்கையர்க்கரசியை ஒரு உலுக்கு உலுக்கியது அந்த அதிர்ச்சி 'என்ன?' என்று கேட்டபடி வெளியே எட்டிப் பார்த்தாள் அவள்.

'பாதையில் ஒரு பெண் நின்று வழி மறித்தாள். அதனால் தான்...' என்று இழுத்தான் வண்டியோட்டி

அந்தப் பெண்ணே மங்கைக்கரசியின் பார்வையில் வந்து நின்றாள். அவளாகவே அறிவித்தாள். 'நான்தான் அமுதவல்லி. எனக்கும் உங்கள் வண்டியில் இடம் கொடுங்கள். நான் உங்களோடு மதுரைக்கு வர விரும்புகிறேன், என்றாள்.

சாத்தன் கணபதி மூலம் அமுதவல்லியைப் பற்றியும், அவள் செய்திருந்த உதவியையும் அறிந்திருந்த பிராட்டி மறுதளிக்கவில்லை 'சீக்கிரம் உள்ளே வந்துவிடு' என்று தான் அழைத்தாள்.

அமுதவல்லி ஏறிக்கொண்டதும் வண்டி மறுபடியும் வேகமாக முன்னேறத் தொடங்கியது. அவள் மாறன் காரியின், உண்மைத் தன்மைகளைக் குறித்தும், இளம் வழுதி தப்பிச் சென்றது பற்றியும் விவரித்தாள்.

'இங்கேயே இருந்தால் எனக்கு ஆபத்து ஏற்படும் என்று நிச்சயமாகப்படுகிறது. என் மனதில் தெளிவில்லாத குழப்பமும் அச்சமும் கவிந்துவிட்டன. நீங்கள் வேறு வந்து காரியின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டீர்கள். இளம்வழுதியை யார் தப்பியோடச் செய்தது என்பதை

இன்னும் அவர் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் எப்படியும் கண்டுபிடித்து விடுவார். உண்மையைக் கண்டு கொண்ட பிறகு அவர் என்ன செய்வாரோ எனக்கு பயமாக இருக்கிறது. என்று அமுதவல்லி சொன்னாள். பயத்தினால் அவள் உடல் கூட நடுங்கியது.

மங்கையர்க்கரசி பரிவுடன் அவள் தோளில் கை வைத்தாள். அன்போடு அவள் தலையை வருடினாள். அவள் முகத்தையே கவனித்தபடி வசீகரமாகப் புன்னகை பூத்தாள். 'நான் ஒன்று கேட்பேன். நீ ஒளிக்காமல் விடை அளிக்க வேண்டும். ஊம் சரியா?' என்றாள்.

பேசாது, தலையை அசைத்தாள் அமுதம்

'இளம்வழுதியை முன்பே உனக்குத் தெரியுமா?'

'மதுரை நகரில் தான் அவரை நான் சந்தித்தேன். அவர் எனக்கு இரண்டு தடவைகள் உதவி செய்திருக்கிறார். ஆற்றோடு போய்விடுவதற்கிருந்த என் குடத்தைப் பிடித்து எடுத்து என்னிடம் தந்தார்...?'

'அத்துடன் உன் உள்ளத்திலும் இடம் பிடித்து விட்டாராக்கும்? என்று சிரிப்புடன் கேட்டாள் மங்கை, அமுதவல்லியின் முகம் உணர்வுப் பெருக்கால் குழம்பித் தாழ்ந்ததைக் கண்டு ரசித்து மகிழ்ந்தாள்.

'பிறகு எனக்குத் தீமை செய்யத் துணிந்த களப்பிர வெறியர்களிடமிருந்து என்னை அவர் காப்பாற்றினார்...

'அதற்கெல்லாம் நன்றி அறிவிக்கும் முறையில்தான் நீவழுதியைக் காப்பாற்றினாய் என்று சொன்னால் நான் நம்ப மாட்டேன்' என்று கூறிச் சிரித்தாள் மங்கையர்க்கரசி,

அமுதவல்லியை மீண்டும் நாணம் பற்றிக் கொண்டது உளம் எல்லாம் நிறைந்த மகிழ்வினால் அவள் முகம்

இனிமையாய், எழிலாய் மலர்ந்து திகழ்ந்தது அம்முகத்தைத் தன் விரல்களால் பற்றி அன்போடு நோக்கினாள் பெரியவள்.

உனக்கு இளம்வழுதி மீது ஆசைதானே? இதைத் தான் நான் உன்னிடம் கேட்க விரும்பினேன்' என்றாள் அவள் அவள் ஆசை இனிது நிறைவேறி, பொன்மயமான எதிர்காலம் அவ்விருவருக்கும் வாய்க்கட்டும் என்று மனம் குளிர—வாய் நிறைய வாழ்த்துக் கூற வேண்டும் என்று தான் மங்கையர்கரசி நினைத்தாள்.

ஆனால், அவளும் அமுதவல்லியும் அந்நேரத்தில் திடுக்கிட்டு அலற நேர்ந்தது இருவரும் உருண்டு விழுந்து மோதிக் கொள்ளும்படியாயிற்று. வண்டிக்காரன் 'ஐயோ! என்று ஒரு அலறல்தான் கொடுத்தான். அப்புறம் அவனிடமிருந்து சத்தமே இல்லை. வண்டி உயரத்திலிருந்து தள்ளப்பட்டு, பள்ளத்தில் உருண்டு விழுவதை உள்ளே இருந்த இருவரும் உணர முடிந்தது,

## 9. வினையின் விளைவுகள்

எதிர்பாராத விதத்திலே சில விபத்துகள் முடிந்துவிடுகின்றன. தற்செயல் நிகழ்ச்சிகள் சில யாரும் நம்ப முடியாத வகையில் நடந்து விடுகின்றன. அவை இப்படித்தான் முடிவடையும் — முடிவுற வேண்டும்— என்று எதிர்பார்க்கிறவர்களும், ஆசைப்படுகிறவர்களும் நேர்மாறான நிகழ்வுகளைக் கண்டதும் 'இவை எப்படி நடந்தன?' என்று விளக்க இயலாதவர்களாய் திகைக்க நேரிடுகிறது" அப்பொழுதுதான் 'தெய்வாதீனமாக நடந்துவிட்டது.. 'விதி அப்படி'' 'காலம் செய்கிறது' என்பன போன்ற பேச்செல்லாம் பிறக்கிறது.

மங்கையர்க்கரசி பயணம் செய்த குதிரை வண்டிக்கு நேர்ந்த விபத்தை 'தெய்வாதீனம்' என்று சொல்ல முடியாது. அரக்க எண்ணம் பெற்ற மனிதர் செய்கையால் ஏற்பட்டதுதான் அது. நரி மூளையும் ஓநாய்த்தனமும் பெற்றிருந்த மாறன்காரி புறப்படுகையில் குறுக்கிட்ட மங்கையர்க்கரசியை ஒழித்துவிட ஆசைப்பட்டார் அந்த எண்ணம் செயல்படும்போது பிறருக்கு சந்தேகம் எழாத விதமாய் முடிந்துவிட வேண்டும் என்றும் கருதினார். காட்டுப் பாதையில் வண்டி தடம்புரண்டு பெரும் பள்ளத்தில் உருண்டு விட்டது; குடை கவிழ்ந்த வண்டியினுள் இருந்தவள் அதனோடு சேர்ந்து சிதைந்து உருக்குலைந்து போனாள் என்று எண்ணுவார்கள்—எண்ண வேண்டும்—என்பது அவர் நோக்கம். அவ்விதம் யோசனை கூறி, வழி வகுத்துக் கொடுத்தே அவர் தம்முடைய ஆட்களை அனுப்பி வைத்தார்.

அவர்களும் திறமையோடுதான் செயலாற்றினார்கள். மரத்தின் பின் பதுங்கி நின்று, வண்டிக்காரன் மண்டையில் ஓங்கி அடித்தான் ஒருவன். வண்டிக்காரன் ஒரு அலறலோடு கீழே விழுந்தான். வேறொருவன் குதிரைகளை வண்டியோடு பிணைத்திருந்த கயிறுகளை லாவகமாக அறுத்துவிட்டான். மற்றொருவன் ஒரு சக்கரத்தின் அச்சாணியை வேகமாக உருவினான். மூவரும் சேர்ந்து, குதிரைகளை மிரட்டி பள்ளத்தை நோக்கி விரட்டினார்கள்.

வண்டி பாதையை விட்டு விலகி பள்ளத்துள் சரியத் தொடங்கியதைக் கண்டதும் அவர்கள் அங்கேயே நிற்க விரும்பாமல் தங்கள் வழியில் வேகமாய்த் திரும்பினார்கள். சற்றுத் தொலைவில் குதிரைகள் வருவது போன்றபெருத்த ஓசை பொங்கி எழுந்து காற்றோடு மிதந்து வந்ததும் அவர்கள் பயம் கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. தங்களுடைய செயலின் முடிவைக் கண்டு களிப்பதற்காக

அங்கேயே நின்றால், தங்கள் தலைக்கே ஆபத்து வந்து விடக்கூடும் என்ற பயம் அவர்களைப் பிடித்துத் தள்ளியது. உயிராசை அவர்கள் கால்களுக்கு பலமும் வேகமும் அளித்தது

அவர்கள் ஏற்படுத்திய விபத்து அவர்கள் எதிர்பார்த்த வாறு நிறைவுறவில்லை. வண்டி நிலகுலைந்து உருளு வதை உணர்ந்ததும் குதிரைகள் முரண்டின; கட்டு விடு பட்டிருந்தால் ஒரு குதிரை தாவி விலகித் தப்பி சமநிலத் தில் நின்றது. அதன் உடல் முழுவதும் நடுங்கிக் கொண் டிருந்தது அதனுடைய அகன்ற கண்களின் கருவிழிகள் பீதியினாலும் குழப்பத்தாலும் சுழன்று, வண்டி விழுந்து கொண்டிருந்த பள்ளத்தின் பக்கமே நிலைத்து விட்டன

மற்றொரு குதிரை, வண்டியின் பாரத்தால் தள்ளப் பட்டு, முன்னோக்கிச் சென்றது. கால் இடறி விழுந்து, முழங்கால்கள் மடங்கவும் குறுக்கே விழுந்த அதன் உடல் வண்டிச் சக்கரங்களைத் தடைப்படுத்தும் சாதனமாக உதவியது. வண்டி குலுங்கி நின்றது. சாய்ந்துபடுத்து விட்டது ஒரு சரிவில். அங்கு தலைதூக்கி நின்ற சிறுபாறை களும் அதைத்தடுத்து நிறுத்தத் துணைபுரிந்தன. அதனால் வண்டி பெரும் பள்ளத்தில் விழுந்து நொறுங்குவது தவிர்க்கப்பட்டு விட்டது. வண்டிக்குள்ளிருந்த இருவரும் சேதமின்றிப் பிழைத்துக் கொண்டார்கள்.

வண்டி அசைவின்றிக் கிடந்ததும் மங்கையர்க்கரசி சமாளித்துக்கொண்டு வெளியேறுவதற்கு முயற்சி செய் தாள். அமுதவல்லி அதிர்ச்சியினால் நடுங்கிக் கிடந்தாள். அவளைத் தேற்றி, தென்பட்ட வழியினூடு, வெளியே வந்து வண்டியின் நிலையைப் பார்த்ததும் மங்கையர்க் கரசிக்கே மூர்ச்சை போட்டு விடும் போல் தோன்றியது. அமுதவல்லி அவள் தோள்மீது முகத்தைப் புதைத்துக்

கொண்டாள். அவள் உடல் காற்றில் அசையும் இளம் தளிர் போல் நடுங்கியது. தாங்கள் தப்பிப் பிழைத்தது தெய்வாதீனம்தான் என்று இருவருமே நம்பினார்கள்.

கீழே விழுந்து கிடந்த குதிரை வேதனைப் பெருமூச்சு உயிர்த்துக் கொண்டிருந்தது. அதன் நாசிகளிலிருந்து உலைத்துருத்தியின் காற்றுபோல் மூச்சு சீறி வந்தது. மேலே தோன்றிக் கிடந்த அதன் உடல் விம்மித் தாழ்ந்தது பயங்கரமாகத் தானிருந்தது அதன் கண்ணின் கருமணி ஒரு ஓரத்தில் ஒதுங்கிவிட, வெள்ளைப் பகுதியில் செங்கோடுகள் ஓடுவது பளிச்செனத் தெரியும் வகையில் காட்சி அளித்தது. அதில் தோன்றிய வேதனையும் ஏக்கத் துடிப்பும் பரிதாபத்தை எழுப்பின.

தனது பிரியத்திற்குரிய குதிரைகளில் ஒன்றை அவள் பரிவுடன் நோக்கி நின்றாள். அதன் மரண வேதனையை உணர்ந்த அவளுடைய உள்ளம் கனத்தது, ஆயினும் அவ்வேளையில் அவள் என்ன செய்ய முடியும்? அங்கேயே நெடுநேரம் தயங்கி நிற்பது கூடத் தப்பு என எச்சரித்தது அவள் உள்ளுணர்வு.

அமுதவல்லியைத் தாங்கி அணைத்தபடி மெதுவாக, நிதானமாக, அவன் நல்ல இடத்துக்கு வந்து சேர்ந்தான். வண்டிக்காரன் அடிபட்டுக் கிடந்ததையும் கழற்றி எறியப் பட்ட அச்சாணியையும் அவள் கண்டாள். 'இது தற் செயலாக நேர்ந்தது அல்ல. திட்டமிட்டுச் செய்த நாச வேலைதான்' என்று அவளுக்கு நிச்சயமாகத் தோன்றியது. இந்த எண்ணத்தோடு கூடவே 'இதற்கு மூலகாரணம் மாறன்காரியாகத் தான் இருக்க முடியும்' என்ற உணர்வும் உறுதியாகப் பதிந்தது அவள் உள்ளத்திலே.

வண்டிக்காரனுக்கு உயிர் இருக்கிறதோ, இல்லையோ என்ற ஐயம் அவளுக்கு எழுந்தது. இனியும் இங்கு

நின்றால் நம் உயிர் நமக்கே உரிமை என்று வெகுநேரம் சொந்தம் கொண்டாட முடியாது என்ற எண்ணம் வலுப் பெற்று வந்தது. தொலைவில் எங்கோ மந்தமான முரசொலி விம்மி ஆர்த்து முன்னேறுவது போல் ஒரு ஓசை எழுந்து காற்றோடு கலந்து வந்து அவள் காதுகளில் பட்டது. குதிரைகள் பல வருவதாகத் தோன்றியது.

மங்கையர்க்கரசியின் மனதில் சிறு பதைப்பு படர்ந்தது. இங்கிருந்து எங்கே போய் மறைந்து கொள்வது, எப்படிப் போவது என்று புரியாது அவள் கலவரத்தோடு விழித்தாள்.

முதலில் தப்பிவிட்ட குதிரை மகிழ்வுடன் கனைத்து அவள் அருகில் வந்து நின்றது. அதன் உடலில் இன்னும் சிறிது சிலிர்ப்பு இருந்தது. அவள் அதைத் தட்டிக் கொடுத்தாள். அன்போடும் களிப்போடும் அதன் முகத்தை நோக்கினாள். 'அமுதம்! தெய்வத் திருவருள் நம் பங்கிலே தான் இருக்கிறது. இது ஒவ்வொரு கட்டத்திலும் நமக்கு நிரூபணமாகி வருகிறது நம்மைச் சாக விடாமல் காப்பாற்றிய திருவருள் நமக்குத் துணையாக இந்தக் குதிரையையும் காப்பாற்றி நிறுத்தியிருக்கிறது' என்றாள். மேலும் காலம் தாழ்த்தாமல் அமுதவல்லியைக் குதிரைமீது ஏற்றி விட்டுத் தானும் அமர்ந்தாள்.

குதிரையைச் செலுத்தும் பயிற்சியிலும் அவள் தேர்ந்திருந்ததால், மங்கையர்க்கரசிக்கு எந்த விதச் சிரமமும் இல்லை, பொங்கி வரும் பேராசையை எதிர்த்துச் செல்வது அறிவுடைமை ஆகாது என எண்ணி அவள் மரங்கள் நெருக்கமாக வளர்ந்து நின்ற பகுதிகளுக்குள் புகுந்து மதுரை நோக்கிப் பயணமானாள்.

மாறன்காரியின் ஆட்களும், பிறகு மங்கையர்க்கரசியும் செவிமடுத்த ஒலி காற்றிலே மிதந்து வந்த வெற்றோசை

அல்ல. முன்னேறி வந்த குதிரைகளின் குளம்பொலிதான் அது களப்பிர வீரர்கள் பலரும், வரகுணத்தேவரின் ஆட்கள் சிலரும் குதிரைகளில் வந்துகொண்டிருந்தார்கள்.

வரகுணத்தேவர் தான் தப்பி, மேலும் உயர்வடைவதற்காக ஒரு சூழ்ச்சி செய்தார். கூற்றன் நாயனார் அளித்த விருந்தின்போது'- பூ சுந்தரி நடனம் ஆடிக்கொண்டிருக்கையில். மறைந்திருந்து ஈட்டியும் ஓலையும் எறிந்தவனைப் பிடித்துக் கொடுக்கத் தவறிவிட்டதிலிருந்து களப்பிரப் பெரியவர்கள் தேவரிடம் கொண்டிருந்த மதிப்பில் மாற்றம் காட்டலானார்கள் அதைஅறிந்தும்அறியாதவர் போல் அவர்களோடு பழகி வந்தார் அவர். மங்கி வந்த மதிப்பை மீண்டும் உயர்த்துவதற்கு ஏற்ற காலம் வரும் என்று காத்திருந்தார்.

அவருக்கு அந்த வாய்ப்பு மாறன்காரி உருவில் வந்து சேர்ந்தது. காரி தமது ஆசை நிறைந்த திட்டத்தைத் தேவரிடம் கூறி உதவி நாடினார். 'ஆகா' என்று தலையசைத்த தேவரின் மூளை வேகமாக வேலை செய்தது. 'இப்படி ஒரு பேராசை நினைப்போடு நம்மிடம் வந்தான் இளம்வழுதி என்கிற ஒருவன். நம் பிடியிலிருந்து நழுவி விட்டான். இப்போது இந்தக் கிழவர் வந்திருக்கிறார். இவரையும் விட்டுவிட்டால் நம்மைப் போன்ற மடையன் வேறு எவனுமே இருக்க முடியாது என்று அவர் தீர்மானித்தார். உதவி செய்வதாக வாக்களித்து மாறன்காரியை அனுப்பியதும், நம்பிக்கைத் துரோகியாக மாறி அவரைக் காட்டிக் கொடுக்க முன்வந்தார் வரகுணத் தேவர்.

அவரது பேச்சைக்கேட்டான் கூற்றன் நாயனார். களப்பிரர்களை ஒழித்துவிட்டு, பாண்டி நாட்டில் மீன் கொடியைப் பறக்க விடுவதற்கு மாறன்காரி சூழ்ச்சிகள் செய்து வருகிறார்; அவருடைய கையாள்தான் விருந்து

நிகழ்ந்த இரவிலே மறைந்து நின்று ஈட்டி எறிந்திருக்கின்றான் என்று தேவர் கூறியதை அவன் நம்பினான். மாறன் காரியைப் பிடித்து வரும்படி ஏவினான். அவன் அனுப்பிய வீரர்கள்தான் காரிக்குச் சாவோலை எடுத்துச் சென்றார்கள்.

மங்கையர்க்கரசியின் குதிரை வண்டி சிதைந்து கிடந்த இடத்தை நெருங்கியதும் அவர்கள் சற்றே நின்று நிதானித்தார்கள். அவர்களுடைய கண்ணோட்டம் விபத்தின் விளைவை விழுங்கியது. கொள்ளைக்காரர்கள் எவரோ செய்த வேலை என்றுதான் அவர்கள் கருதினர். நாட்டிலே எது வேண்டுமாயினும் நடக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன! ஆகவே அதுபற்றி வீணாக எண்ணி நிற்காமல் அவர்கள் தங்கள் கருமமே கண்ணாக முன் சென்றனர்.

வரகுணத் தேவர் வருகையை எதிர்நோக்கியிருந்த மாறன்காரி முன்னிலே, அவர் எதிர்பாராத வேளையில் வந்து நின்றார்கள் களப்பிரர்கள். 'நீங்கள் யார்? தேவர் வரவில்லையா?'' என்று கேட்டார் காரி.

'நீ எங்கள் அடிமை. கேள்வி கேட்பதற்கு உனக்கு உரிமை இல்லை' என்று அதட்டினான் களப்பிரர்களின் தலைவன்.

'திறந்த வீட்டினுள் புகுந்த நாய் பலமாகக் கத்த வேறு செய்கிறதே!' என்றார் அவர் அலட்சியமாக.

'ஏய், வாயை மூடிக்கொண்டு எங்களோடு வா' என உத்திரவிட்டான் வீரன்.

'பண்பற்ற பதரே, வெளியே போ!' எனப்பாய்ந்தெழுந்தார் காரி. அவரது இரும்புக்கரம் களப்பிரனின் முகத்தைப் பதம் பார்த்தது.

வலி பொறாதவனாய் அவன் ஊளையிட்டான். இந்த மாடனை கவனியுங்கள். செம்மையாகக் கொடுங்கள். என்றான்.

அநேகர் மாறன்காரி மீது சாடினர்: அவர் தனிமையில் போராடினார். வெறும் கையராய் காரி பல பேரை எதிர்த்து நிற்பது எப்படி? விரைவிலேயே விழுந்து விட்டார். அவர் உடலை மிதித்துத் துவைத்தபடி வெறியர்கள் அவ்வீட்டினுள் புகுந்து சூறையாடி வெற்றி கொண்டாடுவதில் ஈடுபட்டார்கள்.

வஞ்சக நினைப்போடு வினைகள் விதைத்து அதற்குரிய பலனை அறுவடை செய்து மாறன்காரி மண்ணில் விழுந்த வேளையிலே, மங்கையர்க்கரசியும் அமுதவல்லியும் மதுரை மாநகர் சேர்ந்தார்கள். அந்நகரம் பரபரப்பில் ஆழ்ந்து உயிரியக்கம் பெற்றுவிளங்குவதைக் கண்டு திகைத்தார்கள்.

எங்கும் ‘பாண்டியர் படை’ ‘தென்னவர் வருகிறார்கள்’ என்ற பேச்சு. ‘படை வந்து விட்டது!’ இளம்வழுதி வந்து விட்டான்’ என்ற ஆரவார உவகை. ‘நாவலோ நாவல்!’ எனும் உற்சாகக் கூவல்.

அமுதவல்லியின் உள்ளம் மகிழ்ச்சியால் துடித்தது. அவள் உடலில் ஓர் புத்துணர்வு ஓடிக் கிளுகிளுத்தது. அவள் கண்கள் வண்டுகள் போல் நெடுகிலும் தாவித் திரிந்தன.

மங்கையர்க்கரசியும் ஆனந்தம் கொண்டாள் அவளுடைய மகிழ்ச்சி குதிரையின் துரித ஓட்டத்தை மேலும் அதிகமாகும்படி தூண்டியது.

# 10. ஒளி உதயம்

களப்பிரர்கள் கடுமையான எதிர்ப்பு திடுமென வந்து தாக்கும் என்று கனவிலும் கருதியவரல்லர். சில நூறு ஆண்டு காலம் ஆட்சி புரிந்து, தங்கள் நச்சுச் செயல்களுக்கு அழுத்தமான அடித்தலம் அமைத்து விட்டதாக நம்பியிருந்தார்கள். ஆட்சி வெறியும், குடி வெறியும், கயமைக் குணங்களும் அவர்களை மந்த புத்தியினராகவும் குருடர்களாவும் மாற்றிவிட்டன. நாட்டின் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளும் தன்மையோ, மக்களின் உணர்வு மாறுதலைப் புரிந்து கொள்ளும் திறமையோ, வருவதை முன்னதாக அறியக்கூடிய ஆற்றலோ அவர்களிடம் இல்லை. கொஞ்ச நஞ்சம் இருந்திருக்கக் கூடிய சத்திகளை அகந்தையும் மமதையும் அழித்துவிட்டன.

அவர்கள் தயவை எதிர்பார்த்து, அவர்களைச் சுற்றிக் கூடியிருந்த இச்சகம் பேசிகளும் புகழ்பாடிகளும் நாட்டினரின் உணர்ச்சி பற்றியும், இதயக் குமுறல் பற்றியும் தவறான எண்ணங்களையே அவர்கள் காதுகளில் ஓதி வந்தனர். எனவே, மதுரையில் களப்பிரர்களின் பிரதிநிதியாக வீற்றிருந்த கூற்றன் நாயனார் பகைவரின் எதிர்ப்பு பற்றி எண்ணியதே கிடையாது. அப்புறமல்லவா எதிரிகள் வந்தால் போரிட்டுத் தடுப்பதற்குத் தேவையான திட்டங்கள் பற்றி யோசிக்க வேண்டும்!

ஆங்காங்கே சிறு சிறு கிளர்ச்சிகள் தலை எடுப்பதாக வரகுணத்தேவர் மூலம் கேள்விப்பட்ட நாயனார் வீரர்களை நாலா திக்குகளிலும் அனுப்பி வைத்தான். மதுரை நகரத்தில் களப்பிர வீரர்கள் குறைவாகவே இருந்தார்கள். அவர்களும் குடித்துவிட்டுக் கூத்தடிப்பதில் சூரர்களே

தவிர, போரிடுவதில் தீரமுடையவர்கள் அல்ல என்பதை வெள்ளம்போல் திரண்டுவந்த தமிழர் கூட்டத்தின் முன் நிரூபித்துவிட்டார்கள்.

இளம்வழுதி பெரும்படையுடன் புகுந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதுமே ஓடி ஒளிந்தவர்கள் பலர். செய்வது என்ன என்று தெரியாது. திகைத்து எலிகள் போல் அங்குமிங்கும் ஓடியவர் அனேகர். தக்க தருணத்தை எதிர்நோக்கிச் சித்தமாக இருந்த அடியார்க்கு நல்லானும், அவன் திருக்கூட்டமும் அகப்பட்ட களப்பிரர்களை எல்லாம் பிடித்துக் கழுவேற்றிக் களிப்படைந்தார்கள். வைகை நதியில் ஓடிய தண்ணீர் செந்நீராக மாறி யிருந்தது.

கூற்றன் நாயனாரும் அவனைச்சேர்ந்தவர்களும் வழுதி யின் வீரர்களால் கொல்லப்பட்டனர். வீர மறவர்கள் வெற்றி ஆரவாரத்தோடு நகர வீதிகளில் திரியும் போது, மூடு திரையிட்ட வண்டி ஒன்று வேகமாக நகர எல்லை யைக் கடந்து ஓட முயன்றதைக் கண்டார்கள். வழி மறித்து, திரையைக் கிழித்தார்கள்.

வண்டிக்குள் ஒரு மூலையோடு ஒண்டி நடுங்கியவாறு காட்சியளித்தார் வரகுணத்தேவர். தப்பிப் பிழைக்கும் நோக்குடன் அவர் திரையிட்ட வண்டியில்—பெண்கள் பிரயாணம் போவதுபோல்—அமர்ந்து கிளப்பியிருந்தார். அவரோடு அவர் மகள் திலகவதியும் இருந்தாள். அவள் முகத்தில் குழப்பமோ பீதியோ படிந்திருக்கவில்லை.

அந்த வண்டியை மடக்கியவர்களிடையே தேவரை நன்கறிந்தவன் ஒருவன் இருந்தான். 'இந்தக் குள்ள நரியைச் சும்மாவிடக் கூடாது. 'சித்திரவதை செய்ய வேண்டும்!' என்று அவன் கத்தினான்.

'இவனை நாம் எதுவும் செய்ய வேண்டாம். இளம் வழுதியிடமே சேர்த்துவிடுவோம்' என்று சிலர் சொன்னார்கள்.

வண்டி திசை திருப்பப்பட்டது. முன்னும் பின்னும், இரு புறங்களிலும் பாண்டிய வீரர்கள் உற்சாகமாகக் கூச்சலிட்டுக் கொண்டு அதை இட்டுச் சென்றனர். பூந்திரைகள் ஊசலிட்டுத் தொங்கியவாறே கிடந்தன.

இளம்வழுதியும் சாத்தன் கணபதியும் இருந்த இடம் வந்து சேர்ந்தது வண்டி. 'துரோகியைப்பிடித்துவிட்டோம் புல்லுருவி அகப்பட்டுக் கொண்டான்' என்று கூச்சல்கள் ஒலித்தன. வழுதி ஒரு பக்கத்துத் திரையைப் பற்றி இழுத்தான் திகைத்தான். திடுக்கிட்டான்.

உள்ளே வரகுணத்தேவர் இருந்தார். அவர் கண்கள் அவன் கண்களைப் பார்த்தன. ஆனால் அவற்றிலே ஒளி இல்லை. அவர் முகம் வெளிறிக் காணப்பட்டது. ஆயினும் அங்கு உணர்ச்சி மாற்றங்கள் ஊடாடவில்லை-தேவரின் உடல் ஆடாமல் அசையாமல் இருந்தது. அதை இயக்கும் உயிர் ஓடி மறைந்துவிட்டது!

உண்மையை உணர்ந்த வழுதி எண்ணினான் பயமும் அதிர்ச்சியும் அவருக்கு மரணத்தை அளித்திருக்கும் என்று. அவன் விழிகள் திலகவதியின் முகத்தில் பாய்ந்தன. அவனையே பார்த்தபடியிருந்த கருவிழிகளைச் சந்தித்தன.

அவன் வாய் திறப்பதற்கு முன்னராகவே திலகவதி சிறு முறுவல் பூத்தாள். 'நீங்கள் என்னை மறந்து விட்டீர்கள். இல்லையா?' என்று மென்குரலில் கேட்டாள்

'எனக்கு உயிர்ப்பிச்சை அளித்த அன்னையை நான் மறக்க முடியுமா? இதை நான் முன்பே உங்களிடம் சொன்னேனே! என்றான் வழுதி.

''நீங்கள் என்ன செய்வீர்களோ என்ற அச்சம் என் தந்தைக்கு அதனாலேயே தப்பி ஓட முயன்றார், பிடி பட்டுக் கொண்டதும் பயம் அதிகரித்து விட்டது...'

'அவர் துரோகம் செய்யாது இனிமேல் நல்லவராக நடந்து கொள்வேன் என்று உறுதி கூறியிருந்தால் நானோ என்னைச் சார்ந்தவர்களோ அவருக்கு எவ்விதத் தீங்கும் இழைத்திருக்க மாட்டோம்' என்று வழுதி கூறினான்.

திலகம் பெருமூச்செறிந்தாள். பிறர் மனதை யார் தான் புரிந்து கொள்கிறார்கள்? அவர் உங்களை எண்ணி அஞ்சினார். கழுவில் சிக்க நேருமோ என்ற பீதி அவருக்கு. சித்ரவதைகளிலிருந்து தப்ப வேண்டும் என்ற கருத்தோடு அவர் சதா தம்மோடு நஞ்சு வைத்திருப்பது வழக்கம்...'

'அதைத் தின்றா அவர் இறந்தார்?' என்று வழுதி துடிப்போடு கேட்டான்.

'ஊம்' எனத் தலையசைத்தாள் அவள்.

'தாயே! நீங்களாவது சொல்லியிருக்கக் கூடாதா? என் உயிரை எனக்கு இருமுறைகள் மீட்டுத் தந்த உங்க ளுக்காக நான் உங்கள் தந்தையை ஒன்றும் செய்யாமல் விட்டிருக்க மாட்டேனா?' என்று உணர்ச்சியோடு பேசி னான் அவன்.

அவள் கண்கள் நீரில் நீந்தின. துயர் மூச்செறிந்தாள் திலகம். அது தன் தந்தையின் முடிவுக்காக அல்ல என்பது அவளுக்கு மட்டுமே தெரியும்.

'அம்மா!' என்று அழைத்தான் வழுதி. அவள் திடுக்கிட்டு அவனை நோக்கினாள். அவள் விழிகளில் ஒரு ஏக்கம் நிறைந்து நின்றது. 'நீங்கள் என்னை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்?' என்று முனங்கினாள் அவள்.

என்ன கருத்தில் அவள் அப்படிச் சொன்னாள் என்பதைப் புரிய இயலாதவனாய் விழித்தான் வழுதி.

'ஏன் என்னை அம்மா என்றும் தாய் என்றும் அழைக்கிறீர்கள்!' என்று குறை ஒலிக்கும் குரலில் மொழிந்தாள் திலகம். 'வேறு விதத்தில் நான் உங்கள் உள்ளத்தைத் தொடவில்லையா? என் உள்ளத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளவே இல்லையா?'

இளம்வழுதி வியப்புற்றான் ஒரு கணம் சாத்தன் ஒரு சந்தர்ப்பத்தில் இவளைப் பற்றிக் குறிப்பிட்டது அவன் நினைவில் மின் வெட்டியது. அதுதான் உண்மை போலும். திலகவதி அவனிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாளா? அவள் விழிகள் ஆழத்திலே அவள் உள்ளத்தின் கருத்தைத் தேட முயன்றன அவன் கண்கள்.

'அம்மா, நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்...' என்று பேச்செடுத்தான் அவன்.

அவள் முகம் ஏமாற்றத்தாலும் துயரத்தினாலும் வாடியது.

'என் உள்ளத்தில் ஒருத்தி இடம் பெற்று விட்டாள். அவளிடம் சென்று விட்ட என் மனசை நான் மீட்டுக் கொள்ள இயலாது. அவள் இல்லாமல் என் வாழ்வு நிறைவு பெறாது என்ற நம்பிக்கை எனக்கு என்றோ ஏற்பட்டு விட்டது...'

'எனக்கும் அப்படித்தான் உங்களைக் கண்ட நாளிலிருந்தே நான் முடிவு செய்துவிட்டேன். நீங்கள் இல்லாமல் என் வாழ்வு வெறுமையாய், வீணானதாய் தான் இருக்கும் என் ஆசை கனவாய் முடியும் என்பதையும் நான் உணர்ந்துதான் இருந்தேன். உங்கள்மீது எனக்குக் கோபம் கிடையாது. என்னை மன்னித்து விடுங்கள், அன்பே!' என்று கூறினாள். முகத்தை கையால்துடைப்பது

போல் பாவித்து, மறைத்து வைத்திருந்த நஞ்சை விழுங்கி விட்டாள் 'என் தந்தை கூடவே நானும் போகிறேன். திலகத்தை மறந்து விடாதீர்கள்' என்று கூறிப் புன்னகை புரிந்தாள்.

'அம்மா, என்ன செய்து விட்டீர்கள்?' என்று பதறினான் அவன்.

அவள் ஆசையோடு அவனை நோக்கினாள். எனது இறுதி வேண்டுகோள். ஒரே ஒரு தடவையாவது என்னை திலகம் என்று என் செவி குளிரக் கூப்பிட மாட்டீர்களா? எனக் கேட்டாள்.

'திலகம்...என்னை மன்னித்துவிடும்...திலகம்

அவள் முகம் நிறைவோடு மலர்ச்சி பெற்றது. அவள் விழிகள் 'அவன் முகத்தைப் பருகியவாறே மேலேறிச் சொருகி மூடிக் கொண்டன.

வழுதியின் கண்கள் அவளுக்காகச் சுடுநீர் சிந்தின.

அதே வேளையில் அவனைத் தேடிக் கொண்டு மங்கையர்க்கரசியின் வண்டி வந்து சேர்ந்தது. அதில் அமுதவல்லியும் இருந்தாள்.

பிராட்டியார் பெருமையோடு அவனை வாழ்த்தி வரவேற்றாள் அமுதம் அடங்காத ஆசையோடு, தணியாத ஆர்வத்தோடு அவனைப் பார்வையால் விழுங்கினாள்.

'அமுதம் உனக்காக எவ்வளவு தவியாய் தவித்தாள் தெரியுமா? என்று விளையாட்டாகச் சொன்னாள் மங்கையர்க்கரசி.

'போங்கம்மா!' எனக் குழறிய அமுதத்தின் முகம் சிவப்பேறித் தாழ்ந்தது. மகிழ்ச்சி மெருகிட்டுப் புது எழில்

பூசிய அற்புதமாக விளங்கிய அம்முகத்தையே பார்த்து நின்ற வழுதி இளநகை பூத்தான்.

● ● ●

எழுச்சியுற்ற பாண்டிய வீரர்களின் பெரும் படை களப்பிரர்களின் தலைநகர் நோக்கிக் கிளம்பியது. தென்னகத்திலிருந்து திரண்டு வந்த வீரர்களோடு மதுரை மாநகர் தந்த வலியவர்கள் எண்ணற்றோர் கூடியிருந்தனர் மங்கையர்க்கரசியின் முயற்சியால் குழுமிய வீரர்கள் சேர்ந்திருந்தனர். அவள் தங்கையின் கணவன் விஷ்ணுசிம்மன் முதல் போரிலேயே மாண்டு மடிந்து போனான். துறவி அடியார்க்கு நல்லான் திரட்டித்தந்த சூரர்களும் வந்தனர். ஒடுக்கிவிட முடியாத ஆற்றல் பெற்ற படை, எதிர்பாராத போது களப்பிரர் தலைநகரை முற்றுகையிட்டது. கயவர்களை முறியடித்து, அந்த அணிநகரைத் தீயினுக்கு இரையாக்கி களித்தது

பொங்கி எழுந்த கோரப் பெருந்தீ, பாண்டி நாட்டைச் சீரழித்து வந்த வெறியர்களின் ஆதிக்கத்துக்கு தமிழர் வைத்த கொள்ளியாக முடிந்தது.

வெற்றியோடு மதுரை திரும்பிய வழுதி மாமூலனாரின் ஆசியோடும், மக்களின் ஆதரவோடும் முடி புனைந்தான். பாண்டியன் கடுங்கோன் என்ற சிறப்புப் பெயர் பூண்டான்.

● ● ●

